வரு.74 இல. 51 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

24 பக்கங்கள் 100/-

2022 டிசம்பர் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

December 18 Sunday, 2022






04 கோடீஸ்வரர் கொலைக்குக் காரணம் 160 கோடியா?


07 முன்னேற்றகர நிலையில் IMF பேச்சுவார்த்தைகள்!


14 இலகுவான மாற்றுவழி இலஞ்சம்


24 உலகக் கிண்ணம் யாருக்கு?




## OBSERVER - SLT MOBITEL பாடசாலை கிரிக்கெட் 2022

### சிறந்த வீரர் துனித், சிறந்த வீராங்கனை விஸ்மி

நாட்டிலுள்ள பாடசாலைகளில் கிரிக்கெட் விளையாட்டுத்துறையில் சிறந்தவர்களை தெரிவு செய்து 'ஒப்சேர்வர் மொபிடெல்' விருது வழங்கும் வைபவம் 44 ஆவது வருடமாகவும் கடந்த 15 ஆம் திகதி நடைபெற்றது. இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அதிரடி துடுப்பாட்ட வீரர் அரவிந்த டி சில்வா பிரதம அதிதியாக கலந்து கொண்ட நிகழ்வு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

சிறந்த பாடசாலை கிரிக்கெட் வீரர்களாக தெரிவு செய்யப்பட்ட மருதானை சென்ட் ஜோசப் கல்லூரி மாணவன் துனித் வெள்ளாளகேயும் கம்பஹா ரத்னாவலி மகளிர் கல்லூரி மாணவி விஸ்மி குணரத்னவும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். 06

கைதிகள் விடுதலை, காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், காணி அபகரிப்பு

# பெப்ரவரி 04 க்கு முன்னர் 03 விடயங்களுக்கு தீர்வு

### ஜனாதிபதி மற்றும் அரச தரப்பு ஏற்றுக்கொண்டுள்ளதாக சுமந்திரன் MP தெரிவிப்பு



**ஜனாதிபதி தாமாகவே தெரிவித்த காலத்தினுள் தீர்த்துவைத்து அடுத்த சுற்று பேச்சுக்கு நகர்வார் என்பதில் நாம் நம்பிக்கையுடன் உள்ளோம்**

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

அரசியல் கைதிகளின் விடுதலை, காணி அபகரிப்பு மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் விடயங்கள் போன்ற 03 முக்கிய விடயங்களுக்கும் எதிர்வரும் 2023 பெப்ரவரி 04 ஆம் திகதிக்குள் தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி தலைமையிலான பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் நேற்று தெரிவித்தார்.

மட்டக்களப்பு, பெரியகல்லாறு மத்திய விளையாட்டுக் கழகம் 'உதிரம் கொடுத்து உயிரைக் காப்போம்' எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்திருந்த இரத்ததான நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்... 06

## எல்ல சுற்றுலா வலயத்தை பார்வையிட்ட ஜனாதிபதி



பதுளை, எல்ல பிரதேசத்தை சுற்றுலா வலயமாக்கும் திட்டம் தொடர்பாக ஆராய்வதற்காக கள விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு வருகை தந்திருந்த வெளிநாட்டு சுற்றுலாப் பணிகளின் சுற்றுலா அனுபவங்களைக் கேட்டறிந்து கொண்டதோடு ஜனாதிபதி, சுற்றுலாப் பணிகளுடன் சிநேகபூர்வமாக உரையாடிய போது...



## முல்லைத்தீவில் அரியவகை விலங்கினை இறைச்சிக்காக பிடித்தவர் கைது

06

சபரிமலை யாத்திரிகர்களுக்கான

## காப்புறுதி கட்டணம் ரூ.713 ஆக குறைப்பு

### UNP எஸ்.ஆனந்தகுமார் தெரிவிப்பு



இலங்கையில் இருந்து சபரிமலை யாத்திரை செல்லும் பக்தர்களுக்கு அறவிடப்படும் 4000 ரூபா காப்புறுதி நிதியை 713 ரூபாவாக அரசாங்கம் குறைத்துள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ். ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார். 06

## பயிரிடப்படாத நிலங்கள் அரசுடமையாகின்றன

### சட்டவரைபில் விரைவில் திருத்தம் வருகிறது



பயிரிடப்படாத நிலங்களை அரசுடமையாக்குவதற்கான சட்டவரைபுகள் மற்றும் கட்டளைச் சட்டம் என்பவற்றில் திருத்தம் மேற்கொள்ளவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து 06

பிரபல வர்த்தகர் தினேஷ் கொலை:

## கூலிப்படைக்கு ஒப்படைத்து கொல்லப்பட்டிருக்கலாம்..?



**பொலிஸார் முக்கோணங்களில் விசாரணை**

தினேஷ் சாப்டர் கொலை தொடர்பில் திட்டமிடப்பட்டு கொலை செய்யும் பொறுப்பு எவரிடமாவது (கொந்தராத்து) ஒப்படைக்கப்பட்டிருக்கலாம் என கருதுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சாப்டருக்கும் பிரையன் தோமசிற்கும் 06

## சர்வதேச பரிவர்த்தனைகளுக்கு இந்.ரூபா பயன்படுத்த திட்டம்



### வழிமுறைகள் தொடர்பில் ஆராய்கிறது இந்தியா

சர்வதேச பரிவர்த்தனைகளுக்கு டொலரை பயன்படுத்தாமல் ரூபாயை பயன்படுத்துவதற்கான வழிமுறையை கொண்டுவருவதற்கான பேச்சுவார்த்தையில் இந்தியா ஈடுபட்டுள்ளது.

அதன்படி, தஜிகிஸ்தான், கியூபா, லக்சம்பேர்க் மற்றும் சூடான் ஆகிய நாடுகள் இந்த பொறி முறையைப் பயன்படுத்துவது குறித்து இந்தியாவுடன் பேச்சு நடத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் போரில் மொஸ்கோ மீதான 06

## எங்கள் கருத்து...

### நல்லிணக்கம், விட்டுக்கொடுப்பு இன்றேல் எக்காலமும் தீர்வில்லை!

நாட்டில் சுமார் ஏழு தசாப்த காலமாக நீடித்து வருகின்ற தேசியப் பிரச்சினைக்கு இறுதித்தீர்வு காண்பதற்கான முயற்சிகள் தற்போது மீண்டும் ஆரம்பமாகியுள்ளன. இலங்கையில் இனப்பிரச்சினையென்று எதுவுமே கிடையாதென்றும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு விசேடமான அதிகாரப் பரவலாக்கல் என்பது அவசியமில்லையெனவும் கடந்த கால ஆட்சியாளர்களில் பலர் வெளிப்படையாகத் கருத்துத் தெரிவித்து வந்ததற்கு மாறாக, தற்போது இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு உறுதியான அடித்தளமிடப்பட்டிருப்பது விசேடமான அம்சமாகும்.

இந்த முயற்சியைப் பொறுத்தவரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தீர்க்கமான நடவடிக்கை சர்வதேச ரீதியில் மிகுந்த அவதானத்தையும் பாராட்டையும் பெற்றிருக்கின்றது. இலங்கையில் வடக்கு, கிழக்கு மக்களுக்கு நீண்டகாலப் பிரச்சினையொன்று உண்டென்பதையும், அவ்விவகாரம் அவசியமாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டுமென்பதையும் முழுமனதுடன் புரிந்து கொண்ட தலைவராக ஜனாதிபதி விளங்குவதாக சர்வதேச ஊடகங்கள் பாராட்டியிருக்கின்றன.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பொதுஇணக்கப்பாடானது இலங்கையின் 75 ஆவது சுதந்திரதினம் அடுத்த வருடம் பெப்ரவரியில் கொண்டாடப்படுவதற்கு முன்னதாக எட்டப்பட வேண்டுமென்று ஜனாதிபதி உறுதிபடக் கூறியிருப்பது மற்றொரு விசேட அம்சமாகும். தேசியப் பிரச்சினைக்கான தீர்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொண்டுள்ள உறுதிப்பாட்டையே அவரது இக்கருத்து புலப்படுத்துகின்றது.

பொதுஇணக்கப்பாட்டுக்கான முன்முயற்சியாக ஜனாதிபதி சில தினங்களுக்கு முன்னர் கூட்டியிருந்த அனைத்துக் கட்சிகள் மாநாட்டில், பிரதானமாக கட்சிகள் பங்கேற்றிருப்பது சாதகமான சமிக்ஞையாகும். 06



இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம், இலங்கை பத்திரிகை பேரவையுடன் இணைந்து நடத்திய 2021 ஆம் ஆண்டுக்கான அதி சிறந்த ஊடகவியலாளர்களுக்கான விருது வழங்கும் விழாவில் தினகரன் இணை ஆசிரியர் மர்லின் மரிக்காருக்கு சிறந்த சூழலியல் ஊடகவியலாளருக்கான விருது வழங்கி வைக்கப்பட்டபோது. விருது வழங்கும் விழா கல்கிஸ்ஸ ஹோட்டலில் நடைபெற்றது.

13 ஐ நடைமுறைப்படுத்த கோருவோரிடம் ஒரு கேள்வி

## இணைந்த வடக்கு, கிழக்கில் முஸ்லிம்களுக்கான தீர்வு என்ன?

### தெளிவுபடுத்த கோருகிறார் அமைச்சர் நஸீர் அஹமட்



வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்து 13ஐ நடைமுறைப்படுத்த கோரும் தமிழ் தலைமைகளும் இதே நிலைப்பாட்டிலுள்ள முஸ்லிம் தலைமையும் இணைந்த வடக்கு, கிழக்கில் முஸ்லிம்களுக்கான அதிகாரப் பகிர்வு என்ன என்பதை தெளிவுப்படுத்த வேண்டுமென அமைச்சர் நஸீர் அஹமட் கேள்வி எழுப்பியுள்ளார். 06

'ஜனநாயக மக்கள் காங்கிரஸ்' அரசியல் கட்சியாக பதிவு

## 12 வருடங்களுக்கு பின்னர் கிடைத்த மாபெரும் வெற்றி

### தபால் பெட்டி சின்னமும் வழங்கல் தலைவர் பிரபா கணேசன் பெருமிதம்



தெஹிவளை, கல்கிஸ்ஸ விசேட நிருபர்

ஜனநாயக மக்கள் காங்கிரஸ் அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டு தபால் பெட்டி சின்னமாக வழங்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் முன்னாள் பிரதியமைச்சர் பிரபா கணேசன் நேற்று தெரிவித்தார். 06

## 1,000 பாடசாலைகளுக்கு விரைவில் இணைய வசதி

### கல்வி அமைச்சர் சுசில் தெரிவிப்பு



சுமார் 100 கோடி ரூபா செலவில், 1,000 பாடசாலைகளுக்கு இணைய வசதிகள் வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கல்வியை டிஜிட்டல் மயமாக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் அடுத்த பாடசாலை தவணையில் (3ஆம் தவணை) இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படுமென கல்வி அமைச்சில் (16) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நாடு முழுவதுமுள்ள 06

## SJB யின் பிரதி தேசிய அமைப்பாளராக நியமனம்

### மரிக்காருக்கு கடிதம் கையளிப்பு



ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி தேசிய அமைப்பாளராகக் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதத்தை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ (16) கையளித்தார்.

எஸ்.எம். மரிக்கார், ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளாராகவும், உதவிச் செயலாளராகவும் கடமையாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

# தர்கா நகரின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்போடு செயற்பட்ட I.L.M சுஜப் அதிபர்

அதிபர் அல்ஹாஜ் ஐ. எல். எம். சுஜப் 1927 நவம்பர் 5ம் திகதி தர்கா நகரில் பிறந்தார். அவரது தந்தை பெயர் எம். எல். எம். இஸ்மாயில் லெப்பே. தாயார் பெயர் அஸ்மத் உம்மா. சிரேஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சை வரை இன்றைய தர்கா நகர் அல்ஹம்றா மகா வித்தியாலயத்தில் கற்றார். முதலில் தமிழ்மொழி மூலமும் பின்னர் ஆங்கில மொழி மூலமும் எஸ். எஸ். ஸீ பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்தார். 1949ல் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் சேர்ந்து கல்வி கற்றார். 1950ல் எச். எஸ். ஸீ பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவானார். 1955ல் பீ. ஏ. கௌரவப் பட்டம் பெற்று வெளியேறினார்.

**தொழில் ரீதியான கல்வியுலக பிரவேசம்**

1960ம் ஆண்டில் கொழும்பு, மருதானை ஸாஹிறாக் கல்லூரியில் ஆசிரியர் தொழிலைப் பொறுப்பேற்றார். 1961ம் ஆண்டில் தர்கா நகர் அல்ஹம்றா மகா வித்தியாலயத்தில் அதிபராகப் பதவியேற்றார். அதன்பின், 1962 63ஆம் வருட காலப் பகுதியில் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் அதிபராகப் பணிபுரிந்தார். அதனைத் தொடர்ந்து பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவைப் பெற்றார். 1964ல் மீண்டும் அல்ஹம்றா மகா வித்தியாலயத்தில் அதிபராகப் பொறுப்பேற்றார். 1965ல் நிகழ்ந்த பாடசாலை மீள் கட்டமைப்பினைத் தொடர்ந்து 1966 ஜனவரியில் தர்கா நகர் ஸாஹிறாக் கல்லூரியின் அதிபரானார். இவருடைய இப்பதவிக்காலம் இவர் ஓய்வு பெறும் காலம் 1987 வரை தொடர்ந்தது.



தர்கா நகர் சரித்திர வரலாறுக்குட்பட்ட இரு ஜும்ஆ மஸ்ஜித்களின் பிரதம டிரஸ்டியாக இருந்த அல்ஹாஜ் எம். ஏ. பத்தாஹ் ஜே. பீ. அவர்களின் மூத்த புதல்வியை மணந்து கொண்ட இவருக்கு ஆறு புதல்வர்கள். அவர்களில் ஒருவர் சிறு வயதிலேயே காலமானார். செல்வந்தக் குடும்பத்திலே மணம் செய்த போதும் இவர்களின் ஒவ்வொரு செயல்பாடும் சாதாரண நிலையிலேயே இருந்தது. 22வருடகால பணிசெய்த ஸாஹிறாக் கல்லூரி அதிபர் வீட்டிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரம் இருந்தும் கால் நடையாகவே




சென்று வீடு திரும்புவார். அவர் முழுமையாக கல்லூரி வாழ்வில் வெள்ளை ஆடையுடனே காட்சியளிப்பார். அமைதியான நடை, மலர்ந்த முகம், முன்னால் செல்பவர்களைக் கண்டால் குளிர்ச்சியான ஒரு புன்னகை. அவரிடம் காணக் கூடியதாக இருந்தது.

அதிபர் ஐ. எல். எம். சுஜப் தனது பாடசாலை பணி காலத்தில் கூட பல சமூகப் பணிகளில் ஈடுபட்டுவந்தவர். 1987ல் அவர் ஓய்வு பெற்றதும் அவரின் வாழ்வின் இறுதிப் பகுதி நெருங்கும் வரை தனது சமூக சேவைப் பணிகளை வெகுவாக அதிகரித்துக் கொண்டார். ஊர், மற்றும் தேசிய மட்டங்களில் நடைபெற்ற பலவிதமான நற்கருமங்களிலும் முன்னின்று உழைத்தார். தனது முதிய வயதிலும் முஅய்யிதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரி, இஷாஅத்துல் இஸ்லாம் சிறுவர் நிலையம், தர்கா நகர் ஜமாஅத் கவுன்ஸில் போன்றவற்றின் வளர்ச்சிக்காக அவர் செய்த பங்களிப்புக்கள் அளப்பரியன. அவரிடம் மனித நேய பண்புகள், எல்லா மனிதர்களையும் ஒரே நிலையில் வைத்து மதிக்கும் தன்மை மிகைத்திருந்தது. அவர்களின் காலத்தில் இலங்கையின் நாலா பாகங்களிலிருந்தும் தர்கா நகரின் இரு பாடசாலைகளிலும் கற்ற அநேகர் இன்று ஆற்றல், வல்லமை கொண்ட சிறந்த சமுதாயத்தினராகவே திகழ்கின்றனர். அல்ஹாஜ் ஐ. எல். எம். சுஜப் அவர்கள் 2015 மார்ச் 01ம் திகதி காலமானார். அவர்களின் மறுமை வெற்றிக்காக அனைவரும் பிரார்த்திப்போம்.

## இந்நூல் தொடர்பில் கருத்துக் கூறியோர்...



இந்நூல், அவர்களின் வாழ்வோடு இணைந்த நிகழ்வுகளை வாசகர்கள் அறிந்து கொள்ள சந்தர்ப்பம் வழங்கியுள்ளது. நினைவுக் குறிப்புக்களை வழங்கியவர்கள் அதிபருடன் நெருங்கியவர்கள் என்பது தெரிகிறது. இந்நூல் எல்லோரும் விளங்கக் கூடிய எளிய நடையில் உள்ளது. காலத்தால் அழிக்க முடியாத ஆளுமையை பெற்றவர் என்ற உண்மையை இந்நூல் நிரூபிக்கிறது. சமூக சேவையில் கால்பதிக்க இருக்கும் இளம் சமுதாயத்தினருக்கு இந்நூல் வழிகாட்டியாகவுள்ளது. புகைப்படங்கள் பசுமை நிறைந்த நினைவுகளாக உள்ளன. நூல் வெளியீட்டு விழா நிகழ்வுகள் மிகச் சிறப்பாக இருந்தது.

அதிபரின் பேத்தியின் உரை இளமையின் பிரகாசமாக இருந்தது. கால முகாமைத்துவம் பேணப்பட்டிருந்தால் விழா மேலும் சிறப்புற்று இருக்கும். நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இக்கல்லூரியில் கல்வி கற்ற கல்விமான்களின் வருகையானது அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பை இவ்விழா ஏற்படுத்தியது.

**அல்ஹாஜ்**
**எம். இஸட். எம். அஷ்ரப்,**
ஓய்வு நிலை அதிபர்,
ஸேம் றிபாய் ஹாஜியார் மகா வித்தியாலயம், பேருவளை.



களு/ ஸாஹிறாக் கல்லூரி கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற "வாழும் ஆளுமை அல்ஹாஜ் ஐ.எல்.எம். சுஜப் நினைவுக் குறிப்புகள்" நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ளக் கிடைத்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

மர்ஹூம் ஐ.எல்.எம். சுஜப் போன்ற தலைசிறந்த ஆளுமைகளை தற்கால இளம் தலைமுறையினருக்கு அறிமுகம் செய்யக் கூடிய இவ்வாறான நிகழ்வுகளை ஏற்பாடு செய்து நடத்துவது காலத்தின் தேவையாகும். இப்பணியை செய்த ஏற்பாட்டுக் குழுவிற்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

மர்ஹூம் ஐ.எல். எம். சுஜப் எனது ஆசான் என்ற வகையில் இந் நிகழ்வுக்கு என்னை அழைத்ததையும் அதில் எனக்கு பங்குபற்றக் கிடைத்ததையும் ஓர் பாக்கியமாக நான் கருதுகிறேன்.

**எஸ்.எச்.எம். ஸுபர்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

தர்கா நகர் ஸாஹிரா நலன்புரி சங்கத்தினரால் வெளியிடப்பட்ட இந்நூல் மர்ஹூம் ஐ.எல்.எம். சுஜப் அவர்களின் நீங்கா நினைவுகளின் தொகுப்பை மீட்டிப் பார்க்கக் கூடியதாகவுள்ளது. இதுவரை வாசித்துள்ள நூல்கள் போலன்றி, தனிமனித ஆளுமை பற்றியும், தாய் மண்ணின் தத்துவம் பற்றியும் உணர்வு பூர்வமாக வடிவமைக்கப்பட்ட இந்நூல், உள்ளத்தில் உந்து சக்தியை ஏற்படுத்துகிறது.



மறைந்த அதிபர் மதிப்புக்குரிய ஐ. எல். எம். சுஜப் அவர்கள் தர்கா நகரின் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டதுடன் இலங்கையினரின் கல்வி வளர்ச்சியிலும் தடம் பதித்துள்ளார். இவ்வுலகக் கல்வி, மறுவுலகக் கல்வி என்று வேறுபடுத்தும் வேதாந்தத்தை முற்றுப்புள்ளி வைத்த இவரை, தர்கா நகர் ஸபா, ஆன்மீகமாய் ஒரு அதிபர் எனவும் கருணையுள்ளம் கொண்ட ஒரு வழி காட்டி என ஹாபிஸ் இஸ்ஸதீன் அவர்களும் வர்ணித்துள்ளனர்.

**பாத்திமா நிபாயா முஹம்மத் அன்ஸார்**
(முன்னாள் ஆசிரியை)

தொகுப்பாளர்: **எம்.டீ.எம். இம்தியாஸ்** (தர்கா நகர் )



சுஜப் நூல் வெளியீட்டு விழா நெகிழ்ச்சியும், மகிழ்ச்சியுமாய், அமைந்தது. அவரிடம் கல்வி கற்ற மாணவன் என்ற கர்வம் எனக்கும் பெருமையே. அவரைப் பற்றி கல்விமான்களின் மேடை விமர்சனங்களும் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் கருத்துக்களும் அவரை மீண்டும் பாடசாலை அதிபர் கதிரையில் கண்டுகொண்ட பிரம்மை. அவரை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக..!!

**ரபீஸ் ஹம்ஸா,**
தர்காநகர்



அதிபர் ஐ. எல். எம் சுஜப் அவர்களின் வாழ்வு ஒரு முன்மாதிரியே. இந்தச் செய்தியைத்தான் இந்நூல் வழங்குகிறது. அவர் வாழ்ந்ததுபோல் மக்களுக்கு நிறைய நல்ல பணிகளையும் செய்தார். சமூகத்தின் முன்னேற்றத்திற்கு அயராது கல்வியினூடாக பாடுபட்ட பெருந்தலைவராக நான் அவரை பார்க்கிறேன்.

முன்னாள் ஆசிரியர்
**எம். ஜே. எம். அக்பர்**

அதிபர் ஐ. எல். எம். சுஜப் அவர்களின் வாழும் ஆளுமைகள் நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ள கிடைத்தமை மிக்க திருப்தியளிக்கிறது.



இதனை வெளியிட பல வகையிலும் முயற்சிகள் மேற்கொண்ட வெளியீட்டுக் குழுவினருக்கு எனது உளப்பூர்வமான வாழ்த்துக்கள். ஒரு சில குறைபாடுகள் இருந்த போதும் விழா நிகழ்வுகள் சிறப்பாக இருந்தன.

தூர இடங்களிலிருந்தும் அதிபரின் மாணவர்கள் சமூகமளித்திருந்தமை சிறப்புக்குரியது.அத்துடன் விழாவின் வெற்றிக்கும் முக்கியத்துவமாகும்.

**ஹலீம் ஏ. அஸீஸ்**

தர்காநகரின் “வாழும் ஆளுமை” யை மீட்டிப் பார்த்திட ஸாஹிரா கலையகத்தில் கைகோர்த்தோம்.



ஏற்பாட்டுக் குழுவினரின் அயராத உழைப்பின் பலன் கண்டோம் அந்நாளில். சுஜப் சேரின் அறியாத பக்கங்களை ஆர்வத்துடன் அறிந்து கொண்டோம். புகழ் பூத்த பெரியவரின் பெருமைகளைத் தெரிந்து கொண்டோம். கையில் கனக்கும் “வாழும் ஆளுமை” ஏடுகளும் வாழ்த்திப் பேசிய வல்லோர் சொற்களும் மண்டபம் நிறைந்த சான்றோர் அளவும் ஏற்பாட்டுக் குழுவின் முயற்சியின் இறுதிக் கனிகள். “மாந்தரிற்காய் உழைத்தோர் மாள்வதில்லை” என்பதற்கொப்ப தர்கா நகரின் வாழும் ஆளுமையை நினைவுப் பெட்டகத்தில் நீங்காமல் நிலைத்திருக்கச் செய்த ஆன்றோர் உங்களுக்கு கோடி நன்றிகள்.

**எம்.ஐ.அஷ்கர் அஹமட்**
ஆசிரியர், தர்கா நகர்

# தெளிவத்தை ஜோசப்

# அற்புதமான ஓர் ஆளுமை

1960 களில் பீறிட்டுக்கிளம்பிய சில இளம் எழுத்தாளர்களே சிறுகதைப் பிரக்ஞையுடனும் வாழ்க்கை பற்றிய பார்வையுடனும் எழுத ஆரம்பித்து சிறுகதையின் தரத்தினை காப்பாற்றிக்கொள்ளும் ஒரு எழுத்தாளர் பரம்பரையை உருவாக்கினர் எனலாம்.

மலையகம் எனும் உணர்விற்கு தமது எழுத்தாற்றலால் இவர்கள் உருவம் கொடுக்க முற்பட்டனர். அந்த வகையில் முகிழ்த்தெழுந்தவர்களில் மலையக இலக்கியத்தின் அடையாளத்துக்கும் தனித்துவத்துக்கும் அணிசேர்ப்பவராக ஒரு முதன்மையாளராக தெளிவத்தை ஜோசப் இனங்காணப்படலானார்.



1960 களில் தமிழகத்தில் வெளிவந்த 'உமா” எனும் சஞ்சிகைக்கு தெளிவத்தை எழுதிய 'வாழைப்பழத்தோல்” என்ற சிறுகதையே அவரது முதல் சிறுகதையாக பதிவாகியுள்ளது. அதனைத் தொடர்ந்து இலங்கையின் முன்னணி பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் மற்றும் தமிழக கலைமகள் சஞ்சிகையிலும் எழுத ஆரம்பித்தார். வீரகேசரி தோட்ட மலையக எழுத்தாளர் மன்றத்துடன் இணைந்து நடத்திய மலையக சிறுகதைப் போட்டியில் 1962,1963 ஆண்டுகளில் தொடர்ச்சியாக முதற் பரிசினை பெற்று இலங்கை கலை இலக்கியப் பரப்பில் தெளிவத்தை நன்கு அறிமுகமானார்.

1974 வீரகேசரியில் தொடராக வெளிவந்த 'காலங்கள் சாவதில்லை” எனும் நாவல் வெளிவந்து தெளிவத்தை ஜோசப் எனும் நாமத்தை இலக்கிய உலகில் ஆழமாக பதிவு செய்தது. அந்நாவல் சாகித்திய மண்டல பரிசுக்கு பரிந்துரைக்கப்பட்டதில் இவருக்கான ஒரு அங்கீகாரத்தையும் வழங்கியது. யாழ் பல்கலைகழகத்தில் பொருளியல் விரிவுரையாளராகப் பணியாற்றி மு. நித்தியானந்தன் தெளிவத்தையின் சிறுகதைகளைத் தொகுத்து (1979) 'நாமிருக்கும் நாடே” என்ற தொகுதியை வெளியிட்டார். அச்சிறுகதைத் தொகுதி அந்த ஆண்டுக்கான தேசிய சாகித்திய விருதினையும் தனதாக்கிக்கொண்டது. கே. வி. எஸ். மோகன் வெளியிட்ட கதம்பம் சஞ்சிகைகளில் வெளிவந்த 'பாலாயி” என்ற இவரது குறுநாவல் குறிப்பிடத்தக்க மற்றுமோர் படைப்பாகும்.

'மலையக சிறுகதை வரலாறு” எனும் ஆய்வுக்கட்டுரை தெளிவத்தையின் கனதிமிக்க இலக்கியப் பங்களிப்பை கூறி நிற்கும் மற்றுமோர் ஆவணமெனலாம். துரைவி வெளியீடுகளான 'மலையக சிறுகதைகள்”, 'உழைக்கப்பிறந்தவர்கள்' போன்ற காலத்தால் அழியாத சிறுகதைத் தொகுப்புகளின் தொகுப்பாசிரியர் தெளிவத்தையார் என்பது பதிவு செய்யப்படவேண்டிய முக்கியமான ஒரு தகவலாகும்.

இத்தனைக்கும் மேலாக அவர் ஒரு நடமாடும் நூலகமாக விளங்கினார் என்பதும் எழுத்தாளர்கள் பற்றிய தகவல்களை தனது விரல் நுனியில் வைத்திருந்தார் என்பதும் அவருடன் நெருங்கிப்பழகியவர்கள் நன்கறிவர். எழுத்தாளர்களை ஒரு குடும்பமாகப் பார்க்கும் உயரிய பண்பை அவர் மாத்திரமல்ல, அவரது குடும்பத்தினரும் கொண்டிருந்தார்கள்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் அவரது தந்தையார் வி.பி. கணேசன் தயாரித்த மூன்று திரைப் படங்களில் முதல் படமான 'புதிய காற்று” க்கு திரைக்கதை வசனம் எழுதியவர் தெளிவத்தை ஜோசப் என்பதை இன்றைய தலைமுறையினரில் பலர் அறிந்திருக்கமாட்டார்கள்.

அந்த திரைப்படத்தினை பார்க்கும் போதும் அவரது முழுக்கதைகளையும் படிக்கும்போதும் தெளிவத்தையின் நெஞ்சமெல்லாம் மலையக மக்கள் நிறைந்துபோய்க்கிடப்பதை உணர்ந்து கொள்ளமுடியும்.

அந்த மக்களின் அவல வாழ்வின் மீது அவர் கொண்டிருந்த ரௌத்திரத்தினை தெரிந்து கொள்ளமுடியும் சிறுமை கண்டு பொங்கும் அவரது நியாயமான சீற்றத்தை அறிந்துகொள்ளமுடியும்.

தெளிவத்தையின் அறுபது சிறுகதைகளை தொகுத்து வெளியிடும் பணிகளில் நானும் லண்டனில் வாழும் மு.நித்தியானந்தனும் ஈடுபட்டுக் கொண்டிருந்த நாட்களிலேயே அவரின் மரணம் நிகழ்ந்தது. அவர் வாழும் போதே அந்த தொகுப்பை வெளியிட எண்ணியிருந்தோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அது சாத்தியமாக வில்லை. எனினும் நண்பர் ஒளிவண்ணனால் வடிவமைக்கப்பட்ட சுமார் 620 பக்கங்கள் கொண்ட மாதிரி புத்தகத்தை கணனி மென்பதிவில் வாசித்து மகிழ்ந்தார் என்பது எனக்கு உறுதியாகத் தெரியும். அவர் வீரகேசரியில் தொடர்ந்து எழுதிய துயர் பகிர்தல் தொடர் கட்டுரையை நூலாக்க வேண்டும் என்பதில் பெரிதும் ஆர்வம் கொண்டிருந்தார். பத்திரிகையில் வெளிவந்த கட்டுரைகள் பகுதிகளை ஒழுங்குபடுத்தி வைத்திருந்தார். விரைவில் அவரது எண்ணத்தை செயல்படுத்துவோம்.

எதிர்வரும் ஜனவரியில் சென்னையில் நடைபெறும் சர்வதேச புத்தக கண்காட்சியில் தெளிவத்தை ஜோசப்பின் புதிய சிறுகதை தொகுதியை வெளியிட இருக்கின்றோம். இதுவரை வெளிவராமல் இருக்கும் தெளிவத்தையின் படைப்புக்களை நூலுருவில் கொண்டுவருவதற்கான முயற்சிகளை நாம் தொடர்ந்து முன்னெடுப்பதே அவருக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும்.

எச்.எச்.விக்கிரமசிங்க ...



# அராஜகத்தால் அலங்கோலமாகிய பல்கலைக்கழகத்தின் நற்பெயர்

## சிரேஷ்ட பேராசிரியர் அதுல சேனாரத்ன குடும்பத்தினர் மீதான தாக்குதலின் பின்னணி என்ன?

இயற்கை அழகுடனும் பசுமையுடனும் அமையப்பெற்ற ஒரு கல்விச்சாலை. நெடுமரங்களும் அவற்றுடன் பின்னிக் கிடக்கின்ற கொடிகள், மலர்கள், பல்கலைக்கழகத்தினூடே பாய்கின்ற நதியோடை, வசந்தகாலத்தை வரவேற்கும் வண்ண மலர்கள், அக்பர்பாலம் என எம்மை வேறோர் உலகத்திற்கு கூட்டிச் செல்லும் ஒரு ரம்யமான சூழலில் பேராதனை பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. ஆசியாவின் முன்னணிப் பல்கலைக்கழகங்களில் ஒன்றாக அறியப்படும் பேராதனைப் பல்கலைக்கழகம் 9 பீடங்களையும் சுமார் 73 துறைகளையும் கொண்டு இயங்குகின்றது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தங்களின் பட்டப்படிப்பை பெற வாய்ப்பு கிடைக்காதா ? தங்களுடைய இளமைக் காலத்தை அங்கு கழித்துவிட மாட்டோமா என ஏங்காத மாணவர்கள் குறைவு. அந்தளவுக்கு மாணவர்களின் வாழ்வின் சொர்க்கபுரியாக பேராதனைப் பல்கலைக்கழகம் விளங்கியது. எனினும் இன்று அந்த நிலை தலைகீழாக மாறியுள்ளது. அந்த அழகான பல்கலைக்கழகம் அராஜகம், வன்முறைகளால் அலங்கோலமாகக் கிடக்கின்றது. ஆனால் பொதுவாகவே பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகும் பிள்ளைகளை பட்டப்படிப்புக்காக அனுப்ப பெற்றோர் அஞ்சும் ஒரு துர்ப்பாக்கிய நிலை இன்று உருவாகியுள்ளது.

அதற்கு ஒரு உதாரணமாக பேராதனை பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியரும் உப பீடாதிபதியுமான அதுல சேனாரத்ன மற்றும் அவரின் குடும்பத்தினர் மீதான மாணவர்களின் மனிதாபிமானமற்ற கொடூர தாக்குதலை குறிப்பிடலாம். இச்சம்பவம் 80/89 காலப்பகுதியில் நிலவிய பயங்கரவாத யுகத்தின் இருண்ட நிழல்களை மக்களுக்கு உணர்த்தியுள்ளது. இதனாலேயே பல்வேறு தரப்பினரும் இச்சம்பவத்தை வன்மையாக கண்டித்துள்ளனர்.

புவியியல் பேராசிரியரான அதுல சேனாரத்ன 2012 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பேராதனை உப பீடாதிபதியாக பணியாற்ற ஆரம்பித்தார். பேராசிரியர் அதுல சேனாரத்ன மீதான தாக்குதலுக்கு அவரது மகனும் ஒருவிதத்தில் காரணமாக இருந்தாலும், பேராசிரியரை அம்மாணவர்கள் எவ்வாறு தாக்கலாம் என்பதால் மாணவர்கள் மீதே இச்சம்பவத்தில் விரல் நீட்டப்படுகின்றது.

அது கடந்த 10ஆம் திகதி இரவு 9.24 மணியிருக்கும். வழமைபோல் பேராதனை பேராசிரியர் சரத்சந்திரா திறந்தவெளி திரையரங்கு அருகில் மாணவர்கள் கூடியிருந்தனர். பொதுவாக அவ்வீதியால் இரவு நேரத்தில் பெரிதாக வெளி வாகனங்கள் எதுவும் பயணிக்காது. பல்கலைக்கழக மாணவர்களின் நடமாட்டமே சிறிது காணப்படும். எனவே அங்கிருந்த மாணவர்கள் தங்கள் மா மோட்டார் சைக்கிள்களை வீதியை மறித்து குறுக்காக நிறுத்தி வைத்திருந்தனர். இச்சமயத்தில் தான் சிரேஷ்ட பேராசிரியர் அதுல சேனாரத்னவின் மகன் விதுர சேனாரத்ன மத்திய மாகாணத்தில் பதிவுசெய்யப்பட்ட சீ.பீ.ஏ 2719 இலக்கத்தையுடைய காரில் அவ்வழியாய் வருகின்றார். அவர் அவ்வழியாய் பயணிப்பதற்கு சரத்சந்திரா திறந்தவெளி திரையரங்கு அருகில் வீதியின் குறுக்காக நிறுத்தப்பட்டிருந்த மாணவர்களின் மோட்டார் சைக்கிள்கள் தடையாகவிருந்தன. எனவே அவற்றை அகற்றுமாறு பல தடவைகள் ஹார்ன் அடிக்கின்றார். எனினும் மாணவர்கள் காதில் அது விழவில்லை. இதனால் ஆத்திரமடைந்த பேராசிரியரின் மகன் காரிலிருந்து இறங்கிவந்து வீதியின் குறுக்காக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களில் ஒன்றை காலால் உதைக்க, அது அருகிலிருந்த மோட்டார் சைக்கிள்களையும் சேர்த்தே தரையில் வீழ்த்தியது. இதனைத் தொடர்ந்து சத்தம் கேட்டு சரச்சந்திரா தியேட்டர் அருகிலிருந்த மாணவர்கள் ஓடி வந்தனர். இதை அவதானித்த பேராசிரியரின் மகன் அங்கிருந்தால், நிலைமை மோசமடையும் என்பதை உணர்ந்து காரில் தப்பிக்க முயற்சி செய்கின்றார். எனினும் பல்கலைக்கழக மாணவர்கள் அவரை அப்படியே விடுவதற்கு தயாராகவிருக்கவில்லை. பல்கலைக்கழக வளாகத்தை விட்டு வெளியில் செல்ல முடியாதவாறு நாலா பக்கமும் தடைகளை ஏற்படுத்துவதற்காக இதுதொடர்பில் விடுதிகளிலுள்ள ஏனைய நண்பர்களையும் தொலைபேசியில் தொடர்புகொண்டு மோட்டார் சைக்கிள்களையும் எடுத்துக்கொண்டு வருமாறு அழைத்தனர். இச்சந்தர்ப்பத்தில் தங்களுடைய மோட்டார் சைக்கிள்களை கீழே தள்ளிவிட்டு போனது பேராசிரியர் அதுல சேனாரத்னவின் மகன் என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை.

பேராசிரியர் அதுல சேனாரத்னவின் மகன் மாணவர்களிடமிருந்து தப்பித்து பேராசிரியருக்கு பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லத்துக்கு அருகில் சென்று கேட் கதவை திறந்து உள்ளே சென்று பூட்டிக்கொள்ள முயற்சிக்கின்றார். எனினும் மாணவர்கள் அதற்கு இடமளிக்கவில்லை. அதற்கிடையில் மாணவர்களிடம் அவர் மாட்டிக்கொள்கின்றார். அவரை சுற்றிவளைத்த மாணவர்கள் சரமாரியாக தாக்கமுற்படுகின்றனர். இச்சந்தர்ப்பத்தில் வீட்டுக்குள் பேராசிரியர் அதுல சேனாரத்ன, மனைவியுடன் கதைத்துக் கொண்டிருக்கின்றார். இதன்போதே பேராசிரியரின் மனைவி, மகன் ஒரு கும்பலால் தாக்கப்படுவதைக் கண்டு அவரிடம் பதற்றத்துடன் கூற, பேராசிரியர் வீட்டை விட்டு வெளியே ஓடிச் சென்று பார்த்த போது 30 பேர் கொண்ட பல்கலைக்கழக மாணவர்கள் குழுவொன்று மகனை சுற்றிவளைத்து தாக்குகின்றனர். ஒரு தந்தையாய் இதை கண்டு மனம் துடித்துப் போன அவர் மகனை கட்டிப்பிடித்து ' நான் உப பீடாதிபதி' என்று மாணவர்களிடம் தன்னை அடையாளப்படுத்து முகமாகக் கத்தினார். எனினும் மாணவர்கள் அது எதையுமே காதில் வாங்கிக் கொள்ளவில்லை. பேராசிரியர் என்று கூடப் பார்க்காமல் அவரை




இழுத்து ஒரு ஓரமாக தள்ளிவிட்டு மீண்டும் விதுர சேனாரத்னவை தாக்க ஆரம்பித்தனர். இதனையடுத்து தடுக்க வந்த பேராசிரியரின் மனைவி மட்டுமல்லாது அங்கு வந்த வீட்டு பணிப்பெண்கள் இருவரையும் மிரட்டி ஓரமாக தள்ளிவிட்டு ஆக்ரோஷமாக நடந்துகொண்டனர். இச்சந்தர்ப்பத்தில் பேராசிரியர் ஆரியரத்னவும் வெளியே வந்து பேராசிரியர் அதுல சேனாரத்னவுடன் இணைந்து விதுர



சேனாரத்னவை பாதுகாப்பாக வீட்டுக்குள் அழைத்துச் செல்ல உதவினார். எனினும் மாணவர்கள் அவ்விடத்தை விட்டு நகர்வதாய் தெரியவில்லை. அவர்களுக்கு இச்செயல் மேலும் ஆத்திரத்தை உண்டு பண்ணியது. வீட்டுக்குள் செல்ல முயற்சித்தனர். எனவே அதை தடுப்பதற்கு பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு அதிகாரிகள், ஒழுக்காற்று அதிகாரிகள், மற்றும் பேராதனை பொலிஸார் சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்டனர். மாணவர்கள் வீட்டுக்குள் செல்வதை தடுக்க பேராசிரியர் அதுல சேனாரத்ன வீட்டு வாசலில் காவலுக்கு நின்றார்.

எனினும் மாணவர்கள் வீட்டின் பின்புறமாகச் சென்று சமையலறை வழியாக கதவை உடைத்து வீட்டுக்குள் நுழைத்தனர். மாணவர்களின் அராஜாகத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. சுமார் 300, 400 மாணவர்கள் தங்கள் விடுதிகளிலிருந்து வந்து வீட்டை சுற்றி குவிந்தனர். பல்கலைக்கழக நிர்வாகமும், பொலிஸாரும் அவர்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது, என்று செய்வதறியாது தடுமாறியது. பேராசிரியர் மகன் காரில் வந்து தங்களது மோட்டார் சைக்கிள்களுக்கு சேதம் ஏற்படுத்தியுள்ளமையால் அவர் மீது சட்டநடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் தமக்கு ஏற்பட்ட சேதத்துக்கு அவர் நஷ்டஈடு செலுத்த வேண்டுமென்றும் மாணவர்கள் பலத்த குரலில் கோஷங்களை எழுப்பினர். இச்சந்தர்ப்பத்தில் மாணவர்களின் குரலுக்கு செவிசாய்ப்பதை தவிர வேறு வழியிருக்கவில்லை. அங்கிருந்த எந்த அதிகாரியாலும் வன்முறை வெறியாட்டத்திலிருந்த மாணவர்களை கட்டுப்படுத்த முடியவில்லை. அதனால் மிகவும் சூட்சுமமான முறையில் பேராசிரியரின் மகனை கைதுசெய்வதைப் போல் கைவிலங்கிட்டு பொலிஸ் ஜீப்பில் ஏற்றி பல்கலைக்கழக வளாகத்திலிருந்து அவரை அழைத்துச் சென்றனர்.

தாக்குதலுக்கு முகம்கொடுத்த பேராசிரியர் அதுல சேனாரத்னவின் மகன் பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சில மணித்தியாலங்களில் தனியார் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். பேராசிரியர் அதுல சேனாரத்னவும் மாணவர்களால் தாக்கப்பட்டதாகக் கூறி கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து பின்னர் தனியார் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவித்த பேராசிரியரும் உப பீடாதிபதியுமான அதுல சேனாரத்ன,

(18 ஆம் பக்கம் பார்க்க)



வசந்தா அருள்ரட்ணம்

அரசாங்க அறிவித்தல்

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு

பின்வரும் இணையத்தளங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ள சட்டமூல வரைபு தொடர்பான பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் கோரப்படுகின்றன

பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் https://slwpc.org/

அமைச்சின் இணையத்தளம்:
http://www.childwomenmin.gov.lk/downloads/laws-policies-plans

மூன்று வரைவு சட்டமூலங்களாவன
(1) பெண்கள் தொடர்பான ஒரு தேசிய ஆணைக்குழுவை நிறுவுதல்
(2) பாலின சமத்துவம் தொடர்பான சட்டமூலம் மற்றும்
(3) பெண்களை வலுவூட்டல்

தயவுசெய்து பின்வரும் மின்னஞ்சலுக்கு உங்களது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் 2022 டிசம்பர் மாதம் 25 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ எமக்கு அனுப்பி வைக்கவும்:
develop@childwomenmin.gov.lk



# வீட்டிலிருந்து வெளியேறிய ஒரு மணிநேரத்தில் கோடீஸ்வரர் கழுத்து நெரித்து கொலை!



## 160 கோடி கொடுத்ததால் கொல்லப்பட்டாரா?

இரண்டு கோடி ரூபாவினை கப்பமாகப் பெறுவதற்காக 2000ம் ஆண்டில் எயிட்கன் ஸ்பென்ஸ் நிறுவனத்தின் அப்போதைய தலைவரான ஜீ. எஸ். விக்ரமசிங்க கடத்திச் செல்லப்பட்ட சம்பவமானது கோடீஸ்வர வர்த்தகர் ஒருவர் கடத்தப்பட்டு பெறப்பட்ட கூடிய கப்பமாக இருந்ததால் வரலாற்றில் முக்கியமான சம்பவமாக இருந்தது.

எமது நாட்டின் மேல்மட்ட வர்த்தகச் சமூகம், ஜீ. எஸ். விக்ரமசிங்கவின் கடத்தலின் பின்னர் அச்சமடைந்திருந்தது. பின்னர் மீண்டும் அவ்வாறான அச்சம் எமது நாட்டின் மேல் மட்ட வர்த்தக சமூகத்தினருக்கு ஏற்பட்டிருப்பது இந்நாட்டின் பிரபலமான வர்த்தக குடும்பத்தின் அங்கத்தவரான ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் தலைவர் சந்திரா ஷாப்டரின் மகனான தினேஷ் ஷாப்டரின் மர்ம கொலையைத் தொடர்ந்தேயாகும். First Capital Holdings PLC மற்றும் அதன் இணை நிறுவனங்களின் முகாமைத்துவப் பணிப்பாளராகச் செயற்பட்ட தினேஸ் ஷாப்டர், நிதித்துறையில் 25 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்ட ஒருவராகும். அவர் வணிக மதிப்பீடுகள், மறுசீரமைப்பு உள்ளிட்ட பல்வேறு வணிகங்களில் விஷேட நிபுணத்துவமிக்கவராகக் கருதப்படுகிறார்.

வர்த்தக உலகில் உயர்விற்கே சென்றிருந்த தினேஷ் ஷாப்டர் கொலை செய்யப்பட்டது பொரளை பொது மயானத்தில் வைத்து, அவரது காரினுள் கட்டி வைத்து மனிதாபிமானமற்ற முறையில் சித்திரவதைக்கு உட்படுத்தியாகும். இச்சம்பவம் கடந்த 15ம் திகதி இடம்பெற்றுள்ளது.

தினேஷ் ஷாப்டர் அதிக காலம் இங்கிலாந்திலேயே வாழ்ந்துள்ளார். சில வர்த்தக நடவடிக்கைகள் காரணமாக இந்நாட்டில் தங்கியிருந்த தினேஷ் ஷாப்டர், இரண்டு மூன்று நாட்களில் இங்கிலாந்துக்குத் திரும்பிச் செல்லவிருந்த நிலையிலேயே அவர் இவ்வாறு மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.







தினேஷ் ஷாப்டரின் படுகொலையின் மர்மத்தை துலக்கும் பணிகள் பொலிஸ்மா அதிபரினால் தற்போது குற்றவியல் விசாரணை திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே மேல் மட்ட வர்த்தக சமூகம் இந்தக் கொலையைத் தொடர்ந்து அச்ச நிலைக்கு உள்ளாகியுள்ளதால் பொலிஸார் உச்சகட்ட பலத்தைப் பிரயோகித்து கொலையாளியைப் பிடிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

தினேஷ் ஷாப்டர் கொலை செய்யப்பட்டுள்ள விதத்தைப் பார்க்கும் போது கொலையின் மர்மத்தைத் துலக்கி கொலையாளியைக் கண்டுபிடிப்பதற்கு சீ.ஐ.டியினருக்கு அதிகளவு காலம் தேவைப்படாது என்பது தெளிவாகின்றது.

தினேஷ் ஷாப்டர் இந்நாட்டில் தங்கியிருந்தது கொழும்பு பிளவர் வீதியில் அமைந்துள்ள வீட்டிலாகும். தனது கணவர் சம்பவம் இடம்பெற்ற 15ம் திகதி பி.ப 2.00 மணியளவில் அரை மணி நேரத்தில் திரும்பி வருவதாகக் கூறியே தனது WP KU8731ம் இலக்க காரில் வீட்டிலிருந்து வெளியேறிச் சென்றதாக அவரது மனைவியான டானி ஷமின் ஷாப்டர் பொலிஸாரிடம் கூறியுள்ளார். சாரதி இல்லாமல் காரைத் தானே செலுத்தியே அவர் வீட்டிலிருந்து வெளியேறிச் சென்றுள்ளார். அவர் அவ்வாறு எங்கே சென்றார், யாரைச் சந்திக்கச் சென்றார்





போன்ற விபரங்களை அவர் தனது மனைவியிடம் கூறிச் சென்றதாக தெரியவரவில்லை. வீட்டிலிருந்து வெளியேறிச் சென்ற தனது கணவர் நீண்ட நேரமாகியும் திரும்பி வராததால் அவருக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்ட போதும் அது பயனளிக்காததால் அவருக்கு குறுஞ்செய்தி அனுப்பி விபரம் கேட்டதாகவும் தெரிவித்த அவரது மனைவி, தான் அனுப்பிய குறுஞ்செய்தியை அவர் நீண்ட நேரமாகப் பார்க்காமல் இருந்ததால் குழப்பமடைந்ததாகவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். அதன் பின்னரே தனது கணவர் இருக்கும் இடத்தினை (Location) தனது கைப்பேசி செயலியின் ஊடாகப் பரிசீலித்துள்ளார். அதன் போதே தனது கணவரின் கைப்பேசி பொரளை பொது மயானத்திற்கு அருகில் இருப்பதை தினேஷ் ஷாப்டரின் மனைவி அறிந்து கொண்டுள்ளார்.

இதன்போது திடீரென அவளது நினைவுக்கு வந்தது தனது கணவரின் நண்பரான கிறீஸ் பெரேராவாகும். உடனே அவர் அவருக்கு விபரத்தைத் தெரிவித்து தேடிப் பார்க்குமாறு அறிவித்துள்ளார்.

அப்போது தினேஷ் ஷாப்டரினால் தான் இருக்கும் இடம் தொடர்பில் தனக்கும் அறிவித்துள்ளதாக கிறீஸ் பெரேராவும் பதிலளித்துள்ளார். உடனே இது தொடர்பில் தேடிப் பார்க்குமாறு டானி ஷமின் அவருக்கு கூறியுள்ளார்.

சிறிது நேரத்தின் பின்னர் டானி ஷமின் தனது கணவரான தினேஷ் ஷாப்டரின் கைபேசிக்கு அழைப்பினை மேற்கொண்டுள்ளார். அப்போது நேரம் பி.ப 3.17 மணியாகும். அவரது அழைப்புக்கு வேறு ஒரு நபர் பதிலளித்துள்ளதோடு, உடனே கொழும்பு தேசிய வைத்தியசாலை அவசர விபத்துப் பிரிவுக்கு வருமாறு அந்நபர் கூறியுள்ளார். உடனே கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு விரைந்த டானி ஷமின், தனது கணவர் பொரளை பொது மயானத்தில் வைத்து கொலைத் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதையும், அவர் அச்சமயம் வாழ்வுக்கும் மரணத்திற்கும் இடையில் போராடிக் கொண்டிருப்பதையும் வைத்தியசாலையில் வைத்தே அறிந்து கொண்டுள்ளார்.

பொரளை பொது மயானத்தில் தேவி பாலிகா கல்லூரியின் திசையில் அமைந்துள்ள தகனசாலைக்கு அருகில் உள்ள விமானப் படையின் நினைவுத் தூபிக்கு அருகில் 9வது ஒழுங்கையில் நிறுத்தப்பட்டிருந்த காரினுள் மரண



வலியில் துடித்துக் கொண்டிருந்த தினேஷ் ஷாப்டரை கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர விபத்துப் பிரிவுக்கு எடுத்துச் சென்று அனுமதித்திருந்தது அவரது நண்பரான கிறீஸ் பெரேராவாகும்.

தினேஷ் ஷாப்டர் தனது வீட்டிலிருந்து வெளியேறிச் சென்ற காரின் சாரதி ஆசனத்தில் கட்டி வைக்கப்பட்டிருந்த நிலையில் கிறீஸ் பெரேராவினால் மீட்கப்பட்டுள்ளார். கைகளும், அவரது கழுத்தும் ப்ளாஸ்டிக் கேபலினால் கட்டப்பட்டிருந்ததோடு, கழுத்து சாரதி ஆசனத்துடன் சேர்த்து கட்டப்பட்டிருந்துள்ளது.

தனது நண்பரை அந்தக் கோலத்தில் பார்த்த கிறீஸ் பெரேரா அதிர்ச்சிக்குள்ளாகி, அவர் வந்த வாகனத்தையும் அவ்விடத்திலேயே கைவிட்டுவிட்டு தனது நண்பரை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்காகக் கத்தி கூக்குரலிட்டுள்ளதோடு, மயானத்தின் தொழிலாளி ஒருவரை அவ்விடத்திற்கு அழைத்து அவரது ஒத்துழைப்புடன் கட்டப்பட்டிருந்த ப்ளாஸ்டிக் கேபலை வெட்டியே நண்பரை மீட்டு வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றுள்ளார். இது தொடர்பில் பொலிஸார் கிறீஸ் பெரேராவிடம் நீண்ட நேரம் வாக்குமூலம் பெற்றுள்ளனர். அதன் போது அவர்கள் இருவருக்குமிடையிலான உறவுகள் தொடர்பிலும் விபரம் கேட்டுள்ளனர். தான் கடந்த 19 வருடகாலமாக தினேஷ் ஷாப்டரின் கீழ் பணியாற்றுவதாக இதன் போது கிறீஸ் பெரேரா பொலிஸாரிடம் கூறியுள்ளார். அத்துடன் தான் கம்பனி ஒன்றின் பணிப்பாளராக இருப்பதாகவும் அவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். தினேஷ் ஷாப்டர் அன்று அரை மணி நேரத்தில் திரும்பிவிடுவதாகக் கூறி அவசரமாக வீட்டைவிட்டு வெளியேறிச் சென்றது ஏன் என்பதையும் கிறீஸ் பெரேராவே தெளிவுபடுத்தியுள்ளார். அவர் அன்று அவ்வாறு வெளியேறிச் சென்றது பீ.டி என்பரைச் சந்திப்பதற்காகும். பீ. டி என்பது கிரிக்கட் வர்ணனையாளரான பிரயன் தோமஸ் என்பவராகும்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

கயான் குமார வீரசிங்க
தமிழில்: எம்.எஸ். முஸப்பிர்

அருள் சத்தியநாதன்

# திராவிட மொடல் ஆட்சியும் உதயநிதியின் உதயமும்

தொண்ணூறுகளில் எழுந்த விமர்சனங்கள்தான் இப்போதும் எழுந்திருக்கின்றன. கருணாநிதி, தனது வாரிசான ஸ்டாலினை அரசியலில் இறக்கி தனக்கு பின் தி.மு.க தலைவராகவும் முதல்வராகவும் கொண்டுவருவதற்காகவே பாதை போடுகிறார், அடுத்த தலைவராக ஏன் அன்பழகனை பிரேரிக்க முடியாது? அவர் அண்ணாவின் நிழலில் வளர்ந்தவர்தானே! தி.மு.க என்ன கருணாநிதியின் பாட்டன்வீட்டு சொத்தா? வைகோ பொருத்தமான தலைவராக இருக்கமாட்டாரா?

இவ்வாறு ஏராளமான கண்டனங்களை கருணாநிதி எதிர்கொண்டபோதிலும் ஸ்டாலினை மோல்டு செய்வதில் கலைஞர் பின் நின்றாரில்லை.

வாரிசு அரசியல் என்பது ஒன்றும் இந்தியாவுக்கு புதிது அல்ல. நேரு குடும்பத்தின் நான்காவது தலைமுறை ராகுல் காந்தியாக களத்தில் நிற்கிறது. என்.டி. ராமராவின் மருமகன்தான் சந்திரபாபு நாயுடு. சிவசேனாவை நிறுவிய பால் தாக்கரேவின் மகன்தான் சிவசேனாவின் இன்றைய தலைவர். உத்தவ் தாக்கரே. பாகிஸ்தானில் சுல்பிகார் அலிபூட்டோவின் மகளே அவருக்குப் பின் கட்சித் தலைவியானார். பெனாசிர் பூட்டோ. வங்க சிங்கமான முஜிபுர் ரஹ்மானின் மகள்தான் இன்றைய வங்கபிரதமர் ஷேக் ஹஸீனா.

மனிதன் வேறு எதனையும் விட அதிகம் விரும்புவது அதிகாரத்தை அது தன்னை விட்டுப் போவதை எவனுமே விரும்புவதில்லை. தள்ளாத வயதிலும் மனிதன் அதைத்தான் தேடிக் கொண்டிருக்கிறான் என்பதை புரிந்து கொண்டால் உலகெங்கும் வாரிசு அரசியல் ஏன் தொடர்கிறது என்பதை புரிந்து கொள்ளலாம். ஜோர்ஜ் புஷ்சின் பின் இளைய புஷ் அமெரிக்க ஜனாதிபதியானார். அவருக்குப் பின் அவர்கள் குடும்பம் வாரிசு அரசியலைத் தொடரவில்லை. அது மேற்கத்திய பாணி. ஆசிய நாடுகளில் வாரிசு அரசியல் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

கருணாநிதியின் பின்னர் ஸ்டாலினும் தற்போது அவரது மகன் உதயநிதியை கழகத்தின் அடுத்த தலைவராவதற்கு தயார்படுத்தப்படுவதை நாம் நியாயப்படுத்த விரும்பவில்லை. இந்தியாவை மையப்படுத்திய பெரும் பிராந்தியத்தில் இது தான் யதார்த்தம் என்பதையே குறிப்பிட விரும்புகிறோம்.

உண்மையில் கலைஞர் கருணாநிதி தன் குடும்பம் அரசியலில் மட்டுமின்றி சினிமாவிலும் நீடிக்க வேண்டும் என்றே விரும்பினார்.

கலைஞர் கருணாநிதி முதலில் தன் முதல் மனைவியின் மகனான மு.க. முத்துவை எழுபதுகளில் சினிமாவுக்கு கொண்டு வந்தார். அக்காலத்தில் எம்.ஜி.ஆர். பிரபலமான நடிகர் என்ற வகையிலும் மனம் கவர்ந்த அரசியல் பிரமுகர் என்ற வகையிலுயும் நீடித்திருப்பது தனது நலன்களுக்கு பாதகமாக அமையும் என்று அன்றைய முதல்வர் கருணாநிதி கருதியதால், எம்.ஜி.ஆர். போலவே உடை அணிந்து அவர் பாணியிலேயே மு.க.முத்து திரைப்படங்களில் நடிக்க ஆரம்பித்தார்.

ஆனால் மு.க. முத்துவின் எம்.ஜி.ஆர்.வேஷம் நிலைக்கவில்லை. அதன் பின்னர் மு.க. அழகிரி அரசியலுக்கு கொண்டுவரப்பட்டார். அவர் வெளிப்படையான அடிதடி அரசியலில் ஈடுபட்டு கருணாநிதிக்கே தலையிடியாக அமையவே, கருணாநிதி காலத்திலேயே அவர் கழற்றிவிடப்பட்டார்.

இறுதியாக கலைஞரின் வாரிசாக எஞ்சியவர் ஸ்டாலின் மட்டுமே. தற்போது ஸ்டாலின் தமிழகத்தில் அரசியல் செய்ய, முரசொலி மாறனின் மகன் தயாநிதி மாறனும், கலைஞரின் ஒரே மகள் கனிமொழியும் புதுடில்லியில் அரசியல் செய்கிறார்கள். இவ்வாறு புது டில்லியில் தேசிய அரசியலும் தமிழகத்தில் மாநில அரசியலும் செய்யக் கூடிய கட்சியாக அல்லது குடும்பமாக தி.மு.க.வை மட்டுமே தமிழகத்தில் குறிப்பிட முடியும்.

சுமார் நாற்பது ஆண்டுகளாக கட்சிக்காக கடுமையாக உழைத்தவரே மு.க. ஸ்டாலின் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. எனவே அவர் முதல்வராகப் பதவியேற்றபோது அப் பதவிக்கு கருணாநிதியின் மகன் வருகிறார் என்பதைவிட, தகுதியானவர்தான் பதவியேற்றிருக்கிறார் என்ற உணர்வே மக்களிடம் காணப்பட்டது. உழைப்பு என்றால் அது ஸ்டாலின் என கலைஞரால் பாராட்டப்பட்டவரே மு.க.ஸ்டாலின்.

இப்போது, தன் 45வது வயதில் ஸ்டாலினின் மகனான உதயநிதி ஸ்டாலின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சராக பதவியேற்றுள்ளார். மேலும், சிறப்புத் திட்ட அமுலாக்கல், வறுமை ஒழிப்பு, ஊரகக் கடன்கள் ஆகிய துறைகளும் அவருக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

1969இல் அறிஞர் அண்ணா மறைவின் பின்னர் நாவலர் நெடுஞ்செழியனுடன் கடுமையாக போட்டி போட்டு, எம்.ஜி.ஆரின் துணையுடன் முதல்வர் பதவியைக் கைப்பற்றிய கருணாநிதி, தி.மு.க.வின் முன்னணித் தலைவராகத் தன்னை நிலை நிறுத்திக் கொள்வதற்காக தீவிரமாக செயல்பட வேண்டியிருந்தது. அவரது புதல்வாரன ஸ்டாலின் அமைச்சராக நியமனம் பெறுவதற்காக ஒரு 40 ஆண்டுகள் பொறுமை காக்க வேண்டியிருந்தது. ஆனால் ஸ்டாலின் முதல்வராக பதவியேற்ற 19 மாதங்களில் அவர் மகன் உதயநிதி அமைச்சராக பொறுப்பேற்றுள்ளார்.

அவரது இப்பதவியேற்பை இரண்டு கோணங்களில் பார்க்கலாம். முதலாவது கருத்தியல் ரீதியானது. சமய அடிப்படையிலான பா.ஜ.க.வின் இந்துத்துவத்தை முதன்மைப்படுத்தி ஆட்சியையும் ஆர்.எஸ்.எஸ்.சின் சநாதன நோக்கங்களையும் தீவிரமாக எதிர்க்கக் கூடிய வலுவை திரிணாமுல் காங்கிரசின் தலைவியான மம்தா பானர்ஜி வடக்கே கொண்டிருப்பதைப் போலவே தெற்கே தி.மு.க. அந்த பலத்தை கொண்டுள்ளது. பொருளாதார மற்றும் சர்வதேச அரங்கில் மோடி தலைமையிலான அரசு வரவேற்கத்தக்க வகையில் செயல்பட்டாலும் உள்நாட்டில் அதன் நோக்கங்கள் மத, இன, மொழி ரீதியானதாகவும் திணிக்கும் தன்மை கொண்டதாகவும் அமைந்துள்ளது. இதனால் தான் இந்துத்துவ கொள்கைக்கு எதிரான 'திராவிட மொடல்' ஆட்சி எனத் தனது ஆட்சியை ஸ்டாலின் பெயரிட்டு அழைக்கிறார்.



தனது ஆட்சி பகுத்தறிவு சார்ந்த திராவிட பாணி ஆட்சி, வர்ண பேதமற்ற, மொழிப்பற்றும் சமத்துவமும் கொண்டது என்பதையும் அது இந்துத்துவத்தை எதிர்ப்பதாக உள்ளது என்பதையும் வெளிப்படுத்துவதற்காகவே தி.மு.க. தன் ஆட்சியை 'திராவிட மொடல்' ஆட்சி என அழைத்துக் கொள்கிறது.

இந்தியாவின் வட மாநிலங்களில் வாழும் வறுமையும் பாமரத் தன்மையும் கொண்ட இந்தியர்களை பா.ஜ.க.வினால் தொடர்ந்தும் வசப்படுத்தி வைக்க முடியும். குஜராத் மாநில சட்டசபையில் பா.ஜ.க.வுக்கு கிடைத்த வெளிவான வெற்றி இதற்கு சான்று. இதே சமயம் தமிழகத்தில் பா.ஜ.க.வின் தலைவராக துடிப்பாக செயல்பட்டுவரும் அண்ணாமலை அக்கட்சிக்கு நம்பிக்கை அளிக்கக்கூடியதாக செயல்பட்டு வரும் சமயத்தில், தமிழ்ப் பண்புகளைக் காப்பாற்றி தனித்துவம் பேணக்கூடிய திராவிட சிந்தனைகள் வலுவாக நீடிக்க வேண்டிய அவசியம் இருப்பதால் கருத்தியல் ரீதியாக செயல்படக்கூடிய தலைமை தி.மு.க.வுக்கு அவசியம்.

கருணாநிதி காலத்தில் எம்.ஜி.ஆர். பின்னர் ஜெயலலிதா ஆகிய ஆளுமைகளுடன்தான் அவர் தமிழகத்தில் மோத வேண்டியிருந்தது. கருத்தியல் ரீதியான பாரிய மோதல்கள் காணப்படவில்லை. அவர்கள் காலத்தில் மத்தியில் ஆட்சி செய்த கட்சி மத நல்லிணக்க கோட்பாட்டைக் கொண்டிருந்த காங்கிரஸ் ஆட்சி. தற்போது அத்தகைய நிலை இல்லை. இந்தியா வெங்கும் காங்கிரசும் அதன் மதசார்பற்ற கொள்கைகளும், வலுவற்றுப்போக, ஆர்.எஸ்.எஸ்சின் இந்துத்துவ கொள்கைகள் வலுப்பெற்று வருகின்றன. பா.ஜ.கவினால் இன, மதவாத சிந்தனைகள் எழுச்சி பெற தூண்டப்படுகின்றன.

இன்று பா.ஜ.கவின் பிரதான பிராந்திய எதிரிகள், மம்தா பானர் ஜியின் திரிணாமுல் காங்கிரசும் தமிழகத்தில் தி.மு.கவும் தான். அ.தி.மு.க தலைவராக ஜெயலலிதா இருக்கும்வரை பா.ஜ.கவின் தமிழகத்தில் ஊடுருவும் முயற்சிகளுக்கு இடமளிக்கவில்லை. அவருக்குப் பின் அ.தி.மு.க எப்படி பா.ஜ.கவின் கைப்பொம்மையானது என்பது தெரிந்த விஷயம். எம்.ஜி.ஆரின் மறைவின் பின்னர் கோஷ்டி மோதல் ஏற்பட்டு பின்னர் தணிந்து, ஜெயலலிதாவின் கை ஓங்கியது. இவ்விவகாரத்தில் மூன்றாவது நபர் நுழைவதற்கு இடமளிக்கப்படவில்லை. அதேபோல கருணாநிதியின் மறைவின் பின்னர் கட்சியில் பிளவு ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளப்பட்டது. மு.க. அழகிரி மூலம் மூன்றாவது சக்தி நுழைவதற்கான வாய்ப்பு காணப்பட்ட போதிலும் அவர் கலைஞர் உயிருடன் இருக்கும்போதே ஒட்டும் இல்லை உறவும் இல்லை எனக் சுழற்றி விடப்பட்டதால் ஸ்டாலினுக்கு சவால் விடக் கூடிய எந்த வாய்ப்பும் ஏற்படவில்லை.

அறிஞர் அண்ணா 1969 பெப்ரவரி மூன்றாம் திகதி மரணமானார். சிறிய கலகலப்பின் பின்னர் அதே மாதம் 10ம் திகதி கலைஞர் கருணாநிதி முதல்வராக பதவியேற்றார். அதன் பின் சட்ட சபையை கலைத்துவிட்டு மக்களிடம் புதிய ஆணை என்பதாக கருணாநிதி தேர்தலை 1971 மார்ச் மாதம் சந்தித்தார். அத் தேர்தலில் அவருக்கு அசுர வெற்றி கிடைத்தது. மொத்த 234 சட்ட சபை ஆசனங்களில் தி.மு.க 183 இடங்களைக் கைப்பற்றியது. 167 சட்டசபை அண்ணா தலைமையிலான தி.மு.க கூட்டணி 73 இடங்களில் போட்டியிட்டு 138 இடங்களைக் கைப்பற்றியதோடு ஒப்பிட்டுப் பார்த்தால் மக்கள் எவ்வளவு தூரத்துக்கு தி.மு.க வையும் கலைஞரையும் நம்பினார்கள் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

ஆனால் மூன்றே ஆண்டுகளில் எம்.ஜி.ஆர். கலகக்குரல் எழுப்பியதால் தி.மு.க இரண்டாகப் பிளந்தது. அவர் அ.தி.மு.கவை 1972 அக்டோபர் 18ம் திகதி ஆர ம்பித்தார். எம்.ஜி.ஆரைத் தூண்டிவிட்டு தி.மு.கவை இரண்டாகப் பிளந்ததில் இந்திராகாந்தியின் பங்கு கணிசமானது என்று சொல்வார்கள். தி.மு.கவை பிளந்தது மூலம் அக்கட்சி பலவீனமடைந்தது. மேலும் தி.மு.க வை எதிர்க்கவும் அதற்கு எதிராகக் கூட்டணி வைத்துக் கொள்ளவும் இன்னொரு மாநில திராவிடக் கட்சி இந்திரா காந்திக்குக் கிடைத்தது என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது.

இந்தியாவின் கிழக்கே கிழக்கு பாகிஸ்தான் இருந்தது இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக காணப்படவே, வாய்ப்பைப் பயன்படுத்தி வங்க தேசம் என்ற புதிய நாட்டை பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு நாட்டை இந்திரா உருவாக்கினார் என்பதை இங்கே நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, இந்தப் பின்னணியில் நோக்கும் போது திராவிடத் தமிழ்ப் பண்புகளையும், மதசார்பற்ற பகுத்தறிவு கொள்கைகளையும் கொண்ட தி.மு.க அப்படியே தொடர்வதே நல்லது என்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கிறது. கலைஞர் குடும்பத்தின் செல்வாக்கின் கீழ் தி.மு.க இருக்கும்வரை அதனை பலவீனப்படுத்தும் ஆர்.எஸ்.எஸ்.சின் முயற்சிகளுக்கு பலன் கிடைக்கப்போவதில்லை.

தமிழ் சமுதாயம் வாழவும் வளரவும் உலகத் தமிழ் சமூகம் எமக்கு உறுதுணையாக இருப்பதைப் போலவே தமிழகத்தின் தமிழர்களின் தனித்துவம் காப்பாற்றப்பட வேண்டிய அவசியம் உள்ளது. அ.தி.மு.க பலவீனமடைந்ததைப்போல சமஸ்கிருதத்தையும் இந்துத்துவத்தையும் திணிக்க முயலும் பா.ஜ.கவின் கைப்பாவையாக தி.மு.க ஆகிவிடக் கூடாது என்பதில் திராவிட உணர்வாளர்கள் கருதுகின்றனர்.

இப் பின்னணியில் பார்க்கும் போது ஸ்டாலினுக்குப் பின் அக்கட்சியின் தலைமையை ஏற்க அவர் தனயன் உதயநிதி தயார்ப்படுத்தப்படுவதில் தவறு இருப்பதாகக் கருத முடியாது. தமிழர் மரபு, மாண்பு காப்பாற்றப்படுவதற்கும், திராவிட பகுத்தறிவு சிந்தனைகள் போற்றப்படுவதற்கும், சாதி மத எதிர்ப்பு நிலை நீடிப்பதற்கும் இப்போதைக்கு தி.மு.க.வை விட்டால் வேறு வழி கிடையாது. ஸ்டாலினுக்குப் பின் மத, இனவாத சக்திகளுக்கு ஈடுகொடுக்கக் கூடியவராக உதயநிதி வளர்த்தெடுக்கப்பட வேண்டும். தி.மு.கவை தமது கட்சியாக அக் குடும்பம் கருதுவதால் அக் குடும்பம் கட்சியை வெளியாருக்கு விலைபேசாது என்ற வகையில் இக்குடும்ப அரசியலை பொறுத்துக் கொள்ள வேண்டியதுதான். ஏனெனில், தமிழகத்துக்கு வெளியே வசிப்பவர்களுக்கு தமிழும் அதன் அடையாளங்களும் முக்கியம்.

45 வயதான உதயநிதி விரைவில் துணை முதல்வராக்கப்படலாம். சமய, கடவுள் நம்பிக்கை கிடையாது என்று கூறியிருக்கும் அவர் தன் முதல் கையெழுத்தைப் போடுவதற்கு நேரம் பார்த்தார் என்ற ஒரு சர்ச்சை எழுந்தது.

(20 ஆம் பக்கம் பார்க்க)

# காலநிலை மாற்ற பாதிப்பு: இலங்கையில் முதலாவது விவசாயிகள் பயிற்சிப் பாடசாலை ஆரம்பம்



லோரன்ஸ் செல்வநாயகம்

காலநிலை சீரமைவு நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் கீழ் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து விவசாய நடவடிக்கைகளை பாதுகாக்கும் வகையில் விவசாயிகளுக்கு விசேட பயிற்சிகளை வழங்குவதற்கான விவசாயிகள் பண்ணை பயிற்சி பாடசாலை இலங்கையில் முதலாவது தடவையாக அனுராதபுரம் மாவட்டத்தில் திறப்பனை பிரதேசத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. 40 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு Farmer Field School என்ற பெயரில் இந்த பயிற்சி பாடசாலை அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. ஆரம்ப வைபவத்தில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர சிறப்பதிதியாக கலந்து கொண்டு விவசாய பயிற்சி பாடசாலையை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

## இலங்கை வானொலி 97 ஆம் ஆண்டு நிறைவையொட்டி சிறப்பு பாரம்பரியம் நிகழ்ச்சி!

1925 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி இலங்கையில், உத்தியோக பூர்வமாக தனது ஒலிபரப்பைத்துவங்கி, கொழும்பு வானொலியாக, பின் இலங்கை வானொலியாக, கூட்டுத்தாபனமாக பரிணமிக்கும், இன்றைய நம் தாய் வானொலி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது 97வது ஆண்டு நிறைவை கொண்டாடி மகிழ்கிறது. தென்னாசியாவின் சிறந்த வானொலியாக திகழ்ந்து, இன்றைய நவீன தொழில் நுட்பத்தினூடாக, வானொலி பெட்டிகளும், ஊடக வலையமைப்புகளும், பல்கி பெருகியிருந்தும் தனக்கென தனி இடத்தினை, இன்றும் உலக ஒலிபரப்பு அரங்கிலே தக்கவைத்திருக்கின்றமை பெருமைக்குரியதே. எப்போது இலங்கை வானொலியின் ஒலிபரப்புத்துறை ஆரம்பமானதோ, அன்று தொட்டே, அவ்வப்போது முஸ்லிம் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகி இருக்கின்றன. பின் நாட்களில் இலங்கை வானொலியோடு கைகோர்த்து கூட்டுத்தாபனமாக பயணித்து,

வானொலி வரலாற்றில் தனக்கென தனி இடத்தினை தேடிக்கொண்ட இன்றைய முஸ்லிம் சேவையின், இலங்கை வானொலியுடனான, ஒலிபரப்புத்துறையிலான தொடர்புகளின் பின்னணிகள் பற்றிய தகவல்களை, எதிர்வரும் 20ஆம் திகதி (20.12.2022)செவ்வாய் இரவு 8.15 மணியளவில், முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் பாரம்பரியம் நிகழ்ச்சி சுமந்து வருகிறது.

இந்நிகழ்ச்சியினை எம்.எஸ்.எம்.ஜின்னா தொகுத்தளிக்க, முஸ்லிம் சேவை பணிப்பாளர் எம்.ஜே. பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார்.


### டொராண்டோ மஹாவிஹார உதவித் தொகை அறக்கட்டளை

(அரச சார்பற்ற நிறுவனமாக பதிவு செய்யப்பட்டுள்ளது
பதிவெண் : எவ்எல் 128504)

### டொராண்டோ Mahavihara உதவித் தொகை அறக்கட்டளை

இலங்கையில் தற்போது 8ஆம் வகுப்பு புலமைப்பரிசில் விண்ணப்பங்கள் ஏற்றுகொண்டுள்ளது.

**உதவித் தொகை தகுதி:**

ஜனவரி 2023 போது 8 வகுப்பு படிக்கும், முன்பே 5 புலமைப்பரிசில் வைத்திருப்பவர்.

அம்பாறை, மட்டக்களப்பு, காலி ஹம்பாந்தோட்டை, மாத்தறை மற்றும் திருகோணமலை உதவித்தொகை பெற்றவர்கள் அறக்கட்டளை வழிமுறைகளை அடிப்படையில் பள்ளி கல்வி இறுதி வரை மாத மானியம் பெறும் கல்வி உதவி தொகை கல்வி சாதனைகள் மற்றும் குடும்ப பொருளாதார அடிப்படை வழங்கப்படும்.

தகுதியான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப்படிவங்கள் கோரலாம் ஒரு சுய முகவரியிடப்பட்ட முத்திரையிடப்பட்ட 4 x 9.5 அங்குல உறை கீழே உள்ள முகவரிக்கு அனுப்பும்.

விண்ணப்பபடிவங்கள் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் கிடைக்கின்றன. விண்ணப்ப படிவங்கள் கீழே கொடுக்கப்பட்ட இணையதளத்தில் இருந்து கிடைக்கும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் மற்றும் ஆதரவு ஆவணங்களை மார்ச் 31, 2023 கீழ் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

அதிபர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திகொள்ள முடிந்த வரை சீக்கிரம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க தகுதியுள்ள மாணவர்கள் ஊக்குவிக்க வேண்டும்.

முகவரி : டொராண்டோ மஹாவிஹார உதவித் தொகை அறக்கட்டளை
ஜயசுமணராமய
கொவியபன (காலி)
மின்னஞ்சல் : admin@mahaviharafoundation.com
இணையதளம் : www.mahaviharafoundation.com

குறிப்பு டொரண்டோ மகாவிகாரவில் உதவித்தொகை அறக்கட்டளை தேர்வுகளை பற்றிய இறுதி முடிவு தொடர்பாக உரிமைகள் உள்ளன

**டொரண்டோ மஹாவிஹார உதவித் தொகை அறக்கட்டளை**

டொரண்டோ மஹாவிஹார உதவித் தொகை
அடிக்கட்டளை,
4698 கிங்ஸ்டன் வீதி,
ஸ்கார்பரோ ஒஎன் எம்1ஈ 2பி9 கனடா

ஜயசுமணராமய
கொவியபன
அஹங்கம
இலங்கை

மின்னஞ்சல் : admin@mahaviharafoundation.com
இணையம் : http://www.mahaviharafoundation.com/index.htm


# 11 நாட்களில் 25,000 சுற்றுலா பயணிகள்; இவ்வருடத்தில் 6,53,000 பேர் வருகை

வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இந்த மாதத்தில் கடந்த 11 நாட்களில் 25 ஆயிரம் பேர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

ரஷ்யா, இந்தியா, பிரிட்டன் ஆகிய நாடுகளை சேர்ந்தவர்களே இலங்கைக்கு வருகை தந்தவர்களாவர். டிசம்பர் மாதத்தில் மட்டும் 25 ஆயிரத்து 24 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர். ஆயிரத்திற்கு மேற்பட்டோர் ரஷ்யா, இந்தியா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, ஜேர்மன், அமெரிக்கா ஆகிய நாடுகளை சேர்ந்தோரே அதிகமாவர். இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் புள்ளி விபரங்களுக்கு அமைவாக , இந்த வருடத்தில் 6 இட்சத்து 53 ஆயிரத்து 11 சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். இதேவேளை ஆகக்கூடுதலான சுற்றுலா பயணிகள் இந்த வருடம் மார்ச் மாதத்தில் இலங்கை வந்துள்ளனர்.


## பதவி வெற்றிடம்

### பிராந்திய விற்பனை நிறைவேற்று அதிகாரி (கிழக்கு மாகாணம்)

லேக் ஹவுஸ் என்று பரவலாக அறியப்படும் த அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஓ.்.ப் சிலோன் லிமிடெட் (ANCL) இலங்கையில் அச்சு ஊடகத்தின் தாயகமாகவும் இதயமாகவும் உள்ளது. நாட்டின் முன்னோடியான அச்சு ஊடக நிறுவனம், 100 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றையும், 25 ஆண்டுகால நிகழ்நிலை (online) பிரசுரத்தையும் கொண்டுள்ளது என்பதுடன் அச்சு ஊடகத் துறையில் தொடர்ந்து முதலிடத்தை வகிக்கின்றது.

லேக் ஹவுஸ் விற்பனை பிரிவில் மேற்கண்ட வெற்றிடத்தை நிரப்புவதற்கு பின்வரும் தகுதிகள் மற்றும் தேவைப்பாடுகளைக் கொண்ட திறமையான மற்றும் ஆற்றல் மிக்க நபரைத் தேடுகிறது.

**தேவையான தகுதிகள் மற்றும் தேவைப்பாடுகள்:**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் வர்த்தகம் அல்லது முகாமைத்துவத்தில் இளமாணிப் பட்டம் அல்லது SLIM/CIM இன் அங்கத்துவம்
- சந்தைப்படுத்தல் நிறுவனத்தில் இரண்டு வருட கால அனுபவம்.
- எங்கள் செய்தி முகவர்களுடன் நல்லுறவைப் பேணுவதற்கான நல்ல தகவல் தொடர்பு திறன்.
- விற்பனை அல்லது சந்தைப்படுத்துதலுக்கான பண்பு ஒரு தனித்துவமான நன்மையாக இருக்கும்.
- இலகுரக வாகனங்களுக்கு செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும் மற்றும் விண்ணப்பதாரரின் பெயரில் வாகனம் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
- அபேட்சகருக்குச் சொந்தமான வாகனம் மேலதிக தகுதியாக இருக்கும்.
- கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் விண்ணப்பதாரர் விரும்பத்தக்கது.

**வயது:** 35 வயதிற்குக் கீழ்

**வேலைக்கான நிபந்தனைகள்:**
ஒப்பந்த அடிப்படையில் நியமனம் மேற்கொள்ளப்படும் என்பதுடன் செயற்றிறனின் அடிப்படையில் ஒப்பந்த காலம் புதுப்பிக்கப்படலாம்.

**சம்பளம்:**
தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரருக்கு தகுதிகள் மற்றும் அனுபவத்திற்கேற்ப கவர்ச்சிகரமான மற்றும் பேச்சுவார்த்தைக்குட்பட்ட ஊதியப் பொதி வழங்கப்படும்.

**விண்ணப்பங்கள்:**
இந்த விளம்பரம் பிரசுரமான 7 வேலை நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு உறையின் மேல் இடது மூலையில் தற்போதுள்ள நிலையைக் குறிப்பிட்டு உங்கள் சுய விபரத்தை (CV) உறவினரல்லாத இரண்டு சான்று பகர்வோரின் பெயர்கள் மற்றும் தொடர்பு விவரங்களுடன் அனுப்பவும் அல்லது உங்கள் CV யை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பிக்கும் பதவியைக் விடயத்தலைப்பில் குறிப்பிட்டு மின்னஞ்சல் செய்யவும்.

LAKE HOUSE

**மனிதவள பிரதானி,**
**த அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஓ.்.ப் சிலோன் லிமிடெட்,**
**இல. 35, டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு-10.**
hc@lakehouse.lk



Curtin University

GET ON THE FAST-TRACK FROM O/Ls TO YOUR DREAM CAREER WITH CURTIN UNIVERSITY - SLIIT ACADEMY FOUNDATION PROGRAMS

Designed for students who have completed their O/Ls, the Curtin University - SLIIT Academy Foundation programs provide a supportive pre-university pathway to Curtin University's bachelor degrees in IT, Business, Engineering & Health Sciences.

FOUNDATION PROGRAMS IN
INFORMATION TECHNOLOGY
BUSINESS
ENGINEERING
HEALTH AND LIFE SCIENCES

2023 FEBRUARY INTAKE NOW OPEN

APTITUDE TEST
24th December 2022
10.00am - 11.00am
Test Medium
English | Sinhala | Tamil

FOR MORE DETAILS
077 355 0 660
Duration 1 year



ABOUT CURTIN
Curtin University is an innovative, global university known for its high impact research, strong industry partnerships, and commitment to producing career-ready graduates who aspire to make tomorrow better.

1% Top one per cent of universities in the world
(Academic Ranking of World Universities 2021)

TOP 100 Top 100 in civil and construction engineering
(QS World University Rankings by Subject 2021)

A global university
(Opportunity to transfer to Curtin campuses in Australia, Dubai, Malaysia, Singapore or Mauritius, when international travel resumes)

CRICOS PROVIDER CODE 00301J

Entry requirements:
- IT/ Business - minimum of six (6) passes including credit passes for Mathematics & English obtained at one and the same sitting.
- Engineering / Health & Life Sciences - minimum of six (6) passes including credit passes for Mathematics, English & Science obtained at one and the same sitting.

SLIIT Academy, 13th Floor, BOC Merchant Tower, 20 St Michaels Rd, Colombo 03

sliitacademy@sliit.lk www.sliitacademy.lk

# வடக்கு, கிழக்கில் காணி சுவீகரிப்பு தொடர்கிறது

## சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றச்சாட்டு

வடக்கு, கிழக்கில் காணி சுவீகரிப்பு தொடர்ந்தும் இடம்பெற்று வருகிறது. இம்மாகாணங்களுக்கிடையிலான நிலத்தொடர்பை இல்லாமல் செய்து இடையில் அநுராதபுர மாவட்டத்தை புகுத்துவதற்கு முயற்சிகள் இடம்பெறுவதாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்



தற்போது தமிழ் மக்கள் பார்வையாளர்களாக இருக்காமல் தங்களுடைய இருப்பை பாதுகாக்க இருக்கின்ற சகல விடயங்களையும் பயன்படுத்த வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழில் (16) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்,

இந்த விடயத்தில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் என்ன செய்கின்றதென்ற கேள்வி தற்போது எழும்பியுள்ளதென குறிப்பிட்ட அவர், அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைக்கு முன்நிபந்தனை என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் எதனை கூறுகிறாரென எனக்குத் தெரியவில்லையென்றும் கூறினார்.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தவிர தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத்தும் ஒருமித்த நிலையை எடுத்து ஜனாதிபதியுடனான கலந்துரையாடலின் போதும் பல விடயங்கள் வலியுறுத்தப்பட்டன.

அரசாங்கம் சில விடயங்களை செய்வதற்கு சம்மதித்துள்ளது. அவற்றை அரசாங்கம் செய்யுமா? இல்லையா? என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

நாட்டில் நிலவும் நெருக்கடி காலங்களில் அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு அழைக்கும் சந்தர்ப்பத்தில் நாம் பேச்சுவார்த்தைக்கு செல்லாமல் சமஸ்டி தருவதாக உறுதியளித்தாலே பேச்சுவார்த்தைக்கு வருவோமென கூறிவிட்டு நித்திரை கொள்ளமுடியாது.

பேச வேண்டியது எமது கடமை. அதனை சரியான தடத்தில் கொண்டுசெல்வதும் தமிழ் தரப்புகளின் கடமை. அதனூடாக முதல்கட்டமாக இருக்கின்ற அதிகாரங்களையாவது பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஏனைய கட்சிகளை பார்த்து துரோகிகள் அடிவருடிகள் என கூறுவதை விடுத்து தற்போதைய பிரச்சினையை தீர்ப்பதற்கான ஆக்கபூர்வமான வழி என்ன என்பது தொடர்பில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் வெளிப்படுத்த வேண்டுமென தெரிவித்துள்ளார்.

# பிரபல கோடீஸ்வரர் வீட்டில் கொள்ளை

## கொழும்பு, பம்பலப்பிட்டியில் சம்பவம்

கொழும்பு, பம்பலப்பிட்டி ஸ்கெல்டன் வீதியிலுள்ள வர்த்தகர் ஒருவரின் வீட்டில் பாரிய கொள்ளை சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இரகசியமாக வீட்டிற்கு நுழைந்தவர்கள், கைத்துப்பாக்கி, மூன்று கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பணம் மற்றும் தங்கம் ஆகியவற்றை திருடிச் சென்றுள்ளதாக பம்பலப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வீட்டில் இருந்து அரசாங்க அனுமதி பெற்ற கைத்துப்பாக்கி , 12 தோட்டாக்கள், ஒரு கோடியே ஒரு இலட்சம் ரூபாய் பணம், 6,000 அமெரிக்க டொலர்கள் மற்றும் 10 மில்லியன் ரூபா பெறுமதியான தங்கப் நகைகள் என்பன திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பம்பலப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தாயாரின் கவனயீனத்தால் மூன்று மாத குழந்தை தீயில் எரிந்து பலி

முல்லேரியா அம்பத்தலே பிரதேசத்தில் உள்ள வீட்டின் அறையில் ஏற்பட்ட தீ விபத்தில் மூன்று மாத குழந்தையொன்று உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தண்ணீரை சூடாக்க பயன்படுத்தப்படும் மின்சார ஹீட்டரில் இருந்து தீ பரவியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். தீ விபத்து ஏற்பட்ட போது உயிரிழந்த குழந்தையின் தாயும் அவரது மூத்த பிள்ளையும் வீட்டுக்கு வெளியே இருந்துள்ளனர்.வீட்டில் இருந்து புகை வருவதைக் கண்டு தாயாருக்கு அவரது மூத்த பிள்ளை தெரியப்படுத்தியபோதே அவர்கள் குழந்தை படுக்கையில் எரிந்து கிடப்பதை பார்த்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், தீ விபத்து ஏற்பட்ட வீட்டின் மின்சாரம் தடை செய்யப்பட்டுள்ள நிலையில், அருகில் உள்ள வீட்டில் இருந்து பாதுகாப்பற்ற நிலையில் மின்சாரம் பெற்றுக்கொண்டுள்ளனர். பாதுகாப்பற்ற நிலையில் மின்சார ஹீட்டரை பயன்படுத்தியுள்ளதாகவும் அதிலிருந்தே தீ பரவி விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குழந்தையின் தாய் ஹீட்டரை அணைக்காமல் வீட்டை விட்டு வெளியே சென்ற போது ஹீட்டர் தீப்பிடித்து அதிலிருந்து கசிந்த நீர் குழந்தை உறங்கிக் கொண்டிருந்த மெத்தையில் பரவியதாகவும் பொலிஸ் ஊடக அறிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உயிரிழந்த குழந்தையின் தந்தையும் போதைப் பொருள் குற்றச்சாட்டில் சிறையில் உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பைத் அல் முகத்திஸ் பள்ளிவாசலின் பிரதான இமாம் அலி உமர் அல் அப்பாஸி கண்டிக்கு விஜயம்





பைத் அல் முகத்திஸ் பள்ளிவாசலின் பிரதான இமாம் கண்டி கட்டுக்கலைக்கலை ஜம்ஆப் பள்ளிவாசலுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

கண்டி கட்டுக்கலை ஜம்ஆப் பள்ளிவாசலின் தலைவர் அப்சால் மரைக்கார் மற்றும் நிர்வாகத்தினர் ஆகியோரின் அழைப்பை ஏற்று விஜயம் மேற்கொண்டார்.

கட்டுக்கலை அல் புர்க்கானிய்யா அரபுக் கல்லூரி மாணவர்களின் விசேட வரவேற்பு அளிக்கப்பட்டதுடன் வெள்ளிக்கிழமை ஜம்ஆப் சொற்பொழிவினையும் ஜும்ஆத் தொழுகையினையும் பைத் அல் முகத்திஸ் பள்ளிவாசலின் பிரதான இமாம் அலி உமர் அல் அப்பாஸி நடத்தி வைத்தார்.

அவர் இந்நாட்டின் சுபிட்சத்திற்காகவும் பொருளாதார மேம்பாட்டுக்காவும் விசேட துஆப் பிரார்த்தனை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிஸ் தேசியத் தலைவரும் கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் , கண்டி மாவட்டப் பள்ளிவாசல்கள் சேம்மேளனத்தின் தலைவர் கே. ஆர். ஏ. சித்தீக் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். இக்பால் அலி

# முல்லைத்தீவில் அரியவகை விலங்கினை இறைச்சிக்காகப் பிடித்தவர் கைது

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**



முல்லைத்தீவு மாவட்டத்தில் காடுகளில் வாழும் அரியவகை மிருகங்களில் ஒன்றான பாரிய அழுங்கினை இறைச்சிக்காக பிடித்து சென்றவரை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் தேராங்கண்டல் பகுதியில் இறைச்சிக்கு பயன்படுத்த இருந்த நிலையில் இருந்த ஆமடில்லா (அழுங்கு) என்றழைக்கப்படும் காட்டு விலங்கினை கிளிநொச்சி மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் உயிருடன் மீட்கப்பட்டுள்ளதுடன் அதனை கொண்டு சென்றவரை கைது செய்துள்ளார்கள்.

கிளிநொச்சி மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து துணுக்காய் தேராங்கண்டல் பகுதியில் சந்தேக நபர் ஒருவரின் வீட்டை பரிசோதனை மேற்கொண்ட போதே குறித்த காட்டு விலங்கு உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.

## 1,000 பாடசாலைகளுக்கு...

100 கல்வி வலயங்கள், 120 கல்வி வலயங்களாக அதிகரிக்கப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

கல்வி வலயங்களை அதிகரித்ததன் பின்னர் ஆசிரியர்களின் நிர்வாகப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது இலகுவாக அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## OBSERVER SLT MOBITEL...

ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன, அமைச்சின் செயலாளரும் லேக்ஹவுஸ் தலைவருமான அனுஷ பெல்பிட்ட, சண்டே ஒப்சேர்வர் பிரதம ஆசிரியர் தினேஸ் வீரவன்ச, ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி பிரபாத் தஹநாயக்க ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர்.

## பயிரிடப்படாத நிலங்கள்...

தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தற்போது கொழும்பிலுள்ளவர்கள், தமது சொந்த இடங்களில் உள்ள நிலங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளாமல் உள்ளனர்.எனவே, அந்த நிலங்களை அரசுடமையாக்கி, குறித்த பிரதேசங்களில் உள்ள இளைஞர்களுக்கு பயிர்ச்செய்கை மேற்கொள்ள வாய்ப்பளிக்கப்படவுள்ளது.

உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு, ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். இதற்கமைய, சட்டவரைபுகள் மற்றும் கட்டளைச் சட்டம் என்பவற்றில் திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

அடுத்த போகத்தின்போது, குறிப்பிடத்தக்களவு நிலத்தை அரசுடமையாக்கி, இளைஞர்களுக்கு பயிர்ச்செய்கையை மேற்கொள்ள வாய்ப்பளிக்கப்படும்.தற்போது வரையில், சுமார் ஒரு இலட்சம் ஏக்கர் வயல் நிலங்கள் பயிரிடப்படாதுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## கூலிப்படைக்கு ஒப்படைத்து...

இடையில் பணக் கொடுக்கல் வாங்கலிற்கும் இந்தக் கொலைக்கும் தொடர்புள்ளதா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்எனபொலிஸ்பேச்சாளர் தெரிவித்தார்.

ஜனசக்தி காப்புறுதி குழுமத்தின் பணிப்பாளரான தினேஷ் சாப்டர் கொலை தொடர்பான ஆரம்ப விசாரணைகள் மூலம், அவர் முன்னாள் கிரிக்கெட் வர்னணையாளர் பிரையன் தோமசை சந்திக்கத் திட்டமிட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

தினேஷ் சாப்டர் இதனை தனது செயலாளருக்கு தெரிவித்துள்ளார் என பொலிஸார் கூறினர்.

## இணைந்த வடக்கு, கிழக்கில் ...

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு ஜனாதிபதி தலைமையில் நடத்தப்படும் பேச்சுக்களில் அரசியலமைப்பின் 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் கோரியதையடுத்தே, அமைச்சர் நஸீர் அஹமட் இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். இதில் நாங்கள் கரிசனையுடன் உள்ளோம். ஆனால், இத்தீர்வுகள் முஸ்லிம் சமூகத்துக்குப் பிரச்சினையாகிவிடக் கூடாது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்து சமஷ்டி கோரும் தரப்புக்கள், இணைந்த வடக்கு, கிழக்கில் முஸ்லிம்களுக்கு வழங்கும் அதிகாரம் என்ன? இதுபற்றி அவர்கள் மனம் திறப்பது அவசியம்.

சூழ்நிலையைச் சமாளிக்கும் அறிக்கைகள் விடாமல், முஸ்லிம்களின் மனநிலையைப் புரிந்து கொண்டு பேசுவதே சிறந்தது.

இதே நிலைப்பாட்டில் முஸ்லிம் காங்கிரஸ் தலைமை உள்ளமை ஏற்புடையதல்ல. வடக்கு, கிழக்கு இணைய வேண்டுமா? அல்லது வடக்கும், கிழக்கும் வெவ்வேறாக பிரிந்திருக்க வேண்டுமா? என்பதை முஸ்லிம் காங்கிரஸ் தலைமை சமூகத்துக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

இணைய வேண்டுமென்ற நிலைப்பாட்டில் ஹக்கீம் இருப்பாரேயானால் வடக்கு, கிழக்கு முஸ்லிம்களுக்கு வழங்கப்போகும் அரசியல் தீர்வை அவர் தெளிவுபடுத்த வேண்டும்.

இவ்விடயங்கள் தொடர்பில் ஹக்கீமுக்கும், சுமந்திரனுக்கும் இதுவரை காலமும் இரகசியமாக நடத்தப்பட்ட பேச்சுக்கள் வெளிக்கொணரப்படுவது அவசியமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச பரிவர்த்தனைகளுக்கு...

பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த நடைமுறை முன்னதாக ரஷ்யாவால் பயன்படுத்தப்பட்டது.

இந்நிலையில் டொலர் பற்றாக்குறையுள்ள நாடுகளை இந்த பொறிமுறைக்குள் கொண்டு வரும் முயற்சியாக இந்திய ரிசர்வ் வங்கி ஜூலை மாதம் இந்த பொறிமுறையை அமைத்தது.

அதன்படி இந்திய மத்திய வங்கி, ரஷ்யாவுடன் ரூபாய் வர்த்தகத்துக்காக 12 வோஸ்ட்ரோ கணக்குகளை திறக்க வங்கிகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இந்நிலையில் மேற்கூறப்பட்ட நாடுகளை தவிர மொரிஷியஸ் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளும் ஆர்வம் காட்டியுள்ளதால் இலங்கையுடனான வர்த்தகத்துக்கான ஐந்து கணக்குகளும் மொரிஷியஸுடனான வர்த்தகத்துக்காக ஒரு கணக்குமாக மொத்தம் ஆறு கணக்குகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை எண்ணெய் வளம் கொண்ட சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு இராஜ்ஜியம் உள்ளிட்ட பெரிய வர்த்தக பங்காளிகளுடன் ரூபாயில் வர்த்தகத்தை மதிப்பாய்வு செய்வது குறித்து இந்தியா தொடர்ந்து கலந்துரையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## காப்புறுதி கட்டணம் ...

சபரிமலை யாத்திரை செல்லும் ஐய்யப்ப பக்தர்களுக்கு அறவிடப்படும் காப்புறுதியை குறைப்பதற்கு ஐ.தே.கவின் சிரேஷ்ட உறுப்பினர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் யோகராஜன், எஸ்.ஆனந்தகுமார் ஆகியோர் அரசாங்கத்துடன் பல கட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட எஸ்.ஆனந்தகுமார்,

இம்மாத இறுதியில் சபரிமலை யாத்திரை செல்லும் பக்தர்களுக்கு விசா கட்டணத்துக்கு மேலதிகமாக 4000 ரூபா காப்புறுதி நிதியும் செலுத்த வேண்டிய சூழ்நிலை காணப்படுகிறது.

இந்த நிதியை குறைந்தளவில் அறவிட வேண்டுமென வெளிவிவகார அமைச்சர் அலி சபரி, இந்திய உதவி உயர்ஸ்தானிகர், பௌத்த கலாசார திணைக்களத்தின் செயலாளர் உட்பட உரிய தரப்பினரிடம் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன.

பேச்சுவார்த்தைகளின் பிரகாரம் காப்புறுதி நிதியை 713 ரூபாவாக குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

மேட்டுத்தெரு ஸ்ரீராஜ ராஜராஜேஸ்வரி ஆலயத்தின் தலைவர் திருக்கேஷ் செல்லசாமி, ரவீந்திரன் குருசாமி, ரவீந்திர குமார் குருசாமி உள்ளிட்டவர்களும் இந்து கலாசார திணைக்களத்தின் அதிகாரிகளும் அரசாங்க அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## எங்கள் கருத்து

# நல்லிணக்கம், விட்டுக்கொடுப்பு இன்றேல் எக்காலமும் தீர்வில்லை!

ஓரிரு கட்சிகள் இச்சந்திப்பைத் தவிர்த்துக் கொண்டமை கவலைக்குரியது. ஒன்றுகூடிப் பேசி கருத்தொருமைப்பாடு காண்பதைத் தவிர்ப்பதென்பது அரசியல் பக்குவமல்ல. அச்சந்திப்பைத் தவிர்த்துக் கொண்ட கட்சிகளின் தலைவர்கள், நாட்டில் நல்லிணக்கப்பாட்டை விரும்பாதவர்களோ என்றும் எண்ணத் தோன்றுகின்றது.

இவ்வேளையில் தென்னிலங்கைப் பெரும்பான்மைக் கட்சிகளுக்கு மாத்திரமன்றி, தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளுக்கும் பாரிய பொறுப்புகள் உள்ளன என்பது உண்மை. விட்டுக்கொடுப்பும், நல்லிணக்கப்பாடுமின்றி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இயலாது என்பது நம் கடந்தகால வரலாற்றில் கற்றுக் கொண்ட பாடமாகும். காலத்துக்கேற்றவாறு சில விடயங்களிலிருந்து இறங்கி வருவதும், ஐக்கியத்துக்கு ஒத்துழைப்பதும் அக்கட்சிகளின் கடமையாகின்றன.

தமிழ் மக்களின் பிரச்சினையானது தவிர்க்க முடியாதபடி இன்று சர்வதேசமயப்படுத்தப்பட்டு விட்டதென்பதையும், அப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாவிடில் இலங்கையில் எக்காலமும் சுமுகநிலைமை தோன்றப் போவதில்லையென்பதையும் அனைத்து தரப்பினரும் புரிந்து கொள்ள வேண்டியதும் இவ்வேளையில் அவசியமாகின்றது.

## 12 வருடங்களுக்கு பின்னர்...

நேற்று சுகாதாச ஸ்போட்ஸ் ஹோட்டலில் நடைபெற்ற ஊடவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.அங்கு தொடர்ந்துரையாற்றிய பிரபா கணேசன்

12 வருட காலம் எமது கட்சியை தேர்தல் ஆணையாளா் பல காரணங்களை கூறி அங்கீகரிக்கவில்லை.ஆனால் இம்முறை எமது கட்சிக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

எதிர்காலத்தில் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாக உற்சாகத்துடன் செயற்பட முடிவெடுத்துள்ளோம். நடைபெறவுள்ள அனைத்து தோ்தல்களிலும் எமது கட்சி கொழும்பு, களுத்துறை, வன்னி , மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய பகுதிகளில் தனித்து போட்டியிடும்.அப்பகுதிகளில் எமது கட்சியின் செயல்பாடுகள் கடந்த காலத்தில் நடைபெற்றன. இனிவரும் நாட்களில் நாடுமுழுவதும் அது விஸ்தரிக்கப்படும்.

.தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளை வென்றெடுப்பதே எமது நோக்கமாகும். குறிப்பாக கொழும்பு மாவட்டத்தில் அடிப்படை வசதிகள் இன்றி மக்கள் கஷ்டப்படுகின்றனர்.கொழும்பு மாவட்ட பாடசாலைகளின் வளர்ச்சி 2015 ஆணடுக்கு பின்னர் நிறுத்தப்பட்டுள்ளன.நான் பிரதியமைச்சராக முன்னைய அரசுடன் இணைந்து கொழும்பு மாவட்டத்தில் 45 க்கும் மேற்பட்ட பாடசாலைகளை அபிவிருத்தி செய்துள்ளேன்.அதன் பின்னா் கொழும்பில் எவ்வித அபிவிருத்தியும் இடம்பெறவில்லை.அத்தோடு 06 மாத காலங்கள் தொழில்நுட்ப துறை பிரதியமைச்சராக இருந்த காலத்தில் பாடசாலைகளில் கணனி பயிற்சி கூடங்களை ஆரம்பித்து வைத்தேன்.ஆனால் அதன் பின்னா் மக்களின் வாக்குகளை பெற்றவர்கள் எவ்வித அபிவிருத்தியையும் செய்ததாக தெரியவில்லை.தமிழ் மக்களின் உரிமைக்காக கோசம் எழுப்புபவர்களால் உரிமைகளை வென்றெடுக்க முடியாது. அபிவிருத்தியோடு மக்களுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்தல் வேண்டும்.

சிறுபான்மை மக்களின் அபிலாசைகளை நாம் நிறைவேற்றி வருகின்றோம். அரகலையில் ஈடுபட்ட பல இளைஞர், யுவதிகள் எமது கட்சில் இணைந்து வருகின்றனா்.புதிய மாற்றத்துடன் கட்சியை முன்னெடுத்து செல்வே அவர்கள் விருப்புகின்றனர்..எதிர்வரும் உள்ளூராட்சி சபை தோ்தலிலும் எமது கட்சி போட்டியிடும் என்றார்.

எமது கட்சியின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் தேசிய அமைப்பாளராக எஸ் ராஜேந்திரன், பிரதித் தலைவராக முன்னாள் மாகாணசபை உறுப்பினர் கலாநிதி நல்லையா குமரகுருபரன் போன்ற பல்வேறு அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களுடன் இணைந்து புதிய நிரவாகத்தின் கீழ் எமது கட்சி கட்டியெழுப்பப்படும்.

## பெப்ரவரி 04 க்கு முன்னர் ...

ஒரே நேரத்தில் இந்த மூன்று விடையங்கள் நடைபெற வேண்டும் என்பதும் எமது சிந்தனையாகும். இதனை முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தையிலேயே ஜனாதிபதியும் மற்றவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த மூன்று விடயங்களும், ஜனாதிபதி தானாகவே கூறியுள்ள காலக்கெடு, அதாவது இலங்கையின் 75 வது ஆண்டு சுதந்திரதின நிறைவை கொண்டாடும் 2023 பெப்ரவரி 04 ஆம் திகதிக்கு முன்னதாக செய்து முடிக்க வேண்டுமென்ற அவரது விருப்பத்தை நாங்கள் முற்று முழுதாக ஏற்றிருக்கின்றோம்.

ஜனாதிபதியுடனான சந்திப்புத் தொடர்பாக எமது அனைத்து தமிழ் கட்சிகளும் இணைந்து வெளியிட்ட அறிக்கையில், வடக்கு,கிழக்கில் உள்ளக சுய நிர்ணய அடிப்படையில் ஒரு சமஷ்டி கட்டமைப்பில் அதி உச்ச அதிகாரப் பகிர்வு ஏற்படுத்தப்படல் வேண்டுமென்பதை தெட்டத் தெளிவாகக் கூறியிருக்கின்றோம்.

இதனைக் கேட்டு தெரிந்து கொள்கின்றவர்களுக்கு நன்றாகப் புரியும். தூங்குவது போல் பாசாங்கு செய்பவர்களை தட்டி எழுப்ப முடியாது. எனவே நாம் வெளிப்படையாக இதனை பகிரங்கப்படுத்தித்தான் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைக்கு சென்றிருக்கிறோம்.

இதே விடயங்கள்தான் எமது தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் தொடர்ச்சியாக இருந்து வருகிறது. பாராளுமன்றத்திலும் ஜனாதிபதியுடன் நடைபெறுகின்ற தற்போதைய பேச்சுவார்த்தைகளின் போதும் நாம் இதனையே முன்வைத்து பேச்சுவார்த்தையை முன்னகர்த்தி செல்கிறோம்.

இப் பேச்சுவார்த்தையில் காணாமலாக்கப்பட்டவர்களின் விடயம், எஞ்சியிருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, காணி அபகரிப்பு போன்ற விடயங்கள் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அதிகாரப்பகிர்வு தொடர்பில் அரசியலமைப்பில் இருக்கின்ற விடயங்கள் அமுல்படுத்தப்பட்டு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படல் வேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறோம்.

புதிய அரசியலமைப்பு விடையத்தில் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று ஒரு நிரந்தத் தீர்வு காணப்படல் வேண்டும்.

இவை ஒரே நேரத்தில் நடைபெற வேண்டுமென்பதும் எமது சிந்தனையாகும். இதனை முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தையில் ஜனாதிபதியும் மற்றவர்களும் ஏற்றுக் கொண்டும் இருகின்றார்கள்.

இந்த மூன்று விடையங்களும், ஜனாதிபதி குறிப்பிட்டுள்ள அந்தக் காலகட்டத்துக்குள்ளேயே ஒரு இணக்கப்பாடு, ஒரு முடிவு ஏற்பட வேண்டுமென்பதை நாங்கள் நிர்ப்பந்தமாகச் சொல்லியிருக்கின்றோமென்றும் சுமந்திரன் இதன் போது தெரிவித்தார்.



# அரசியல் அரங்கம்

அர்ஜூன்



# முன்னேற்றகர நிலையில் IMF பேச்சுவார்த்தைகள்!

**சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் முன்னேற்றகரமான நிலையை எட்டியிருப்பதாக வெகுஜன ஊடக, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார். நாடு பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வது தொடர்பான வேலைத்திட்டங்கள் குறித்து எமக்கு வழங்கிய பேட்டியில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.**

**கே: உலக வங்கியின் சர்வ–தேச அபிவிருத்தி உதவித் திட்டத்தின் மூலமான நிதியுதவியை இலங்கை இப்போது அணுக முடியும். இது பொருளாதார நெருக்கடியை ஓரளவுக்கு சமாளிக்க உதவும் என்று நினைக்கிறீர்களா?**

பதில்: இது மற்றொரு மூலோபாய அணுகுமுறை. எவ்வாறாயினும் IMF திட்டத்தின் கீழ் கடன்களை மறுசீரமைப்பதன் காரணமாக ஒரு நிலையான சூழ்நிலை உருவாகும் என்று நான் நினைக்கிறேன். IMF திட்டம் வெற்றி பெற்றால் 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மட்டுமே கிடைக்கும் என்று சிலர் கூறுகிறார்கள். எனினும், அது அவ்வாறு இல்லை. நம்பகத்தன்மையை மீட்டெடுக்கும் போது, பிறநாடுகள் மற்றும் நிதிநிறுவனங்களிடமிருந்து கடன் பெறும் திறனும் அதிகரிக்கும்.

கடன் மறுசீரமைப்பு மற்றும் IMF உதவி மூலம் அடுத்த ஆண்டின் முதல் காலாண்டில் ஒருவித நிவாரணத்தைப் பெற முடியும் என்று நம்புகிறேன். மேலும் மேலும் அந்நிய கையிருப்பு பெறுவதுதான் நமக்கு அவசியம். அண்மைக் காலத்தில் சிலநாடுகள் வருடாந்தம் 50 பில்லியன் அமெரிக்க டொலர் முதல் 400 பில்லியன் டொலர் வரை வருமானம் ஈட்டும் போது, வெளிநாட்டு முதலீடுகள் மூலம் வருடத்திற்கு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கூட எம்மால் தேடிக்கொள்ள முடியவில்லை. இந்தியா, சீனா, வியட்நாம், சிங்கப்பூர், மலேசியா, ஓமான், துபாய் போன்ற நாடுகள் எப்படி வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். அதற்கு அந்த நாடுகள் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு தாராளமாக அளிக்கும் பல்வேறு சலுகைகள் தான் முக்கிய காரணம்.

ஒரு முறை, நாங்கள் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தை தனியார்மயமாக்கினோம். மீண்டும் அதைத் திரும்பப் பெற்றோம். நாங்கள் துறைமுக நகரத்தை நிர்மாணிக்க அனுமதித்தோம். ஆனால் அடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கம் சுமார் ஒன்றரை வருடங்களுக்கு அதன் நிர்மாணப்பணிகளை இடைநிறுத்தியது. கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை சில நாடுகளுக்கு வழங்குவதாக உறுதியளித்தோம், பொதுமக்களின் எதிர்ப்பையடுத்து அதனை வழங்க மறுத்தோம். ஒரு வெளிநாட்டு முதலீட்டாளர் இலங்கைக்கு வரும்போது, அந்த நபரின் மனஉறுதியைக் குலைக்கும் வகையில் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அவுஸ்திரேலிய கோடீஸ்வர வர்த்தகரான ஜேம்ஸ் பாக்கர் சில பாரிய முதலீடுகளை மேற்கொள்ளும் நோக்கத்துடன் இலங்கைக்கு வந்தார். அப்போது அவர் கடுமையாக விமர்சித்து திருப்பி அனுப்பப்பட்டார். இந்தியாவின் தொழிலதிபர் அதானியும் விமர்சிக்கப்பட்டார். அத்துடன் அவர் தடுக்கப்பட்டார். வேறு எந்த நாட்டிலும் பார்க்க முடியாத வகையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் மனஉறுதியை சீர்குலைக்கும் ஒரு சிதைந்த நிலை இலங்கையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, சிங்கப்பூர் மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த தனியார் பல்கலைக்கழகங்கள் உள்ளன. எனினும், இலங்கையில் இவ்வாறான தனியார் பல்கலைக்கழகங்களை திறக்க அனுமதியில்லை. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நம் நாட்டுக்கு வருவார்களா? சர்வதேச அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் இலங்கையில் திறக்கப்பட்டால் மாலைதீவு, பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், இந்தோனேசியா போன்ற நாடுகளில் இருந்து வெளிநாட்டு மாணவர்களை ஈர்க்க முடியும். இது இலங்கையில் ஒரு கல்வி மையத்தை உருவாக்க வழிவகுக்கும்.

**கே: சர்வதேச நாணய நிதியத்தின் கடன்வசதி தொடர்பான முன்னேற்றம் என்ன? குறைந்தபட்சம் மே மாதம் 2023 இற்குள் இலங்கை அதைப் பெற முடியுமா?**

பதில்: நாங்கள் வங்குரோத்து நிலையை அடைந்ததாக அறிவிக்கப்பட்ட பின்னர், இந்தப் பிரச்சினையை எளிய முறையில் தீர்க்கும் நிலையில் நாங்கள் இல்லை. இது தொடர்பான அறிவும் நிபுணத்துவமும் எங்களிடம் இல்லை. எனவே, இரு தரப்புக்கும் இடையிலான நிபந்தனைகள் தொடர்பாக பல்வேறு கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் கலந்துரையாடல்கள் நிச்சயமாக ஒரு நிலையை எட்டும் என நம்புகின்றோம். கடன் மறுசீரமைப்பில் எங்களுக்கு நிபுணத்துவம் இல்லாததால், இந்த விஷயத்தில் நிபுணத்துவம் பெற்ற சர்வதேச நிறுவனங்களை நாங்கள் அழைத்தோம்.

அதன்படி, 28 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அவர்களில் 20 பேர் தனி குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டனர். அந்தக் குழு பிரான்சை தளமாகக் கொண்ட லாசார்டை நிதி ஆலோசகராகவும், கிளிஃபோர்ட் சான்ஸ் எல்.எல்.பியை சட்ட ஆலோசகராகவும் தேர்ந்தெடுத்தது. எந்தவொரு எதிர்க்கட்சி எம்.பி.க்கும் கடன் பிரச்சினையை எளிய முறையில் தீர்க்கும் யோசனை இருக்குமானால், லாசர்டுக்கு நாம் கொடுக்கும் டொலரை அவருக்குக் கொடுக்கலாம். எங்கள் வழக்கறிஞர்கள் குழு நாட்டின் சார்பாக சட்ட ஆலோசனை வழங்க முன்வந்தால், அவர்கள் கிளிஃபோர்ட் சான்ஸை திரும்பிச் செல்லும்படி கேட்கலாம்.

உண்மையில், எந்தவொரு எதிர்க்கட்சி அரசியல்வாதியும் பிரச்சினையின் தீவிரத்தை உணரவில்லை. அதிகாரத்தை மாற்றினால் பிரச்சினையும் மாறிவிடும் என்று நினைக்கிறார்கள். ஆனால் யதார்த்தம் அப்படி அல்ல. பொருளாதார நெருக்கடிக்கு அரசியல் ரீதியான தீர்வுகள் முடிவல்ல. ஒருவேளை அரசியல் நெருக்கடிக்கு அரசியல் தீர்வு உண்டு. ஆனால் பொருளாதார நெருக்கடிக்கு பொருளாதாரத் தீர்வு மட்டுமே உண்டு.



**வெளிநாட்டு முதலீட்டாளர்களின் மனஉறுதியை சீர்குலைக்கும் மோசமான நிலைமை இலங்கையில் உருவாக்கப்பட்டுள்ளது. வேறு எந்த நாட்டிலுமே பார்க்க முடியாத நிலைமை இது!**

**கே: ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியிலிருப்பதற்கு ஆதரிப்பதன் மூலம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 'சரியான தெரிவை' எடுத்ததாக அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் நிதி அமைச்சருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இந்தக் கருத்துடன் நீங்கள் உடன்படுகிறீர்களா?**

பதில்: ஆம்... இல்லாவிட்டால் நாட்டில் ஒரு அராஜக நிலைமை உருவாகியிருக்கும். நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் திறன் இல்லையென்றால் நிலைமை எப்படி இருந்திருக்கும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். 1988_89 பயங்கரவாதம் நிலவிய காலத்தில் பல்வேறு உத்தரவுகளால் பேருந்துகள் மற்றும் ரயில்கள் இயக்கப்படாமல் சில நாட்கள் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டதைக் கண்டோம். அந்த உத்தரவை மீறுபவர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். ஆயுதமேந்திய கும்பல்கள் பலவந்தமாக வீடுகளுக்குள் நுழைந்து பெற்றோரையும் குழந்தைகளையும் மண்டியிடச் சொன்னார்கள். அந்தக் கும்பல்களால் கொல்லப்பட்டவர்களின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்வது கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டது. நடிகர் விஜய குமாரதுங்க கொல்லப்பட்ட போது, அவரது இறுதி ஊர்வலத்தில் மக்கள் கலந்து கொள்வதைத் தடுக்க முடியவில்லை என்பது எனக்கு இன்னும் நினைவிருக்கிறது. அப்போது விஜய குமாரதுங்க குறித்து நாளிதழுக்கு பேட்டி கொடுக்க யாரும் இல்லை. விஜே ஒரு சிறந்த மனிதர் என்று நான் ஊடகவியலாளர் பந்துல பத்மகுமாரவுக்கு பேட்டியளித்தேன். மே 9, 2022 அன்று நாட்டில் இதே அராஜகச் சூழலை நாங்கள் அனுபவித்தோம். பணம் அச்சிடுதல், வட்டி வீதங்கள், மாற்று வீதங்கள் மற்றும் சர்வதேச கடன் செலுத்துதல் ஆகியவற்றில் புரிதல் இல்லாதவர்களால் ஒருபோதும் அரசாங்கத்தை நடத்த முடியாது.

சிலர் கூட்டங்களை நடத்திவிட்டு எதையாவது பேசலாம். சில சமயங்களில், அந்த உரைகளை மக்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் கேட்கிறார்கள். ஆனால், அவர்களால் நாட்டை ஆள முடியாது. சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் இலங்கையில் அமைக்கப்பட வேண்டும் என்பதை நாம் நாட்டுக்கு திட்டவட்டமாக கூறுகின்றோம். அந்நிய செலாவணி நாட்டுக்கு வெளியே செல்வதைத் தடுக்கவும், நாட்டிற்கு அந்நிய செலாவணி வருவதைத் அதிகரிக்கவும் உதவும். போட்டி நிறைந்த சூழ்நிலையில் தரமான கல்வியைப் பெறவும் இது உதவும். இதுதான் எங்களின் கொள்கை, நாங்கள் வெளிப்படையாகச் சொல்கிறோம்.

**நாட்டின் பிரச்சினையின் தீவிரத்தை எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் எவருமே உணரவில்லை! அதிகாரத்தை மாற்றினால் பிரச்சினையும் தீர்ந்து விடும் என்று நினைக்கிறார்கள்!**

**கே: உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் முயற்சிப்பதாக எதிர்க்கட்சிகள் தரப்பிலும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. தேர்தலை சந்திக்க அரசாங்கம் பயப்படுகிறதா?**

பதில்: எந்த நேரத்திலும் தேர்தலை நடத்துவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், தேர்தலை நடத்துவது நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடிக்கு எந்தத் தீர்வையும் அளிக்காது.




# மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மனிதாபிமான அணுகுமுறை அவசியம்!

பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக சிக்கலான சம்பவங்கள் அதிகம் நிலவுகின்ற காலம் இதுவாகும். இவ்வாறான சூழலுக்கு வரலாற்றில் முன்னர் முகம்கொடுக்காத இலங்கையானது தற்போது மிகவும் குழப்பமான நிலைமையில் உள்ளது. பொருளாதாரப் பிரச்சினையின் பாதிப்பை மக்கள் உணரத் தொடங்கியுள்ளார்கள். மக்கள் தமது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வது கூட சிரமமான காலகட்டமாகும்.

ஏழை மக்கள் மிகவும் வறியவர்களாக மாறியுள்ளார்கள். நடுத்தர வருமானம் பெறுபவர்களின் நிலைமையும் மேலும் கீழ்மட்டத்தை அடைந்துள்ளது. இந்நிலைமை திடீரென ஏற்பட்டதல்ல! காலம் காலமாக தீர்க்கப்படாத, தீர்வுகள் எட்டப்படுவதைத் தவிர்த்த பல சிக்கல்கள் ஒரேநேரத்தில் வெடித்ததனால் ஏற்பட்ட குழப்பமே இதுவாகும்.

சில சந்தர்ப்பங்களில் பிரச்சினைகள் தோன்றுவது வழமை. பிரச்சினைகளுடன் வாழ்வது என்பது புதிதல்ல. ஆனால் அதற்கான தீர்வுகளைக் கண்டுபிடிக்க வேண்டும். அமைதியாக ஆத்மபலத்துடன் செயற்பட்டு எழுச்சி அடைவது அவசியம். சமூகம் கோருகின்ற மாற்றத்தை ஏற்படுத்திக் கொடுப்பது அரசியல் தலைவர்களின் பொறுப்பாகும். இன்று நிலவுவது அனைத்து இனங்களின் பிரச்சினைகள் ஆகும். வடக்கு, தெற்கு என்ற வித்தியாசம் இதில் இல்லை. மத, சமூக மற்றும் அரசியல் தலைவர்கள் நாட்டில் காணப்படுகின்ற முரண்பாடுகள் குறித்துக் கலந்துரையாடி அவற்றைத் தீர்க்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளிப்பது முக்கியமாகும். பல்வேறுபட்ட கருத்துகளினால் குழப்பத்தை ஏற்படுத்துவது பொருத்தமற்ற செயலாகும்.

தேவையான மாற்றங்களை அறிமுகம் செய்து செயற்படுத்தினால் நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும். உலகில் அதிகமான நாடுகள் அடிக்கடி பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துள்ளன. வரலாற்றில் அதற்கு ஆதாரங்கள் உள்ளன.

கொவிட் தொற்று சர்வதேச ரீதியாக ஏற்படுத்திய பாதிப்புகள் அதிகமாகும். அதனால் உருவான பொருளாதாரச் சிக்கல் இன்றும் உலகம் பூராவும் பரவியுள்ளது. இலங்கை முகம்கொடுத்துள்ள நிலைமையும் கூட அதில் ஒரு பகுதியாகும். ஏற்றுமதி வருமானம் குறைந்ததுடன், உல்லாசப் பயணிகளின் வருகையில் வீழ்ச்சியும் ஏற்பட்டது. குறுகியகால கடன் தொடர்பான நிலைமை மோசமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஔடதங்கள், உணவு, எரிபொருள், மின்சாரம் போன்றவற்றில் ஏற்பட்டுள்ள பாதிப்பு காரணமாக மக்கள் எழுச்சி உருவெடுத்து அரசாங்கத்தை மாற்றுகின்ற போராட்டம் வரை பரவியது.

பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்த பின்னர் அதனைச் சீர்செய்வதற்கு பல முறைகள் உள்ளன. செலவைக் கட்டுப்படுத்த வேண்டும். வருமானத்தை அதிகரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கொள்கை வகுப்பாளர்கள் இதற்கான ஆலோசனைகளை முன்வைக்க வேண்டும். அவற்றை உடனடியாக செயற்படுத்தினால் பொருளாதாரத்தில் புத்துயிர்ப்பு ஏற்படும்.

இலங்கை போன்ற நாடுகளால் கடும் தீர்மானங்களுக்குச் செல்ல முடியாது. மக்கள் சிரமங்களுக்கு உள்ளாவதோடு அவர்களால் உதவிகளைப் பெற முடியாமல் போகலாம். சிரமங்களைக் குறைக்கும் மனிதாபிமான நடவடிக்கை மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். சமூகச் சிக்கல்களைப் புரிந்து கொள்வதோடு தீர்வுடன் கூடிய புரட்சிகரமான திட்டங்கள் அவசியமாகும். மக்களின் இதயத்துடிப்பைப் புரிந்து கொண்டு திட்டங்களைத் தீட்டுவது மிகமுக்கியமாகும்.

கொவிட் தொற்றுடன் உலகின் விநியோகச் சக்கரம் புதிய தோற்றத்தைப் பெற்றுள்ளது. நாடுகள் 'லொக்டவுண்' ஆகும் போது தங்களுடைய தேவைகளை தாங்களே நிறைவேற்றிக் கொள்ளும் கட்டமைப்பு உருவானது. செயல்திறன்மிக்க விநியோகச் சக்கரம் மீண்டும் உருவாகி வருகின்றது. பணக்கார நாடுகள் தங்களுக்கு நன்மையாக அவற்றை மாற்றிக் கொண்டுள்ளன. வர்த்தக வசதிகளை திட்டமிடுவதோடு, தங்களுக்கு எதிரான நாடுகளை விநியோகச் சக்கரத்திலிருந்து வெளியேற்றி வருகின்றன. திறந்த பொருளாதார முறை தொடங்கப்பட்ட ஆரம்ப காலத்தில் காணப்பட்ட கட்டமைப்பை விட இது மாறுபாடானது . மிகவும் போட்டியான முறைகளே காணப்படுகின்றன.

இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் மேம்படுத்துவதற்காக பல்வேறு ஆலோசனைகள் உள்ளன. தேசிய மற்றும் வெளிநாட்டு நிபுணர்கள், அமைப்புகள் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. வரவுசெலவுத் திட்ட இடைவெளியை நிரப்புதல், மின்சாரம், எரிபொருள், நீர், எரிவாயு போன்றவற்றின் கட்டணங்களை உயர்த்துதல், நிவாரணங்களைக் குறைத்தல் உள்ளிட்ட விடயங்கள் அதில் அடங்குகின்றன. அவற்றைச் செயற்படுத்தும் போது வறிய மக்களைப் பற்றி கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

அரச வருமானத்தை அதிகரிப்பதற்காக அரச சேவைகளுக்கு அறவிடப்படும் கட்டணங்கள் மீண்டும் மீண்டும் உயர்த்தப்படுகின்றன. கைத்தொழில் மற்றும் வர்த்தகங்களுக்கு அதிக வரி விதிக்கப்பட்டுள்ளது. இந்த வரியை செலுத்துபவர்கள் சாதாரண மக்களே என்பதை மறந்து விடக்கூடாது.

அரசின் அர்ப்பணிப்பு குறித்தும் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. அரச வருமானத்தில் நூற்றுக்கு 80 வீதத்துக்கு அதிகமாக அரசு ஊழியர்களுக்கு ஊதியம் மற்றும் ஓய்வூதியமாக செலவிடப்படுகிறது. காரியாலயங்களை நடத்துதல், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கான சொகுசான வசதிகள் போன்றவற்றுக்கான செலவினங்களைக் கட்டுப்படுத்த முடியும். அரச நிறுவனங்களின் மின்சாரம், நீர், எரிபொருள் பாவனையைக் கட்டுப்படுத்த முயற்சி செய்வது அவசியமாகும். அர்ப்பணிப்பு என்பது உயர்அதிகாரிகளுக்கும் தேவையாகும். சிக்கனம் தேவை.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்** ...

# அடுத்த வருட முதல் காலாண்டுக்குள் சர்வதேச நாணய நிதிய கடனுதவி

**பொருளாதாரத்தை மீண்டும் சரியான பாதையில் கொண்டு செல்வதற்கு அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற முயற்சிகள் சர்வதேச நாணய நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்களின் பாராட்டைப் பெற்றுள்ளன.**


ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதித் தலைவர் அண்மையில் இலங்கைக்கு வருகை தந்திருந்த போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவிகள் இவ்வருட இறுதிக்குள் கிடைக்கப் பெறலாம் என்ற எதிர்பார்ப்புக்கள் முன்னர் காணப்பட்ட போதும், ஒருசில காரணங்களால் அடுத்த வருடத்தின் முதல் காலாண்டுக்குள் அக்கடன்களைப் பெற முடியும் என அரசாங்கத்தின் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதித் தலைவர் உள்ளிட்ட உயர்மட்டக் குழுவொன்று பிரதமர் தினேஷ் குணவர்த்தனவைச் சந்தித்து அண்மையில் கலந்துரையாடல்களை நடத்தயிருந்தது. இலங்கை கொண்டு வருகின்ற பொருளாதார சீர்திருத்தங்களால் விரைவான முன்னேற்றம் அடைவதற்கான அர்ப்பணிப்புகள் குறித்து இங்கு பாராட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

பிரதமர் தினேஷ் குணவர்தனவுடனான சமீபத்திய சந்திப்புகளில் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் அபிவிருத்தியடைந்த நாடுகளின் பிரதிநிதிகள், இலங்கையின் அபிவிருத்தி மற்றும் பொருளாதார, நிதி சவால்களை சமாளிக்கும் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்தனர்.

குறிப்பாக நிதித்துறைகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதில் கவனம் செலுத்தியிருக்கும் அரசாங்கம், எரிசக்தி, மின்சாரம் மற்றும் பெற்றோலியம் ஆகிய துறைகளை மறுசீரமைப்பதில் அதிக அக்கறை கொண்டுள்ளது.

## பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதாயின் IMF வழங்கும் ஆதரவு தவிர்க்க முடியாதது!






பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதில் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி பெரிதும் எதிர்பார்க்கப்படும் ஒரு விடயமாக அமைந்துள்ளது. இது தொடர்பான முன்னேற்றம் தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, "கடன் வழங்குநர்களிடமிருந்து நிதிகளை பெறுவதற்கு முன்னர், அவர்களிடமிருந்து நிதியைப் பெறும் உத்தரவாதங்களைப் பெற வேண்டும். இதனாலே சீனா, ஜப்பான் மற்றும் இந்தியாவை உள்ளடக்கிய கூட்டுப் பேச்சுவார்த்தைகளில் இலங்கை ஈடுபட்டுள்ளது.வளர்ந்து வரும் பொருளாதாரங்களுக்கான முன்னேற்றம் மற்றும் புதிய தவணைகள் பற்றி விவாதிக்க எதிர்வரும் 22 வரை கூட்டங்களை நடத்துவதற்கு சர்வதேச நாணய நிதியம் திட்டமிட்டுள்ளது. இதில் இலங்கை உள்வாங்கப்படவில்லை. இந்நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்புதலைப் பெறுவதில் 100 வீதம் கவனம் செலுத்தி வருகிறோம்" என்று கூறியுள்ளார்.

கடன், வழங்குநர்களிடமிருந்து நிதி உத்தரவாதங்களைப் பெறுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்திருப்பதாக அவர் வலியுறுத்தினார்.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு கடன் வழங்குவது தொடர்பில் பணியாளர்கள் மட்டத்தில் இணக்கப்பாட்டை எட்டியுள்ள போதும், இலங்கைக்கு வழங்கப்பட்ட கடன்கள் மறுசீரமைக்கப்பட வேண்டிய தேவை காணப்படுகிறது. இதற்கான தொடர் பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது.

அதேவேளை, அரசாங்கத்தின் வருவாய்களை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. சேர்பெறுமதி (திருத்தச்) சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதுடன், உள்நாட்டு இறைவரிச் சட்டமும் அண்மையில் பாராளுமன்றத்தில் திருத்தப்பட்டது.

இதற்கு அமைய மாதாந்த சம்பளத்தின் அடிப்படையில் வரி அறவிடும் நடைமுறையொன்று அமுல்படுத்தப்படுகிறது. கடந்த பல வருடங்களாக இவ்வாறு வரி அறவிடும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டிருந்தாலும் வரி செலுத்துவதற்கான எல்லையில் வேறுபாடுகள் காணப்பட்டன.

இவ்வாறான பின்னணியில் தற்பொழுது ரூபா ஒரு இலட்சத்துக்கு மேல் சம்பளம் பெறுபவர்களிடம் வரி அறவிடப்படவுள்ளது. இது தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்ற போதும், அரசாங்கத்தின் வருமானம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் சேர்பெறுமதி வரி உள்ளிட்ட வரி வீதங்கள் குறைக்கப்பட்டமையால் அரசுக்குப் பாரிய வருமான வரி இழப்பு ஏற்பட்டது. இதுவும் நாடு தற்பொழுது எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கு ஒரு காரணமாக அமைந்தது.

இவ்வாறான நிலைமைகளைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் இறுக்கமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அதேநேரம், குறைந்த வருமானங்களைப் பெறும் தரப்பினரின் சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய கடப்பாடும் அரசாங்கத்துக்கு உள்ளது.

இலங்கை அரசாங்கம் 2023ஆம் ஆண்டு 8 பில்லியன் டொலரை கடனாக எதிர்பார்ப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சர்வதேச செய்திச் சேவையொன்றுக்குத் தெரிவித்திருந்தார். சர்வதேச நாணய நிதியத்துக்கு அப்பால், பலதரப்பு நிறுவனங்களிடமிருந்து அடுத்த ஆண்டு 5 பில்லியன் டொலர் வரை கடனை இலங்கை எதிர்பார்க்கிறது.


ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதித் தலைவர் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவைச் சந்தித்த போது...

### பொருளாதார சீர்திருத்தங்களில் இலங்கை விரைவான முன்னேற்றம்

அத்துடன் அரச சொத்துக்களை மறுசீரமைப்பதன் மூலம் அரசாங்கம் 3 பில்லியன் டொலர்களை திரட்ட முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அரச நிறுவனங்கள் சிலவற்றை, மறுசீரமைப்பதில் ஜனாதிபதி ஆர்வமாக உள்ளார். அதன் மூலம் 2 முதல் 3 பில்லியன் டொலர்களை திரட்ட முடிந்தால், திறைசேரியின் இருப்புக்கள் பலப்படுத்தப்படும் என்பதும் அவருடைய கருத்தாக அமைந்தது.

இது இவ்விதமிருக்க, அரசாங்க நிறுவனங்களை மறுசீரமைப்பது தொடர்பில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது. விசேடமாக மின்சார சபையை மறுசீரமைப்பது குறித்து அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழு பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. இது தொடர்பில் தேசியப் பேரவையின் கொள்கைத் தயாரிப்பு குறித்த உபகுழுவில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டிருந்தது.

இலங்கை மின்சார சபையின் வினைத்திறனை அதிகரிப்பது மற்றும் ஒழுங்குறுத்துகைப் பணியை உறுதிப்படுத்தும் நோக்கில் ஐந்து சுயாதீன நிறுவனங்கள் அமைக்கப்பட வேண்டும் என முன்மொழியப்பட்டிருப்பதாக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழு பரிந்துரைத்துள்ளது. மின்சாரத்துறை மாத்திரமன்றி ஸ்ரீலங்கா ரெலிகொம் உள்ளிட்ட அரசாங்க நிறுவனங்களை மறுசீரமைப்பது பற்றிய பேச்சுக்களும் இடம்பெறுகின்றன.

இலாபமீட்டும் நிறுவனங்களை விற்பனை செய்ய அரசாங்கம் முயற்சிக்கிறது என்ற விமர்சனங்கள் ஒருபுறம் இருக்கத்தான் செய்கின்றன.

எதுவாக இருந்தாலும் நஷ்டம் ஈட்டும் நிலையில் உள்ள நிறுவனங்களை நடத்திச் செல்வதைவிட அவற்றை மறுசீரமைத்து அரச தனியார் கூட்டாண்மையுடன் முன்னெடுத்துச் செல்வது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்குத் தீர்வாக அமையும் என ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

**பி.ஹர்ஷன்...**

---

# இந்தியாவில் சற்றேனும் தணியாத மோடி அலை!

## குஜராத் சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க வரலாறு காணாத வெற்றி!

**குஜராத் மாநில சட்டமன்றத் தேர்தலில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாரதீய ஜனதா கட்சி வரலாறு காணாத வெற்றியைப் பெற்றுள்ளது. இமாச்சல பிரதேசத்தில் காங்கிரஸ் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள போதிலும், குஜராத் மாநிலத்தில் பா.ஜ.கவுக்கு கிடைத்துள்ள வெற்றியானது பிரதமர் நரேந்திர மோடியின் செல்வாக்கு இன்னுமே குன்றவில்லையென்பதை நிரூபித்துள்ளது. ஆளும் பா.ஜ.கவின் கொள்கைத் திட்டங்களுக்கு கிடைத்துள்ள மக்கள் அங்கீகாரமாகவே குஜராத் தேர்தல் முடிவை கருத வேண்டியுள்ளது.**

நடந்து முடிந்திருக்கும் குஜராத் மாநில சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. உண்மையாகவே வரலாறு காணாத வெற்றியைப் பெற்றிருக்கிறது. 182 இடங்களைக் கொண்ட குஜராத் சட்டமன்றத்தில் 156 இடங்களில் பா.ஜ.க வெற்றி பெற்றிருக்கிறது.



### மீண்டும் முதல்வரானார் பூபேந்திர படேல்

காங்கிரஸுக்கு 17 இடங்களும், ஆம் ஆத்மி கட்சிக்கு ஐந்து இடங்களும் கிடைத்திருக்கின்றன. நரேந்திர மோடி முதலமைச்சராக இருந்தபோது கூட பா.ஜ.கவினால் 127 இடங்களைத்தான் வெற்றி கொள்ள முடிந்தது. ஆகவே குஜராத்தில் பா.ஜ.கவின் செல்வாக்கு உயர்ந்துள்ளதையே இத்தேர்தல் முடிவு எடுத்துக் காட்டுகின்றது.

அதேசமயம் இந்திய பாராளுமன்றத்துக்கான தேர்தல் அடுத்த தடவை நடைபெறும் போது பா.ஜ.க பெருவெற்றியீட்டுமென்பதும் தற்போது தெளிவாகியுள்ளது.

குஜராத்தில் 1995 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக 7 ஆவது தடவையாக பா.ஜ.க வெற்றி பெற்றுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. இந்தியத் தேர்தல் ஆணையத்தின் தரவுகளின் படி, பா.ஜ.க 52.5 சதவீத வாக்குகளைப் பெற்றிருக்கிறது. கடந்த முறை 40 சதவீத வாக்குகளைப் பெற்றிருந்த காங்கிரஸ் கட்சி இந்த முறை 27.3 சதவீத வாக்குகளையே பெற்றிருக்கிறது. காங்கிரஸ் தலைவர்கள் பலர் தோல்வியடைந்துள்ளார்கள்.

குஜராத்தில் கடந்த 27 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்துவரும் பா.ஜ.க. சில ஆண்டுகளுக்கு முன்பாகவே 2022 ஆம் ஆண்டுக்கான தேர்தலுக்குத் தயாராகத் தொடங்கி விட்டது. இதற்கு முன்பு முதல்வராக இருந்த விஜய் ரூபாணி மாற்றப்பட்டு, கடந்த ஆண்டு செப்டம்பரிலேயே பூபேந்திர படேல் முதல்வராக்கப்பட்டார். இம்முறையும் அவரே முதல்வராகப் பதவியேற்றுள்ளார்.



அத்துடன் கடந்த தேர்தலில் 77 இடங்களைப் பெற்றிருந்த காங்கிரஸ், இம்முறை சட்டமன்றத் தேர்தல் நெருங்கியபோது 56 எம்.எல்.ஏக்களுடன் சுருங்கிப் போயிருந்தது. மீதமுள்ளவர்கள் பா.ஜ.கவுக்குச் சென்றுவிட்டனர்.

இமாச்சல பிரதேசத்தைப் பொறுத்தவரை 1985 இற்குப் பிறகு ஒரு முறை ஆட்சியைப் பிடித்த கட்சி மறுமுறை வெற்றி பெறதில்லை. இப்போது நடந்து முடிந்திருக்கும் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு 40 இடங்களும் பா.ஜ.கவுக்கு 25 இடங்களும் கிடைத்திருக்கின்றன. மூன்று சுயேச்சைகள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அதில் இருவர் பா.ஜ.கவின் அதிருப்தி வேட்பாளர்கள். ஒருவர் காங்கிரஸின் அதிருப்தி வேட்பாளர். 2012இல் ஆட்சியைப் பிடித்த போது 36 இடங்களை வென்ற காங்கிரஸ் இந்த முறை கூடுதலாக 4 இடங்களை மட்டுமே பிடித்திருக்கிறது.

இமாச்சல பிரதேச தேர்தலில் பல உள்ளூர் பிரச்சினைகள் ஆதிக்கம் செலுத்தின. வேலை வாய்ப்பின்மை, அப்பிள் விவசாயிகள் பிரச்சினை போன்றவை இங்கே ஆதிக்கம் செலுத்தின. இங்கு விளையும் அப்பிள்களை சில பெருநிறுவனங்கள் குறைந்த விலைக்கு வாங்குவது தொடர்பாக விவசாயிகளிடம் குமுறல் இருந்து வந்தது. விவசாயிகள் கடந்த ஓகஸ்ட் மாதம் இது தொடர்பான போராட்டம் ஒன்றையும் நடத்தியிருந்தனர்.

இந்த நிலையில் தாங்கள் ஆட்சிக்கு வந்தால், அப்பிள் விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்டு தோட்டக்கலை வாரியம் ஒன்றை அமைத்து, அப்பிளுக்கான விலை நிர்ணயம் செய்யப்படும் என்றும் அதைவிட குறைந்த விலைக்கு வாங்குவதற்கு எவ்வளவு பெரிய நிறுவனமாக இருந்தாலும் அனுமதிக்கப்பட மாட்டாது என்றும் தனது தேர்தல் அறிக்கையில் காங்கிரஸ் கூறியிருந்தது. அதற்கு நல்ல பலன் கிடைத்திருப்பது போலத்தான் தெரிகிறது.

இமாச்சால பிரதேசத்தைப் பொறுத்தவரை, காங்கிரசுக்கு கிடைத்த வெற்றி என்பது குஜராத்தில் பா.ஜ.கவுக்குக் கிடைத்த வெற்றியோடு ஒப்பிடத்தக்கதல்ல. குஜராத் வெற்றியானது பெருவெற்றியாகும்.

"காங்கிரசால் இதற்கு மேல் எதுவும் செய்ய முடியுமெனத் தோன்றவில்லை. பாலம் இடிந்து விழுந்த மோர்பியில் பா.ஜ.க. பெரும் வெற்றி பெறுகிறது. அதேபோல, பில்கிஸ் பானு விவகாரம் குறித்து மிக மோசமாகப் பேசிய தலைவர் வெற்றி பெறுகிறார்.

இந்த நிலையில், அங்கு காங்கிரஸ் செய்யக் கூடியது எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அதாவது பா.ஜ.கவின் செல்வாக்கு இன்னுமே அசையவில்லை" என்கிறார்கள் அரசியல் நோக்கர்கள்.

"குஜராத்தில் காங்கிரசுக்குக் கிடைத்திருக்கும் தோல்வி அக்கட்சிக்கு மிகப்பெரிய பின்னடைவுதான்" என்கிறார் 'தி இந்து' குழுமத்தின் இயக்குநர்களில் ஒருவரும் மூத்த பத்திரிகையாளருமான என். ராம்.

"குஜராத் ஒரு முக்கியமான மாநிலம். அங்கு சில ஆண்டுகளுக்கு முன்பாக வலுவாக இருந்த காங்கிரஸ் இப்போது படுதோல்வியைச் சந்தித்திருக்கிறது. இதை அக்கட்சி கவனிக்க வேண்டும்" என்கிறார் என். ராம்.

தேர்தல் வெற்றிக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கும் பா.ஜ.க உடனடியாக இந்தத் தோல்விகள் குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும் என்பதிலும் சந்தேகமில்லை. ஆனால், எதிர்க்கட்சிகளால் 2024 தேர்தலில் பா.ஜ.கவுக்கு எதிராக ஒன்றிணைந்து வலுவான சக்தியாக நின்று வெற்றி பெற முடியுமா என்பதுதான் இப்போதுள்ள கேள்வி. பா.ஜ.கவை தோற்கடிப்பதென்பது இப்போதைக்கு சாத்தியமான காரியமாகத் தெரியவில்லை என்று பத்திரிகையாளர்கள் கூறுகின்றனர்.



இது இவ்விதமிருக்க குஜராத் சட்டசபைத் தேர்தலில் பா.ஜ.க வெற்றி பெற்றதைத் தொடர்ந்து மாநில முதல்வராக பூபேந்திர படேல் கடந்த திங்கட்கிழமையன்று பதவியேற்றார்.இந்த விழாவில் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்டோர் பங்கேற்றனர். பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோரின் சொந்த மாநிலம் குஜராத் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.குஜராத் தேர்தல் வரலாற்றில் இந்த வெற்றியானது சாதனை என்பதில் சந்தேகமில்லை. முதல்வராகப் பதவியேற்றுள்ள பூபேந்திர படேல் காட்லோதியா தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். பூபேந்திர படேல் 1.92 இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

பா.ஜ.க வெற்றி பெற்றதைத் தொடர்ந்து குஜராத் பா.ஜ.க எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பா.ஜ.க மேலிட பார்வையாளர்களாக ராஜ்நாத்சிங், அர்ஜுன் முண்டா, எடியூரப்பா பங்கேற்றனர். இக்கூட்டத்தில் பூபேந்திர படேல் முதல்வராக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பூபேந்திர படேலுக்கு ஆளுநர் ஆச்சார்ய தேவ்ரத் பதவிப் பிரமாணம் செய்து செய்து வைத்தார். குஜராத்தின் 18 ஆவது முதல்வராக பூபேந்திர படேல் பதவி ஏற்றுள்ளார். 2002 இற்குப் பின்னர் பா.ஜ கவின் மெகா வெற்றி இதுவாகுமென்று அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.'நரேந்திர மோடி' அலை இன்னும் கொஞ்சமுமே மங்கவில்லை என்கின்றனர் அவர்கள். பெரும்பாலான கருத்துக்கணிப்புகள் குஜராத்தில் பா.ஜ.கவே மீண்டும் ஆட்சி அமைக்கும் என்றே கூறியிருந்தன. பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் "வெற்றி என்பது எங்களுக்குத் தெரியும், வரலாற்று வெற்றிக்காகவே காத்திருக்கிறோம்" என்று கூறியிருந்தனர். அவர்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்வது போலவே குஜராத்தில் பா.ஜ.க வரலாற்று வெற்றியை அடைந்திருக்கிறது.



**எஸ்.சாரங்கன்...**



# தேசியப் பிரச்சினைத் தீர்வுக்கு கிடைத்துள்ள அரிய சந்தர்ப்பம்!

## வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

பல தசாப்தங்களாக தீர்க்கப்படாதுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தி மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கு இதற்கு முன்னர் பல தடவைகள் முயற்சிகளை மேற்கொண்டிருந்த அவர், 75 ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முனைப்புக்களை முன்னெடுத்துள்ளார்.

இதன் முதலாவது கட்டமாக கடந்த சில நாட்களுக்கு முன்னர் சர்வகட்சி மாநாட்டை ஜனாதிபதி நடத்தியிருந்தார். ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந்த சர்வகட்சி சந்திப்பில் வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் உள்ளடங்கலாக அனைத்து அரசியல் கட்சிகளும் அங்கம் வகித்திருந்தன.

வரவுசெலவுத் திட்ட விவாதம் முடிவடைந்த பின்னர் தேசியப் பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்கான பேச்சுக்களை ஆரம்பிக்கவிருப்பதாகவும், இதில் அனைத்துத் தரப்பினரையும் கலந்து கொள்ளுமாறும் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் பகிரங்கமாக அழைப்பு விடுத்திருந்தார்.

'1984ஆம் ஆண்டு முதல் இனப் பிரச்சினை உள்ளிட்ட விடயங்களை அனைவரும் அறிவோம். புதிதாகப் பேசுவதற்கு ஒன்றும் இல்லை. இதற்கான தீர்வுகளையே தற்பொழுது காண வேண்டும். அடுத்த வருடம் 75 ஆவது சுதந்திரதினம் கொண்டாடப்படும் போதாவது இதற்கான தீர்வுகளைக் காண வேண்டும். இல்லையெனில் 2048 ஆம் ஆண்டிலும் நாடு இப்படியே இருக்கும்' என ஜனாதிபதி தனது உரையில் கூறியிருந்தார்.

ஜனாதிபதி கூறியதைப் போன்று வரவுசெலவுத் திட்ட விவாதம் முடிவடைந்ததும் கடந்த செவ்வாய்க்கிழமை இந்த மாநாட்டை அவர் கூட்டியிருந்தார். இங்கு உரையாற்றிய ஜனாதிபதி, 'இந்த நாட்டில் நிலவும் பிரச்சினையைத் தீர்க்க நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அது இனப்பிரச்சினை என அழைக்கப்பட்டாலும் சரி, வேறு பெயரில் அழைக்கப்பட்டாலும் சரி அது எமக்கு முக்கியமில்லை. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துள்ள தீர்க்கமான நல்லிணக்க நடவடிக்கை!

வழங்க நாம் விரும்புகிறோம். இதற்குத் தீர்வு காணவும், பாராளுமன்றத்தில் உடன்பாட்டை எட்டுவதற்கும் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்று கூடியுள்ளன' என்றார்.

ஓரிரு மாதங்களுக்குள் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவது மாத்திரமன்றி, 75 ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் தீர்வொன்றை எட்டுவது ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாக உள்ளது. இந்த மாநாட்டில் கலந்து கொண்ட தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் மூன்று முக்கிய கோரிக்கைகளை வலியுறுத்தியிருந்தனர்.

ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவிப்பது, காணி அபகரிப்பை நிறுத்துவது, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் ஆகிய விடயங்களை நிறைவேற்று அதிகாரமே நேரில் கையாண்டு அடுத்த ஜனவரி மாதத்துக்குள் தீர்வுகளை முன்வைக்க வேண்டும்



என்ற என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இது விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் ஜனாதிபதியே நேரடியாக தொடர்பாடல்களை மேற்கொள்ள வேண்டும் என்பதும் இங்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரமன்றி, சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், யாழ் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் ஒன்றாக இணைந்து இவ்விடயத்தை வலியுறுத்தியுள்ளனர்.

இதற்கும் அப்பால் அரசியலமைப்பிலும், சட்டத்திலும் உள்ள அதிகாரப் பகிர்வு சம்பந்தமான விடயங்களை முழுஅளவில் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஜனவரியில் ஜனாதிபதி ஒதுக்கவிருக்கும் திகதியில் மீண்டும் கூடிக் கலந்துரையாடுவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் கலந்து கொண்டமை சிறப்பு அம்சமாக அமைந்தது. இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் ஏற்கனவே பல தடவை பல மட்டங்களில் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றிருப்பதால் முடிவொன்றை எடுத்து அதனை நடைமுறைப்படுத்துவதற்கான காலஅவகாசமே தற்பொழுது தேவைப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட பலரும் சுட்டிக் காட்டியிருந்தனர்.

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் முழுமையான வெற்றியளிக்காத நிலையில், நாட்டில் கட்டமைப்பு மாற்றமொன்றுக்காக கேள்வி எழுந்துள்ள பின்புலத்தில் சர்வகட்சி மாநாடொன்றை ஜனாதிபதி கூட்டி தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சிப்பது சாதகமானதொரு நடவடிக்கையாகப் பார்க்கப்படுகிறது. இது விடயத்தில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருப்பதாக வெளிவிவகார அமைச்சர் மற்றும் நீதி அமைச்சர் ஆகியோர் இம்மாநாட்டில் கூறியிருந்தனர்.

உள்நாட்டுப் பொறிமுறையின் மூலம் தீர்வைப் பெற்றுத்தர முடியும் என்று நினைப்பதாகவும், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் ஊடாக இதற்கான தீர்வுகளை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கூறியிருந்தார்.

"இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது வடக்கிற்கும் தெற்கிற்கும் மிகவும் நல்லது. இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை நாம் முன்வைப்போம். இந்தக் குழுவின் பணிப்பாளர் நாயகமாக முன்னாள் தூதுவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இதன் மூலம் வெளிநாடுகளில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் அனைவரையும் ஒன்றிணைத்து பல நல்ல முன்மொழிவுகள் கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்கம் என்ற அடிப்படையில் அதற்கான வசதிகளை பெற்றுக் கொடுக்க நாம் எதிர்பார்க்கின்றோம்" என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையின் நல்லிணக்கம் தொடர்பான செயல்முறை ஒழுங்கு நீதியமைச்சிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது என இங்கு குறிப்பிட்ட நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, காணாமல் போனோர் அலுவலகத்தின் அனைத்து கோப்புகளையும் அடுத்த ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் முடிப்பதற்கு எதிர்பார்த்திருப்பதாகத் தெரிவித்தார்.

"இப்பிரச்சினைகள் தீர்க்கப்படும் போது வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் இலங்கையில் முதலீடு செய்ய ஊக்குவிக்கப்படுவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு தற்போதும் செயற்பட்டு வருகிறது. இவ்விடயத்தில் எமக்கு தென்னாபிரிக்க அரசாங்கம் ஆதரவளித்து வருகின்றது" எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.



## அனைத்து அரசியல் தரப்பினரின் விட்டுக்கொடுப்பும், புரிந்துணர்வும் உண்டென்றால் பல தசாப்த காலமாக தீர்க்கப்படாதுள்ள சிக்கலுக்கு இறுதித் தீர்வு!

இந்தப் பிரச்சினைகளுக்கு அப்பால் மாகாணசபைகளின் அவசியம் குறித்து பல்வேறு அரசியல் கட்சிகள் வலியுறுத்தியிருந்தன. "மாகாணசபையின் தேவை எம்மைப் பொறுத்தவரை மிகவும் அதிகம் ஆகும். இது மிக விரைவாக செய்யப்பட வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாண சபைகளின் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும்.

இதுவரையில் ஏராளமான காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. இவையனைத்தும் சட்டத்துக்கு மாறாக நடந்தவை. இது தொடர்பான பல்வேறு வழக்குகள் இன்னும் நிலுவையில் உள்ளன. எனவே, காணி உரிமைப் பிரச்சினை ஆராயப்பட வேண்டும்" என பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்திருந்தார்.

தமிழ்ப் பிரதிநிதிகள் மாத்திரமன்றி தென்பகுதி அரசியல்வாதிகளும் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து கருத்துக்களை முன்வைத்திருந்தனர். இருந்தபோதும் இவ்விடயத்தில் தீர்மானம் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லையெனத் தெரியவருகிறது.

இதேவேளை, ஜனாதிபதி கூட்டிய சர்வகட்சி மாநாட்டுக்குத் தமிழ்த் தரப்பினர் எவ்வித முன்நிபந்தனைகளும் முன்வைக்காமல் சென்றிருப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல என அகில இலங்கை தமிழ் காங்கிரசின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விமர்சித்துள்ளார். சர்வதேச நாடுகளிடமிருந்து நிதி உதவியைப் பெற்றுக் கொள்வதற்காக அனைத்துக் கட்சிகளுடனும் இணைந்து செயற்படுவதாகக் காண்பிப்பதற்கே இம்மாநாடு நடத்தப்படுவதாக அவர் விமர்சித்திருந்தார்.

இது அவருடைய தனிப்பட்ட கருத்தாக இருந்தாலும், தான் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் மக்களின் சார்பில் தமது நிலைப்பாட்டை முன்வைப்பதற்காக இதில் அவர்கள் கலந்து கொண்டிருக்க வேண்டும் என்பதுதான் தமிழ் மக்களின் நிலைப்பாடு ஆகும்.

அது மாத்திரமன்றி நாடு பொருளாதார ரீதியில் நெருக்கடிகளைச் சந்தித்திருக்கும் நிலையில், வெறுமனே விமர்சன அரசியலைச் செய்யாது நடைமுறைச் சாத்தியமான அரசியலில் ஈடுபடுவதற்கும் அவர்கள் முன்வர வேண்டும்.

தமிழர்களின் அடிப்படைப் பிரச்சிகைள் பல தீர்க்கப்பட வேண்டியிருக்கும் சூழ்நிலையில் சமஷ்டி, ஒற்றையாட்சி என்ற விடயங்களில் மாத்திரம் தொங்கிக் கொண்டிருப்பதும், இதனை தென்பகுதி அரசியல்வாதிகள் இனவாத அரசியலாக்கி பேச்சுக்களைக் குழப்புவதும் தேவையற்ற ஒன்றாகவே அமையும்.

அதேவேளை, ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. மக்களைக் குழப்பி போராட்டங்களின் பால் இழுத்துவிடாமல் அரசியல் ரீதியான தீர்வொன்றை நோக்கிச் செல்வதற்கு அவர்களும் சாதகமான செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாகும். தற்பொழுது கிடைத்திருக்கும் இந்த அரிய சந்தர்ப்பத்தை அனைத்துத் தரப்பினரும் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும் என்பதே நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது.

அதேவேளை 75 ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் ஐக்கிய இலங்கையை உருவாக்குவது எமது அரசியல் தலைவர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. தமிழர் தரப்புகள் ஐக்கியப்படுவதும், நடைமுறைச்சாத்தியமற்ற இலக்குகளிலிருந்து இறங்கி வருவதும் இவ்வேளையில் அவசியமாகின்றன.




## 75 ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் ஐக்கிய இலங்கையை உருவாக்குவது எமது அரசியல் தலைவர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. தமிழர் தரப்புகள் ஐக்கியப்படுவதும், நடைமுறைச்சாத்தியமற்ற இலக்குகளிலிருந்து இறங்கி வருவதும் இவ்வேளையில் அவசியம்

# BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845













## கொழும்பு 7

2 படுக்கையறைகள் (ஏசி உடனானது) 3 ஆம் மாடி தொடர்மாடி (1997 ச.அடி) புல்லர்ஸ் ஒழுங்கையில் இணைக்கப்பட்ட குளியலறைகளுடன் மற்றும் ஓரளவு தளபாடமுள்ள சமையலறை/ மரத் தரை வசிக்கும் அறை. தொடர்மாடிக்கான ஒரு ஒதுக்கப்பட்ட வாகன தரிப்பிடம்.

விலை: 55 மில்லியன் இலங்கை ரூபா.

தயவு செய்து **0757 068 068** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## KALUBOWILA

**SINGLE BEDROOM APARTMENT WITH FURNITURE FOR RENT.**

**INSIDE PARKING AVAILABLE**

Monthly rent Rs. 32,000/-
Advance Rs 100,000/-

**Contact 0764 329 614**


















தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## மோட்டார் வாகனங்கள்

### 106 கார்கள் விற்பனைக்கு

தனி நபர் பாவித்த மர்ஸிடிஸ் பென்ஸ் GLA180, 1600CC, 27, 000 கி.மீ. பய ணம் செய்து ள்ளது. டிமோ கொள்வனவு மற்றும் பராமரி ப்பு. ரூபா 15 மில்லியன். உடன் வி ற்ப னைக்கு. தொடர்பு கள் 0712750195. 076807

## வர்த்தகம்

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

நீர்கொழும்பு 50 P Luxary Hotel With 5 Villas உடன் விற்பனைக்கு. காசுத் தேவைக்காக. 0779005671. 078220

## வேலைவாய்ப்பு

### 306 வெற்றிடங்கள் மருத்துவம்

ஹோமாகம நகரில் உள்ள புதிதாக அமைக்கப்பட்ட பற்சிகிச்சையகத்திற்கு தனிப்பட்ட பயிச்சிக்காக ஓர் பற்சிகிச்சை நிபுணர் தேவை. தயவு செய்து தொடர்பு கொள்க. டொக்டர் அசங்க கமகே 0774053553. 077981

### 318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

கனரக வாகன சாரதிகள் (Heavy Vehicle Drivers) வத்தளையில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு கனரக வாகன சாரதிகள் (பவுசர், கன்டெய்னர், லொறி, டிப்பர் ஓட்டக்கூடியவ ர்கள்) தேவை. 03 வ ருட அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. உணவு மற்றும் இலவச தங்குமிட வசதி வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும். இல. 18, வெளிஅமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொடர்பு களுக்கு 076620 0300. 077897

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

வீட்டுப் பணிப்பெண் மற்றும் சுத்திகரிப்பாளர்கள் தேவை. வயது 40 இற்குக் கீழ். சம்பளம் 25, 000 மற்றும் உணவு, தங்குமிடம் வழங்கப்படும். தொடர்பு 75/1, W.A. சில்வா மாவ த்த, கொழும்பு 06. அழை யுங்கள் 01125 9 1 1 6 9, 07774 5 2 4 4 7, 07550 9 1 3 7 9. 074687



### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

அம்பலங்கொட ஹோட்டலுக்கு ரைஸ் அன்ட் கறி, கொத்து, ரைஸ், ரொட்டி வகைகள், அப்ப ம், நாசி, பிரி யா ணி சகல வேலைக ளு ம் தெரிந்தவர்க ள் தேவை. தங்கு மிடம் உண்டு. 075 8155126. 078142

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

இரத்தினபுரிக்கு அருகில் சிறிய இறப்பர் காணியில் பால் வெட்டுவதற்கு, கொழுந்து பறிப்பதற்கு திறமையான, ஆரோக்கியமான தம்பதி தேவை. 07168 3 5293. 077689

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 300/- ரூபா
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 25 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

### 325 தொழில்துறை பொது

ஆண்/ பெண் பாதுகாப்பு அதி காரிகள் (JSO/ LSO) வத்தளையில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு பாதுகாப்பு சேவையில் அனுபவமுள்ள மற்றும் கடமையில் திறமையாக செயற்படக்கூடிய 50 வயதுக்குக் குறைந்த ஆண்/ பெண் பாதுகாப்பு அதிகாரிகள் (JSO/ L SO) தேவை. ஒரு நா ள் சம்பளம் 1500/ = (மாத சம்பளம்) இலவச தங்குமிட வசதி மற்றும் குறைந்த விலையில் மூன்று நேர உண வும் வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் வரவும். இல. 18, வெளிஅமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொலைபேசி 0766200300. 077893

இந்திய தமிழ் சினிமாவில் நடிப்பதற்கு ஆர்வமுள்ள புதிய ஆண்கள் மற்றும் பெண்கள் தேவை. தொடர்பு +918807287244 Whatsapp. 077768

ஊழியர்கள் (Workers) - வத்தளையில் அமைந்துள்ள எமது துணி உற்பத்தித் தொழிற்சாலைக்கு பயிற்சி பெற்ற/ பயிற்சி பெறாத ஆண், பெண் ஊழியர்கள் (Workers) தேவை. இலவ ச தங்குமிட வச தி மற்றும் சகாய வி லையில் மூன்று வே ளை உணவு பெ ற்றுக்கொள்ளும் வசதி. மேலதிக விபரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரிக்கு நேரில் வரவும். இல. 18, வெளிஅமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொடர்புகளுக்கு 0766200300. 077896

கொழும்பில் அமைந்துள்ள ஓர் வர்த்தக சலவை இயந்திரத் தொகுதிக்கு அனுபவமுள்ள வர்த்தக அபிவிருத்தி முகாமையாளர் தேவை. பொருத்தமான விண்ணப்பதாரிகள் தமது சுய தரவுகளை அனுப்பி வையுங்கள். ★info@laundrocare.com* 078029

தொலைபேசி இயக்குபவர் (Telephone Operator) வத்தளையில் அ மைந் துள்ள எமது நி று வனத்தில் பணியாற்ற க. பொ.த. உயர் தரம் சித்தியடைந்த ஆங்கிலம் மற்றும் சிங்களம் பேசத் தெரிந்த கணனி கல்வியறிவுள்ள தொலைபேசி இயக்குப வர் (Telephone Operator) தேவை. இலவசமாக தங்கு+மிட வசதியும் சகாய விலையில் மூன்று நேர உணவும் வழங்கப்படும். இல. 18, வெ ளிஅமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொ லைபே சி 07662 0 0300. மின்னஞ்சல் hr@cliftextiles.com 078130



தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342/343

## பொது

### 432 நானாவிதப் பொருட்கள்

சவர்க்கார உற்பத்தியாளர்களே, சதுர வடிவ பிளா ஸ்டிக் அச்சு மொத்த விலைக்கு. 0703711211. 077531

## காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

களுபோவில வைத்திய சாலை வீதியினை முகப்பாக கொண்ட 9.5 P காணி விற்பனைக்குண்டு. மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். 0774271404. 078013

கிங்ஸ் கோர்ட், கொழும்பு 05, 03 படுக்கையறைக ள் 1200 ச.அடி பல்கனி, சேர்விஸ் உட்செல்லும் வழி, வளிச்சீராக்கல், வாகன நிறுத்துமிடம், 7ஆம் மாடி 47 மில்லியன் ரூபா. தரகர் தேவையில்லை. 0773864644, megatrendsltd@gmail.com 078000

வத்தளை, ஹுணுப்பிட்டியில் 16.70 பேர்ச் காணியில் ஓர் மூன்று ப டுக்கையறை வீடு விற்பனைக்கு. வத்தளை, கிரிபத்கொட நகரங்களுக்கு 1 கி.மீ. பொதுப் போக்குவரத்து மற்றும் ஏனைய நகர வசதிகளுக்கு இலகுவான அடைவுகள். 0770049649. 077680

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

வீடு வாடகைக்கு திஹாரி ஹிஜ்ரா மாவத்தையில் சகல வசதியுடன் வீடு வாடகைக்கு உண்டு. 0718070331. 077899

### 624 வீடு சொத்து அநுராதபுரம் மாவட்டம் விற்பனைக்கு

அநுராதபுரம் நகர எல்லையில் 77 பேர்ச் வீட்டுடன் காணி பிரதான வீதிக்கு முகப்பாக அதிகூடிய கோரிக்கைக்கு, விற்பனைக்கு. தொ. பே. 0714348487. 077854

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

சரணங்கர வீதி போதியாவத்தையில் 2 அறைகள், 2 Hall, 1 Bathroom, சமையலறை யுடனான தனி வீடு வாடகைக்குண்டு. 0763094723. 077726

புல்லர்ஸ் வீதி, ஆடம்பர முழுமையான தளபாடமுள்ள வீடு, 4000 ச.அடி, 15 பேர்ச்சுக்கள், நான்கு படுக்கையறை கள் இணைக்கப்பட்ட WC தோட்டம், வே லைக்காரர் விடுதிகள், களஞ்சிய அறை, அ லுவ லக அ றை, மாதம் 250, 000/ = ரூபா. 0773864644. megatrendsltd@gmail.com தரகர் தேவையில்லை. 078009



தினகரன் வாரமஞ்சரி

BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845

VAT, SVAT, SET & BPO
ஆகியவற்றிற்கான ஒன்லையின் e- சேவைகள்.
உள்நாட்டு இறைவரி இணையதளத்தினூடாக VAT, SVAT, SET & வரி கூற்று அறிக்கையை சமர்ப்பிக்கலாம்.
கணனிமயமாக்கப்பட்ட கணக்கிடல் (Quick Books)
கிரடிட் வவுச்சரை பின்பற்றல்: E-mail : q.contra@yahoo.com
Q Contra - கணக்கிடல் ஆலோசகர்கள்
கணக்கிடலில் இலங்கையிலுள்ள ஒரேயொரு விஷேடத்துவமுள்ள அமைப்பு.
இல. 88/24, வேகந்த வீதி கொம்பனித் தெரு, கொழும்பு-02.
தொடர்புகளுக்கு 0777 892 966

Leaving Sri Lanka
SHIP YOUR STUFF TO ANY DESTINATION WORLDWIDE
Services We Offer!
- Worldwide Relocation
- Door to Door Service
- Excess Baggage
- Express Delivery
- Packing Services
- Pet Relocation
TEA CHEST BOX
EXPRESS DELIVERY
WOODEN BOX
HOTLINE
+ 94 77 554 1600
+ 94 77 723 4103
Tamil + 94 77 113 5678
info@forwardlogistic.com
www.forwardlogistic.com

නුගේගොඩ පිහිටි ELEGANCE ආයතනය සඳහා
සහායිකාවන්
බඳවා ගැනේ.
- වයස අවු 30 ට අඩු විය යුතුයි
- මූලික වැටුප රු.30,000 සිට ඉහළට
- අමතර දීමනා ලබාදෙනු ඇත
- සුදුසුකම් O/L සමත්විය යුතුයි
අමතන්න - 0716 494 223

24 பேர்ச் காணி 2 இணைந்த வீடுகளுடன் ஜா-எல நகரில் விற்பனைக்கு
- கொழும்பு-கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலைக்கு 500 மீற்றருக்கு குறைவான தூரம்
- கட்டுநாயக்க விமானநிலையத்திற்கு 10 நிமிட பயணம்
- கொழும்பு-நீர்கொழும்பு பிரதான வீதிக்கு 150 மீற்றர் தூரம்
- புகையிரத நிலையத்திற்கு 100 மீற்றர் தூரம்
- வங்கிகள், பாடசாலைகள், புட் சிட்டிகளுக்கு நடை தூரம்
- கே வலயத்திற்கு 10 நிமிட வாகன பயணம்
Rs. 19.75 lakhs மில்லியன் - விலை பேசித்தீர்க்கலாம்
070 524 70 45

Sri Lanka's No1 Supplier of Pipeline Materials
Rs. 1,600/= upwards



ALLIED TRADING INTERNATIONAL (PVT) LTD
# 301 OLD MOOR STREET, COLOMBO 12 ☎ 011-739 7777 alliedint@eureka.lk www.allied.lk

தினகரன் வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 250/- ரூபா
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

NEW HOTEL RENT OR SALE
Beach Side



60 Perch
USWETAKEIYAWA (WATTALA)
14 Rooms Star Class, Standard Dining area Restaurant, total floor area 12,750 sq.ft., Swimming Pool with baby Pool, Building for three floors with Lift facilities, 7Km from Colombo and 15 minutes Airport via Express Way, Uswetakeiyawa beach front on Colombo main road
NB - PROPERTY EXCHANGE
CONTACT - 077 3 629 237

Advertise Here
தினகரன் வாரமஞ்சரி BUDGET adz
5.8cm (Height) x 16.3cm (Width)
Rs. 3,000/- +VAT
Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

Sunday Observer adz
தினகரன் வாரமஞ்சரி

Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
| --- | --- | --- |
| රු. 500/- (Except Thinakaran Varamanjari) | රු. 700/- (Except Thinakaran Varamanjari) | රු. 850/- |

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியற்றுறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# பலருக்கு பொருளாதாரக் கருமங்களை இலகுவில் செய்து முடிப்பதற்கான மாற்றுவழி

# ஊழல்

**ஊழலும் இலஞ்சமும் வர்த்தக நடவடிக்கைகளை இலகுவாக்க உதவுவதாக ஒருசிலர் நம்புகின்றனர்**



**சீனாவில் உமக்கு என்ன தெரியும் என்பது முக்கியமில்லை மாறாக உமக்கு அங்குள்ள யாரைத் தெரியும் என்பதே முக்கியம்.**

**அதே போல ஒரு அரசியல்வாதியின் அல்லது உயர் அதிகாரியின் அறிமுகம் வேலைகளை இலகுவாக்கிக் கொள்ளவும் தமக்குத் தேவையானவற்றை பெற்றுக் கொள்ளவும் உதவுவதையும் காணலாம்.**

**பெரும்பாலான பெரியளவு ஊழல்களைப் பிடிக்க முடியாதவாறு நாடுகளின் சட்டதிட்டங்கள் இருப்பது அத்தகையவர்களுக்கு வாய்ப்பாக இருப்பதுடன் முடிந்தால் பிடித்தக்காட்டு என்று சவால் விடவும் ஏதுவாகிறது.**

ஊழல் என்பது மனிதனின் பொருளியல் வாழ்க்கையில் அடிக்கடி சந்திக்க நேரிடும் ஒரு நடத்தைப் பிறழ்வாகும். பொதுவாழ்க்கையில் அதிகாரத்தில் உள்ள ஒருவர் தமது அதிகாரத்தை தனிப்பட்ட நன்மைகளுக்காகப் பயன்படுத்துவது ஊழல் என வரைவிலக்கணப் படுத்தப்படுகிறது. பண்டைய நூல்களில் தேன் எடுத்தவன் கையை நக்குவது போல அரசியல்வாதிகள் தமது அதிகாரத்தை சொந்தத் தேவைகளுக்காகப் பயன்படுத்திக்கொள்வர் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. அரசாங்கத்துறையில் மட்டுமன்றி தனியார் துறையிலும் கூட தமது அதிகாரத்தை சொந்தத் தேவைகளுக்காகப் பயன்படுத்திக்கொள்பவர்களைக் காண முடியும். ஆகவே ஊழல் என்பது அரசதுறையில் மாத்திரமே நிலவுவதாகக் கொள்ள முடியாது. ஒரு நிறுவனத்தின் கடைநிலை ஊழியரிலிருந்து அதன் தலைமைத்துவம் வரையில் ஊழல் வியாபித்திருக்க முடியும். அதேபோல ஊழலின் மூலம் அதனைச் செய்பவர் பெறும் நன்மையின் பெறுமதியின் அடிப்படையில் சிறு ஊழல் (petty corruption) தொடக்கம் பேரளவு ஊழல் வரையில் (grandmall corruption) அதன் அளவு வியாபித்திருக்கலாம். பாம்பு சிறிதாக இருந்தாலும் அதன் விஷம் சிறியதாக இருப்பதில்லை. அதேபோல சிறியதோ பெரியதோ ஊழல் சமூகத்தில் இருந்து முற்றாக அகற்றப்படவேண்டியதாகும். ஆனால் வெளிப்புறப்பார்வைக்கு ஊழல் என்பது பொருளாதார நடவடிக்கைகளை இலகுபடுத்தும் ஒரு கருவியாகத் தொழிற்படுவது போலத் தெரியும் உதாரணமாக ஒரு அரச நிறுவனத்தில் ஒரு அலுவலை முடிக்கவேண்டிய ஒருவர் அதில் உள்ள ஒரு ஊழியருக்கு பணத்தைக் கொடுத்து அதனை முடித்துக்கொள்வது அவருக்கு நேரத்தையும் அலைச்சலையும் ஏனைய செலவுகளையும் மீதப்படுத்துவதாக அமையலாம். பொருளாதாரக் கருமங்களை இலகுவில் செய்து முடித்துக் கொள்வதற்கு ஊழலை ஒரு மாற்றுவழியாகப் பலர் கருதுகின்றனர். ஒரு இயந்திரத்தின் சுழலுகின்ற பாகங்களை இலகுவாகச் சுழலவைக்க அதில் கிறீஸ் அல்லது எண்ணெய் தடவி இலகுவாக வழுக்கிச் செல்ல உதவுவது போல ஊழலும் இலஞ்சமும் வர்த்தக நடவடிக்கைகளை இலகுவாக்க உதவுவதாக ஒருசிலர் நம்புகின்றனர்.

சில நாடுகளிலும் சமூகங்களிலும் சில ஊழல் நடவடிக்கைகள் பிழையானதாகக் கருதப்படுவதில்லை. உதாரணமாக சீனாவில் உமக்கு என்ன தெரியும் என்பது முக்கியமில்லை மாறாக உமக்கு அங்குள்ள யாரைத் தெரியும் என்பதே முக்கியம் என்று கூறுவார்கள். முக்கியமான நபர்களுடன் ஒருவருக்கு உள்ள அறிமுகம் தனிப்பட்ட தொடர்புகள் தெரிந்தவர்களின் வலைப்பின்னல் சமூகத் தொடர்புகளை அடிப்படையாக வைத்தே காரியங்கள் ஆற்றப்படுவதாகக் கூறுகின்றனர்.

இந்த நடைமுறைக்கு குவான்சீ என்று (guanxi) பெயர். அதே போல அரேபிய மற்றும் மத்திய ஆசிய நாடுகளிலே வஸ்தா (wasta) எனப்படும் சமூகத் தொடர்புகளும் நபர்களுக்கிடையிலான அறிமுகங்களுமே பொருளாதாரத் தொடர்புகளை இலகுபடுத்துவதாக கூறுகின்றனர். இத்தகைய நெருங்கிய தொடர்புகள் மூலம் தமக்கு வேண்டியவற்றைப் பூர்த்தி செய்து கொள்வது பிழையான ஒரு நடவடிக்கையாகப் பார்க்கப்படுவது இல்லை.

இலங்கையிலும் கூட ஒருவர் ஒரு அரச நிறுவனத்தில் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமாயின் அங்கு தமக்குத் தெரிந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று தேடிப்பார்ப்பதும் அவர்கள் மூலம் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதும் சாதாரணமாக நடக்கும் ஒன்றுதான்.

அதே போல ஒரு அரசியல்வாதியின் அல்லது உயர் அதிகாரியின் அறிமுகம் வேலைகளை இலகுவாக்கிக் கொள்ளவும் தமக்குத் தேவையானவற்றை பெற்றுக் கொள்ளவும் உதவுவதையும் காணலாம். இறுக்கமான வரைவிலக்கணத்தின் படி இவை அத்தனையுமே ஊழல் என்ற வரையறைக்குள் வரைவிலக்கணப்படுத்த முடியும். ஆனால் நாட்டுக்கு நாடு சமூகத்திற்கு சமூகம் இவை தொடர்பான பார்வைகள் வேறுபடுகின்றன.

பணம் அல்லது வேறு நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு தமது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வது ஊழல் என்று வரைவிலக்கணப்படுத்தப்பட்டாலும். அது அதைவிடப் பரந்துபட்ட நடவடிக்கைகளையும் உள்ளடக்கக் கூடியதாகும். பொதுவாக உயர்வருமானம் கொண்ட விருத்தியடைந்த நாடுகள் எல்லா வடிவிலான ஊழல்களையும் தடுக்கும் வண்ணம் கட்மையான சட்டங்களையும் தண்டணைகளையும் அமுல்படுத்தி வருகின்றன. மிக அண்மையில் ஐரோப்பிய ஒன்றியத்தில் அதன் மிகஉயர்மட்ட அதிகாரியொருவர் ஊழல் குற்றச்சாட்டில் பெல்ஜியம் பொலிசாரினால் கைது செய்யப்பட்டமையைக் கூறலாம்.

ஆனால் குறைந்த வருமானம் பெறும் நாடுகளில் ஊழல் என்பது நிறுவனமயப் படுத்தப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். உதாரணமாக ஒரு அரச நிறுவனத்தின் வாகனமொன்றை பராமரிப்பதற்காகப் பதிவு செய்யப்பட்ட சேவை வழங்கும் நிறுவனத்திற்கு வாகன சாரதி கொண்டு செல்லும் போது சாரதிக்கு 10 சதவீத கமிஷன் வழங்கப்படும். அது வாகனப்பராமரிப்புச் செலவில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

சாரதி அதனைப் பெற்றமைக்கான பதிவு எங்கும் இருக்காது. அதேபோல அரச நிறுவனங்களில் பொருள் கொள்வனவு நடைபெறும் போது வெவ்வேறு மட்டங்களில் உள்ள அரச அதிகாரிகளுக்கு கமிஷன் வழங்கப்படுவது இரகசியமான ஒன்றல்ல. அந்தக் கமிஷனும் பொருள் விலையில் உள்ளடங்கியுள்ளதால் அது செலுத்தப்பட்டமைக்கான பதிவுகளோ பெற்றவர் அதனைப் பெற்றமைக்கான பதிவுகளோ எங்கும் காணப்படுவதில்லை.

அரசியல்வாதிகளும் அரசதுறை அதிகாரிகளும் குறுகிய காலத்தில் பெருஞ் செல்வந்தர்களாக மாறுவதற்கு இதுவே காரணம். மாறாக அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தைக் கொண்டு அவர்களால் செல்வச் சீமான்களாக மாற முடியாது. ஒருமுறை ஆபிரிக்க நாடொன்றின் அமைச்சர் ஒருவர் ஐரோப்பிய நாடொன்றிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டதாகவும் ஐரோப்பிய அமைச்சரின் செல்வச் செழிப்பு மிக்க பங்களாவைப் பார்த்துவிட்டு உங்கள் உத்தியோகத்தை வைத்து எப்படி இவ்வளவு பெரிய மாளிகையைக் கட்டினீர்கள் என்று கேட்டதாகவும் அதற்கு ஐரோப்பிய அமைச்சர் ஜன்னலின் திரைச்சீலையை விலக்கிக்காட்டி அதோ அங்கு ஒரு நெடுஞ்சாலை தெரிகிறதா என்று கேட்டாராம் அதற்கு ஆம் தெரிகிறது என்றாராம் ஆபிரிக்க அமைச்சர், அதன் 10 வீத கமிஷன் என்றாராம் ஐரோப்பிய அமைச்சர்.

சிலவருடங்கள் கழித்து ஐரோப்பிய அமைச்சர் ஆபிரிக்காவுக்குச் சென்ற போது குறிப்பிட்ட ஆபிரிக்க அமைச்சரின் வீட்டுக்கு விருந்துண்ணச் சென்ற போது அவரது மிகப்பிரம்மாண்டமான மாளிகையைப் பார்த்து அசந்து விட்டாராம். பின்னர் நைசாக ஆபிரிக்க அமைச்சரிடம் உங்கள் பிரமாண்ட மாளிகையைப் பார்த்து திகைத்துப்போய் விட்டேன். உங்கள் சம்பளத்தில் இது எப்படி சாத்தியம் என்று கேட்டாராம். அதற்கு அவர் மாளிகையின் திரைச்சீலையைத் திறந்து காட்டி அதோ அங்கே ஒரு நெடுஞ்சாலை தெரிகிறதா என்று கேட்டாராம்.

பலமுறை வெளியே உற்று உற்றுப் பார்த்த ஐரோப்பிய அமைச்சர் அங்கே அப்படி ஒரு பாதை இருப்பதாகத் தெரியவில்லையே என்று ஆச்சரியத்துடன் கேட்டாரம் ஆபிரிக்க அமைச்சர் வெகு கூலாக அந்தப் பாதையின் 100சதவீதம் என் கமிஷன் என்றாராம். போடப்படாத பாதைக்காக கமிஷன் பெற்ற அமைச்சரைப் பார்த்து வாயடைத்துப் போனாராம் ஐரோப்பியர்.

பெரும்பாலான பெரியளவு ஊழல்களைப் பிடிக்க முடியாதவாறு நாடுகளின் சட்டதிட்டங்கள் இருப்பது அத்தகையவர்களுக்கு வாய்ப்பாக இருப்பதுடன் முடிந்தால் பிடித்துக்காட்டு என்று சவால் விடவும் ஏதுவாகிறது.

---



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# உக்ரைன் - ரஷ்ய போரில் மாற்றத்தை ஏற்படுத்துமா

# பேட்ரியட் வான் பாதுகாப்பு ஏவுகணை?

உக்ரைன் – ரஷ்ய போர் மீளவும் அதிர்ச்சியான திருப்பங்களை எட்டிவருகிறது. போர்த் தொழில் நுட்பம் வாய்ந்த ஆயுத தளபாடங்களால் தீர்மானிக்கப்படுகிறது. சமகாலப் போர்கள் தந்திரங்களாலும் கூட்டணி நாடுகளின் பலத்தினாலும் மட்டுமல்ல நுட்பம் பொருந்திய ஆயுத தளபாடங்களாலும் தீர்மானிக்கப்படுகின்றன. உக்ரைனுக்கு வழங்கும் ஆயுதங்களிலேயே ரஷ்யாவின் வெற்றி முடிவுக்கு கொண்டுவர முடியுமென அமெரிக்காவும் இதர நேட்டோ நாடுகளும் கருதுகின்றன. ரஷ்யாவின் இராணுவ வளர்ச்சியை தோற்கடிக்க கிடைத்த வாய்ப்பாகவே உக்ரைன் மேற்குலக நாடுகளால் அடையாளப்படுத்தப்படுகிறது. ஆப்கானிஸ்தானை வைத்து சோவியத் யூனியனை வீழ்த்தியது போல் உக்ரைனை வைத்து ரஷ்யாவை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும் முயலுகின்றன. இக்கட்டுரையும் அமெரிக்கா உக்ரைனுக்கு வழங்க திட்டமிடும் பேட்ரியட் ஏவுகணை தொடர்பில் எழுந்துள்ள இராணுவச் சமநிலையை தேடுவதாக அமையவுள்ளது.

பேட்ரியட் ஏவுகணை Surface to Air missile ஆகும். அமெரிக்காவின் தயாரிப்பானது அதன் நட்பு நாடுகளால் பாவனைக்கு உட்படுத்தப்படுகிறது. கதிரியக்கத்தினால் கட்டுப்படுத்தப்படும் ராடர்களைக் கொண்ட ஆகாயப்பாதுகாப்புக்கான ஏவுகணை முறைமையாகும். ஆரம்ப மற்றும் நடுத்தர ஆகாயப் பாதுகாப்பு ஏவுகணையானது துல்லியமாக இலக்கை அடையும் திறனையும் வீச்சு எல்லையையும் கொண்டுள்ளது. இதன் பிந்திய வடிவமானது 2040 வெளிவர தயாராக உள்ளதென்பது குறிப்பிடத்தக்கதாகும். 1981ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டு 1984இல் தாக்குதலில் ஈடுபடுத்தப்பட்ட பேட்ரியட் ஏவுகணை வளைகுடாப் போரிலிருந்து தற்போது வரை பயன்பாட்டில் பிரயோகிக்கப்படும் ஏவுகணையாக உள்ளது. ஆகாயத்தில் மேற்கொள்ளப்படும் தாக்குதல் ஏவுகணைகளையும் விமானதிலிருந்து நிகழ்த்தப்படும் தாக்குதலையும் இடைமறித்து அழிக்கும் திறன் கொண்டதாக பேட்ரியட் விளங்குகிறது. ஏறக்குறைய ஆகாயத் தாக்குதல்களை எதிர்கொள்ளும் ஆற்றல் மிக்க இடைமறிப்பானில் ஒன்றாக உள்ளது.

உக்ரைன் மீதான தாக்குதலில் ரஷ்யா அதிகம் தரையிலிருந்து ஏவப்படும் ஏவுகணைகளாலும் ஆளில்லா விமானத்தினாலும் பாரிய தாக்குதலை மேற்கொண்டுறுத்துமாயின், பேட்ரியட் வான்பாதுகாப்பு அவசியமானதாக அமையும் என அவர் அமெரிக்க இராணுவ அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பேட்ரியட் மிகவும் மேம்பட்ட அமெரிக்க வான்பாதுகாப்பு அமைப்புக்களில் ஒன்றாகும். இவை வரையறுக்கப்பட்ட அளவிலேயே தயாரிக்கப்பட்டுள்ளன. இதனை பெற்றுக் கொள்வதற்கு உலகிலுள்ள அமெரிக்க நட்பு நாடுகள் அதிகம் பிரயத்தனம் செய்துவருகின்றன. ஆனால் அதனை அமெரிக்கா மட்டுப்படுத்திய உற்பத்தியிலும் நட்பு நாடுகளுக்கு வழங்குவதிலும் கட்டுப்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. அதற்கான அடிப்படை இத்தகைய தொழில் நுட்பத்திறன் எதிரி நாடுகளால் கைப்பற்றப்பட்டுவிடும் உக்ரைனுக்கு வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டு உண்டு. அவ்வாறே உக்ரைனுக்கு வழங்கப்பட்ட பல ஆயுத தளபாடங்களுக்கும் நிகழ்ந்ததாகவே தெரியவருகிறது. அவ்வாறான ஒரு முடிவையே அமெரிக்கா பேட்ரியட் வான்பாதுகாப்பு முறைமையிலும் பென்டகன் செயல்படும் எனவும் திறனை மட்டுப்படுத்துவதனால் ரஷ்யாவின் தாக்குதலுக்கு எதிர்வினை இருக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. ஆனால் உலகளாவிய ரீதியில் பேட்ரியட் வான்பாதுகாப்பு முறைமையை அமெரிக்கா உக்ரைனுக்கு வழங்கப் போவதான பிரசாரம் மட்டும் பலம்வாய்ந்ததாக அமைந்துள்ளது.

இதேநேரம் இத்தகைய வான்பாதுகாப்பினை உக்ரைனுக்கு நேட்டோ நாடுகள் வழங்குவதென்பது போரை வதற்கும் தொடர்ச்சியாக உக்ரைனுக்கு ஆயுத தளபாடங்களையும் பொருளாதார ஒத்துழைப்பையும் வழங்குவதில் பின்னிற்காது என்பதை விளங்கிக் கொள்ளக் கூடியதாக அமைந்துள்ளது. அதனால் அமெரிக்கா வழங்கப்போகும் வான்பாதுகாப்பு முறைமையானது ரஷ்ய உக்ரைன் போரின் இராணுவச் சமநிலையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற மதிப்பீடு ஏற்பட ஆரம்பித்துள்ளது.

ஒன்று, ரஷ்யாவின் உக்ரைன் மீதான தரைவழித் தாக்குதலானது அதிக நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. பெருமளவுக்கு உக்ரைன் மற்றும் நேட்டோவின் உத்திகளாலும் ஆயுதங்களாலும் ரஷ்யாவின் தரைவழித் தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டுள்ளன. ரஷ்யா கைப்பற்றிய சில பிரதேசங்களை கைவிட வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டிருந்தது. ஆனால் அதன் ஏவுகணைத் தாக்குதலும் தற்போது வலுவடைந்து வரும் ஆளில்லா விமானத் தாக்குதலும் அதிக இழப்பீடுகளை உக்ரைனுக்கு ஏற்படுத்தி வருகிறது.

உக்ரைனது உட்கட்டமைப்புக்களான மின்சக்தித்துறை, இராணுவ தளங்கள், குடியிருப்புக்கள் என்பன முற்றாகவே தகர்ந்துள்ளன. உக்ரைன் மக்கள் தொகையில் மூன்றில் ஒருபகுதியினர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். இதனை தடுத்து நிறுத்தாத போது உக்ரைன் படிப்படியாக மக்களற்ற நாடாக மாறும் நிலையை அடைந்துவிடும் என்ற அச்சம் மேற்கு நாடுகளுக்கு உண்டு.

எனவே பேட்ரியட் வான்பாதுகாப்பு உக்ரைனுக்கு வழங்கப்படுமாக இருந்தால் ரஷ்யாவின் ஏவுகணைத் தாக்குதலும் அதனால் உக்ரைனுக்கு ஏற்படும் விளைவுகளிலும் மாற்றம் நிகழும். இது ரஷ்யாவின் போர் உத்தியில் இன்னோர் பின்னடைவாகவே மாற்றமடையும்.

இரண்டு, உக்ரைன் – ரஷ்யப் போர் தொடங்கப்பட்டதற்கு ரஷ்யா முன்வைத்த காரணமே உக்ரைன் நேட்டோவில் இணைவதால் ரஷ்யாவினதும் அப்பிராந்தியத்தினதும் புவிசார் அரசியலுக்கும் ஏற்படவுள்ள பாதிப்புகளாகவே அமைந்திருந்தது. அதாவது நேட்டோவின்கண்காணிப்பும்தலையீடும் ரஷ்யப் பிராந்தியத்திற்குள் நிகழும் என்பதாகவே அமைந்திருந்தது. தற்போது எழுந்துள்ள மாற்றங்களை நோக்கும் போது போர் ரஷ்யாவின் இலக்கை ஓரளவு நிறைவு செய்ததாகவே தெரிகிறது. உக்ரைன் அத்தகைய நிலையை அடையமுடியாத சூழலை ரஷ்யத் தாக்குதல்கள் ஏற்படுத்திவிட்டன. உக்ரைனை மீட்டெடுப்பதற்கு பல பில்லியன் டொலரும் போதாதான நிலை காணப்படுகிறது. ஆனால் தற்போது நேட்டோ தரப்பும் உக்ரைனும் வகுத்துள்ள வான்பாதுகாப்பு முறை



உக்ரைன் உட்கட்டமைப்பை முழுமையாக அழித்துவருகிறது. உக்ரைனால் அத்தகைய தாக்குதலை எதிர் கொள்ள முடியாத நிலை எழுந்துள்ளது. இத்தகைய ரஷ்யாவின் தாக்குதலை முறியடிக்கும் உத்தியாகவே உக்ரைன் பேட்ரியட் தடுப்பு ஏவுகணை முறைமையை உக்ரைன் ஜனாதியதி ஜெலன்ஸ்கி கோரியிருந்தார். இதற்கு சாதகமான பதிலை அமெரிக்கா வழங்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் அதற்கான ஒப்புதலை அமெரிக்க ஜனாதிபதியும் அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் லாயிட் ஆஸ்டின் ஆகிய இருவரும் வழங்க வேண்டும். அதற்கான கோரிக்கை அவசியமானதென அமெரிக்க முன்னாள் உக்ரைன் இராணுவ கொள்கை வகுப்பாளரும் ஓய்வு பெற்ற இராணுவ லெப்ரினன்ட் கேணல் அலெக்சாண்டர் விண்ட்மேன் குறிப்பிட்டுள்ளார். பேட்ரியட் வான்பாதுகாப்பு திறனை உக்ரைன் பெறுவது அவசியமானது. இவை உக்ரைனியருக்கு இருக்கும் பல்வேறு சவால்களை சமாளிக்கும் திறன் கொண்டதாக இருக்கும். குறிப்பாக ரஷ்ய தாக்குதலுக்கு ஈரானிய தயாரிப்பான குறுந்தூர பாலிஸ்டிக் ஏவுகணைகளை முன்னி என்பதேயாகும். அதிலும் ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் அந்த விடயத்தில் விழிப்பாக இருக்கும். நாடுகள் என்பதை அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன் கவனம் கொண்டுள்ளது. குறிப்பாக ஏற்கனவே உக்ரைனுக்கு அதிநவீன ஆட்லறி ரொக்கெட் முறைமையை வழங்கியிருந்தது. ஆனாலும் அதன் முழுமையான திறனை அமெரிக்கா விஸ்தரிப்பதற்கு ஒப்பானதாக அமையும் என ரஷ்ய முன்னாள் ஜனாதிபதி டிமிட்ரி மெட்வெடேவ் நேட்டோ நாடுகளை எச்சரித்துள்ளார். இது முழுமையான உலகப் போருக்கு வழிவகுக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார். இவ்வகை எச்சரிக்கைகள் நிகழ்ந்தாலும் அமெரிக்கா போரை நீடிப்பதற்கும் ரஷ்யாவை உக்ரைனில் எதிர்கொள் மைக்கான நகர்வுகள் ரஷ்யாவின் அணுகுமுறைகளை நெருக்கடிக்கு உள்ளாக்கும் வாய்ப்பு எழுந்துள்ளதாகவே தெரிகிறது. ரஷ்யாவை கண்காணிக்கவும் உக்ரைன் நேட்டோவில் இணைவதிலும் கொண்டுள்ள ஈடுபாட்டை பேட்ரியட் சாதகமாக்கி விடும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. பேட்ரியட் படிப்படியாக உக்ரைன் நேட்டோ இராணுவ சமநிலையை ரஷ்யப் பிராந்தியத்தில் ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளதாகவே தெரிகிறது.

எனவே பேட்ரியட் வான்பாதுகாப்பு முறைமை உக்ரைனுக்கு முழுமையான திறனுடன் அமெரிக்கா வழங்குமாக அமைந்தால் ரஷ்ய போரின் உத்திகளில் மாற்றங்களை மேற்கொள்வது அவசியமாகும்.

அது முழுமையான உலகளாவிய போரா அல்லது முழுமையான ஐரோப்பிய போரா என்பதைவிட மீளவும் அணுவாயுப் போர் பற்றிய உத்திகளை ரஷ்யா முதன்மைப்படுத்த திட்டமிடும் என்பதில் குழப்பமடையத் தேவையிருக்காது. அதனால் ரஷ்யா தற்போது எழுந்துள்ள நகர்வையும் முறியடித்துவிடும் என்ற வாதங்களும் உண்டு.



24 வது கொடகே சாகித்திய விழா தேசிய நூலக சபை கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை பிற்பகல் நடைபெற்ற பொழுது தமிழ் நூல்களுக்கான விருதுகளை இலக்கியப் புரவலர் ஹாஸிம் ஓமர் நிகழ்வுக்கு தலைமை வகித்த தேசப்பந்து சிரிசுமன கொடகே, திருமதி நந்தா கொடகே ஆகியோருடன் இணைந்து வழங்கினார். 24 வது கொடகே சாகித்திய விழா சிறந்த நாவலுக்கு ஆ.மு.சி வேலழகனின் அன்புடையர் பிறர்க்கு என்ற நாவலுக்கும், சிறந்த சிறுகதைத் தொகுதிக்கு பாலரஞ்சனி ஜெயபாலின் நெத்திக்காசு என்ற சிறுகதைத் தொகுதிக்கும், சிறந்த கவிதைத் தொகுதிக்கு ஏ.கே.முஜாரத்தின் கடுவன் பூனை என்ற கவிதைத்தொகுதிக்கும், முதல் நூலுக்கான விருது ஜன்ஸி கபூரின் பிறப்பிட நிழலிலே எனும் நூலுக்கும், இரா.சடகோபனின் மொழிபெயர்ப்பு நூலான தேத்தண்ணிக்கும், ஆக்க இலக்கிய பிரதிப் போட்டியில் தெரிவான சிறந்த நாவலான ஏ.எஸ். உபைத்துல்லாவின் வேராகிப் போன மனிதர்கள் எனும் நாவலுக்கும், சிறந்த சிறுகதைத் தொகுதியான எஸ்.பாயிஸா அலியின் ஒளிப் பொட்டுகளாய் உருமாறி எனும் சிறுகதைத் தொகுதிக்கும், சிறந்த கவிதைத் தொகுதியான மலைகளின் பாடல் எனும் கவிதைத் தொகுதிக்கும் விருதுகளை வழங்கினார்கள்.



கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் அண்மையில் பாடசாலை மாணவர்களுக்கான சமய தலைவர்களின் ஆன்மிக கலந்துரையாடலின் பொழுது அமைச்சருடன் சத் பாசல திட்ட அதிகாரி ஹேமந்த ரணவக்க கல்வி அமைச்சின் மேலதிக ஆணையாளர் செய்னுலாப்தீன், தாஜுடீன், வணகத்துக்குரிய சத் பாசல திட்டமிடல் நிகழ்வின் இணைப்பு அதிகாரி பாணந்துற சந்தரத ஹீமீ. மற்றும் கலாநிதி ராமச்சந்திர குருக்கள் பாபுசார்மா ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## நந்தவனம் சந்திரசேகரன் பத்திரிக்கை பணிக்கு பாராட்டு



தமிழ்நாட்டில், திருச்சிராப்பள்யியின் இலக்கிய அடையாளமாக திகழும் இனிய நந்தவனம் சஞ்சிகை பிரதம ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரனின் 25 ஆண்டுகால பத்திரிகை பணியைப் பாராட்டி திருச்சிராப்பள்ளி தூயவளனார் கல்லூரியில் நடந்த படைப்பிலக்கியப் பயிலரங்கில் பாராட்டுப் பட்டயம் வழங்கப்பட்டது. இவ்விழாவில் பேராசிரியர் சுப. விரபாண்டியன் பேருரையாற்றினார் தூய வளனார் கல்லூரி செயலர் கு. அமல் தலைமையில் நடந்த விழாவில் வேர்கள் அறக்கட்டளைத் தலைவர் எஸ். அடைக்கலராஜா நம்ம திருச்சி ஜெ.டி. ஆர்.எழுத்தாளர் கேத்தரின் ஆரோக்கியசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழாய்வுத் துறைத்தலைவர் ஞா. பெஸ்கி அறிமுகவுரையாற்றினார்

மாணவர்கள் எழுதிய விதை நெல் 2022 தொகுப்பு நூலை கல்லூரி முதல்வர் ம. ஆரோக்கியசாமி சேவியர் வெளியிட்டு பாராட்டுரை வழங்கினார். திருச்சிராப்பள்ளியில் பத்திரிகைத்துறையில் சிறப்பாக பணியாற்றிவரும் ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு, நந்தவனம் சந்திரசேகரன் ஆகியோருக்கு பாராட்டுச் செய்யப்பட்டது

## காட்சி மொழி :

# உலக சினிமாவுக்கான காலாண்டிதழ்



ஈழத்து சிற்றிதழ் உலகிற்கு புதிய வரவாக மாரி மகேந்திரனை ஆசிரியராகக் கொண்டு உலக சினிமாவுக்காக இலங்கையில் இருந்து முதல் தமிழ் காலாண்டிதழ் என்ற அறிவிப்போடு வெளிவந்துள்ளது 'காட்சி மொழி' சஞ்சிகை.

'காட்சி மொழி' இதழின் வரவு குறித்து ஆசிரியர் தனது பக்கத்தில் இவ்வாறு பதிவு செய்கிறார்.

" தமிழ்ச் சினிமாவை ஆட்கொண்டிருக்கும் அதிகார வரம்புகளையும் மீறி சினிமா வாழ்வின் கலையாக உணரப்படவும், நல்ல சினிமாவைப் பற்றிய புரிதலுடன் இலங்கை வரைபடத்தில் சினிமாவை கலை வெளிப்பாட்டின் கருவியாக இனங்கண்டு அதன் தனித்துவமான அடையாளத்தை மீட்டெடுக்கவும், இலங்கை தமிழ் சினிமாவைக் கண்டடையும் மகத்தான செயல் உறுதியுடன் 'காட்சி மொழி' இலங்கையில் முனைகின்றது. அதிகாரத்தின் சீழ் பிடித்திருக்கும் கலைப் பிரதிகளைத் தகர்த்தெறிந்து புதிய மொழியுடனான சினிமாவைக் கட்டமைக்க தன் காலடித்தடம் பரப்பும் செயல் வடிவமாக 'காட்சி மொழி' இருக்கும்.

உலக சினிமாக்களிலிருந்து தனக்கான திரைப்படக் கோட்பாடு மற்றும் அரசியல் சித்தாந்தங்களை உள்வாங்கிக் கொண்டு, சுயமான படைப்பாளுமையுடன் இலங்கை தமிழ் சினிமா உருக்கொள்ள நாம் பாதை அமைப்போம். அதேவேளை இலங்கை தமிழ் சினிமாவுக்கான தடைகளாக அமையும் கலாசார பேரினவாத அரசியலின் பிற்போக்குவாதங்களை, அவநம்பிக்கைகளை, பழமைவாத சொல்லாடல்களை உடைத்தெறிந்து புதிய சினிமாவின் பிறப்புக்கான தடத்தையும் கருத்தியல் மற்றும் கலை ரீதியான புரிதல்களையும் வளர்த்தெடுப்போம் " நவம்பர் ஜனவரி 2023 காலப் பகுதிக்குரியதாக வெளிவந்த இந்த இதழில் முகேஷ் சுப்பிரமணியம் எழுதிய 'க்ளோஸ் அப்' கட்டுரை திரைப்படங்களில் க்ளோஸ் அப் காட்சிகளின் முக்கியத்துவத்தை பற்றி குறிப்பிடுகிறது. இந்தியாவில் இதுவரை எடுக்கப்பட்ட திரைப்படக் காதல் காட்சிகளில் அதிகம் பேரால் தலைசிறந்தது என வர்ணிக்கப்பட்டது 'மொகல் ஈ ஆஸம்' எனும் இந்திப் படத்தில் வரும் காதல் காட்சிதான். அதுகுறித்து அருமையானதொரு கட்டுரையை அஜயன் பாலா எழுதியுள்ளார்.



மலையாள இயக்குனர் பக்கர் குறித்த இளம் பரிதியின் 'மலையாள சினிமாவின் புரட்சிகரத் தலைமுறை' என்ற மொழி பெயர்ப்புக் கட்டுரை மூலம் சில புதிய தகவல்களை அறிந்து கொண்டேன். சிங்களத்தில் வெளிவந்த 'முதல் திரைப்படத்தை உருவாக்கிய லூமியர் சகோதரர்கள்' என்ற கட்டுரையை தமிழில் மார்க்ஸ் பிரபாஹர் மொழி பெயர்த்துள்ளார்.

மைக் யெல்லின் 'மதம் பிடிக்காத சினிமா' கட்டுரையும் துருக்கியின் திரை ஆளுமைகளில் ஒருவரான இயக்குனரும் நாவலாசிரியருமான இல்மஸ் குணேயின் நேர்காணலும் இதழுக்கு பன்முகத் தன்மையை வழங்குகின்றன. இந்த நேர்காணலை ஹவி தமிழில் மொழி பெயர்த்துள்ளார். மறைந்த பிரெஞ்சு இயக்குநர் Jean Luc Goddard குறித்த அஞ்சலிக் கட்டுரையை சிங்காரவேலன் எழுதியுள்ளார்.

முருகபூபதி எழுதிய 'தமிழ் சினிமாவும் இலக்கியமும் ரசனையும்' என்ற கட்டுரை தகவல் பெட்டகமாக விளங்குகிறது. திரைப்படமான இலக்கியப் படைப்புகள் குறித்து மேற்கத்தேய சினிமா, தென்னிந்திய சினிமா, ஈழத்து சினிமா ஆகியவற்றை முன் வைத்து எழுதிய கட்டுரை இது. நாவல்கள், சிறுகதைகளைப் படமாக்குவதில் உள்ள சிக்கல்கள் குறித்து பலவிடயங்களைப் பேசுகிறது. இந்தக் கட்டுரையை வாசித்ததும் அறந்தை நாராயணன் எழுதிய 'தமிழில் திரைப்படமான இலக்கியங்கள்' என்ற நூலும் நினைவுக்கு வந்தது.

கட்டுரையின் ஓரிடத்தில் ' தனது கதைகளான சொல்ல மறந்த கதை ஒன்பது ரூபா நோட்டு பள்ளிக்கூடம் ஆகியனவற்றை தங்கர்பச்சானே படமாக்கினார் ' என்று குறிப்பிடுகிறார். இதில் 'சொல்ல மறந்த கதை' தங்கர்பச்சானின் கதை அல்ல. உண்மையில் எழுத்தாளர் நாஞ்சில் நாடன் எழுதிய 'தலை கீழ் விகிதங்கள் ' நாவலே 'சொல்ல மறந்த கதை' திரைப்படமாகியது. 34 பக்கங்களில் நேர்த்தியான வடிவமைப்புடன் வெளிவந்த இந்தச் சஞ்சிகையின் பெயர் தமிழ் நாட்டில் இருந்து ஏற்கனவே வெளிவந்த 'காட்சிப் பிழை' சினிமா சிற்றிதழை நினைவூட்டவும் தவறவில்லை.

**காட்சிமொழி பற்றிய தொடர்புகளுக்கு**
+94 76371 2663
mariemahendran134@gmail.com
thirai.magazine@gmail.com

# டி.பி.எஸ்.ஜெயராஜுக்கு டி.ஆர்.விஜேவர்தன விருது

மூத்த பத்திரிகையாளரும் அரசியல் ஆய்வாளருமான டி.பி.எஸ்.ஜெயராஜ் முன்னோடிகள் மற்றும் பொதுமக்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டதற்கான டி.ஆர். விஜேவர்தன விருதைப் பெற்றிருக்கிறார்.

இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கமும் இணைந்து வருடாந்தம் நடத்தும் சிறந்த ஊடகவியலாளர்களுக்கான விருதுவழங்கும் வைபவம் கடந்த செவ்வாய்க்கிழமை (13/12) மாலை மவுண்ட் லவினியா ஹோட்டலில் நடைபெற்றபோது அவருக்கான இந்த விருது வழங்கப்பட்டது.

வீரகேசரியில் ஒரு அலுவலக நிருபராக 1977ஆம் ஆண்டு பத்திரிகைத்துறையில் பிரவேசித்த ஜெயராஜ் 1981ஆம் ஆண்டு ' த ஐலண்ட் ' பத்திரிகையில் இணைந்தார். சென்னையில் இருந்து வெளியாகும் பிரபலமான ' த இந்து ' ஆங்கில நாளிதழ் மற்றும் 'ஃபுரொண்ட்லைன் 'சஞ்சிகையின் கொழும்பு நிருபராகவும் பணியாற்றிய அவர் ஹார்வாட் பல்கலைக்கழகத்தில் பத்திரிகைத்துறைக்கான நீய்மன் ஃ பெலோஷிப் பெற்று சென்ற பிறகு அங்கிருந்து கனடாவுக்கு குடிபெயர்ந்தார்.



கனடாவில் ஜெயராஜ் இலங்கை விவகாரங்கள் தொடர்பில் இலங்கை பத்திரிகைகளில் மூன்று தசாப்தங்களாக பத்திகளை எழுதிவருகிறார். அண்மைக்காலமாக அவர் டெயிலி மிறர் மற்றும் ஃபைனான்சியல் ரைம்ஸ் பத்திரிகைகளில் கிரமமாக எழுதிவருகிறார்.

றொறண்டோவில் வசிக்கும் ஜெயராஜின் சார்பில் அவருக்கான விருதை டெயிலி மிறர் பத்திரிகையின் இணை ஆசிரியர் சுசித்த பெர்னாண்டோ இலங்கை பத்திரிகைகள் சங்கத்தின் தலைவர் ரஞ்சித் விஜேவர்தனவிடமிருந்து பெற்றுக்கொண்டார். 'லேக் ஹவுஸ் ' என்று பொதுவில் அறியப்பட்ட அசோசியேட்ட் நியூஸ்பேப்பேர்ஸ் லிமிட்டெட்டின் ஸ்தாபகரான டி.ஆர்.விஜேவர்தனவின் நினைவாக இந்த வருது இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தினால் வழங்கப்பட்டுவருகிறது.

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 49

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | | 02 | 03 | ■ | 04 | | 05 |
| | ■ | 06 | | | | ■ | |
| 07 | 08 | | | ■ | 09 | 10 | |
| ■ | 11 | | | 12 | ■ | 13 | |
| 14 | | ■ | ■ | 15 | | | ■ |
| 16 | | | 17 | | ■ | ■ | 18 |
| | ■ | ■ | 19 | | 20 | 21 | |
| 22 | | | | ■ | 23 | | |

**திரு/திருமதி.செல்வி** ..............................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
**முகவரி** ..............................................
..............................................
..............................................

.................... ....................
**திகதி** **கையொப்பம்**

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
**போட்டி இல. 48**
**த.பெ.இல.834. கொழும்பு**

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 49

**இடமிருந்து வலம்**

01. இம் மாதத்தில் வரும் கிறிஸ்தவத் திருநாள்
04. இரத்தம்
06. கீழ்த்தரமானவன் அல்லது தீயகுணமுடையவன் (குழம்பியுள்ளது)
07. இறக்குமதி மற்றும் ஏற்றுமதித் துறைகளின் மீதான வரிகளை வசூலிக்கும் துறை
09. குழந்தைகளை இப்படியும் அழைப்பதுண்டு திரும்பியுள்ளது
11. ஜாக்கிரதை (குழம்பியுள்ளது)
13. சிரிக்கும் அளவுக்கு தாழ்த்திவிடும் அர்த்தமற்ற செயல்
14. செல்வத்தையும் குறிக்கும்
15. நீர்வீழ்ச்சி
16. இரக்கம், கருணை (குழம்பியுள்ளது)
19. காதல் கடவுள் என புராணக் கதைகளில் சொல்லப்படும் கடவுள்
22. கள்வன்
23. நாற்காலி உடைந்து விட்டது

**மேலிருந்து கீழ்**

01. விஷம்
02. பிறந்த அல்லது தோற்றம் பெற்ற இடம்
03. பிறரை மதிக்காத ஆணவப்போக்கு (குழம்பியுள்ளது)
04. நீர் குடிக்கப் பயன்படும் கைப்பிடி இல்லாத கோப்பை
05. ஆயுர்வேத மருத்துவத்துக்குப் பயன்படும் மருந்துச் சரக்கு
08. இதுவும் ஒரு விலங்குதான் (குழம்பியுள்ளது)
10. வினா (குழம்பிவிட்டது)
12. இதுவும் பறவையினத்தைச் சேர்ந்தது (குழம்பியுள்ளது)
14. போதும் என்ற எண்ணத்தால் மனம் அடையும் அமைதி
17. உயிரைக் கவர்ந்து செல்பவன்
18. திருமணமாகாத பெண் ( கீழிருந்துமேல்)
20 சந்திரன்
21. நிலத்தின் மேற்பகுதி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 48

### விடைகள்

**இடமிருந்து வலம்**

| | | |
|---|---|---|
| 01. இளவேனில் | 05. பசி | 07. பட்டம் |
| 09. லட்டு | 10. தேக்கம் | 13. துணை |
| 14. சந்தேகம் | 17. பார் | 18. சோலை |
| 19. மருதம் | 21. வாரம் | 22. புல் |
| 23. துவி | 24. புசி | |

**மேலிருந்தது கீழ்**

| | | |
|---|---|---|
| 01. இல்லம் | 02. வேட்டு | 03. பனி |
| 04. தேடல் | 06. சினம் | 08. துக்கம் |
| 11. கணை | 12. ஆம் | 14. தேர்தல் |
| 15. சகி | 16. விலைவாசி | 17. பாம்பு |
| 18. சோம்பு | 20. மது | |

### பரிசு பெறுவோர் விபரம்

| முதல்பரிசு (ரூ 500/) | இரண்டாம்பரிசு (ரூ 350/) | மூன்றாம் பரிசு (ரூ 150/) |
|---|---|---|
| வி . பாலேந்திரா<br>15/2 பி. தயா வீதி,<br>கொழும்பு 06 | எம்.எம்.எம்.அப்ராஸ்,<br>37, கண்டி விதி,<br>வரக்காமுறை, உக்குவளை | எஸ்.எச்.எம்.ஜிப்ரி<br>p9 சைனா வீதி<br>கொழும்பு 11 |

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 48

### பாராட்டு பெறுவோர்

| | | |
|---|---|---|
| **1. எம்.ஏ. அத்தாஸ்**<br>மாத்தறை | **5. எம்.வி.எப்.பரீனா**<br>களுத்துறை | **9. எஸ். அனிதா**<br>கண்டி |
| **2. எம்.டபிள்யூ.எப்.ஷனாஸ்,**<br>நாங்கல்ல | **6. ரி.சாந்தினி**<br>கொழும்பு 3 | **10. த. சிவசங்கரி**<br>வண்ணார்பண்ணை |
| **3. பி.திவ்யபாரதி**<br>மாத்தளை | **7. எம்.ஏ.எப் அக்ஸா**<br>பதுளை | **11 சி. அனுராதா**<br>பட்டிருப்பு |
| **4. ஏ.எல். அப்துல் ஜெலீல்**<br>கொட்டிகாவத்தை | **8. பி. நடேசன்**<br>மட்டக்களப்பு | **12 அ. பௌமினா பேகம்**<br>காத்தான்குடி |

# கவிதை மஞ்சரி

கிருஷா

kavithaimanjari@gmail.com

## அனாதைகளை ஆதரிப்போம்

எம்.ரி.எம்.அன்ஸார்

விதி விதைத்திட்ட
துயரமே அனாதைகள்
கெதி இதுவென
வாழ்ந்திடும் பரிதாபங்கள்
நாதியற்ற மனிதர்களுக்கும்
உதவிட மனமில்லை
மீதி வாழ்வதுவும்
இடர்வதில் மகிழ்வில்லை

கந்தல் ஆடைக்குள்
கனவும் தொலைகிறது
சிந்தும் கண்ணீரில்
புன்னகை மறைகிறது
விந்தையான சமூகத்தினால்
வீதியே வீடாகிறது
வந்திடும் நாட்களும்
வேடிக்கையாகிக் கழிகிறது

பாசம் காட்டிடவே
பெற்றோர்களும் இல்லை
நேசம் கொண்டிடவே
உறவுகளும் இல்லை
தோசம் இவர்களென
சித்தரிக்குது காலம்
வேசம் மட்டுமே
வாழ்ந்திடும் உலகம்

புத்தகப்பை தூக்கிடும்
வயதில் இவர்கள்
யாசகத் தட்டு(த்)
தூக்குவதே பரிதாபம்
இருப்பதைப் பகிர்ந்தே
அனாதைகளை
அணைத்திடுவோம்
நாளைய விடியலை
நலமாக்கி மகிழ்ந்திடுவோம்..!



## இனிக்கின்ற இளமை...!

இரா.ஜெயக்குமார்

பள்ளி முன் வெளியில்
பட்டங்கள் ஏற்றியதும்...
எருக்கலைப் புதர்களிடை
மிதிவண்டி செலுத்தியதும்...
ஆட்டுக்குப் புல் தேடி
தோட்ட வழி திரிந்ததுவும்...
பொன்வண்டுகள் பிடிக்க
கிளுவை பல கண்டதுவும்...
வானொலியே துணையாக
பாயிருந்து படித்ததுவும்...
தென்னை மட்டை கொண்டு
துடுப்பாட்டம் செய்ததுவும்...
ரியூட்டறியே அறியாமல்
வாசித்துக் களித்ததுவும்...
இப்போது நினைக்கையிலே
இனிக்கிறதே மனமே!

## அடிமைச் சங்கிலி

வரக்காமுறையூர் ராசிக்

கூடி வாழ்வதே செழுமை
குலத்திற் கதுவே பெருமை
கள வெடுக்கும் கயமை
காசினி யெங்கும் கருமை
உழைத்து வாழ்வதே யுரிமை
உணர மறுத்தால் சிறுமை
பொய் யுரைக்கும் தன்மை
புவி யெங்கும் வன்மை
மெய் யுரைப்பதே மேன்மை
மேவிடு மது நன்மை
மது வருந்தும் பழக்கம்
மானில மெங்கும் குழப்பம்
மதியினில் வேண்டும் விளக்கம்
மனிதா ஏனிந்த மயக்கம்
காகக் கூட்டச் சேர்க்கை
கற்றுத் தருது வாழ்க்கை
அறி வில்லா மடமை
ஆளு திங்கே உடமை
பறி போனது கடமை
பாரி லெல்லாம் அடிமை

## தோல்வியெனும் தோழன்

மெய்யன் நடராஜ்

சரியானதற்குப் பிழையானதை
எழுதியவரே இப்போதுதான்
உங்களுக்குச் சோதனைக் காலம்

பிழையானவர்களும்
சரியான கேள்வி கேட்கும்
சாதனைக் காலம்

சரியாய்த்தானே எழுதினேன்
பிழையானது ஏனென
மனம் கொதிக்கும் வேதனைக்காலம்

வெளியாகிய ஒரு பெறுபேறால்
முக்காலத்தைச் சந்தித்த
எதிர்காலச் சந்ததியே
இது நீ பள்ளியில் பயிலாத பாடம்

காலம் கற்றுத்தரும்
பாடங்களுக்கெல்லாம்
இதுவே அரிச்சுவடி

வெற்றிகளின் வாசலில்
உனக்காகவே காத்திருக்கும்
பாதணிகளே தோல்வி
அணிந்து செல்
இலக்கை அடை
இங்கே தோல்விகள் என்று
ஒன்றில்லை
அவை உன் தோழர்கள்
அரவணைத்துக் கொள்

எப்போதும் கூடவரா
வெற்றிகளிலும் பார்க்க
எப்போதும் கூடவே வரும்

தோல்விகளே உன்
அடுத்த இலக்கை நோக்கிய
பயணத்திற்கு வழியாகின்றன

வெற்றிகள் முற்றுப்புள்ளிகள்
தோல்விகளே அடுத்ததை
அறிவிக்கும் காற்புள்ளிகள்

தோல்விகளே
வெற்றிப் பாறையைச்
செதுக்கும் சிற்றுளிகள்

தோல்விகளில் கற்றதை
வெற்றியின் வித்தாக்கி
முயற்சி நீரூற்று
மகிழ்ச்சிப் பூக்கள்
உன் வாழ்வில் பூக்காமல் போகாது



## தவிர்ப்போம் நாமே

நிலாவெளியூர் கெஜதர்மா

வீதியிலே உயிர்கள் விபத்தெனும் பெயரால்
வீணாய்ப் பறிபோவதைப் பாருங்கள்
நாதியற்று உடல்கள் நாலாபுறமும் சிதறி
நமையெல்லாம் வருத்துவதைக் காணுங்கள்

திடீரென உடல்கள் திடமின்றிப் போவதால்
திடுக்குற்று உறவுகள் திகிலாகிப் போகிறார்
அடிபட்டது ஆர்பிழையென அறியா மக்கள்
அடித்து நொறுக்குகிறார் வாகனத்தை வீணாய்

புகையிரதக் கடவையிலும் போகுது உயிர்கள்
புற்கள் மூடிய புதரிலும் போகுதுயிர்கள்
வகைவகை யாகவே விபத்து நாளுமினி
வளர்ந்து வருவதை தவிர்ப்போம் நாமே



## போதையற்ற உலகம்

அஜி அஜந்தன்
வவுனியா

மாய உலகில்
மதுவின் பிடியில்
மகிழ்ச்சியில் திளைத்து
மனதை தொலைத்து இங்கே
மலிந்து கிடக்கின்றனர்
மடந்தையர் கூட்டம்

மதி மழுங்கி
கதி கலங்கி
கந்தல் எண்ணத்தில்
சிந்தையை சிதைத்து
மேதையாய் இருந்தவரும்
பாதை மாறி
போதைச்சாக்கடைக்குள்
பேதையாய் நிற்கின்றனர்

உண்மையை உண்டு
உளறிக்கொட்டி
பொய்மையை உரைத்து
மெய் நடுநடுங்கி
நேசத்தை துறந்து புது
வேசங்கள் போட்டு
புகைபோதையால்
புதைகுழிக்குள்ளே
புதைக்கப்படுகின்றனர்
புத்திமான்கள்

குடியாலே நாளும்
விடியாதே பொழுது
வடிகின்ற கண்ணீரால்
முடியாதே வாழ்க்கை
மாறும் உலகினில்
வாழுகின்ற மனிதா
நாகரிக மழையில் நீயும்
நனைவதுதான் தகுமா

இதயத்தை கருக்கி
ஈரலை சுருக்கி
இளமையை கெடுத்து
இன்னல்கள் கொடுத்து
புத்தியை சிதைத்து
புற்றுநோயாக்கி உன்னை
குட்டிச்சுவராக்கி
குடியை கெடுக்கும்
குடிபோதையை இன்றே
விட்டொழிப்போம் வா

மது கோப்பை வேண்டாம்
மனவுறுதி வேண்டும்
சாராயம் வேண்டாம் நாம்
சாதிக்க வேண்டும்
புகைப்போதை வேண்டாம்
புது உலகம் வேண்டும்
விஷமான வாழ்க்கையது நமக்கு
வசமாதல் வேண்டும்!

## வாய்ப்புகள்

அகீலா ஜவுபர்
ஏத்தாளை புத்தளம்

வாய்ப்புகள் வருவது
வாழ்விற்கு வளமே
விடியல் பிறப்பதோ
வாய்ப்புகள் வந்த பின்னே

திறமையை வளர்த்திட
வாய்ப்புகள் வரமே
வெற்றியைப் பெற்றிட
வாய்ப்புகள் வழி தருமே

வாய்ப்புகள் வரும் வரை
காத்திருப்பது தவறில்லை
அடுத்தவர் வாய்ப்புகளை
தட்டிப்பறிப்பது முறையில்லை

வாய்ப்புகளைப் பெற்றிட
போராடு முடியும் வரை
வாய்ப்புகளை பெற்றபின்
வசந்தம் காணு வாழும் வரை

வாய்ப்புகள் கிடைப்பது
சிலரிற்கு பரிசு
வாய்ப்புகளை உருவாக்கியவர்
உலகிற்கே பரிசு

## என் தோழி..

அனாமிகா
கொழும்பு

தோள் கொடுக்க
தோழமை கொண்டு...
தோழியான தோழியே...

உன்னைத் தான் உன்னைத் தான்
உயிருக்குயிராய் நேசிக்கிறேன்...
உயிர் இருக்கும் வரை
உன் நேசமும் வாசமும்
உயிரோடு கலந்துவிட உதவிடுவாயா...



## எல்லோரும்

இணுவில் வாகீசன்

எல்லோருக்குமாக
எல்லோரும்போல
எல்லோரது நினைப்பிற்காகவும்
எல்லோரையும் போல் வாழமுடியாது

எல்லோரும் தானே
எல்லோரும் இல்லை
எல்லோரும் சொல்லார்

எல்லோரும் என்பர்
எல்லோரும் இல்லை என்பர்
எல்லோருக்காகவும் யாருமில்லை

எல்லோரும் சேர்வது
எல்லோரும் மகிழ்வது
எல்லோரும் இல்லாதபோது

## விடுகதை அல்ல அவள் விடுதலை

சலீமா,
வாழைச்சேனை

உன் குடும்பத்தைக் காப்பாற்ற
கணவன் இல்லை
நபிகள் வாழ்வு கொடுக்கச் சொன்னார்
இவர்கள் மனதைப் புண்படுத்தி
மரணம் அடையச் செய்து விடுவர்
கடைக்குச் சென்றால்
கடைக்காரர் முகம் சுழிப்பார்
வலிமா வீட்டுக்கு அழைப்பு இல்லை
வலிமா வீடு அல்ல அது வரும்படி வீடு

விதவையே பிள்ளைகளோடு வாழ்க்கை எனும்
போராட்ட வேதனையை
உதறித் தள்ளிவிட்டு
தைரியமாக வீறுநடை போடு
இறைவன் துணை உனக்கு

உனது பிள்ளைகளுக்கு நீ
ஊற்று கல்வி எனும் பாலை
உனக்கும் விடியல் வரும்
உனது மகன் வைத்தியனாகி விட்டால்
அந்த நிலையை உன்மகன் அடைய
நீ பட்ட துயர் எல்லாம் மாறி
சமூகம் மாப்பிள்ளை தேடி
உன் வீடு வரும்
உனது முகவரி
எல்லோருக்கும் நன்கு தெரியும்

தற்கொலை, கோழைத்தனம் ஏன்?
உன்னாலும் சாதிக்க முடியும்
பெண்ணே! நீ விதவை அல்ல
சாதனைப் பெண் வீரத்தாய்



## என் பிதாவே.....!

றிமாஸா ராசிக்
வெலிகம

அன்பிலே கனிந்து
பண்பிலே சிறந்து
அறிவிலே உயர்ந்து
அனுபவத்திலே முதிர்ந்து
பிள்ளைகளை கவர்ந்து
வாழ்ந்தீர்கள் இணைந்து

உங்களைப் பிரிந்து
துக்கத்தில் மிதந்து
கண்ணீரில் தோய்ந்து
உங்களை நினைந்து
தவிக்கிறேன் இருந்து
என் பிதாவே!

தினம் உங்களை நினைத்து
கடக்கிறேன் நிமிடங்களை துணிந்து
எனக்காய் நீர் படும்
கஷ்டங்களை புரிந்து
கற்கிறேன் கல்விதனை இனிந்து
என்றோ ஒரு நாள்;
ஆலிமா எனும் பட்டந்தனை சுமந்து
மகிழ்வோடு உம்மிடம் வந்து
இத்துன்யாவின் வாழ்வதனை
தீ நெறியில் வாழ்ந்து
விடை பெறனும் உம்மிடமிருந்து!
என் பிதாவே !

## விதைப்பும் எரிப்பும்

விவேகவெளி தமிழேந்திரன்
பாண்டிருப்பு

என் தம்பி
தன் நிலத்தில்
நெல் விதைத்தான்!
எவனோ வந்து
அந்நிலத்தில்
"நெருப்பை" விதைத்தான்...
அப்போது எரிந்ததோ
நிலமும் நெல்லும்
மட்டுமல்லவே...
எல்லோரதும் வயிறுகளும் தான்...
வாழ்க்கையும் தான்...!!!

## என்றும் உன் நினைவுகள்

நுஸ்ஹா அஸீம்
ஓட்டமாவடி

உயிருக்குள் ஊசலாடி
உணர்வுக்குள் ஊமையாகி
உடலுக்குள் உறைந்து என்னை
உயிரிழக்க செய்கிறது
உந்தன் நினைவுகள்

மறக்க பல வழிகளையும்
மருந்தாக நான் செய்தாலும்
மறக்காமல் வந்து
மரணமடைய செய்கிறது...
மாறாத நினைவுகள்

தேடிப் பார்க்கிறேன்
தீராத உந்தன் பாசத்தை
தோற்று போகிறேன்
உந்தன் நினைவுகளால்...

பாரினில் மறக்கமாட்டேன்
பாசமான உந்தன்
அரவணைப்பை மீண்டும்
பார்க்க வேண்டும் என்
பலநாள் உறவை...



## கவிஞர்கள் கவனத்துக்கு...

கவிதை மஞ்சரிக்கு கவிதைகள் அனுப்பும் வாசகர்கள் தயவு செய்து 15 - 18 வரிகளுக்கு மேற்படாமல் தமது கவிதைகளை எழுதி அனுப்ப வேண்டும். பொருட்சுவை, சொற் சிக்கனம், கருப் பொருளை நெற்றியடியாக சொல்லுதல், ஆற்றோட்டமான நடை என்பன கவிதைக்கான அடிப்படை இலக்கணம், ஒரு விஷயத்தை சுருக்கமாக, நறுக்கென சொல்வதே கவிதை.

வளவளவென நீண்டு செல்லும், பொருளற்ற கவிதைகள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டா. ஒரு கவிதையின் பொருள் ஒன்றுக்கு மேற்பட்டதாக இருக்கக் கூடாது. இளங்கவிஞர்கள் புதிய உத்திகளை பயன்படுத்த முன்வர வேண்டும். ஏனெனில் கவி பழகும் இளங் கவிஞர்களுக்கான நடை முற்றமே கவிதை மஞ்சரி.

- ஆசிரியர்

# AMW -Castrol மூலோபாய ஒத்துழைப்பு இலங்கையில் தொடர்ந்தும் முன்னெடுப்பு




உலகப் புகழ்பெற்ற மோட்டார் கார் வர்த்தக நாமமான Audi மற்றும் மசகு எண்ணெய் வர்த்தக நாமமான Castrol நிறுவனங்கள் இடையே தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் உலகளாவிய மூலோபாய பங்களிப்பை இலங்கைச் சந்தையிலும் தொடருவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. Castrol நிறுவனத்தின் இலங்கை முகவரான AMW நிறுவனமும் Audi நிறுவனத்தின் இலங்கை முகவரான Drive one தனியார் நிறுவனமும் அதற்கான ஒப்பந்தத்தை அண்மையில் உத்தியோகபூர்வமாக புதுப்பித்துக் கொண்டன.

சர்வதேச மோட்டார் கார் தொழிற்துறையில் பாரிய வர்த்தக நாமங்கள் இரண்டான Audi மற்றும் Castrol இடையே இந்த மூலோபாய பங்களிப்பானது 2008 ஆம் ஆண்டு முதல் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றது. நிறுவனங்கள் இரண்டும் ஒன்றிணைந்து மேற்கொண்ட ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் ஊடாக Audi எஞ்ஜின் தொழில்நுட்பத்துக்கு முழுமையாக பொருந்தும் மசகு எண்ணெய்யை அறிமுகப்படுத்த முடிந்துள்ளது. விசேடமாக இந்த செயற்பாடு ஊடாக எரிபொருள் செயற்றிறன் அதிகரிக்கப்படுகின்றது. அதுதவிர எரிபொருள், எஞ்ஜின் ஒய்ல் ஊடாக கார்பன் டைஆக்சைட் வெளியேற்றம் குறைவாக இடம்பெறுவதும் விசேட அம்சமாகும்.

இலங்கையில் Audi மற்றும் Castrol பங்களிப்பானது கடந்த 14 வருடங்களாக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றது. அதனூடாக இலங்கையில் Audi பாவனையாளர்களுக்கு தமது வாகனத்திற்கு சிபார்சு செய்யப்பட்ட சர்வதேச தரத்திலான மசகு எண்ணெய் மட்டும் பாவனை செய்து தமது வாகனத்தின் தரத்தை மேம்படுத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

Castrol மசகு எண்ணெய்யானது, தமது நிறுவன மோட்டார் காருக்கு சிறந்த மசகு எண்ணெய் வர்த்தக நாமமாக விளங்குவதாக Audi நிறுவனம் உத்தியோகபூர்வமாகவே சிபார்செய்துள்ளது.

# வரிக்குப் பின்னரான இலாபமாக ரூ.2,505 மில்லியனை பெற்றுள்ள செலான் வங்கி





இலங்கை சுதந்திர மடைந்ததில் இருந்து இதுவரை எதிர்கொண்டிராத மிக மோசமான நெருக்கடிச் சூழல் என வர்ணிக்கப்பட்ட தளம்பலான பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியிலும் கூட செலான் வங்கி மேற்படி இலாபத்தை பெற்றுக் கொண்டுள்ளது. எனவே, இதனை மிகவும் பாராட்டத்தக்க ஒரு நிதிப் பெறுபேறாக நிதித்துறை ஆய்வாளர்கள் நோக்குகின்றனர்.

வங்கியின் தேறிய வட்டி வருமானம் ரூபா 17,068 மில்லியனில் இருந்து, 2022 செப்டெம்பர் 30ஆம் திகதி முடிவடைந்த 9 மாதங்களில் ரூபா 27,960 மில்லியனாக ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 63.82% இனால் அதிகரித்துள்ளது.

தரகு கட்டணத்தை அடிப்படையாகக் கொண்ட வருமானமானது ரூபா 3,270 மில்லியனில் இருந்து ரூபா 4,520 மில்லியனாக இந்த 9 மாத காலப்பகுதியில் 38.22% இனால் அதிகரித்துள்ளது. வர்த்தக நிதி மற்றும் அட்டைகளுடன் தொடர்புபட்ட வருமானமே கட்டண வருமானம் அதிகரிப்பதற்கு பிரதான காரணிகளாக அமைந்துள்ளது.

வணிக நடவடிக்கைகளில் இருந்தான தேறிய வருவாய், நிதிச் சொத்துக்களின் நியாயப் பெறுமான மறுசீராக்கங்களில் இருந்தான தேறிய வருவாய், வெளிநாட்டு நாணயமாற்று பரிவர்த்தனையில் இருந்தான தேறிய வருவாய் மற்றும் ஏனைய தேறிய தொழிற்பாட்டு வருமானம் ஆகியவை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 37.13% அதிகரித்துள்ளது. அதாவது, கடந்த வருடத்தில் ரூபா 1,979 மில்லியனாக பதிவு செய்யப்பட்ட இவ் வருமானம், 2022 இன் 9 மாதங்களில் ரூபா 2,715 மில்லியனாக குறிப்பிடத்தக்களவுக்கு அதிகரித்துள்ளது.

தேறிய அந்நியச் செலாவணி மறுமதிப்பீட்டில் இருந்து கிடைக்கப் பெற்ற வருவாயே இதற்கு பிரதானமான பங்களிப்பை வழங்கியது.

கடந்த வருடத்தில் ரூபா 10,036 மில்லியனாக காணப்பட்ட மொத்த செலவினங்கள் 2022இல் ரூபா 11,015 மில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கமைய பரிசீலனைக்கு எடுத்தக் கொள்ளப்பட்ட 9 மாத காலப்பகுதியில் வங்கியின் மொத்தச் செலவினம் 9.75% அதிகரிப்பை பதிவு செய்திருக்கின்றது. ஆளணிசார் செலவுகள் ரூபா 530 மில்லியனால் அதிகரித்துள்ளது.

# AkzoNobel இன் "ஆண்டின் வர்ணம் 2023" அறிமுகம்



முன்னணி பெயின்ட் மற்றும் மேற்பூச்சு வகைகள் நிறுவனமும், இலங்கையில் Dulux பெயின்ட் வகைகள் உற்பத்தியாளருமான AkzoNobel, ஆண்டின் வர்ணம் 2023: Wild Wonder ஐ அறிமுகம் செய்யவுள்ளது. விளை பயிர்களின் வர்ணத்தின் பிரகாசம் எம்மை இயற்கையுடன் இணைப்பதாக அமைந்துள்ளதுடன், வலு மற்றும் நேர்த்தித் தன்மையை உருவாக்குவதாக அமைந்துள்ளது.

இன்றைய உலகில் ஆதரவு, இணைப்பு, ஊக்குவிப்பு மற்றும் சமநிலையை மக்கள் தேடும் நிலையில், இயற்கை உலகில் காணக்கூடிய அதிசயங்களை அவர்கள் நாடுகின்றனர். உள்ளக பெயின்ட் மற்றும் மேற்பூச்சு வர்ண நிபுணத்துவ அணியினாலும், சர்வதேச அலங்கார நிபுணர்களாலும் மேற்கொள்ளப்பட்ட ஆழமான ஆய்வினூடாக, சர்வதேச சமூக, அலங்கார மற்றும் நுகர்வோர் போக்குகளின் மையத்தில் எதிர்பார்ப்பு உள்ளதை கண்டறிந்தனர்.

நான்கு Dulux அலங்கார பெயின்ட் வர்ணத் தெரிவுகள் Wild Wonder ஐ அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன. (Winter's Silence, 50YY 49/191): Lush Colors (the forest hues), Buzz Colors (meadow brights), Raw Colors (harvest shades) மற்றும் Flow Colors (seashore tones). தமது இல்லங்களையும் நகர சூழல்களையும் மாற்றியமைக்கும் நுகர்வோருக்கு, சுவர்களுக்கு சிறந்த தோற்றத்தை வழங்கக்கூடிய வர்ணத் தெரிவுகளை வழங்குவதாக இவை அமைந்துள்ளன.

AkzoNobel இன் Global Aesthetic Center க்கு இரு பாரிய மைல்கற்களை வழங்குவதாக 2023 ஆம் ஆண்டு அமைந்திருக்கும். அதன் வர்ணமயமான உள்ளம்சப் போக்கினூடாக, 20 ஆவது வருட பூர்த்தியை கொண்டாட முடியும் என்பதுடன், AkzoNobel இல் போக்கு பகுப்பாய்வு, வர்ண ஆய்வு, வர்ண அலங்காரம் மற்றும் கலையமைப்பு போன்றவற்றை அணியினால் எய்தக்கூடியதாக இருக்கும்.

# நீண்ட நாள் சேவை ஊழியர்களை கௌரவிக்கும் வருண் பீவரேஜஸ் லங்கா நிறுவனம்



வருண் பீவரேஜஸ் லங்கா பிரைவேட் லிமிடெட் (Varun Beverages Lanka Pvt Ltd VBLL) ஆனது, வருண் பீவரேஜஸ் லிமிடெட் (Varun Beverages) நிறுவனத்தின் துணை நிறுவனமாகும். இது அமெரிக்காவிற்கு வெளியே PepsiCo வினது பானங்களை போத்தலில் அடைக்கும் மிகப்பெரிய நிறுவனமாக உள்ளது. இந்நிறுவனம் அண்மையில் 25 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் பணியாற்றிய அதன் ஊழியர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் ஒரு விருது விழாவை நடத்தியிருந்தது. தமது தொழில் வாழ்க்கையின் கணிசமான பகுதியை நிறுவனத்திற்காக அர்ப்பணித்த, நிறுவனத்தின் 36 பணியாளர்கள் மற்றும் அவர்களது வாழ்க்கைத் துணைவர்களைப் பாராட்டி, தாஜ் சமுத்ரா ஹோட்டலில் இந் நிகழ்ச்சி இடம்பெற்றிருந்தது.

இவ்விருது வழங்கும் விழாவில் பிரதம விருந்தினராக, பல்தேசிய நிறுவனமான வருண் பீவரேஜஸ் லிமிடெட் நிறுவனத்தின் தாய் நிறுவனமான ஆர்.ஜே கோர்ப் (RJ Corp) நிறுவனத்தின் தலைவர் ரவி காண்ட் ஜெய்பூரியா கலந்து கொண்டார். மிகவும் மதிக்கப்படும் வணிக தலைவர்களில் ஒருவரான இவர், இவ்விழாவில் கலந்து கொள்ள இந்தியாவில் இருந்து வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. வருண் பீவரேஜஸ் லங்கா பிரைவேட் லிமிடெட்டின் பணிப்பாளர்சபை உறுப்பினர், தேசபந்து திலக் டி சொய்சா, கௌரவ விருந்தினராக இவ்விழாவில் கலந்து கொண்டார்.

வருண் பீவரேஜஸ் இந்தியாவின் பிரதம செயற்பாட்டு அதிகாரி மன்மோஹன் போல், வருண் பீவரேஜஸ் இந்தியாவின் பிராந்திய பிரதம தொழில்நுட்ப அதிகாரி பூபின்தர் சிங், வருண் பீவரேஜஸ் இந்தியாவின் பிராந்திய பிரதம நிதி அதிகாரி பிரதீப் கோயல், வருண் பீவரேஜஸ் இலங்கையின் நாட்டுக்கான தலைவர் அமித் ஜோஷி மற்றும் வருண் பீவரேஜஸ் லங்காவின் ஏனைய உயர்மட்ட அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

# 125 வருட பூர்த்தியை கொண்டாடிய பவர்



இலங்கையின் பரந்தளவு தொழிற்துறைகளின் மத்தியில் முன்னேற்றகரமான புத்தாக்கம் மற்றும் வளர்ச்சி ஆகியவற்றில் 125 வருடகால வரலாற்றுப் பூர்த்தியை கொண்டாடும் வகையில், பவர் என அழைக்கப்படும் ஏ.பவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட், மாபெரும் மாலை நேர விருந்துக் கொண்டாட்ட நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. தனது நீண்ட வரலாற்றுப் பயணத்தை மீட்டுப் பார்த்ததுடன், கடந்து வந்த சவால்கள் நிறைந்த பயணங்கள், தசாப்த காலங்களில் உறுதியாக காண்பித்திருந்த அர்ப்பணிப்புகளுடன், எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ள திட்டங்களை இந்த நிகழ்வில் வெளிப்படுத்தியிருந்தது.

2022 நவம்பர் 30ஆம் திகதி, சினமன் லேக்சைட் ஹோட்டலில் இந்த நிகழ்வு இடம்பெற்றதுடன், நாட்டின் புகழ்பெற்ற பிரபலங்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் ஏ. பவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரொல்ஃவ் ப்ளாசர் கருத்துத் தெரிவிக்கையில், "எமது சாதனைகள் தொடர்பிலும், பல தசாப்த காலங்கள் எதிர்கொண்டிருந்த சவால்களுக்கு மத்தியில் உரிய காலப்பகுதியில் முன்னெடுத்திருந்த புத்தாக்கமான தீர்வுகள் தொடர்பிலும் நாம் மிகவும் பெருமை கொள்கின்றோம். இதில் பங்காற்றியிருந்த எமது பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்கள், பங்காளர்கள், ஊழியர்கள் மற்றும் அங்கம் பெறும் அனைவருக்கும் இத்தருணத்தில் நன்றி தெரிவிக்கின்றேன்." என்றார்.

ஸ்தாபிக்கப்பட்டது முதல் நிறுவனத்தினால் எய்தப்பட்டிருந்த முக்கியத்துவம் வாய்ந்த சாதனைகள் தொடர்பில் ப்லாசர் விளக்கமளித்திருந்ததுடன், நிறுவனத்தின் ஸ்தாபகரான அல்பிரட் பவர், சேதன மற்றும் இரசாயன உரங்கள் தொடர்பில் கவனம் செலுத்தியிருந்தமை மற்றும் விவசாயிகளுக்கு விஞ்ஞானபூர்வமான ஆலோசனைகளை வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தமை பற்றிய விளக்கங்களையும் வழங்கியிருந்தார். பிராந்தியத்தில் காணப்படும் உயர் தொழில்நுட்பத்திறன் வாய்ந்த உரத் தொழிற்சாலையாக இது திகழ்கின்றது எனக்குறிப்பிடலாம்.

# மாத்தளை வெஹெரகலகம கிராமத்துக்கு சுத்தமான குடிநீரை வழங்கும் NDB வங்கி



தேசிய அபிவிருத்தி வங்கி PLC (NDB) மாத்தளை மாவட்ட வில் கமுவவில் உள்ள மிகவும் தொலைதூர கிராமமான வெஹெரகலகமவில் 'நீர் சுத்திகரிப்பு நிலையத்தை' (Reverse Osmosis RO Plant) நிறுவியது. NDB தலைமைக் குழு உறுப்பினர்கள், நிறுவன நிலைத்தன்மை (CS) குழு உறுப்பினர்கள், கிராம அதிகாரிகள் மற்றும் வெஹெரகலகம கிராம மக்கள் முன்னிலையில் NDB வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி டிமந்த சென விரத்னவினால் சுத்திகரிப்பு நிலையம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. இது ஒரு நாளைக்கு 10,000 லிட்டர் தண்ணீரைச் சுத்திகரிக்கும் திறனைக் கொண்டுள்ளது மற்றும் இந்த கிராமத்தில் உள்ள 300 குடும்பங்கள் (1,000 க்கும் மேற்பட்ட மக்கள்) நேரடியாகப் பயனடையவும் முடியும்.

வங்கியின் 'கார்ப்பரேட் சஸ்டைனபிலிட்டி' குழு, கிராம அதிகாரிகளுடன் இணைந்து இந்த கிராமத்தின் தேவைகளை ஆய்வு செய்தது. அப்பகுதியில் உள்ள குடிநீர் மாசுபடுவதால், அக்கிராமத்தில் சிறுநீரக நோய் பாதிப்பு அதிகமாக இருப்பது தெரிய வந்தது. சுத்தமான குடிநீரின் தேவை வெஹெரகலகம கிராம மக்களுக்கு மிகவும் அவசரமான மற்றும் அவசியமான தேவையாக இருந்தது. கிராமத்திலிருந்து 4 கிலோமீட்டர் தொலைவிலேயே அண்மித்த நீர் சுத்திகரிப்பு நிலையம் உள்ளது, மேலும் கிராம மக்கள் தினமும் தண்ணீர் சேகரிக்க பல சிரமங்களை சந்திக்க வேண்டியுள்ளது.

# William Angliss கல்லூரியின் 8ஆவது பட்டமளிப்பு விழா



SLIIT பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள William Angliss கல்லூரியின் 8ஆவது பட்டமளிப்பு விழா அண்மையில் கொழும்பு செங்ரீலா ஹோட்டலின் "கிராண்ட் போல்" மண்டபத்தில் நடைபெற்றது.

அவுஸ்திரேலியாவின் வில்லியம் அங்லீஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையைச் சேர்ந்த ஆறு அங்கத்தவர்கள், வில்லியம் அங்லீஸ் இலங்கை நிறுவனத்தின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள், சுற்றுலா மற்றும் சமையற் கலைத்துறையைச் சேர்ந்த சிறப்பு விருந்தினர்கள் மற்றும் பட்டதாரி மாணவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் என ஏராளமானோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

பாரம்பரிய மேள தாளங்களுடன் தொடங்கப்பட்ட பட்டமளிப்பு விழாவை, முகாமைத்துவ மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் அரங்கேறிய நடனம் மேலும் அலங்கரித்தது. அவுஸ்திரேலியாவின் வில்லியம் அங்லீஸ் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி நிக்கலஸ் ஹன்ட் வரவேற்புரை நிகழ்த்தினார்.

சகல பட்டதாரி மாணவர்களும் வில்லியம் அங்லீஸ் நிறுவனத்தின் விருந்தோம்பல், வணிக சமையற் கலை மற்றும் நிகழ்ச்சி முகாமைத்துவம் ஆகிய பாடத்திட்டங்களுக்கான அவுஸ்திரேலிய தகைமையை பெற்றுள்ளனர். பட்டமளிப்பு விழாவில் இரண்டு அமர்வுகள் நடைபெற்றன. கல்லூரியின் தலைவர் எரல் வீரசிங்க மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கியதோடு சகல குழுக்களிலும் மிகச் சிறந்த திறமைகளை வெளிப்படுத்திய மாணவனுக்கு பரிசுகளும் வெற்றிக் கேடயமும் வழங்கப்பட்டது. கல்வி நடவடிக்கைகளில் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்கள் சிலருக்கு பதக்கங்களும் வெற்றிக் கோப்பையும் வழங்கப்பட்டன.

# ஆண்டின் சிறந்த பெண் ஏற்றுமதியாளருக்கான தங்கவிருது விந்தியா பெரேராவுக்கு




இலங்கையின் அடையாளத்தை உலக அரங்குக்கு கொண்டு செல்லும், மாணிக்கக் கற்களை அரிந்து பட்டை தீட்டும் கலையின் முதன்மை நிறுவனமான வரையறுக்கப்பட்ட பிரிலியன்ட் கட்ஸ் தனியார் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி விந்தியா பெரேராவுக்கு தேசிய ஏற்றுமதிச் சபை ஏற்பாடு செய்த 2022ஆம் ஆண்டின் சிறந்த ஏற்றுமதியாளர்களுனக்கான விருது விழாவில் சிறந்த பெண் ஏற்றுமதியாளருக்கான தங்கப் பதக்க விருதை வென்றுள்ளார்.

மேலும், திருமதி விந்தியா பெரேராவின் தலைமையிலான பிரிலியன்ட் கட்ஸ் தனியார் நிறுவனம் உள்ளிட்ட இரண்டு நிறுவனங்கள் இதே விருது விழாவில் இரட்டை வெங்கலப் பதக்கங்களை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேற்படி விருது விழா கொழும்பு சங்ரீலா ஹோட்டலில் அண்மையில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

திருமதி விந்தியா பெரேரா மற்றும் பிரிலியன்ட் கட்ஸ் நிறுவனம் இதற்கு முன்னரும் பல விருதுகளை வென்று சாதனை படைத்துள்ளது.

நவீன வடிவமைப்பு மற்றும் இலங்கையின் அடையாளத்தை பிரதிபலிக்கும் வகையில் உயர் தரத்திலான மாணிக்கக் கற்களை லஸ்டர் டிசையின் வர்த்தகநாமத்தின் கீழ் சர்வதேசத்திற்கு கொண்டு செல்வதற்கு முடிந்துள்ளது. மேற்படி சகல செயற்பாடுகளும் மாணிக்கக் கற்கள் தொடர்பான மேலான அறிவைக் கொண்ட ஆலோசனைக் குழுவொன்றின் கீழ் முறையான தொழில்நுட்ப செயன்முறையின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகிறது. லஸ்டர் டிசையின் வர்த்தகநாமத்துக்கும் ஏராளமான சர்வதேச விருதுகள் கிடைத்துள்ளன.




## மேஷம்

ராசிக்கும், 8ம் இடத்திற்கும் அதிபதி வக்கிரகதியில் 2ம் இடத்தில் இருப்பதால் சில நன்மையும் உண்டு, சில பலவீனங்களும் உண்டு. அவருடைய வக்கிர கதி அஷ்டமாதிபதி தன்மையைக் குறைக்கும். அதே நேரத்தில், ராசிநாதன் வக்கிர கதியில் இருப்பதால், சில தொல்லைகளும் உண்டு. வருமானத்தில் குறைவிருக்காது. தொழில் லாபகரமாக நடக்கும். அதற்குத் துணையாக சனியும் இருப்பார். புதிய வாகனம் வாங்குதல், வீடு வாங்குதல் அல்லது பழுதுபார்த்தல் முதலிய வேலைகள் உங்கள் முன் வந்து நிற்கும். பஞ்சமாதிபதி சூரியன் அஷ்டமத்தில் இருப்பதால், சில சஞ்சலங்கள் வரலாம். உஷ்ண நோய்களும், ஜீரணக் கோளாறுகளும், தூக்கமின்மையும் அலைக்கழிக்கும்.

## ரிஷபம்

ராசிநாதன் சுக்கிரன், அஷ்டம ஸ்தானத்தில் தன பஞ்சமாதிபதி புதனோடு சஞ்சரிக்கிறார். ரிஷப ராசிக்காரர்களுக்கு இதன் மூலம் மன உற்சாகமும் செயல் திறனும் அதிகரிக்கும். பிரச்சினைகளை புத்திசாலித்தனத்தோடும், நிதானத்துடனும் அணுகுவதால் வெற்றி கிடைக்கும். அடுத்த நிலைக்கு முன்னேறுவது பற்றிய சிந்தனை இருக்கும். கணவன் மனைவி உறவுகளில் அந்நியோன்னியமும், ஆதரவும் இருக்கும். போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்பவர்கள், புதிய வாய்ப்பினைப் பெறுவார்கள். குரு, லாபஸ்தானத்தில் ஆட்சி பெற்றிருப்பதும், 6ல் கேது இருப்பதும் நல்ல அமைப்பு. 8ம் இடத்தில் புதன் இருக்கிறார் என்பதை மறந்துவிட வேண்டாம். அவ்வப்பொழுது அவர் கவனத்தை திசை திருப்பி, சோர்வடைய வைப்பார். வாக்கு ஸ்தானத்தில் செவ்வாய் இருப்பதால், வாக்கை சற்று கவனத்தோடு கையாள வேண்டும்.

## மிதுனம்

6ல் சூரியன் இருப்பதும், 11ல் ராகு இருப்பதும், 10ஆம் இடத்தில் சனி இருப்பதும், சாதகமான அமைப்புக்கள். தனகாரகனான சந்திரன் நிலைப்பாட்டினால் பொருளாதாரம் ஏற்ற இறக்கத்தோடு இருக்கும். வரவுக்கும் செலவுக்கும் சரியாகவே இருக்கும். தொழில் வியாபாரம் சிக்கலின்றி சுமுகமாக நடக்கும். ராசிநாதன் 7ல் சுக்கிரனோடு இருந்து, ராசியைப் பார்ப்பதால் கணவன் மனைவி குடும்ப உறவுகள் ஆதரவாக இருக்கும். சற்றும் எதிர்பாராத சில திடீர் சந்தோஷங்கள் நடைபெற வாய்ப்புண்டு. யாரோ ஒருவர் உங்களுக்கு தோன்றாத் துணையாக உதவி செய்து, உங்கள் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் வாய்ப்பு உண்டு. 12ல் உள்ள செவ்வாயும், 5ல் உள்ள கேதுவும், அஷ்டம சனியும் உங்கள் மன உறுதியை அவ்வப்பொழுது சோதித்துக் கொண்டே இருப்பார்கள். தைரியமாக எதிர்கொள்வதில்தான் உங்கள் வெற்றி அடங்கியிருக்கிறது. பிரச்சினைக்குள்ளேயே தீர்வும் இருப்பதை மறந்துவிட வேண்டாம்.

## கடகம்

சந்திரனுடைய நிலையின் அடிப்படையில், இவ்வாரம் பெரும்பாலும் அனுகூல பலன்கள் நடைபெறும். உங்கள் பஞ்சமஸ்தானத்தையும் பார்ப்பதும், அங்கே அவருடைய நண்பரான தனகாரகன் சூரியன் இருப்பதும் சிறப்பான அம்சங்கள். எனவே பெரியவர்களுடைய ஆசி, குழந்தைகளுடைய ஆரோக்கியம், இவ்வாரத்தை நீங்கள் உங்களுடைய முன்னேற்றத்துக்கான திட்டங்களை போடுவதிலும், அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலும் செலவிடலாம். குலதெய்வக் கோயிலுக்குச் செல்வது, ஆன்மிக வழிபாட்டுத் தலங்களுக்கு செல்வது மிக எளிதில் நடக்கும். குடும்பத்தில் ஏதேனும் சிறு பிரச்சினைகள் நடந்தாலும் அதை சுமுகமாக கையாளப் பழகுங்கள். சிறு நெருப்பு பெருந்தீயாக மாறிவிட வாய்ப்புண்டு. 4ல் கேது. தாயாரின் உடல் நிலையில் கவனம் செலுத்துங்கள்.

## சிம்மம்

ராசிநாதன் சூரியன், சுகஸ்தானத்தில் இருக்கிறார். சுக்கிரனும், புதனும் 5ஆம் இடத்தில் இருந்து, லாபஸ்தானத்தைப் பார்ப்பது நல்ல அமைப்பு. விருந்தினர்களின் வருகை, குழந்தைகளின் உற்சாகம் என மனதுக்கு இதமான பல செயல்கள் நடைபெறும். உங்கள் கீழ் பணிபுரிபவர்கள் உங்களை புரிந்து கொண்டு நல்லவிதமாக ஒத்துழைப்பார்கள். குழந்தைகள் கல்வி, குரு 2ஆம் இடத்தில் இருப்பதாலும், பண வருவாய்க்கு பஞ்சமில்லை. பத்திரிகை, எழுத்துத்துறை, ஆசிரியர்கள், வங்கிப் பணியாளர்கள் இவர்களுக்கெல்லாம் அனுகூலமான வாரம். மூளை சோர்ந்து போகும் படியாக இருக்காதீர்கள். 12ஆம் இடத்தை சனி பார்ப்பதால், அவ்வப்பொழுது ஆரோக்கிய குறைவு ஏற்படும். மிக உற்சாகமாக இருக்கும் மனநிலை, திடீரென்று ''ஆமாம் பார்த்துக்கொள்ளலாம்'' என்று சோர்ந்து போய்விடும். அதை அப்படியே நீடிக்க விட்டுவிடாதீர்கள்.

## கன்னி

புதனும் சுக்கிரனும் நான்கிலிருந்து பத்தாம் இடத்தை பார்ப்பது அருமையான அமைப்பு. சுகஸ்தான பலத்தால், வீடு, அதைப் போலவே, 3ஆம் இடத்தில் சூரியன் நட்பு ராசியில் இருப்பதும், சப்தம ராசியிலிருந்து குரு உங்கள் ராசியைப் பார்ப்பதும் அருமை. அந்தத் துன்பங்களை விரைவில் ஏதோ ஒரு வழியில் நீக்கிவிடும் கிரக அமைப்புகள். நீங்கள் உங்கள் மனநிலையை மட்டும் எப்பொழுதும் உற்சாகமாக வைத்துக் கொண்டால், எல்லா விதத்திலும் நன்மைகள்தான் நடக்கும். மற்றபடி குடும்பம், தொழில், வருவாய் என அனைத்தும் சாதகமாகவே இருக்கிறது. 5ல் சனி இருப்பதால், பிள்ளைகள் எதிர்காலம் குறித்த பயம் இருக்கும். அஷ்டம ராகு சில கஷ்டத்தைத் தருவார். 2ல் உள்ள கேது, மனக் கவலை மூலம் உடல் கவலை ஏற்படுத்துவார்.

## துலாம்

லாபாதிபதி சூரியன் தனஸ்தானத்தில் இருப்பதும், பாக்கியாதிபதி புதன், சுக்கிரனோடு சேர்ந்து 3ஆம் இடத்தில் இருப்பதும் சில சாதகங்களைச் செய்யும். குறிப்பாக, அரசு அலுவல்கள் தாமதமின்றி முடியும். தொழில் அனுமதி (லைசன்ஸ்) முதலிய அரசாங்க காரியங்கள் சாதகமாக முடிந்து, அதனால் ஏற்படும் நன்மைகள் அதிகரிக்கும். ராசிக்குரிய சுக்கிரன் 3ஆம் இடத்தில் இருப்பதால், குடும்ப உறவுகள் நன்மை செய்யும். தொழில் வருமானம் முன்னேற்றமாக இருக்கும். சுபமுயற்சிகள் வெற்றிபெறும். பத்திரிகைதுறை, எழுத்துத்துறை, கலைத்துறை நண்பர்களுக்கு ஆதாயம் உண்டு. 7ல் ராகு இருப்பதும், 12 ல் கேது இருப்பதும், இரண்டு பாம்பு கிரகங்களுக்கு இடையே மற்ற கிரகங்கள் இருப்பதும், ஒவ்வொரு விஷயமும் சிக்கலுக்குப் பின்தான் முடிவடையும் என்பதைக் காட்டுவதால், நிதானமும் விழிப்புணர்வும் அவசியம் என்பதை மறந்துவிட வேண்டாம்.

## விருச்சிகம்

தொழில் ஸ்தானாதிபதி சூரியன், ராசியில் இருக்கிறார். அந்த ராசிக்குரிய செவ்வாய் 7ல் இருந்து ராசியைப் பார்க்கிறார். மனதின் ஆற்றல் அதிகரித்து, எண்ணங்கள் நிறைவேறும். 7ஆம் இடத்துக்கு சுக்கிரன் கையிருப்பில் உள்ள செல்வத்தைக் குறிக்கிறது. 3ல் சனி ஆட்சி பெற்று இருப்பது நல்ல அமைப்பு. 5ல் குரு இருந்து லாபஸ்தானத்தைப் பார்ப்பதால், தொட்டது துலங்கும். குடும்ப சூழல், ஆதரவாக இருக்கும். இவற்றையெல்லாம் இந்த ராசிக்காரர்கள் முறையாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். என்னதான் இருந்தாலும், இன்னொரு நெருப்பு கிரகமான செவ்வாய் வக்கிரம் அடைந்து ராசியைப் பார்ப்பதும் அழுத்தத்தையும், அலைச்சலையும், மனக் குழப்பத்தையும், டென்ஷனையும், கோபத்தையும் தரும் என்பதால், உங்களை மீறி வரும் இவற்றில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும்.

## தனுசு

லாபாதிபதி சுக்கிரன் ராசியில் புதனோடு ஒன்று சேர்ந்து இருக்கிறார். இருவரும் இணைந்து களத்திர நட்பு ஸ்தானத்தைப் பார்க்கிறார்கள். அது சுயதொழில் ஸ்தானமும் கூட. குடும்ப ஒற்றுமை, மனைவி அல்லது கணவனின் அன்பும், நல்ல வருமானமும், தொழில் முன்னேற்றமும், நட்பு வட்டாரத்தின் ஆதரவும் கிடைக்கக்கூடிய அமைப்பு. 11ஆம் இடத்தில் உள்ள கேது, இந்தச் செயல்களுக்கு துணைபுரிவார். 4ஆம் இடத்தில் ராசிநாதன் அமர்ந்து கேந்திர தோஷத்தைப் பெற்றாலும், அவர் தொழில் ஸ்தானத்தைப் பார்ப்பதும் அந்த இடத்துக்குரிய புதன் ராசியில் இருப்பதும் சோதனைகள் மீறிய வெற்றியைக் காட்டுகிறது. குடும்பஸ்தானத்தில் சனி இருப்பதும், 5ஆம் இடத்தில் ராகு இருப்பதும், சாதகமான அமைப்பு அல்ல என்பதால் உடல்நிலை, செலவுகள், வேலைக்காரர்கள், உங்களுக்கு ஆகாதவர்கள் போன்ற விஷயங்களில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். 4ஆம் இடத்து குரு நட்பு வட்டாரத்தில் சிக்கலைத் தருவார் என்பதை மறந்துவிட வேண்டாம்.

## மகரம்

3ஆம் இடத்திற்கும், 12ஆம் இடத்திற்கும் உரிய குரு, மூன்றாமிடத்தில் மறைந்திருக்கிறார். ராசிநாதன் ஆட்சி பெற்று அவரைப் பார்க்கிறார். சுக்கிரன் 12ஆம் இடத்தில் இருப்பது அனுகூலமான விஷயம். அது சுகத்தையும், லாபத்தையும் தரும். தொழில் ஸ்தானமும், லாபஸ்தானமும் அதிக பாதிப்பு இன்றி இருப்பதால் தொழில், வணிகம், உத்தியோகம் ஏற்றத்தாழ்வின்றி இருக்கும். வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். மகர ராசியினர், கிரக வலிமையைவிட, மன வலிமையை நம்பி இருக்க வேண்டிய காலம் இது. கொஞ்சம் சூட்சும அறிவும், நிதானமான அணுகுமுறையும் தேவை. உடனடியாகச் செயல்படுத்தாதீர்கள். உறவுகளில் சிக்கலை ஏற்படுத்தாமல் நடந்து கொள்ளுங்கள்.

## கும்பம்

ஏழரை சனியின் ஆதிக்கத்திலிருந்தாலும் சனி என்பதால் அதிக பாதிப்பு இருக்காது. குரு குடும்பஸ்தானத்தில் ஆட்சி எனும் சுபநிலை. பொருளாதாரம் வலுப்படும். புதிய வருமானம் செய்யும் வழி குறித்துச் சிந்திப்பீர்கள். சப்தமாதிபதி சூரியன் 10ல் சுபவலிவோடு குரு பார்வை பெற்று இருப்பதால், அரசு வழி உதவிகளும் ஆதாயமும் உண்டு. 3ல் உள்ள ராகு உங்களுக்கு எதிர்பாராத சில நல்ல வாய்ப்புகளைத் தருவார். அதை முறையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். விருந்து முதலிய சில மகிழ்ச்சியான தருணங்களும் உண்டு. சனியின் பார்வையினால் கொடுக்கல் வாங்கல் விஷயங்களில் எச்சரிக்கை தேவை. சில தவிர்க்க முடியாத பிரயாணங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும். உத்தியோக இட மாற்றங்களும் உண்டு.

## மீனம்

லாபஸ்தானத்தில் சனி இருப்பது, அனுகூலமான அமைப்பு. ஜீவனஸ்தானம் வலுவடைந்து இருப்பதால் தொழில், உத்தியோகம், வேலை, வேலையில் கௌரவம், பொருளாதார முன்னேற்றம் முதலியவற்றில் பெரும் சிக்கல்கள் எதுவும் இருக்காது. குரு 7ஆம் இடம் பார்ப்பதாலும், சுக்கிரன் புதன் பார்த்து சுகஸ்தானம் வலுவடைந்து இருப்பதாலும், குடும்ப உறவுகள் ஆதரவாக இருக்கும். சுகஸ்தானம் வலிமை அடைந்து இருப்பதால் ஆடை, ஆபரண, வாகன சேர்க்கைகள் நடக்கும். உறவுகள் ஒத்துழைப்பார்கள். என்னதான் சுபக்கிரகமாக இருந்தாலும், குரு ஜென்ம ராசியில் இருப்பது உசிதமல்ல. சில நேரங்களில் நாமே, சில சங்கடங்களை வரவழைத்துக் கொள்வது போல் ஆகிவிடும். குரு ராசியை விட்டு விலகும் வரை ஜாக்கிரதையாகவே இருக்கவேண்டும். 2ல் ராகு, 8ல் கேது இவை இரண்டும் நமக்கு வரும் வாய்ப்புகளை இழக்க வைக்கும் சூழ்நிலையைத் தரும் என்பதால், நாம்தான் வாய்ப்புகளை கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும்.

# "பாவேந்தல் பாடல்கள்" நூல் வெளியீட்டு விழா

## தனித்துவமான படைப்பாளியின் வித்தியாசமான தொகுப்பு

பாவேந்தல் பாலமுனை பாறூக்கின் "பாவேந்தல் பாடல்கள்"நூல் வெளியீட்டு விழா இன்று(18.12.2022) அட்டாளைச்சேனை சக்கி மண்டபத்தில், உதவிப் பிரதேச செயலாளர் சட்டத்தரணி பாத்திமா நஹீஜா முஸாபிர் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேல்நீதிமன்ற நீதிபதி என்.எம். அப்துல்



லாஹ் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளும் இவ்விழாவில் பேராசிரியர் செ.யோகராசா,பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ், விரிவுரையாளர் எம். அப்துல் றசாக் ஆகியோர் நூலின் மீதான உரையை நிகழ்த்துவர்.

"பாவேந்தல் பாடல்கள் " தொடர்பாக பேராசிரியர் செ. யோகராசா எழுதிய குறிப்பு இங்கு பிரசுரமாகிறது.

ஈழத்துப் படைப்பாளர்கள் பலரிடமிருந்தும் வித்தியாசமானதொரு படைப்பாளராக பாவேந்தல் பாடல்கள் என்ற இன்னிசைப் பாடல்கள் கொண்ட இத்தொகுப்பிற்குரியவராக பாலமுனை பாறூக் காணப்படுகின்றார் என்பது பற்றி முதலில் குறிப்பிட்டாக வேண்டும்.

எழுபதுகளளவில் கவிதைத் துறையூடாக எழுத்துலகில் பிரவேசித்தவர், சமகால ஈழத்துக் கவிதைச் செல்நெறிகளை சிறப்பாக வெளிப்படுத்துகின்ற கவிதைத் தொகுப்பொன்றுக்குப் பதமாக அமையக் கூடிய விதத்தில் "பதம்" என்றொரு தொகுப்பினை வெளியிடுகின்றார். அதன் சிறப்புக்கள் சில பற்றி "பாவேந்தல் பொன்னேடு" மலரில் இடம்பெற்றுள்ள ஆய்வொன்று எடுத்துக் காட்டுகின்றது. பின்னர் கவிதைத் துறைக்கு விடை கொடுத்துவிட்டு (கவனிக்க: தனது கவித் திறனுக்கு விடை கொடுக்கவில்லை.) இன்னொரு துறைக்குள் நுழைகின்றார்.

2010 அளவில் நவீன காவியத் துறைக்குள் நுழைந்து, முஸ்லிம் மக்களது பண்பாடு, சமகால அரசியல், கலாசாரம், முதுமை வாழ்வு என்பன சார்ந்தும், முதியோர் நிலை சார்ந்தும் நவீன காவியங்கள் நான்கு தந்து இத்துறையிலும் வலுவான வளமான தடங்களைப் பதிக்கின்றார். இவை பற்றியும் ஆழமான கட்டுரைகள் வெளி வந்துள்ளன.

பின்னர் 2013 அளவில், குறும்பா, ஹைக்கூ உலகிற்குச் சென்று, அவற்றின் ஓசையை தமிழ்நாடு வரை கேட்கச் செய்கின்றார்.இப்போது, மெல்லிசைப் பாடல் என்கின்ற இன்னிசைத் துறை இவரை ஈர்த்தது.

ஈழத்தில், ஏறத்தாழ எழுபதுகளில் இருந்து எண்பதுகள் வரை மெல்லிசைப் பாடல் புத்தெழுச்சி பெற்றிருந்தது. இவ்விதத்தில் இலங்கை வானொலியின் பங்களிப்பு கணிசமானது. ஈழத்தில் பல இடங்களிலிருந்தும் பாடலாசிரியர்கள் கலைஞர்கள் பலர் இனங்காணப் பட்டனர். எனினும், இவர்களது பாடல்கள் தொகுதியாக்கப் படவில்லை.

இவர்களது கணிசமான பாடல்கள் வாழ்த்துகள், போதனை, பக்தி, காதல், பிரதேசப் பற்று இயற்கை முதலான விடயங்களைப் பாடுபொருளாகக் கொண்டிருந்தமை கண்கூடு.

பேராசிரியர்
செ. யோகராசா

மேற்குறிப்பிட்ட செல்நெறியுடன் ஒப்பிடும்போது இதிலுள்ள 54 பாடல்களில் 15 பாடல்கள் இஸ்லாமிய பக்திப் பாடல்களாக அமைகின்றன. இறை நம்பிக்கையையும், முஹம்மது நபி(ஸல்) அவர்களது சிறப்புக்களையும், மார்க்க ரீதியிலான நடைமுறைகளையும் வெளிப்படுத்துகின்றன. ஒரு சில பாடல்கள் முஸ்லிம் புலவர்கள் பெரியார்கள் பற்றியன.

அதே வேளையில், இத்தொகுதி யிலுள்ள ஏனைய மெல்லிசைப் பாடல்களின் பாடு




பொருள்கள் தனித்துவமானவை. இவை, பெரும்பாலானவர்கள் பாடாப் பொருள்கள் பற்றிப் பாடுகின்றன. ஈழத்தின் சமகால அரசியல், பொருளாதார நெருக்கடிகள் பற்றியவை இவற்றுள் முக்கியமானவை.

ஆண்டாண்டு தோறும் உலகளாவிய ரீதியில் சிறுவர், அன்னையர், தந்தையர், ஆசிரியர் முதியோர் முதலானோர் சார்ந்தும் போதை ஒழிப்பு, சமாதானம் முதலியன சார்ந்தும், சர்வதேச தினங்கள் கொண்டாடப் பட்டு வருவது அனைவரும் அறிந்ததே. எனினும், அவை பற்றிய கவனயீர்ப்பு போதியளவு நடைபெறுவதில்லை. வாசிப்புத் தினம் வாசிப்பு மாதமாகக் கூடக் கொண்டாடப்பட்டு வருகின்றது. எனினும், அதுபற்றி எவரும் அதிகளவு பொருட்படுத்துவதில்லை. இத்தகைய அவப்பேறான நிலையில், இத்தியாதி விடயங்கள் சார்ந்த பாடல்கள் இத்தொகுதியில் இடம் பெற்றிருப்பது பாராட்டத் தக்கது.

மொழிப்பற்று, இனப்பற்று என்பன போன்று பிரதேசப் பற்றும் அவசியமானது. இதற்கும் முக்கியத்துவம் கொடுப்பவர் சிலரே. இத்தொகுப்பிலுள்ள " பாலமுனை" பற்றிய பாடலும் இவ்விதத்தில் கவனத்திற்குரியதாகின்றது.

வெளிப் பாட்டு முறையில், இம் மெல்லிசைப் பாடல்களின் தனித்துவங்களுள் முக்கியமானவை பேச்சு மொழி, பிரதேச வழக்காறு ஆகியவை இப்பாடல்களில் பயின்று வந்திருப்ப தாகும். இன்னிசையால் மட்டுமன்றி, இவ்விதத்திலும் பாரதியாரின் வார்த்தையில் கூறினால் ' இரண்டொரு வருஷத்து நூற் பழக்கமுள்ளவர்கள்' கூட இம்மெல்லிசைப் பாடல்களால் ஈர்க்கப்படுவ ரென்பதில் ஐயமில்லை.

இம் மெல்லிசைப் பாடல்களின் அழகியல் குறித்து விரிவஞ்சி எதுவும் கூறவில்லை. ஆயினும் முக்கியமான இரு விடயங்கள் பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். ஒன்று, இப் பாடல்கள் முகநூலில் காணொளி வடிவத்திலும் வெளியிடப்பட்டிருப்பது, மற்றொன்று, மெல்லிசை இன்னிசைப் பாடல் துறையிலும் கவிஞர் தனது திறமையை நிலை நாட்டியுள்ளமை.

# இணையத்தின் ஊடான துன்புறுத்தல்கள்

விரிவுபடுத்தப்பட்ட இன்றைய தொழில்நுட்பம் மூலம் மனிதர்கள் பல வகைகளில் பயனடைகின்றனர். கொவிட் தொற்றின் பின் நாட்டில் ஏற்பட்ட முடக்க நிலையில் இருந்து விடுபடுவதற்கு சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் தம்மை புதிய நிலைமைக்கு இசைவாக்க படுத்திக் கொண்டுள்ளனர். இன்று முழு மக்கள் தொகையை விட அதிகளவான தொலைபேசி இணைப்புக்கள் காணப்படுகின்றமைக்கு எமது இசைவாக்கமும் ஒரு காரணமாகும். இவ்வாறு இருக்க, சிறுவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளும் பாதிப்புக்களும் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே போகின்றன. இதற்கு இணையமும் ஒரு முக்கிய காரணம்.

இன்று ஒவ்வொருவருடைய கைகளிலும் தவழும் ஒரு சாதனம் தான் தொலைபேசி. விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலான மக்களே இதனைப் பாதுகாப்பாக பயன்படுத்த தெரிந்தவர்கள். இணையம் மற்றும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி கடந்த சில ஆண்டுகளில் சடுதியாக அதிகரித்துள்ளது. பல்வேறுபட்ட நவீன திறன் சாதனங்கள் நமது வேலைகளை இலகுவாக்கும் நோக்கத்தோடு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதில் புகைப்பட கருவி, கணனி, மணிக்கூடு, மின்சூழ் என்பன உள்ளடங்கலாக கிட்டத்தட்ட 89 க்கும் அதிகமான செயற்பாடுகள் ஒரு நவீன திறன் தொலைபேசியில் காணப்படுகின்றது.

நாம் அன்றாடம் வாசிக்கும் பத்திரிகையிலும் ஏனைய செய்திகளிலும் பல துயர சம்பவங்களை பார்த்து வருகின்றோம். அதிலும் சிறுவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் எண்ணிலடங்காதவை. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பல சிறுவர்கள் பல நேரங்களில் பாதிக்கப்படுகிறார்கள். சிறுவர்களை மையமாக வைத்து நடைபெறும் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோக சம்பவங்களில் நேரலை மூலம் நடைபெறும் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டல்கள் கவனிக்கப்பட வேண்டியவை. அதை பற்றிய பூரண விளக்கம் சிறுவர்களுக்கும் அவர்களை சுற்றி உள்ளவர்களுக்கும் தெளிவூட்டப்பட வேண்டும். ஏனெனில், எமது வாழ்வில் தொழில்நுட்பம் தவிர்க்க முடியாத ஒன்றாக மாறி விட்டது. எதிர்காலத்திலும் தொழில்நுட்பத்தின் பயன்பாடு விரிவாக்கமடைந்து கொண்டே போகும். இதன் மூலம் ஏற்படும் எதிர்மறை தாக்கங்களை எதிர்கொள்ளவும் தைரியமாக முகம்கொடுத்து சிறுவர்களுக்கு உகந்த பாதுகாப்பான சூழலை உருவாக்குவதற்கு இது பற்றிய அறிவு இன்றியமையாததாகும்.

இன்று வரைக்கும் வகைப்படுத்தப்பட்ட சிறுவர் பாலியல் சுரண்டல்களாக, சிறுவர்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்தல், சிறுவர்களை கடத்துதல், சிறுவர் பாலியல் துஷ்பிரயோக ஆவணங்கள், தேசிய மற்றும் சர்வதேச சுற்றுலாத்துறையில் சிறுவர்களை பாலயல் சுரண்டல்களுக்கு உட்படுத்துதல், சிறுவர்களை தொழிலாளர்களாக பயன்படுத்துதல், இளவயது/பால்ய விவாகம் மற்றும் நேரலையில் சிறுவர்களுக்கு இடம் பெறும் பாலியல் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம் போன்றவை காணப்படுகின்றன.

இதில் நேரலை ஊடான சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டல் என்பது தகவல் தொடர்பாடல்




தொழில்நுட்பம் மற்றும் இணையத்தை பயன்படுத்தி சிறுவர்களை பாலியல் சுரண்டலுக்கு உட்படுத்துதலாகும். உலக சனத்தொகையில் 4.62 பில்லியன் மக்கள் சமூக ஊடகத்தை மிக ஆர்வத்தோடு பாவிக்கின்றனர். இதில் 92.1 வீதமானோர் தங்களது தொலைபேசியினூடாக இணையத்தை அணுகுகின்றனர். 16 தொடக்கம் 64 வயதினர் சராசரியாக நாள் ஒன்றிற்கு 6 மணித்தியாலம் 59 நிமிடத்தை இணைய பாவனைக்காக ஒதுக்கியுள்ளனர் என்று ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இதில் 95.6 வீதமான மக்கள் செய்தி அனுப்புவதற்கும் அரட்டை அடிப்பதற்கும் பாவிப்பதோடு 95.2 வீதமானோர் சமூக இணைப்புக்களை மேம்படுத்துவதற்காக பாவிக்கின்றனர். இப் புள்ளி விபரங்கள் மூலம் இணையம் மனிதனோடு எந்தளவு ஒன்றித்து போய் உள்ளது என்பதை காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறு பாவிக்கும் மக்களில் பாலியல் துஷ்பிரயோக குற்றவாளிகளும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளானவர்களும் உள்ளடங்குவார்கள்.

அவை இவ்வாறிருக்க, 2019 தொடக்கம் 2021ஆம் ஆண்டு வரை Save the Children நிறுவனத்தால் இலங்கையில் நடத்தப்பட்ட ஆய்வில் 10 இல் 3 சிறுவர்கள் ஒருவித நேரலை வன்முறையை சந்தித்திருக்கின்றனர் என்று தெரிய வந்துள்ளது. சிறுவர்களை மையமாக வைத்து பல்வேறுபட்ட நேரலை தாக்குதல்கள் இடம்பெறுகின்றன. அதிலும் குறிப்பாக கவனிப்பாரின்றி கைவிடப்பட்ட, உடல், உள சமூக ரீதியில் புறக்கணிக்கப்பட்ட சிறுவர்களே அதிகளவில் இரையாகின்றனர். இன்றைய பொருளாதார நெருக்கடி இந் நிலைமையை மேலும் வலுப்படுத்தியுள்ளது. நேரலையில் இச் சுரண்டல்கள் பல்வேறுபட்ட விதங்களில் நடைபெறுகின்றது. இணையத்தில் உள்ள பாதுகாப்பு பொறிமுறையை முறையாக கையாள தெரியாமல் பலர் தமது வாழ்க்கையை குற்றவாளிகளுக்கு பணயமாகியுள்ளனர்.

இணையம் ஊடான துன்புறுத்தலும் இதில் ஒரு வகையே. இது சிறுவர்களை இலக்கு வைத்து சமூக வலைத்தளங்களில் தீங்கையும் சங்கடத்தையும் ஏற்படுத்தும் செயலாகும். இது பாதிக்கப்பட்டவரின் நண்பர்களாலோ, ஏனைய சிறுவர்களாலோ, அல்லது பெரியவர்களாலோ குறித்த நபரின் தனிப்பட்ட ஆவணத்தை பதிவேற்றுவது அல்லது பகிர்வது, தகவல் தளங்களில் நேரடியாக பலவீனமானவர்களை இலக்கு வைப்பது, அச்சுறுத்துவது போன்ற செயல்கள் மூலம் நடைபெறுகின்றது.

(21 ஆம் பக்கம் பார்க்க)



விவேதா குணரெட்னம்
திட்டஅலுவலர்
எங்குமுள்ள சிறுவர்களையும் சூழலையும்பாதுகாக்கும் அமைப்பு

## இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை

(கைத்தொழில் அமைச்சு)

**வெளிநிலை வளவாளர்களைப் பதிவுசெய்தல்**

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் பின்வரும் துறைகளில் நாடளாவிய ரீதியில் நடாத்தப்படும் தொழில்நுட்பப் பயிற்சித் திட்டங்களுக்கு வெளிநிலை வளவாளர்களைப் பதிவுசெய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

1) உணவு உற்பத்திகள் (பால் மற்றும் பால்சார்ந்த உற்பத்திகள், பலசரக்குகள், மீன் மற்றும் மாமிசம், மரக்கறி, வெதுப்பக உற்பத்திகள், தெங்கு சார்ந்த உற்பத்திகள், தின் பண்டங்கள், தானியம் சார்ந்த உற்பத்திகள், சிற்றுண்டிகள்)
2) இரசாயனப் பதார்த்தங்கள் சார்ந்த உற்பத்திகள் (வர்ணப்பூச்சுக்கள் ஒட்டும்பசை வகை, பெயின்ட், திரி சாயம், மிதிஸ், திண்ணர், டேர்பன்டைன், பெட்டரி அசிட், வார்னிஷ் / புளோர் பொலிஷ், சப்பாத்து பொலிஷ், அழகுக்கலை பொருட்கள், மெழுகுவர்த்தி, சந்தனக் குச்சு, நுளம்புச் சுருள் முதலியன)
3) தேங்காய் எண்ணெய், தூய தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், நறுமணத் தைலம் முதலிய உற்பத்திகள்.
4) தும்பு சார்ந்த உற்பத்திகள், வாழை நார் முதலிய தாவர நார்களின் உற்பத்தி.
5) சவர்க்காரம் மற்றும் அழுக்கு நீக்கும் சலவைத் தூள்.
6) கட்டிடப் பொருளகளும் கனிப்பொருட்கள் சார்ந்த உற்பத்திகளும்.
7) பொதியிடலும் லேபலிடலும்.
8) தோல்பொருட்களும் பாதணிகளும்.
9) பிளாஸ்டிக், பொலிமர் மற்றும் இறப்பர் உற்பத்திகள்.
10) தொழில்முயற்சியாண்மை.
11) சந்தைப்படுத்தல்.
12) விலங்குத் தீனிகள் உற்பத்தி.
13) புத்தகம் கட்டுதலும் அப்பியாசக் கொப்பிகள் உற்பத்தியும்.
14) மரபலகை மற்றும் மூங்கில் சார்ந்த கைத்தொழில்கள்.
15) கழிவுப்பொருள் முகாமைத்துவம்.
16) பொறியியல் திட்டமிடல் மற்றும் இயந்திர சாதனங்களின் உற்பத்தி.
17) இலகு பொறியியல் உற்பத்திகளின் கிரயக் கணக்கெடுப்பு, நியம நடவடிக்கைமுறைசார்ந்த வழிகாட்டிகள் (SOP), மின்சார மோட்டார் வாகனங்கள் ஒன்றுகூட்டுதலும் உற்பத்தியும்.
18) கணினித் துணை திட்டமிடலும் உற்பத்தியும், கணினி எண்சார் கட்டுப்பாடு (CNC), பாவனை மூலம் துளை மற்றும் Mould தயாரிப்பு.
19) கைத்தொழில் செயன்முறை தன்னியக்கம், கட்டிட முகாமைத்துவ முறைமை (BMS) மற்றும் உகப்பாக்கல் (Optimisation)
20) உலோகம் சார்ந்த துறைகளைத் தெரிவுசெய்தலும் பரிசீத்தலும்.
21) கைத்தொழில்சார் மின் உலோக முலாமிடல் (நாகம், நிக்கல் மற்றும் குரோமியம்)
22) கைத்தொழில் சக்தி கழிவுப்பொருள் முகாமைத்துவம், வள வினைத்திறன் மற்றும் மின் சார்ந்த சேவைகள்.
23) பொறியியல் பட்டறைகளின் பிரயோகங்களில் தொழில்சார் சுகாதாரமும் பாதுகாப்பும்.
24) சேதன மற்றும் இரசாயன உர உற்பத்தி.
25) பீடை கொல்லிகள் மற்றும் களைக் கொல்லிகளின் உற்பத்தி.
26) செரமிக், போசிலின், சிலப்பு பட்டாண்டங்களின் உற்பத்தி.
27) உணவுப் பாதுகாப்பு
28) உயிர் வாயு உற்பத்தி மற்றும் மின் சக்தி உருவாக்கம்.
29) தகவல் தொழில்நுட்பம்
30) தரப்படுத்தலும் சான்றிதழ்கள் வழங்கலும்
31) மூலிகை சார்ந்த உற்பத்திகள் மற்றும் ஆயுர்வேத உற்பத்திகள்
32) அத்தியவசிய மூலிகை எண்ணெய்கள்

இதற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரரின் முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், பிறந்த திகதி, கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள், அனுபவம் என்பவற்றை உள்ளடக்கி சுயமாகத் தயாரித்த விண்ணப்பப் படிவமொன்றை பின்வரும் முகவரிக்கு 2022 டிசம்பர் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு www.idb.gov.lk என்ற இணையத்தளத்தில் சஞ்சரிக்கவும். பிரயோக மற்றும் கோட்பாட்டு ரீதியான அறிவை வழங்கக்கூடிய அனுபவமுள்ள விண்ணப்பதாரிகளாக இருத்தல் வேண்டும். கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் **"வெளிநிலை வளவாளர் விண்ணப்பம்"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

பணிப்பாளர் - தொழில்நுட்ப சேவைகள்,
இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை,
இல.615, காலி வீதி, கட்டு பெத்த,
மொறட்டுவை,

**தவிசாளர்,**
**இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை**

| | | |
|---|---|---|
| தொலைபேசி இல | : | 011 2605278 |
| தொலைநகல் இல | : | 011 2623846 |
| மின்னஞ்சல் | : | tsdidb@gmail.com |
| இணையத்தளம் | : | www.idb.gov.lk |
| துரித அழைப்பு | : | 1995 |

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

### SUPPLYING AND FIXING OF ROLLER SHUTTER DOORS FOR PROPOSED MAIN STORES BUILDING AT PORT OF COLOMBO

**Supplying and fixing of Roller Shutter Doors for proposed main stores building at Port of Colombo (Contract No.: EW/SW/12/2022/01)** என்பதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் தலைவரின் சார்பாக இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

1. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்கானது.
   (அ) 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழொன்றுடன் பதிவானது மேற்கூறப்பட்டுள்ள சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்படுகின்றது.
2. விலைமனுப்பிணைத் தொகையானது 50,000 ரூபாவென்பதுடன் விலைமனுப்பிணையானது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.
3. 2022.12.19 ஆம் திகதியிலிருந்து 2022.12.28 ஆம் திகதி வரையும் (இரு நாட்களும் அடங்கலானது) வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 2 மணிக்குமிடையில் பெசேவ அடங்கலாக மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 3,500 ரூபாவை செலுத்திய பின்னர், கொழும்பு-01, லெய்டன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, சிவில் பொறியியல் பிரிவின் பிரதான பொறியியலாளரினால் விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும். அதே அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
4. விலைமனுக்கோரல் ஆவணங்கள் பாதுகாப்பான முத்திரையிடப்பட்ட தபாலுறையொன்றில் அடக்கப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் **"Supplying and fixing of Roller Shutter doors for proposed main stores building at Port of Colombo (Contract No.: EW/SW/12/2022/01)"** என குறிப்பிடப்பட்டு பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு, இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, பிரதான பொறியியலாளர் (சிவில்) மே/பா., சிவில் பொறியியல் பிரிவு, இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலேயுள்ள முகவரியிலுள்ள பிரதான பொறியியலாளரின் (சிவில்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
5. விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2022.12.29 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் விலைமனுக்களை அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேள்வியை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
6. எந்தவொரு மேலதிக விபரங்களும் மேலேயுள்ள முகவரியிலுள்ள பிரதான பொறியியலாளரிடமிருந்த (சிவில்) பெற்றுக் கொள்ளலாம் (தொலைபேசி: 011-2483446).

**தலைவர்,**
**பெறுகைக் குழு (இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை),**
**பிரதான பொறியியலாளர் (சிவில்) மே/பா,,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல.: 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

திகதி 15.12.2022 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4970 — ரூ. 12,295,990.00 — ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 5 3 5 8 4 1 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 1425 — ரூ. 3,098,000.00 — வெற்றி இலக்கங்கள் 4 0 7 6 8 8 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,064,324.40

தன நிதானய — தஹஸ் கவ்வ விசேட சீட்டிழுப்பு — சீட்டிழுப்பு இலக்கம் 1000 — T 05 41 46 52 — ரூ. 20,273,080.00 — 43620
0193173 0240737 0967405
0095705 0393127 0154560
0459898 0382218 0870195 0470575
0277493 0801021 0242364
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 137,613,594.80 — 0474010 0501955

ராசி சுப பலன் — சீட்டிழுப்பு இலக்கம்: 279 — ரூ. 9,299,380.00 — சிம்மம் 06 13 14 35 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,503,945.80

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3212 — ரூ. 5,021,220.00 — M 19 25 26 37 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,935,320.80

Mega POWER மெகா பவர் 28+ — சீட்டிழுப்பு இலக்கம் 1318 — ரூ. 3,459,800.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 286,701,406.00 — H 11 14 18 20 30 — ரூ. 10,000,000.00 — ரூ. 10,000,000.00
National Lotteries Board

The Housewives' companion
Classifieds on
Daily News

## இலங்கை, காங்கேசன்துறை துறைமுகத்தில் பயணிகள் முனையம் ஒன்றின் நிர்மாணம் மற்றும் இயக்கம் என்பவற்றுக்கு ஒரு முதலீட்டாளரைத் தெரிவு செய்வதற்கு

## முன்மொழிவுகளுக்கான வேண்டுகோள்

1. காங்கேசன்துறை (KKS) துறைமுகத்திலிருந்து ஏனைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இடங்களுக்கு/ இடங்களிலிருந்து ஒப்பந்தங்களின் அடிப்படையில் ஒப்பந்தம் செய்யப்பட்ட நடத்துநர் மற்றும் ஏனைய நடத்துநர்கள் மூலம் படகுச் சேவையை தொடங்க இலங்கை அரசு முடிவு செய்துள்ளது. இதைக் கருத்திற் கொண்டு, காங்கேசன்துறை துறைமுகத்தில் பயணிகளைக் கையாளும் வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன. இதன் பிரகாரம் பயணிகள் முனையத்தை வடிவமைத்தல், நிர்மாணித்தல், நிதியளித்தல், இயக்குதல் மற்றும் இடமாற்றம் செய்வதற்கான முதலீட்டாளரைத் தேர்ந்தெடுப்பதற்கான முன்மொழிவுகளுக்கான கோரிக்கையை (RFP) அழைக்க அமைச்சர்கள் அமைச்சரவை முடிவு செய்துள்ளது. முதலீட்டாளர் காங்கேசன்துறையில் ஒழுங்குமுறை மற்றும் பிற தொடர்புடைய சேவைகளுக்கான பயணிகள் முனைய வசதியை நிறுவுதல் வேண்டும். போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறை மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
2. துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தைக் குழுவின் (CANC) தலைவர் இதன் மூலம் ஒரு குறிப்பிட்ட கட்டணத்தில் பொதுவான பயன்படுத்துநர் (User) அடிப்படையில் பயணிகள் முனையம் ஒன்றின் நிர்மாணம் மற்றும் இயக்கம் என்பவற்றுக்கு முதலீட்டாளரைத் தேர்ந்தெடுப்பதற்காக ஆர்வமுள்ள முதலீட்டாளர்களிடமிருந்து முன்மொழிவுகளுக்கான கோரிக்கைகளை (RFP) அழைக்கிறது. இயக்குநருக்கு படகு சேவையை இயக்கவும் உரிமை உண்டு.
3. வளமுள்ள விலைமனுதாரர்கள் பின்வருவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   அ. கடந்த ஏழு வருடங்களில் 2014 முதல் தற்போது வரையிலான மூன்று ஆண்டுகளில் இதேபோன்ற வியாபாரத்தைக் கையாண்டுள்ளமை
   ஆ. கடந்த மூன்று ஆண்டுகளில் குறைந்தபட்ச நிகர மதிப்பு US $ 500,000.
4. ஆர்வமுள்ள தரப்பினர் 2022-12-19ஆம் திகதி முதல் 2023-01-10ஆம் திகதி வரை அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை) கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் பிரதான பொறியியலாளர் (அபிவிருத்தி) அவர்களிடமிருந்து (தொலைபேசி + 94(0)11-243-2712, தொலைநகல் +94(0)11-232-3024) மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது முன்மொழிவுக்கான கோரிக்கை ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள தரப்பினர் 2022-12-19ஆம் திகதி முதல் 2023-01-10ஆம் திகதி வரையில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் கடிதத் தலைப்பில் எழுத்து மூலமான வேண்கோள் ஒன்றையும் மற்று மீளளிக்கப்படாத 10,000.00 இலங்கை ரூபாவை (பொருந்தக்கூடிய அனைத்து வரிகளையும் உள்ளடக்கி) செலுத்தி கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் பிரதான பொறியியலாளர் (அபிவிருத்தி) அலுவலகத்திலிருந்து முழுமையான முன்மொழிவுக்கான கோரிக்கை (RFP) ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. ஒவ்வொரு முன்மொழிவுகளுடனும் 4,000.00 US$ அல்லது 1.5 மில்லியன் தொகைக்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
7. இரண்டு கடித உறைகளில் உள்ளிட்ட முன்மொழிவுகளை தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு என முகவரியிட்டு செயலாளர், துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, இல. 19, சைத்திய வீதி, கொழும்பு, இலங்கை எனும் முகவரிக்கு 2023-01-17ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் ஒப்படைத்தல் வேண்டும். விலைமனுக்கள் முடிறுவுத்தப்பட்டவுடன் அதேயிடத்தில் தொழில்நுட்ப முன்மொழிவுகள் உடன் திறக்கப்படும்.
8. முன்மொழிவுகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பாக விலைமனுதாரருக்கு ஏற்படும் எந்தவொரு செலவு அல்லது செலவுகளுக்கு இலங்கை துறைமுக அதிகார சபையோ அல்லது துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமானச் சேவைகள் அமைச்சு பொறுப்பேற்காது.

**தலைவர்,**
**அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு (CANC),**
**துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமானச் சேவைகள் அமைச்சு,**
**19, சைத்திய வீதி,**
**கொழும்பு-01,**
**இலங்கை.**

Uva Wellassa University

## பெறுகை அறிவித்தல்

### பொதுப் பட்டமளிப்பு விழாவில் புகைப்படமெடுத்தல் மற்றும் வீடியோ பதிவு செய்தல் – 2021

**தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்வதில் அர்ப்பணிக்கின்றது**

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகமானது இளங்கலை, சிறப்பு, பெரு நிறுவன மற்றும் தொடர்ச்சியான கல்வி ஆகியவற்றில் தேசிய வளத் தளத்திற்கு மதிப்பை சேர்ப்பதில் கவனம் செலுத்துவதன் மூலம் புதிய போக்குகளை அமைத்து வருகிறது. பல்கலைக்கழகத்தின் கல்வித்திட்டங்கள், புதிய தலைமுறை பட்டதாரிகளை உருவாக்கும் திறனில் திறமையானவர்களை அவர்களது தொழில்தருநர்களுக்கு கொண்டுவரும் வகையில் கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இப் பாரிய தேசிய முயற்சியில் நீங்களும் பங்காளராகலாம்.

இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் "பொதுப்பட்டமளிப்பு - 2021" விழா 2023 ஜனவரி 27ஆம் திகதி ஹம்பாந்தோட்டை, மாகம் ருஹுனபுர சர்வதேச மாநாட்டு நிலையத்தில் (MRICC) நடைபெறவுள்ளது. எந்த பொது பட்டமளிப்பு விழாவிலும் புகைப்படமெடுத்தல் மற்றும் வீடியோ பதிவு செய்தலில் குறைந்தபட்சம் மூன்று நிகழ்வுகளில் திருப்திகரமான அனுபவத்தை கொண்டுள்ள நிறுவனங்களிலிருந்து இந்த நிகழ்வை புகைப்படம் எடுத்தல் மற்றும் வீடியோ பதிவு செய்தலுக்காக விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

இப்பல்கலைக்கழகத்தின் காசாளருக்கு ரூபா 1000.00 செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் பேரில் அல்லது இலங்கை வங்கியின் 3114820 எனும் கணக்கிலக்கத்திற்கு பணத்தை நேரடியாக வைப்புச் செய்வதன் மூலம் அத்துடன் பிரதி நிதியாளர் (வழங்கல்கள்) அவர்களுக்கு ஓர் எழுத்து மூல வேண்டுகோளைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2022.12.19ஆம் திகதி முதல் 2023.01.02ஆம் திகதி வரை மற்றும் 2023.01.03ஆம் திகதி வரையான வார நாட்களில் பி.ப. 12.30 மணி வரை கேள்விப் படிவங்களை கொள்வனவு செய்யலாம். விலைமனுதாரர் ஆவணங்களை http://www.uwu.ac.lk/procurement என்ற பல்கலைக்கழக இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விலைமனு ஆவணங்களை பதிவிறக்கம் செய்பவர்கள், கட்டணத்தை இலங்கை வங்கியின் எந்தக்கிளையிலும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் 3114820 எனும் கணக்கிலக்கத்திற்குச் செலுத்தலாம் அல்லது ஓர் மீளளிக்கப்படாத கட்டணமாக 1,000.00 ரூபாவிற்கு "ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின்" பெயரில் வரையப்பட்ட வங்கி வரைவுடன் பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். காசுப் பற்றுச்சீட்டு/ வைப்புச் சீட்டை விலைமனு ஆவணங்களுடன் இணைத்தல் வேண்டும். விலைமனுதாரர்கள் 2022.12.19ஆம் திகதி முதல் 2023.01.02ஆம் திகதி வரை அலுவலக நேரங்களில் இலவசமாக விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை 2023.01.03ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் "பதுளை, பஸ்ஸர வீதி, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், "பிரதி நிதியாளர்" (வழங்கல்கள்) என முகவரியிடப்பட்டு பதிவுத்தபாலில் அனுப்பலாம் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பொதுப்பட்டமளிப்பு புகைப்படம் எடுத்தல், வீடியோ பதிவு செய்தல் -2021" எனக் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் முடிவுறுத்தப்பட்டவுடன் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.

மேலதிக விபரங்களை பிரதி நிதியாளர் (வழங்கல்கள்) அவர்களிடமிருந்து 055-2226475 எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்,**
**பதுளை.**

DRIVER

கொழும்பில் அமைந்துள்ள நிறுவனத்திற்கு நன்கு அனுபவம் உள்ள வாகன சாரதி தேவை வயது 35 - 45 வரை போதை பழக்கம் அற்றவராக இருக்க வேண்டும் சம்பளம் 50,000/- முதல் வழங்கப்படும்.
உணவுக்கு 15,000/- ரூபாய் வழங்கப்படும்.
ஒரு மாதத்திற்கு தேநீர்க்கு தேவையான பொருட்கள் வழங்கப்படும்.
உங்கள் தேர்வுக்கு அடையாள அட்டை கிராம சேவகர் உறுதிப்பத்திரம் அவசியம் தேவை பொலிஸ் சான்றிதழ் இருப்பின் மேலதிக தகைமையாக கருதப்படும்.
**தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்**
**ரொஷான் - 076-5743935**

வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்

பல்கலைக்கழகக் கல்லூரிகளில் புதிய மாணவர்களைச் சேர்ப்பதற்காக கணினிமயமாக்கப்பட்ட தானியங்கி தரவு அமைப்பொன்றை அமைத்தல்

மேற்குறிப்பிடப்பட்டுள்ள சேவைக்காக நிதி மற்றும் தொழினுட்ப முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளதுடன்
அது தொடர்பான பத்திரிகை விளம்பரமானது

2022 டிசம்பர் 18 ஆம் திகதி
(Sunday observer) சண்டே ஒப்சேர்வர்
பத்திரிகையில் பிரசுரமாகவுள்ளது.

தொலைபேசி : 011-2630744
தொலைநகல் : 011-2630705

Best way to fulfil your Future Dreams
Marriage Proposals
in the
Sunday Observer

# பெறுகை அறிவித்தல்

## லங்கா சதொச லிமிடட் நிறுவனத்திற்கு பீடைக்கட்டுப்பாடு மற்றும் புகையூட்டல் செயற்பாட்டை வழங்கல்

விலைமனு இலக்கம் LSL/PRO/05/160/Pest Control & Fumigation/2022

**தேசிய போட்டிரீதியான விலைமனு கோரல்**

லங்கா சதொச லிமிடட் நிறுவனத்திற்கு பீடைக்கட்டுப்பாடு மற்றும் புகையூட்டல் செயற்பாட்டை வழங்க முடியுமான பொருத்தமான மற்றும் தகுதியுடைய நிறுவனங்களிடம் இருந்து **லங்கா சதொச லிமிடட் திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால்** முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விபரக்குறிப்புகள் மற்றும் தேவைகள் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளது.
கீழுள்ள அம்சங்கள் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

1. களஞ்சியம் மற்றும் விற்பனையகங்களில் பீடைக்கட்டுப்பாடு மற்றும் புகையூட்டல்.
2. களஞ்சியத்தில் புகையூட்டல்.
3. களஞ்சியம் மற்றும் விற்பனையகங்களில் கறையான் சிகிச்சை
4. விற்பனையகங்கள், களஞ்சியங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தில் பீடை மற்றும் எலி கட்டுப்பாட்டு செயற்பாடு.
5. விற்பனையகங்கள், களஞ்சியங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தில் துப்புரவேற்பாடு/ தொற்று நீக்கல்

ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்கள் மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட கடிதம் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலான (விலைமனு ஆவணத்தின் தொகுதி II பெற்றுக்கொள்ளல் வேண்டும்) குறித்த முன்மொழி கோரல் ஆவணத்தை, **ரூபா 3,000 (மீளளிக்கப்படாத) கட்டணம்** ஒன்றை செலுத்தி **2022 டிசம்பர் 19ஆம் திகதி தொடக்கம் 2023 ஜனவரி 10 ஆம் திகதி வரையான காலத்தில்,** இலக்கம் 27, சதொச பொதுச் செயலாளர் கட்டிடம், வொக்சோல் வீதி, கொழும்பு 02 இல் அமைந்துள்ள லங்கா சதொச தலைமை அலுவலகத்தின் பெறுகைப் பிரிவில் இருந்து (3ஆவது மாடி) பெற்றுக்கொள்ள வேண்டும் (விலைமனு ஆவணத்தின் தொகுதி I **www.lankasathosa.org** என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது).

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2023 **ஜனவரி மாதம் 03ஆம் திகதி** மு.ப. **11.00க்கு** மேலுள்ள முகவரியில்

சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் 2023 **ஜனவரி 10ஆம் திகதி வரை** மு.ப. 01.00க்கு **அல்லது அதற்கு முன்னர்,** மேலுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இல்லையேல் அந்த முகவரியில், பெறுகைப் பிரிவில் (3ஆவது மாடி) வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்பும் பெட்டிக்கு இடுவதற்கு வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"LSL/PRO/05/160/Pest Control & Fumigation/2022"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்கள் மூலமும் இலங்கைக்குள் செயற்படும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட **நிபந்தனையற்ற ரூபா 300,000.00 பெறுமதியான விலைமனு பிணை ஒன்றை (மீளளிக்கப்படும்)** விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்களை ஏற்பது **2023 ஜனவரி 10ஆம் திகதி** மு.ப. **01.00க்கு** முடிவுறுவதோடு விலைமனுக்களை திறப்பது, விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற உடன் விலைமனுதாரர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. **வெற்றிகரமான விலைமனுதாரர்களால் ஒப்பந்தப் பெறுமதியில் 5% தொகை செயல்திறன் பிணையாக (மீளளிக்கப்படும்)** செலுத்த வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.
சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி (திலினி) 070 1560428

கேள்விமனு/ ஒப்பந்தம் வழங்குவது தொடர்பான இறுதி முடிவு, **லங்கா சதொச லிமிடட் திணைக்கள பெறுகைக்குழுதலைவர் வசமானதாகும்.**

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**லங்கா சதொச லிமிடட், சதொச பொதுச் செயலகக் கட்டிடம்,**
**இல.27, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.**


மத்திய பஸ் நிலையத்திற்கு அருகில் (புறக்கோட்டை)
புறப்படுதல் இரவு 07.00 மணிக்கு

காலி வீதி ஊடாக

கதிர்காமம் பஸ் நிலையத்திலிருந்து
புறப்படுதல் முற்பகல் 9.15 மணிக்கு

# தினமின கதிர்காமம்

## கடுகதி பஸ் சேவை மீண்டும்




கொழும்பு - கதிர்காமம் பயணிகள் போக்குவரத்து பஸ் சேவை

பஸ் பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதற்கு
076 808 8056
076 808 8065

ஆசனங்களை ஒதுக்கிக் கொள்வதற்கு
011 2429673
047 2235291


துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு

இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை

## கொழும்புத் துறைமுகத்தில் புதிய சமையலறையொன்றை உருவாக்குவதற்கான ஆலோசனை சேவை

1. தகுதி வாய்ந்த நிறுவனங்கள் அல்லது கூட்டமைப்புகளிருந்து கொழும்புத் துறைமுகத்தில் புதிய சமையலறையொன்றை உருவாக்குவதற்கான ஆலோசனை சேவையை வழங்குவதற்கான முன்மொழிவுகளை இலங்கை துறைமுக அதிகாரசபையின் சார்பில், திணைக்கள ஆலோசனை பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கிறார்.
2. வளமுள்ள ஆலோசகர்கள் வர்த்தக சமையலறை / கட்டிடக் கலைஞர் / ஒரு நிர்மாண நிறுவனம் என்பவற்றின் வடிவமைப்பு அல்லது அபிவிருத்தி சார்ந்த ஆலோசகராக பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகவிருத்தல் வேண்டும் அத்துடன் குறைந்தபட்சம் 10 வருட காலம் தொடர்புடைய தொழிற்றுறையில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
3. 2022-12-20ஆம் திகதி முதல் 2023-02-23ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் வரிகள் உட்பட மீளளிக்கப்படாத 5,000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்புப் பிரிவு, பிரதான பொறியியலாளர் (ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு) அலுவலகத்திலிருந்து ஆலோசருக்கான அறிவுரைகள், ஒப்பந்த நிபந்தனைகள், விதிமுறைக் குறிப்புகள், தொழில்நுட்ப முன்மொழிவுகள் மற்றும் நிதியியல் முன்மொழிவுகளுக்கான படிவங்கள் என்பவற்றை உள்ளடக்கிய விலைமனு ஆவணங்கள் மற்றும் மாதிரிப் படிவங்களை பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

   **பிரதான பொறியியலாளர் (ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு),**
   **ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்புப் பிரிவு,**
   **இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை,**
   **45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு 1, இலங்கை.**
   **தொலைபேசி இல. : +94(0) 112483776**
   **தொலைநகல் இல. : +94(0) 112337046**
   **மின்னஞ்சல் முகவரி : romesh@slpa.lk**

   விலைமனுதாரர்கள் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் மற்றும் மேலதிக தகவல்கள் மற்றும் எழுத்துமூலமான தெளிவுபடுத்தல்களை மேற்கூறிய இதே முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.
4. கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபை, தொழில்நுட்ப நூலகத்தில் 2023-01-10ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டதைத் தொடர்ந்து தள விஜயம் இடம்பெறும்.
5. வளமுள்ள ஆலோசர்களால் ஒரு நிலை, இரட்டை கடித உறை முறையில் சமர்ப்பிக்கப்பட்ட தொழில்நுட்ப முன்மொழிவுகள் மற்றும் நிதியியல் முன்மொழிவுகளின் பிரகாரம் தரம் மற்றும் செலவு அடிப்படையிலான தேர்வு (QCBS) முறையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட முன்மொழிவுகளை ''கொழும்புத் துறைமுகத்தில் புதிய சமையலறையொன்றை உருவாக்குவதற்கான ஆலோசனை சேவையை வழங்குதல்'' எனக் குறிப்பிட்டு 2022-12-24ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையில் (ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்புப் பிரிவு) வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கலந்துகொள்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள ஆலோசகர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அனுபவம் மற்றும் தொழில்நுட்ப முன்மொழிவுகளைக் கொண்ட கடிதவுறை உடனடியாகத் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் முன்மொழிவுகள் நிராகரிக்கப்படும்.
7. ஆலோசகர்களுக்கு ஏற்படும் முன்மொழிவுகளைத் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பில் ஏற்படும் செலவுகள் மற்றும் கிரயம் மற்றும் தள விஜயம் தொடர்பான செலவுகள் மற்றும் கிரயம் தொடர்பான எவ்வித செலவுகளுக்கும் இலங்கைத் துறைமுக அதிகார சபை பொறுப்பு கூறாது.

**தலைவர்,**
**திணைக்கள ஆலோசனை பெறுகைக் குழு (CPCD),**
**இலங்கைத் துறைமுக அதிகாரசபை,**
**இல. 19, சைத்திய வீதி, கொழும்பு-01.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

இலங்கைத் துறைமுக அதிகார சபை

## திருகோணமலைத் துறைமுகத்தில் பொறியியல் வேலைத்தள கட்டிடத்தை நிர்மாணித்தல்

**(ஒப்பந்த இலக்கம் SLPA/CD/TRINCO/ESSB/01)**

1. துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளரின் சார்பில் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின பெறுகைக் குழுத் தலைவரினால் திருகோணமலைத் துறைமுகத்தில் பொறியியல் வேலைத்தளக் கட்டிட நிர்மாணத்திற்காக (ஒப்பந்த இலக்கம் SLPA/CD/TRINCO/ESSB/01) தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன. தேவையான முடிவுறுத்தல்கள் மற்றும் சேவைகள் சகிதம் மூன்று மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல் இந்த ஒப்பந்தத்தின் கீழ் உள்ள பிரதானமான வேலையை உள்ளடக்குகின்றது. மொத்தத் தரைப் பரப்பளவானது ஏறக்குறைய $1800m^2$ ஆகும்.
2. இந்த ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதிகள்:
   - கட்டிட நிர்மாணத்துறையில் விசேடத்துவமாக CIDA (முன்னர் ICTAD என அறியப்பட்டது) C3 அல்லது அதற்கு மேற்பட்ட தரப் பதிவைக் கொண்ட ஒப்பந்தக்காரராக விலைமனுதாரர் இருத்தல் வேண்டும்.
   - 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கம் 8ஆம் பிரிவின் கீழ் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்திருத்தல் வேண்டும். இதை இணைய தளத்தின் மூலம் விண்ணப்பிக்கும் விலைமனுதாரரால் நிகழ்நிலை (Online) மூலம் பெற்றுக்கொள்ளல் வேண்டும். eroc.drc.gov.lk
3. திருகோணமலை, சீனக்குடா, திருகோணமலை துறைமுகம், இலங்கைத் துறைமுக அதிகார சபையின் வதிவிட முகாமையாளர் அலுவலகத்தில் 2023-01-04ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும் என்பதுடன் அதனைத் தொடர்ந்து தள விஜயம் இடம்பெறும்.
4. மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 35,000.00 ரூபா (வரிகள் உட்பட) மற்றும் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு பிரிவின் பிரதான பொறியியலாளரினால் (ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு) 2022-12-19ஆம் திகதி முதல் 2023-01-16ஆம் திகதி வரையான வேலை நாட்களில் (இரு நாட்களும் உட்பட) மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்கள் விநியோகிக்கப்படும். இதே அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. விலைமனுக்கள் 120 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும்.
6. விலைமனுக்களை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கடித உறையில் இட்டு ''திருகோணமலைத் துறைமுகத்தில் பொறியியல் வேலைத்தளக் கட்டிட நிர்மாணத்திற்காக (ஒப்பந்த இலக்கம் SLPA/CD/TRINCO/ESSB/01)'' என கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் தலைவர், அமைச்சுப் பெறுகைக் குழு, துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, இல. 19, சைத்திய வீதி, கொழும்பு 01 எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது மேற்படி முகவரியிலுள்ள துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
7. சகல விலைமனுக்களுடனும் 3,900,000.00 ரூபாவுக்கான விலைமனு பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணை முறிகள் 2023-06-13ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
8. வேலைகளை நிறைவு செய்வதற்கான காலம் 420 நாட்களாகும்.
9. 2023-01-17ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இரு நகல்களில் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு விலைமனுக்கள் உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றனர்.
10. ஏதேனும் மேலதிக விபரங்களை பின்வரும் முகவரியில் பிரதான பொறியியலாளரிடமிருந்து (ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு) பெற்றுக்கொள்ளலாம் (தொலைபேசி இல. 011-2380517)

மேலுள்ள அனைத்தும் eroc.drc.gov.lk எனும் இணையதள நிகழ்நிலையில் (online) பிரசுரிக்கப்பட்டுள்ளன.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு,**
**இல. 19, சைத்திய வீதி, கொழும்பு-01.**

தொல்லியல் திணைக்களம்

## வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2023ஆம் வருடம்

தொல்லியல் திணைக்களத்தின் பிரதான அலுவலகம் மற்றும் பிரதேச அலுவலகங்களுக்கு பின்வரும் வழங்கல்களுக்காக பதிவுசெய்துகொள்ள விரும்பும் வழங்குநர்கள்/ உற்பத்தியாளர்கள்/ உள்நாட்டு முகவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. சுண்ணாம்பு
2. சுட்ட செங்கற்கள்
3. சகல அளவுகளிலுமான தரையோடுகள் (சுட்ட தரையோடுகள்)
4. உள்நாட்டு ஓடு வகைகள்
5. உள்நாட்டு மர வகைகள்

**நிபந்தனைகள்**

1. 2022-12-19ஆம் திகதி முதல் 2023-01-05ஆம் திகதி வரையில் வாரநாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் கொழும்பு பிரதான அலுவலகத்திலிருந்து அல்லது பின்வரும் பிரதேசங்களிலுள்ள அலுவலகங்களிலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக 2000.00 ரூபாவை ரொக்கப் பணமாகச் செலுத்தி விண்ணப்பப்படிவத்தை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் 2023-01-05ஆம் திகதியன்று பி.ப 2.00 மணியாகும்.
2. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களுடன் 2000.00 ரூபா பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் மூலப்பிரதி சகிதம் 2023-01-05ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில், தொல்லியல் பணிப்பாளர் நாயகம், தொல்லியல் திணைக்களம், சேர் மார்கஸ் பர்ணாந்து மாவத்தை, கொழும்பு 07 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது பின்வரும் பிரதேச அலுவலகங்களில் ஒப்படைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவுசெய்தல்'' எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.
3. உங்களது விண்ணப்பப்படிவத்துடன் வியாபார பதிவுச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும் என்பதுடன் எந்தவொரு விண்ணப்பப்படிவத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தன்னகத்தே கொண்டுள்ளார்.
4. பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே விலைகள் கோரப்படுமென்பதுடன் பதிவு செய்யப்படாத அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து அவசர வேளைகளில் விலைகளைக் கோரும் உரிமையை தொல்லியல் பணிப்பாளர் நாயகம் தன்னகத்தே கொண்டுள்ளார்.
5. நீங்கள் இதற்கு முன் அபகீர்த்தியாளர் பட்டியலில் உட்படுத்தப்பட்டிருத்தல் கூடாது.
6. விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளக்கூடிய இடங்கள்

| | | |
|---|---|---|
| 1. | பிரதான அலுவலகம், மார்கஸ் பர்ணாந்து மாவத்த, கொழும்பு 07 | 011-2694728 |
| 2. | பிரதேச அலுவலகம் (வடமத்திய), அநுராதபுரம் | 025-2222411 |
| 3. | பிரதேச அலுவலகம் (மத்திய), கண்டி | 081-2222336 |
| 4. | பிரதேச அலுவலகம் (வடமேல்), பண்டுவஸ்நுவர | 037-2220475 |
| 5. | பிரதேச அலுவலகம் (மேல்), கொழும்பு 07 | 011-2667377 |
| 6. | பிரதேச அலுவலகம் (தென்), காலி | 091-2234071 |
| 7. | பிரதேச அலுவலகம் (சப்ரகமுவ), அவிசாவளை | 036-2232674 |
| 8. | பிரதேச அலுவலகம் (கிழக்கு), அம்பாறை | 063-2222017 |
| 9. | பிரதேச அலுவலகம் (ஊவா), பதுளை | 055-2222637 |
| 10. | பிரதேச அலுவலகம் (வடக்கு), யாழ்ப்பாணம் | 021-2224574 |
| 11. | பிரதேச அலுவலகம் (வடக்கு), வவுனியா | 024-2224805 |
| 12. | பிரதேச அலுவலகம் (கிழக்கு), திருகோணமலை | 026-2221530 |
| 13. | பிரதேச அலுவலகம (ஊவா), மொனராகலை | 055-2277738 |
| 14. | பிரதேச அலுவலகம (தென்), ஹம்பாந்தோட்டை | 047-2256688 |
| 15. | பிரதேச அலுவலகம் (சப்ரகமுவ), இரத்தினபுரி | 045-2233737 |
| 16. | பிரதேச அலுவலகம (வடமத்தி), பொலன்னறுவை | 027-2050448 |

**தொல்லியல் பணிப்பாளர் நாயகம்,**
**தொல்லியல் திணைக்களம்,**
**மார்கஸ் பர்ணாந்து மாவத்த,**
**கொழும்பு 07**

## அராஜகத்தால் அலங்கோலமாகிய... (03 ஆம் பக்கத் தொடர்)

நான் 43 வருடங்களாக பல்கலைக்கழக சேவையில் ஈடுபட்டு வருகின்றேன்.

என் வாழ்நாளில் இவ்வாறானதொரு பயங்கரமான நாளை எதிர்கொண்டதில்லை. பல்கலை மாணவர் ஒருவர் கூட திட்டியதை நான் கேட்டதில்லை.

அன்றிரவு ஆதரவற்ற நிலையில் இருந்தோம். மிகவும் வன்மையான வார்த்தைகளால் மாணவர்கள் எம்மை திட்டினார்கள். நான் இருதய நோய்க்கான மருந்து எடுத்து வருகின்றேன்.

மனைவி அதை அவர்களிடம் கூறி தாக்க வேண்டாம் எனக் கெஞ்சினார். எனினும் அவர்கள் காதில் அது விழவே இல்லை. மனைவியின் தலைமுடியை பிடித்து இழுத்து தள்ளினார்கள். அப்போது பல்கலைக் கழகத்தின் பாதுகாப்புப் பிரிவில் இருவர் இருந்தனர்.

அவர்களின் பேச்சையும் கேட்கவில்லை. போதைப் பொருள் பயன்படுத்தியதால் தான் அவ்வாறு வெறிபிடித்தவர்களைப் போல் மாணவர்கள் நடந்திருக்க வேண்டும். நான் ஓய்வு பெறும் தறுவாயில் இப்படியானதொரு சம்பவம் நடந்தமைக்கு மனம் வருந்துகின்றேன். உடலில் ஏற்படும் வலிகளை விட மனதில் ஏற்படும் வலிதான் அதிகம். பல்கலைக்கழக பேராசிரியர்கள் தாக்கப்படுவது எதிர்காலத்துக்கு ஒரு ஆபத்தான அறிகுறியாகும். இவர்கள் மாணவர்கள் அல்ல. குற்றம் செய்தவர்கள்.

இவர்களே முழுப் பல்கலைக்கழகத்தையும் கட்டுப்படுத்துகின்றனர். எனவே பல்கலைக்கழகங்களில் சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என மிகவும் வருத்தத்துடன் அவர் தெரிவித்தார்.

பல்கலை நிர்வாகம் பேராசிரியரின் வீட்டை தாக்கிய நபர்களை அடையாளம் காணும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றது. பாதுகாப்பு கேமராக்கள், நேரில் கண்ட சாட்சிகளின் அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாணவர் சங்கங்களின் ஆதரவையும் பல்கலைக்கழக நிர்வாகம் கோரியுள்ளது. இச்சம்பவத்தில் நேரடியாக ஈடுபட்ட 12 மாணவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதற்கமைய பல்கலைக்கழக நிர்வாகத்தின் விசாரணை அதிகாரி பேராசிரியர் திலக் பண்டாரவினால் இந்த 12 மாணவர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர் அந்தஸ்து தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டுள்ளது. இது நிரந்தரமாக இரத்து செய்யப்படுவதற்கும் வாய்ப்புகள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குற்றம்சாட்டப்பட்ட 12 மாணவர்களில் 6 பேர் பல்கலைக்கழகத்தில் தமது மாணவர் அந்தஸ்து இரத்து செய்யப்பட்டதை தொடர்ந்து என்ன நடக்கும் என்பதை அறிந்து பொலிஸார் தம்மை கைதுசெய்வதற்கு முன்னர் சட்ட ஆலோசனைகளுடன் 13 ஆம் திகதி காலை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர். அதனைத்தொடர்ந்து அன்றைய தினம் பிற்பகல் தமக்கு பொலிஸ் எந்தவித தொந்தரவுகளும் செய்யக் கூடாது என்ற சட்ட பாதுகாப்புடன் பொலிஸில் மேலும் 4 பேர் சரணடைந்தனர்.

இவர்கள் 10 பேரிடமும் வாக்கு மூலம் பதிவுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு மாலை அடையாள அணிவகுப்புக்குட்படுத்தினர்.

அதுமட்டுமின்றி ஏனைய இருவரும் மாலை சரணடைந்தனர். தற்சமயம் 12 பேரும் நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக வீட்டுக்குள் பிரவேசித்தமை, உப பீடாதிபதி பேராசிரியர் அதுல சேனாரத்ன, அவர் குடும்பத்தினர் மீதான தாக்குதல், அச்சுறுத்தல், அரச சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தியமை போன்ற குற்றச்சாட்டுகள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது.

பேராசிரியர் தங்கியிருந்த உத்தியோகபூர்வ இல்லம் பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு சொந்தமான அரச சொத்து என்பதால் அதில் ஏற்பட்ட சேதம் ரூ. ஒரு இலட்சத்து 15 ஆயிரம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பேராதனை பல்கலைக்கழக பொது மாணவர் ஒன்றியம் ஊடக சந்திப்பொன்றை நடத்தியது. அதில் பேராசிரியர் அதுல சேனாரத்னவின் மகனே இச்சம்பவத்துக்கு ஆரம்ப காரணம்.

அவர் மதுபோதையில் காரை செலுத்தி பல்கலைக்கழக மாணவர்களின் மோட்டார் சைக்கிள்களை தாக்கியமையே மோதலுக்கு காரணமெனவும் அவரை கைவிலங்கிட்டு பொலிஸார் அழைத்துச் சென்றாலும் அவர் மீது சட்டம் பிரயோகிக்கப்படவில்லையெனவும் பொதுமாணவர் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

இந்த குற்றச்சாட்டுகள் காரணமாக பல்கலைக்கழக அமைப்பில் போதைப்பொருள் பாவனை தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக செயலணியொன்றை அமைக்க அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்ற அதேநேரம் பேராசிரியர் அதுல சேனாரத்னவின் மாணவர்கள் மீதான போதைப்பொருள் குற்றச்சாட்டு, பேராசிரியரின் மகன் தொடர்பான மாணவர் ஒன்றியத்தின் குற்றச்சாட்டு என்பவற்றை கருத்திற் கொண்டு கைதுசெய்யப்பட்ட 12 மாணவர்களிடமோ பேராசிரியரின் மகனிடமோ எந்தவித பரிசோதனைகளோ பொலிஸ் தரப்பிலிருந்து இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுஇவ்வாறிருக்க மாணவர் சங்கத்தின் தலைவர் இன்னும் தலைமறைவாக இருப்பது தனக்கு பெரும் பிரச்சினையாக இருப்பதாக பேராசிரியர் அதுல சேனாரத்ன பொலிஸாரிடம் மற்றுமொரு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அதுமட்டுமின்றி இந்த விசாரணைகளை பேராதனை பொலிஸாரிடம் ஒப்படைக்காது வேறு பொலிஸ் குழுவினரிடம் ஒப்படைக்குமாறும் பேராசிரியர் அதுல சேனாரத்ன கோரிக்கை விடுத்துள்ளார்.

இச்சம்பவத்துக்கு பல்வேறு தரப்பினரும் தமது கண்டனத்தை தெரிவித்துள்ளதுடன் பணிப்புறக்கணிப்புகளும் பேராதனை பல்கலைக் கழகத்தில் தொடர்ச்சியாக இடம் பெற்றுவருகின்றன.

ஏற்கனவே கொவிட் தொற்று, எரிபொருள் பற்றாக்குறை காரணமாக பாதிக்கப்பட்டிருந்த பல்கலைக்கழகக் கல்விச் செயற்பாடுகள் தற்போது வன்முறை, அராஜக சம்பவங்களினால் இன்னும் ஸ்தம்பிதமடைந்துள்ளது. எதுஎவ்வாறாயினும் நாட்டின் எதிர்காலக் கல்வி அபிவிருத்தியை கருத்திற் கொண்டு விசாரணைகள் துரிதகதியில் இடம்பெற்று பல்கலைக்கழக செயற்பாடுகள் வழமைக்கு திரும்ப வேண்டும்.


# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

## கல்வி அமைச்சு

| | |
|---|---|
| **கடனிலக்கம் மற்றும் தலைப்பு** | 3698/3699- SRI: விஞ்ஞானம் மற்றும் தொழிற்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம். |
| **ஒப்பந்த இலக்கம் மற்றும் தலைப்பு** | STHRD/CRG/R2/SB01-E06: இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீடத்திற்கு Particle Size Analyser with Zeta Potential ஐ வழங்கல் மற்றும் ஒப்படைத்தலுக்கான பெறுகை |
| **விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி** | 2023.01.11 ஆம் திகதியன்று உள்ளூர் நேரம் மதியம் 12.30 மணிக்கு |

1. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது நிதியமொன்றை ஆசிய அபிவிருத்தி வங்யிடமிருந்து 145 மில்லியன் அ.ஐ.டொ. இற்கு சமமான நிதியமொன்றை கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டத்திற்காக (STHRD செயற்றிட்டம்) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியலை அமுல்நடாத்துவதற்கான ஆகுசெலவிற்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் இந்த நிதியத்தின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலேயுள்ள ஒப்பந்தத்திற்காக செலவிட உத்தேசித்துள்ளது. விலைமனுக்கோரலில் தகுதியுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் வள நாடுகளின் விலைமனுதாரர்கள் பங்கு பெறலாம்.

STHRD/CRG/R2/SB01-E06: - இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீடத்தின் Particle Size Analyzer with Zeta Potential இன் வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் பெறுகைக்காக (''பண்டங்கள்'' என அழைக்கப்படுவது) தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக (''கொள்வனவுக்காரர் என அழைக்கப்படுவது'') விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கான செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரின் சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். இப்பெறுகையானது இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீடத்திற்கான Particle Size Analyzer with Zeta Potential இன் பெறுகையை அடக்குகின்றது. பூர்த்தி செய்யப்பட வேண்டிய காலப்பகுதியானது உடன்படிக்கையில் கையொப்பமிடும் திகதியிலிருந்து 12 வாரங்களாகும்.

1. விலைமனுதாரரானவர் இந்த விலைமனுக்கோரலில் பங்கு பெறுவதற்கு பின்வரும் முக்கிய தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று வருடங்களில் பிரதான வழங்குநராக சித்திகரமாக ஆகக்குறைந்தது இரு ஒப்பந்தங்களை பூர்த்தி செய்திருந்ததுடன் ஒவ்வொன்றின் பெறுமதியானது பின்வரும் அட்டவணையின் 2 ஆம் நிரலில் குறிப்பிட்டுள்ளவாறு தன்மை மற்றும் சிக்கல்தன்மையுடன் 6 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறு வழங்கலின் நோக்கம் இருத்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று வருடங்களில் பூர்த்தி செய்யப்பட்ட அல்லது நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஒப்பந்தங்களுக்காக பெற்றுக் கொண்ட மொத்த பணக்கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட பின்வரும் அட்டவணையின் 3 ஆம் நிரலின் ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வாகவிருத்தல்.

**இந்த விலைமனுக்கோரலில் பங்கு பெறுவதற்கான முக்கிய தகைமைகள்:**

| Column – 1 | Column – 2 | Column - 3 |
|---|---|---|
| **Lot Numbers and Description** | **Value of each Contract (LKR) Million** | **Value of average annual turnover (LKR) Million** |
| Particle Size Analyzer with Zeta Potential | 27.96 | 69.92 |

2. பகிரங்க போட்டிரீதியிலான விலைமனுக்கோரலானது ADB இன் பண்டங்களின் பெறுகை தனிக்கட்ட-ஒரு உறை நடைமுறையில் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கேரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளிலிருந்து அனைத்து விலைமனுதாரர்களும் பங்கு பெற்றலாம்.
3. மேலதிக தகவலைப் பெறவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும் விலைமனுதாரர்கள் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

**சிரேஷ்ட பெறுகை அலுவலர்**
**செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்**
**தொழில்நுட்பவியல் பீடம்**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்**
**பெலிஹுல்ஓய, இலங்கை.**
**ZIP code: 70140**
**தொலைபேசி: 045-2280081**
**மின்னஞ்சல்: sposb-sthrd@mohe.gov.lk**

- இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீடத்தின் சபை அறையில் விலைமனு முன்னோடிக் கூட்டமானது 2022.12.22 ஆம் திகதியன்று பி.ப. 3.30 மணிக்கும் ஒன்லையினிலும் நடைபெறும்.

ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பெறுவதற்காக, தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மேலேயுள்ள முகவரிக்கு **"STHRD/CRG/R2/SB01-E06– Procurement of Supply & Delivery of Particle Size Analyzer with Zeta Potential for the Faculty of Technology, Sabaragamuwa University of Sri Lanka"** இற்காக விலைமனுக்கோரல் ஆவணங்கள் தேவையென விண்ணப்பமொன்றை அனுப்பிய பின்னர், மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000 இலங்கை ரூபாவை (ஐந்தாயிரம் இலங்கை ரூபாவை)

STHRD செயற்றிட்டம், இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் பெலிஹுல்ஓய இலங்கை வங்கியிலுள்ள 0083695474 என்ற கணக்கிலக்கத்திற்கு (அனைத்து லொட்டுக்களுக்கும் ஒரு ஆவணம;) வரவு வைக்கப்படல் வேண்டும். 2022.12.19 ஆம் திகதியிலிருந்து வங்கி வரவுத் துண்டை மின்னஞ்சல் மூலமாக சமர்ப்பித்த பின்னரே ஆவணம்/ ஆவணங்கள் அனுப்பி வைக்கப்படும். இழப்பு அல்லது தாமதமான விநியோகத்திற்கு பொறுப்பு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

4. விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையொன்றுடன் 2023.01.11 ஆம் திகதியன்று மதியம் 12.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் உங்கள் விலைமனுக்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளர்,**
**செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை,**
**STHRD செயற்றிட்டம்,**
**தொழில்நுட்பவியல் பீடம்,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுல்ஓய, இலங்கை.**

- பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் %yg;gpujp kw;Wk; efy; gpujpnad அனுப்பப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது தனித்தனியாக அடக்கப்பட்டு முறையே ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்பட்ட உறைகளில் சேர்க்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவையிரண்டும் இன்னொரு தனியுறையொன்றில் சேர்க்கப்பட்டு உரித்தான ஒப்பந்த ID ஐ உறையின் இடது பக்க மேல் மூலையில் அடையாளமிடப்படல் வேண்டும்.

5. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரத்தின் பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் உடனடியாகவே திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுல்ஓய, இலங்கை.**
**ZIP code: 70140**

**திகதி: 18.12..2022**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

## கல்வி அமைச்சு

| | |
|---|---|
| **கடனிலக்கம் மற்றும் தலைப்பு** | 3698/3699- SRI: விஞ்ஞானம் மற்றும் தொழிற்நுட்பவியல் செயற்றிட்டம். |
| **ஒப்பந்த இலக்கம் மற்றும் தலைப்பு** | STHRD/SB-F02A: சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீட வாகன வேலைத்தளத்திற்கான தளபாடப் பெறுகை |
| **விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி** | 2023.01.11 ஆம் திகதியன்று உள்ளூர் நேரம் பி.ப. 1.30 மணிக்கு |

1. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது நிதியமொன்றை ஆசிய அபிவிருத்தி வங்யிடமிருந்து 145 மில்லியன் அ.ஐ.டொ. இற்கு சமமான நிதியமொன்றை கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டத்திற்காக (STHRD செயற்றிட்டம்) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியலை அமுல்நடாத்துவதற்கான ஆகுசெலவிற்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் இந்த நிதியத்தின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலேயுள்ள ஒப்பந்தத்திற்காக செலவிட உத்தேசித்துள்ளது. விலைமனுக்கோரலில் தகுதியுள்ள வள நாடுகளின் விலைமனுதாரர்கள் பங்கு பெற்றலாம்.
2. STHRD/SB/F02A - இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீடத்தின் வாகன வேலைத்தளத்திற்காக தளபாட பெறுகைக்காக (''பண்டங்கள்'' என அழைக்கப்படுவது) தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக (''கொள்வனவுக்காரர் என அழைக்கப்படுவது'') விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கான செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரின் சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். இப்பெறுகையானது இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீடத்திற்கான வாகன வேலைத்தளத்திற்கான தளபாட பெறுகையை அடக்குகின்றது. பூர்த்தி செய்யப்பட வேண்டிய காலப்பகுதியானது உடன்படிக்கையில் கையொப்பமிடும் திகதியிலிருந்து 12 வாரங்களாகும்.
3. விலைமனுதாரரானவர் இந்த விலைமனுக்கோரலில் பங்கு பெறுவதற்கு பின்வரும் முக்கிய தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று வருடங்களில் பிரதான வழங்குநராக சித்திகரமாக ஆகக்குறைந்தது இரு ஒப்பந்தங்களை பூர்த்தி செய்திருந்ததுடன் ஒவ்வொன்றின் பெறுமதியானது பின்வரும் அட்டவணையின் 2 ஆம் நிரலில் குறிப்பிட்டுள்ளவாறு தன்மை மற்றும் சிக்கல்தன்மையுடன் 6 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறு வழங்கலின் நோக்கம் இருத்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று வருடங்களில் பூர்த்தி செய்யப்பட்ட அல்லது நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஒப்பந்தங்களுக்காக பெற்றுக் கொண்ட மொத்த பணக்கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட பின்வரும் அட்டவணையின் 3 ஆம் நிரலின் ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வாகவிருத்தல்.

**இந்த விலைமனுக்கோரலில் பங்கு பெறுவதற்கான முக்கிய தகைமைகள்:**

| Column – 1 | Column – 2 | Column - 3 |
|---|---|---|
| **Lot numbers and description** | **Value of each contract (LKR) Million** | **Value of average annual turnover (LKR) Million** |
| Lot-1 Work Benches and Tables for Automobile Lab & Drawing Room | 9.07 | 22.68 |
| Lot-2 Lab Stools & Chairs for Automobile Lab & Drawing Room | 6.55 | `16.37 |
| Lot-3 – Storage Cabinets for Automobile Lab & Drawing Room | 3.66 | 9.14 |
| Lot-4 – White Boards and Projectors for Automobile Lab & Drawing Room | 1.63 | 4.08 |

4. பகிரங்க போட்டிரீதியிலான விலைமனுக்கோரலானது ADB இன் பண்டங்களின் பெறுகை தனிக்கட்ட-ஒரு உறை நடைமுறையில் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளிலிருந்து அனைத்து விலைமனுதாரர்களும் பங்கு பெறலாம்.
5. மேலதிக தகவலைப் பெறவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும் விலைமனுதாரர்கள் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

**சிரேஷ்ட பெறுகை அலுவலர்**
**செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்**
**தொழில்நுட்பவியல் பீடம்**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்**
**பெலிஹுல்ஓய, இலங்கை.**
**ZIP code: 70140**
**தொலைபேசி:** 045-2280081
**மின்னஞ்சல்: sposb-sthrd@mohe.gov.lk**

- இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீடத்தின் சபை அறையில் விலைமனு முன்னோடிக் கூட்டமானது 2022.12.23 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கும் ஒன்லையினிலும் நடைபெறும்.

6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பெறுவதற்காக, தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மேலேயுள்ள முகவரிக்கு **"STHRD/SB-F02A– Procurement of Furniture for Automobile Workshop for the Faculty of Technology, Sabaragamuwa University of Sri Lanka"** இற்காக விலைமனுக்கோரல் ஆவணங்கள் தேவையென விண்ணப்பமொன்றை அனுப்பிய பின்னர், மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000 இலங்கை ரூபாவை (ஐந்தாயிரம் இலங்கை ரூபாவை) ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி வரைவொன்றை பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் STHRD செயற்றிட்டம், இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் அல்லது பெலிஹுல் ஒய இலங்கை வங்கியிலுள்ள 0083695474 என்ற கணக்கிலக்கத்திற்கு (அனைத்து லொட்டுக்களுக்கும் ஒரு ஆவணம்) வரவு வைக்கப்படல் வேண்டும். 2022.12.19 ஆம் திகதியிலிருந்து வங்கி வரவுத் துண்டை மின்னஞ்சல் மூலமாக சமர்ப்பித்த பின்னரே ஆவணம்/ஆவணங்கள் அனுப்பி வைக்கப்படும். இழப்பு அல்லது தாமதமான விநியோகத்திற்கு பொறுப்பு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
7. விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையொன்றுடன் 2023.01.11 ஆம் திகதியன்று பி.ப. 1.30 இற்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் உங்கள் விலைமனுக்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளர்,**
**செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை,**
**STHRD செயற்றிட்டம்,**
**தொழில்நுட்பவியல் பீடம்,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழும்,**
**பெலிஹுல்ஓய, இலங்கை.**

- பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென அனுப்பப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது தனித்தனியாக அடக்கப்பட்டு முறையே ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்பட்ட உறைகளில் சேர்க்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவையிரண்டும் இன்னொரு தனியுறையொன்றில் சேர்க்கப்பட்டு உரித்தான ஒப்பந்த ID ஐ உறையின் இடது பக்க மேல் மூலையில் அடையாளமிடப்படல் வேண்டும்.

8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரத்தின் பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் சமுகத்தில் உடனடியாகவே திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுல்ஓய, இலங்கை.**
**ZIP code: 70140**

**திகதி: 18.12..2022**

# இலங்கைப் பாராளுமன்றம்

## துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்கு உதவியளிப்பதற்காக

# இளைஞர் பிரதிநிதிகளை தெரிவு செய்தல்

பாராளுமன்றத்தில் சகல அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பாராளுமன்ற உறுப்பினர்களது பங்கேற்புடன் பின்வரும் விடயங்களை உள்ளடக்கி, பதினேழு துறைசார் மேற்பார்வைக் குழுக்களை தாபிப்பதற்கு பாராளுமன்றம் அங்கீகாரமளித்துள்ளது.

(1) மத விவகாரங்கள் மற்றும் சகவாழ்வு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு
(2) நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு
(3) தேசிய பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு
(4) தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு
(5) சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு
(6) பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு
(7) பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினைத் தணித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு
(8) வலுச்சக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு
(9) உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு
(10) சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு
(11) கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு
(12) வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் உழைப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு
(13) நியாயமான, சட்டத்தை மதிக்கும் சமூகமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு
(14) சுகாதாரம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு
(15) சிறுவர்கள், பெண்கள் மற்றும் பாலினம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு
(16) ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு
(17) வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

2022.10.05 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட திருத்தப்பட்ட நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த குழுக்களினால் நடாத்தப்படும் ஒவ்வொரு விசாரணை தொடர்பிலும் குழுக்களிற்கு உதவியளிப்பதற்காக குழுவொன்றின் தவிசாளருக்கு தலா ஐந்து இளைஞர் பிரதிநிதிகளை அழைக்கமுடியும் என்பதுடன், பின்வரும் தகைமைகள் மற்றும் அனுபவங்களை கொண்டுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து அதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:-

இங்கு தரப்பட்டுள்ள பின்வரும் மாதிரிப் படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கல்விசார்/ தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவங்கள் பற்றிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2023 சனவரி மாதம் 09 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு "பாராளுமன்ற செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். கடித உரையின் இடதுபக்க மேல் மூலையில் "துறைசார் மேற்பார்வை குழுக்களிற்கான இளைஞர் பிரதிநிதிகளை தெரிவுசெய்தல்" என குறிப்பிடப்படுதல் வேண்டும். (இந்த தகவலை www.parliament.lkvd;w இணையத்தளத்தினூடாகவும் பெற்றுக்கொள்ளமுடியும்.)

1. **வயதெல்லை**
   விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
2. **கல்விசார் தகைமைகளும் அனுபவங்களும்**
   பின்வரும் (அ) மற்றும் (ஆ) பிரிவுகளின் கீழ் குறிப்பிடப்பட்ட கல்விசார் தகைமைகள் மற்றும் அனுபவங்களைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் இளைஞர் பிரதிநிதிகளாக துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு தெரிவுசெய்யப்படுவதற்காக விண்ணப்பிக்கலாம்:-
   (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழமொன்றிலிருந்து பட்டமொன்றினை பெற்றிருத்தல் அல்லது
   (ஆ) க.பொ.த.(உயர் தர) பரீட்சையில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்திபெற்றிருத்தல்
   விண்ணப்பதாரிகள் மேற்குறிப்பிடப்பட்ட குழுக்களின் விடயங்கள் பற்றிய போதிய அறிவு/ தொழில்சார் அனுபவம்/ தேர்ச்சிகளை பெற்றிருத்தல் வேண்டும்.
3. **தெரிவு செய்யும் முறைமை**
   விண்ணப்பதாரிகளினால் அனுப்பப்படும் விண்ணப்பங்களில் உள்ள தகைமைகள் மற்றும் விடயங்கள் குறித்து காட்டுகின்ற நிபுணத்துவத்திற்கு ஏற்ப ஒவ்வொரு குழுவினதும் நடவடிக்கைகளுக்காக அந்தந்த சந்தர்ப்பங்களில் சேவையாற்றுவதற்காக பொருத்தமான இளைஞர் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுவர்.
4. விண்ணப்பதாரிகளினால் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் (மூலப்பிரதிகள் அல்ல) தமது விண்ணப்பங்களுடன் இணைக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, மூலப்பிரதிகள் கோரப்படும் பட்சத்தில் அவை சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்:-
   (அ) பிறப்புச் சான்றிதழ்
   (ஆ) தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்று
   (இ) கல்வி தகைமைகளை உறுதிப்படுத்துகின்ற சான்றிதழ்கள்
   (ஈ) தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்துகின்ற சான்றிதழ்கள்
   (உ) அனுபவங்களை உறுதிப்படுத்துகின்ற சான்றிதழ்கள்
5. விண்ணப்பத்திலுள்ள ஏதேனும் தகவல்கள் பிழையானதாக கண்டறியப்படும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரி தகைமையற்றவராக கருதப்படுவதற்கு அது காரணமாக அமையும்.
6. மேலே குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இன்றி அனுப்பப்படும் விண்ணப்பங்களும் மாதிரிப்படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்**

**இலங்கைப் பாராளுமன்றம்,**
**ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே,**
**2022 டிசெம்பர் 18 ஆந் திகதி**

## இலங்கைப் பாராளுமன்றம்

## மாதிரிப் விண்ணப்பப் படிவம்

## ....................................பதவி

01. (அ) முதலெழுத்துகளுடன் பெயர்(தமிழில்) :
..........................................................................................
..........................................................................................
(ஆ) முதலெழுத்துகளினால் குறிப்பிடப்படும் பெயர்கள் (தமிழில்):
..........................................................................................
..........................................................................................
(இ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்துகளில்): (Mr./Mrs. /Miss)
..........................................................................................
..........................................................................................

02. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

03. (அ) தனிப்பட்ட முகவரி:
..........................................................................................
..........................................................................................
தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐
(ஆ) அலுவலக முகவரி:
..........................................................................................
..........................................................................................
தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐
(இ) உத்தியோகபூர்வ கடித பரிமாற்றத்திற்காக விரும்பப்படும் முகவரியை குறிப்பிடவும்.
தனிப்பட்ட ☐ ☐ அலுவலக

04. (அ) பிறந்த திகதி : வருடம்:..................மாதம்:..................திகதி:..................
(பிறப்புச் சான்றிதலின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)
(ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளன்று வயது :-
வருடங்கள்: ........................... மாதங்கள்:..................... நாட்கள்:..........................
05. விவாகமானவரா / விவாகமாகாதவரா என்பது : (விவாகமானவர்/ விவாகமாகாதவர்)
06. பால்நிலை : (ஆண்/ பெண்)
07. இலங்கைப் பிரசையா எனக் குறிப்பிடுக : ..........................................................(ஆம் / இல்லை)
08. கல்வி மற்றும் உயர் கல்வித் தகைமைகள்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)
09. தொழில்சார் தகைமைகள்:(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)
10. ஏனைய தகைமைகள்:(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)
11. அனுபவம் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| நிறுவனம் | பதவி | சேவைக் காலம் |
|---|---|---|
| | | |
| | | |

**12. தற்போதைய தொழில் குறித்த விபரங்கள்**
(அ) நிறுவனத்தின் பெயரும் முகவரியும்:..........................................................................
(ஆ) தற்போது வகிக்கும் பதவி: ..........................................................................
(இ) முதல் நியமனத் திகதி :..........................................................................
(ஈ) மாதாந்த அடிப்படைச் சம்பளம் :..........................................................................
(உ) கொடுப்பனவுகள் :..........................................................................
(ஊ) மொத்த சம்பளம்:..........................................................................
13. நீங்கள் ஏதாவது குற்றச்செயல் நடவடிக்கை தொடர்பில் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டவாரா ? (ஆம்/ இல்லை)
ஆமெனில், விபரங்களைக்குறிப்பிடவும்:
14. நீங்கள் அரசாங்கத்தின் கீழ் சேவைபுரிந்துள்ளீர்களா? (ஆம்/ இல்லை)
ஆமெனில், விபரங்களைக்குறிப்பிடவும்:

என்னால் இந்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு தரப்பட்ட ஏதாவது தகவல் பொய்யானது அல்லது தவறானது என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால்,அவை குழுவில் சேவையாற்றுவதற்கு நான் தகைமையற்றவர் எனவும் அல்லது தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் கண்டறியப்பட்டால், அவை குழுக்களில் சேவையாற்றுவதற்கு அழைக்கப்படாமல் இருப்பதற்கான காரணமாக அமையும் என்பதையும் நான் அறிவேன்.

திகதி :-.................................                ....................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

# விலைக்கேள்வி அறிவித்தல்

**Bid Reference: COL/DC/228/01/2016-Eqp**

**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**
**கொழும்பு, இலங்கை.**

புஸ்ஸல்லாவ சரஸ்வதி கல்லூரிக்கு உபகரணங்களை வழங்கல் மற்றும் ஒப்படைத்தலுக்காக புகழ் வாய்ந்த உற்பத்தியாளர்கள்/ விற்பனையாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்களை அழைக்கின்றது.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022 டிசம்பர் 19 ஆம் திகதியிலிருந்து 2023 சனவரி 18 ஆம் திகதி வரையும் https://hcicolombo.gov.in/ என்ற இந்திய உயர் ஸ்தானிகராலய இணையதளத்திலிருந்து விலைக்கேள்வி ஆவணத்தை பதிவிறக்கம் செய்யலாம்.

விலைமனு முன்னோடிக் கூட்டமானது 2022 டிசம்பர் 29 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு நடைபெறும். அனைத்து குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களுடனான முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதியானது 2023 சனவரி 18 ஆம் திகதியன்று மதியம் 12.30 மணியாகும். தொழில்நுட்ப விலைமனுக்கள் 2023 சனவரி 18ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

மேலதிக தெளிவுறுத்தல்களுக்காக 011-2395007/ 077-4611332 ஆகிய இலக்கங்களினூடாக தொடர்பு கொள்ளவும்.

# அறிவித்தல்

# இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட்

## கைத்தொழில் அமைச்சு

## கேள்வி இலக்கம் : LMS/SUP/DPC/19/2022

கைத்தொழில் அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் முழுமையாக அரசிற்கு சொந்தமான கம்பனியான இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட் நிறுவனத்திற்கு நடமாடும் இயந்திரசாலையை ஸ்தாபிப்பதற்காக திருகோணமலை மாவட்டத்தில், குச்சவெலி பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திற்குள் பொதுவ கட்டுகடற்கரைக்கு அருகில் கிட்டத்தட்ட ஒரு ஏக்கர் காணி தேவை.

நடமாடும் இயந்திரசாலையை ஸ்தாபிப்பதற்கு பொருத்தமான காணியை தேர்ந்தெடுப்பதற்கு குறித்த தகவுத் திறன்கள் (Terms of References - TOR) கீழ்க்காணுமாறு.

01. பொதுவகட்டு பாலத்திலிருந்து திரியாய சந்திக்கு இடையில் அமைந்துள்ள 42 KM - 43KM தூண் இற்கு இடையில் 42.60km எனும் இடத்தில் இருந்து (இவ் இடத்தை இலகுவாக அறிந்துகொள்வதற்கு ஏதுவாக குறிப்பொன்றை இடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்) இருப்பக்கமும், திருகோணமலை பக்கத்திற்கு 750m மற்றும் புல்மோட்டை பக்கத்திற்கு 750M இற்கு இடையில் அமைந்துள்ள. திருகோணமலை புல்மோட்டை பிரதான வீதிக்கு சமாந்தரமாக கடற்கரை வலயத்தில் 300M இற்குள் அமைந்த காணியாக இருத்தல் வேண்டும்.
02. கீழ்க்காணும் GPS வழிக்குள் அமைந்துள்ள அல்லது அதற்கு அருகிலான காணி எனில் மிகவும் பொருத்தமானது.
"531021.2E, 705838. 5N - 531116.3E, 705977.7N
531161.3E, 705944.3N - 531054.2E, 705809.5N"
03. குறித்த காணி குறைந்த பட்சம் ஒரு ஏக்கரையாவது கொண்ட காணியாக இருத்தல் வேண்டும்.
04. மின்சார இணைப்பு (மூன்று சுற்று மின்சாரம்) பெறக்கூடிய வசதி இருத்தல் வேண்டும்.
05. பிரதான வீதியில் இருந்து காணிக்கு பிரவேச வழி குறைந்தபட்சம் 15 அடியாக இருத்தல் வேண்டும்.
06. காணிக்கு அருகில் சனப்பெருக்கம் குறைந்த காணிக்கு முன்னுரிமை கிடைக்கும்.
07. நிரந்தர கட்டிடங்கள் காணி எனில் மிகவும் பொருத்தமானது.
08. சிக்கலற்ற உரித்துரிமை கொண்டகாணி அல்லது அரச நியாய பத்திரங்கள் தவிர்ந்த காணியாக இருத்தல் வேண்டும்.
09. குறித்த காணியை இலங்கை காணிப்பொருள் மணல் லிமிட்டட் இற்கு வழங்குவதற்கு காணியின் சட்ட ரீதியான உரிமையாளர் அல்லது மற்றும் உரிமை கொண்டவரின் எழுத்து மூல இணக்கப்பாட்டை வழங்குதல் வேண்டும்.
10. காணியின் விலையை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். (ஒரு பேர்ச் இன் விலை ரூ............/ முழுக்காணியின் விலை ரூ..............) அத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
    i. காணியுடன் சம்பந்தப்பட்ட உறுதியின் அல்லது சான்றுப்பத்திரத்தின் உறுதி செய்யப்பட்ட பிரதி, (உறுதியின் பிரதி உண்மைப்பிரதியென சட்டத்தரணி ஒருவரால் உறுதி செய்யப்பட்டு இருப்பதுடன் அரச காணி ஆயின் உண்மைப் பிரதியென குறித்த பிரதேச செயலாளரினால் உறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.)
    ii. வரைபடத்தின் உறுதி செய்யப்பட்ட பிரதி (உண்மைப் பிரதி என சட்டத்தரணி ஒருவரால் உறுதி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்)
    iii. உறுதிகளின் உறுதி செய்யப்பட்ட பிரதிகள் (30 வருட காலத்திற்கு அல்லது 30 வருடத்தை உள்ளடக்கும் கிட்டிய உறுதி வரை)
11. காணியொன்றை தேர்ந்தெடுக்கும் அல்லது தேர்ந்தெடுக்காது இருத்தல் பற்றிய இறுதித் தீர்மானம் கேள்விச் சபைக்கு உரியதுடன் அதனை கொள்வனவு செய்தல் அல்லது செய்யாதிருத்தல் பற்றிய இறுதித் தீர்மானம் நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு உரியது.
    இதற்காக ஆர்வம் காட்டுகின்ற தரப்பினர் குறித்த சகல ஆவணங்களினதும் உறுதி செய்த பிரதிகளை ஒரு கடித உறையிலும் (File Size), அதற்கான விலைமனுக்களை 9" x 4" அளவிலான சிறிய கடித உறையிலும் இட்டு குறித்த இரு கடித உறைகளையும் ஒரு உறையில் இட்டு கீழ்க்காணும் முகவரிக்கு 2023.01.02 மு.ப. 10.30 இற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது புல்மோட்டை இயந்திரசாலையில் இதற்காக நிறுவப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடலாம் 2023.01.02ம் திகதி மு.ப. 10.30 இற்கு கேள்விப் பெட்டியானது பொறியிடப்படுவதுடன் மு.ப. 10.30 இற்கு கேள்விகள், திறக்கப்படும் தாமதமாகக் கிடைக்கும் எந்தக் கேள்வியும் கவனத்தில் கொள்வதற்காக ஏற்கப்படமாட்டாது. விலைமனுக்கள் ஆவணங்கள் சமர்ப்பிக்கும் கடித உறையில் உள்ளடக்கப்பட்டு அனுப்பப்படும் கேள்விப் பத்திரங்கள், கேள்விகள் திறக்கப்படும் வேளையிலேயே நிராகரிக்கப்பட்ட கேள்வியாகக் கொள்ளப்படும் என்பதை அறிவிக்கிறேன்.
    இக் கேள்விப் பத்திரங்கள் மதிப்பிடல் இரு கட்டங்களாக மேற்கொள்ளப்படும்.

**முதலாம் கட்டத்தில்**

மேற்படி 1 முதல் 8 வரையான அடிப்படை தேவைப்பாடுகளுக்கு அதிகூடிய 70 புள்ளிகளும்.

(இந்த 70 புள்ளிகளில் பொறியியல் பொருத்தப்பாடு பற்றிய பரிந்துரைகளுக்கு அதிகூடிய 20 புள்ளிகள் உள்ளடக்கப்படும்) வழங்கப்படும் இந்த கட்டத்தில் 70 புள்ளிகளில் அதி கூடிய புள்ளிகள் பெற்றுக்கொள்ளும் 10 கேள்விப் பத்திரங்கள் மட்டும் இரண்டாம் கட்டத்தில் விலைமனு மதிப்பீட்டிற்காக கவனத்தில் கொள்ளப்படும்.

**இரண்டாம் கட்டத்தில்**

மேற்படி முதலாம் கட்டத்தில் அதிகூடிய 70 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் கேள்விதாரர்கள் 10 பேரினது விலைமனுக்கள் மாத்திரம் கடித உறைகள் திறக்கப்படுவதுடன் குறைந்தபட்ச விலைமனுக்களுக்காக அதிகூடிய 30 புள்ளிகளை வழங்குவதற்கு உற்பட்டு கேள்விப் பத்திரங்கள் மதிப்பீடு செய்யப்படும்.

இவ் 10 பேரை தேர்ந்தெடுத்ததன் பின்னர் ஏனைய விலைமனுக்கள் திறக்கப்படமாட்டாது.

மேற்படி 1 மற்றும் 2ம் கட்டத்தின் புள்ளிகள் கூட்டப்பட்டு அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் கேள்விதாரரின் காணி கொள்வனவு செய்யப்படும் எனவும். காணியொன்றை தேர்ந்தெடுத்தல் அல்லது இல்லாதிருத்தல் பற்றிய இறுதித் தீர்மானம் கேள்விச் சபைக்கு உரித்தாவதுடன் அதனை கொள்வனவு செய்தல் அல்லது செய்யாதிருத்தல் பற்றிய இறுதித் தீர்மானம் நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு உரியது.

இது பற்றிய மேலதிக தெளிவுபடுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்கு தேவைப்படின் கீழ்க்காணும் அதிகாரிகளை அழைக்குமாறு அறிவிக்கப்படுகின்றது.

**பிரதிப் பொது முகாமையாளர் (இயந்திரசாலை/ செயற்பாடுகள்) :-**
**தொ.பே. இலக்கம்** :- 026-2256131/32
**வழங்கல்கள் முகாமையாளர்** :- 011-2883951/52
**சட்ட அதிகாரி தொ.பே. இல.** :- 011-2883951/52

கேள்விகள் சமர்ப்பிக்கப்படும் கடித உறைகள் இரண்டிலும் இடது பக்க மேல் மூலையில் மேற்படி கேள்வி இலக்கம் மற்றும் கேள்விதாரரின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

கேள்வி விலைமனுக்களை சமர்ப்பிக்கும் மாதிரிப்பத்திரங்களை 2022.12.19 முதல் 2023.01.01 வரை மு.ப. 8.00 - பி.ப. 3.00 இற்கு இடையில் இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட் இன் புல் மோட்டையில் அமைந்துள்ள இயந்திர சாலையின் வழங்கல்கள் அதிகாரியிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் திறக்கப்படும் வேளையில் சகல கேள்விதாரர்களுக்கும் விண்ணப்பதாரிகளுக்கும் அல்லது கேள்விதாரரின் பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

கேள்விதாரர், பிரதிநிதியொருவரை சமர்ப்பிப்பதாயின் அவர்களுக்கு சமுகமளிப்பதாக கிராம அதிகாரி முன்னிலையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட கடிதமொன்றை ஒப்பமிட்டு, அவ்ஒப்பம், பெயர் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் கிராம அதிகாரியினால் மேல் ஒப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**கேள்விக் குழு,**
**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்.**
2022.12.18

## வீட்டிலிருந்து வெளியேறி ஒரு...

(04 ஆம் பக்கத் தொடர்)

பிரயன் தோமஸ் தினேஷ் ஷாப்டரிடமிருந்து 160 கோடி ரூபா பெற்றுக் கொண்டுள்ளதாகவும், அப்பணம் திருப்பி வழங்கப்படாததால் கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டதாகவும் கிறீஸ் பெரேரா பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். அந்த வழக்கில் தினேஷ் ஷாப்டர் வெற்றி பெற்றதாகவும், மற்றொரு வழக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் பிரயன் தோமஸ்க்கு எதிராகத் தொடரப்பட்டுள்ளதாகவும் கிறீஸ் பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார். கிறீஸ் பெரேராவினால் தெரிவிக்கப்பட்ட இவ்விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதற்கு பொலிஸார் தவறவில்லை. 134 மில்லியன் ரூபாய் மோசடி தொடர்பில் பிரயன் தோமஸ் சிறையில் அடைக்கப்பட்டிருந்ததையும், அது தொடர்பில் அவர் தற்போது இருப்பது கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள பிணையிலேயே என்பதையும் பொலிஸார் அறிந்து கொண்டனர்.

இந்த நிதி மோசடி தொடர்பில் அவருக்கு எதிரான முறைப்பாடு தினேஷ் ஷாப்டரினதாகும். அத்துடன் தினேஷ் ஷாப்டரினால் 2019ம் ஆண்டு மார்ச் 20ம் திகதி பிரயன் தோமஸ்க்கு எதிராக குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றையும் செய்துள்ளார். அந்த முறைப்பாடு 1.4 பில்லியன் ரூபாய் கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடையதாகும். இந்த கொடுக்கல் வாங்கலில் பிரயன் தோமஸ் இடைத்தரகராக மாத்திரமே தொடர்புபட்டிருந்துள்ளார்.

தினேஷ் ஷாப்டர் கொழும்பு தேசிய வைத்தியசாலை தீவிர சிகிச்சைப் பிரிவில் வாழ்வு மரணப் போராட்டத்தில் இருந்த வேளையிலேயே பொலிஸார் இவ்விடயங்கள் அனைத்தையும் தேடியுள்ளனர். சில மணிநேரம் மரணப் போராட்டத்தில் இருந்த தினேஷ் ஷாப்டர் பல மர்மங்களை விட்டு விட்டு இரவு 10.30 மணியளவில் இறுதி மூச்சை விட்டு உலக வாழ்வுக்கு விடை கொடுத்தார்.

அந்நேரம் இந்தக் குற்றச் செயல் தொடர்பான விடயங்கள் குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் திட்டமிடப்பட்ட குற்றங்கள் மற்றும் கொலை விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்தக் குற்றச் செயலானது அந்நேரமே நாட்டின் மேலிடம் வரைக்கும் சென்றிருந்ததால் அப்பிரிவின் அதிகாரிகள் நள்ளிரவு வேளையிலேயே பணியினை ஆரம்பித்திருந்தார்கள். இங்கு குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் கண்டறிந்து கொண்ட மிக முக்கியமான விடயம் என்னவென்றால், பொரளை மயானம் வரைக்கும் தினேஷ் ஷாப்டரை அழைத்து வந்துள்ளவர், அதன் அமைவிடம் தொடர்பில் நன்கு பரிச்சயமுள்ள ஒருவரே என்பதாகும். இல்லையென்றால் இவ்வாறான இடத்தில் காரை நிறுத்திவிட்டு இந்தக் குற்றச் செயலை அங்கிருந்து செய்திருக்க முடியாது.

பொரளை பொது மயான பூமியை இந்தக் குற்றச் செயலுக்காகத் தெரிவு செய்திருப்பது சில நேரம் கொலையாளிக்கு பாதுகாப்பான இடம் பொரளை பொது மயான பூமியே என்பது தெரிந்ததாலா, அல்லது கொலைகாரன் மயான பூமியுடன் தொடர்புபட்டுள்ளவர் என்பதனாலா என்பது குழப்பமான ஒன்றாகும்.

இந்தக் கொலையின் சந்தேகம் இப்போது ஏற்பட்டிருப்பது பிரயன் தோமஸ் மீதாகும். காரணம் தினேஷ் ஷாப்டர் வீட்டிலிருந்து வெளியேறிச் சென்றிருப்பது பிரயனைச் சந்திப்பதற்கே எனத் தெரிவிக்கப்படுவதனாலாகும். உண்மையிலேயே தினேஷ் வீட்டிலிருந்து வெளியேறியது பிரயனைச் சந்திப்பதற்காகவா? அல்லது வேறு எவரையாவது சந்திப்பதற்காகவா என்ற விடயத்தைத் தேடிப்பிடிக்கும் சவால் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் விசாரணை அதிகாரிகளுக்குள்ளது. இந்தக் குற்றச் செயல் யாரால் செய்யப்பட்டது என்ற விடயம் இக்கட்டுரை எழுதப்படும் 17ம் திகதி மாலை வரைக்கும் உறுதிப்படுத்தப்படவில்லை. என்றாலும் இவ்விடயம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பிரயனிடம் விசாரணைகளை மேற்கொள்ள மறக்கவில்லை. அதைத் தவிர தினேஷ் ஷாப்டரின் கைபேசி உள்ளிட்ட பல தொலைபேசி வலையமைப்புக்களையும் பரிசோதனைக்கு உட்படுத்தி பல்வேறு கோணங்களிலும் இந்தக் குற்றச் செயல் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகள் விரிந்து செல்கின்றது. இதில் தினேஷ் ஷாப்டர் பிளவர் வீதியில் அமைந்துள்ள வீட்டிலிருந்து வெளியேறியது முதல் அவர் பயணித்த வழிகளைப் பற்றியும் வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள சீசீடீவி கெமராக்களில் பதிவான காட்சிகளையும் பரிசோதித்திருப்பது அதன் ஊடாகவாவது முக்கியமான தகவல்கள் கிடைக்கலாம் என்ற எதிர்பார்ப்பிலாகும்.

இதன் போது பிரயனை நோக்கி சந்தேகத்தின் விரல் எல்லா இடங்களிலும் நீட்டப்பட்ட போதும் இந்தக் கொலையுடன் வேறு விடயங்களும் தொடர்புபட்டிருப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளன. எனவே குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தெளிவான மனதுடன் ஒவ்வொரு விடயங்களிலும் கவனம் செலுத்தி இந்த விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனிடையே கொழும்பு தெற்கு குற்றப் பிரிவின் விசாரணை அதிகாரிகளால் தினேஷ் ஷாப்டரின் காரும் முழுமையான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அதனுள்ளிலிருந்து நான்கு மயிர்க் கற்றைகள், சேர்வியட் பேப்பர் ஒன்றும், சாரதி ஆசனத்திலிருந்து ஒரு ஃபைபர் மாதிரியுடன் அவரைக் கட்டியிருந்த ப்ளாஸ்டிக் கேபல்கள் சிலவற்றையும் கைப்பற்றியுள்ளனர். இவை அனைத்தும் இரசாயன பகுப்பாய்வாளரிடம் டீ. என். ஏ பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட உள்ளன. இந்த மாதிரிகளிலிருந்து கொலையாளியைப் பற்றிய விஞ்ஞான ரீதியான சாட்சிகள் பலவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற எதிர்பார்ப்பிலாகும்.

## திராவிட மொடல்...

(04 ஆம் பக்கத் தொடர்)

கையெழுத்திடும் போது திகதி நேரத்தையும் போட வேண்டும் என பக்கத்தில் இருந்தவர்கள் கூறியதால்தான் அவர் நேரம் பார்த்தார் என்ற விளக்கம் முன்வைக்கப்படுகிறது.

இளம் வயதுடையவராக இருந்தாலும் படங்களை சொந்தமாக தயாரித்து வெளியிடும் மற்றும் ஏனைய திரைப்படங்களை வாங்கி வெளியிடும் 'ரெட் ஜயன்ட்' என்ற நிறுவனத்தை நடத்தி வருபவர் உதயநிதி, தமிழகத்தில் பதவிக்கு வரும் கட்சிகள் எப்போதுமே தமிழக திரைப்படத்துறையில் செல்வாக்கு செலுத்தவே செய்கின்றன. எழுபதுகளில் தன் மகன் மு.க.முத்துவை சினிமாவுக்குக் கொண்டுவர கலைஞர் முயற்சித்ததும் இந்த நோக்கத்துக்காகவே ரெட் ஜயன்ட் மூலம் தமிழ் சினமாவை தன் கைக்குள் வைத்திருக்கும் உதயநிதி சரியான தெரிவாகவே படுகிறது.

# மரம் முறிந்தலில் மூன்று குடியிருப்புகளுக்கு சேதம்

தலவாக்கலை குறூப் நிருபர்

தலவாக்கலை ஒலிரூட் மேற்பிரிவு தோட்டத்தில் பழைமையான மரம் ஒன்றை தோட்ட நிர்வாகமும் பொது மக்களும் இணைந்து வெட்ட முற்பட்டபோது அம் மரம் உடைந்து தோட்ட குடியிருப்புகளின் மீது விழுந்ததில் மூன்று வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

தோட்ட குடியிருப்புகளுக்கு பாரிய மரம் முறிந்து விழும் என்ற அச்சத்தாலே தோட்ட நிர்வாகமும், தோட்டத் தொழிலாளர்களும் அந்த மரத்தை வெட்டி அகற்ற நடவடிக்கை எடுத்திருந்தனர். அதற்கிணங்க நேற்று முன்தினம் மாலை குறித்த மரத்தை வெட்டிக் கொண்டிருந்தபோது மரம் உடைந்து தோட்ட குடியிருப்புகள் மீது விழுந்துள்ளது.

மரம் வெட்டும் போது தோட்ட குடியிருப்புகளில் இருந்த மக்கள் வெளியேற்றப்பட்டமையால் எவருக்கும் உயிர் ஆபத்து ஏதும் ஏற்படவில்லை, ஆனால் குடியிருப்புகள் மற்றும் அதிலிருந்த சொத்துக்களுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. அக்குடியிருப்புகளில் வசித்து வந்த நான்கு குடும்பங்களைச் சேர்ந்த 15 பேர் அத்தோட்ட வாசிகசாலை மண்டபத்தில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். சேதமடைந்த அனைத்தும் தோட்ட குடியிருப்புகளும் தோட்ட நிர்வாகத்தின் செலவில் புனரமைக்கப்பட்டு தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் என தோட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

# 51ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடும் NAITA




இளைஞர்களின் தொழில் சார்ந்த தொழிற் பயிற்சி மூலம் மேம்படுத்துவதன் மூலம், தொழில்துறைக்குத் தேவையான நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய திறமையான பணியாளர்களை உருவாக்கும் பொறுப்பில் உள்ள ஒரே அரசு நிறுவனமான தேசிய பயிலுநர் மற்றும் கைதொழிற் பயிற்சி அதிகாரசபை (NAITA) நிறுவனம், டிசம்பர் 16ஆம் திகதி தனது 51ஆவது ஆண்டை நிறைவை கொண்டாடியது.

மனித வள மேம்பாட்டின் ஊடாக இலங்கையின் செழுமைக்கு திறம்பட பங்களிக்கும் மிகவும் திறமையான பயிற்சி வழங்குனராக மாறுவதே NAITAவின் நோக்கமாகும். 51 ஆண்டுகால தொழிற்பயிற்சிப் பயிற்சியின் நீண்ட வரலாற்றைக் கொண்டு, NAITA தற்போது தொழில் பயிற்சித் துறைக்கு பல சேவைகளை வழங்குகிறது. உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தொழிலாளர் சந்தை மற்றும் நாட்டின் தேவைகள் குறித்து NAITA தொடர்ந்து விழிப்புடன் உள்ளது. அதன்படி, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கக்கூடிய இளைஞர்களை உருவாக்கும் சமூகப் பணி தொடர்கிறது. NAITAவினால் பயிற்றுவிக்கப்பட்ட பணியாளர்கள் சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் வல்லுநர்களாக மாறியுள்ளனர் மற்றும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெறுமதியான தொழில் வாய்ப்புகளைப் பெற முடிந்தது.

நாம் திறமைகளின் தசாப்தத்தில் இருக்கிறோம். திறன் பத்தாண்டு பயிற்சியின் மூலம் தொழில்நுட்ப வல்லுநரை உருவாக்குவதற்குப் பதிலாக ஒரு தொழில்முனைவோரை, ஒரு படைப்பாற்றல் தொழில்நுட்பவியலாளரை உருவாக்குவதே எங்கள் முக்கிய நோக்கமாகும்.

இந்த பெருமைமிக்க 51வது ஆண்டு நிறைவில், NAITAவில் உள்ள நாம் அனைவரும் நாட்டின் பணியாளர்களுக்கு செயலூக்கத்துடன் பங்களிக்கும் திறன் கொண்ட நல்ல இலங்கை இளைஞர்களை உருவாக்கும் சமூகப் பணியை வெற்றிகரமாக நிறைவேற்றும் ஒரு நோக்கத்துடன் செயல்படுகிறோம்.

51வது ஆண்டு விழாவையொட்டி, தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் தொடர்பாக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன்படி டிசம்பர் 16ஆம் திகதி இராஜகிரிய வெலிக்கடை ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை இலக்கம் 971 இல் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் இது தொடர்பான நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

# இணையத்தின் ஊடான...

(16 ஆம் பக்கத் தொடர்)

ஒருவரது தோற்றம், அறிவு, இனம் அல்லது பாலுணர்வு, பொருளாதார நிலை போன்ற எந்தவொரு காரணத்தையும் மையமாக வைத்து இழிவான கருத்துக்கள், இணைய வதந்திகள், பாலியல் குறிப்புக்கள் போன்றவற்றை பகிர்வதன் மூலமும் இது நடைபெறுகின்றது. இன்றைய காலத்தில் சிறுவர்கள் மையமாகப் பாவிக்கும் செயலிகளுள் WhatsApp உம் ஒன்றாகும். இதில் சக நண்பர்களின் அனுமதி அல்லாமல் அவர்களின் விரும்பத்தகாத புகைப்படங்களை குழுக்களில் பகிர்ந்து கேலி செய்து மகிழ்தல், அல்லது அவர்களது புகைப்படங்கள் அல்லது காணொளிகளை தமது முகநூலில் பதிவேற்றி அவமானப்படுத்தல் போன்ற இழிவான செயல்கள் இதற்கு எடுத்துக்காட்டாக அமையும். இவ்வாறு சமூக ஊடகங்களை பயன்படுத்தி ஒருவரின் சுயமதிப்பையும் அவரது கௌரவத்தையும் பாதிக்கும் வண்ணம் நடாத்தப்படும் செயல்கள் குற்றத்திற்குரியவை. இதன் மூலம் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மதுபாவனை மற்றும் போதைப்பொருட்களுக்கு அடிமையாவதோடு, சமூக வட்டத்தில் இருந்தும் பின் வாங்குகின்றனர். இதனால், அவர்களது கல்வி நடவடிக்கைகள் வீழ்ச்சி அடைவது மட்டுமல்லாமல் சிறுவர்கள் பாடசாலை இடை விலகல்களுக்கும் உள்ளாகின்றனர். இச் செயல்கள் அவர்களது சமூக நன்மதிப்பை சேதப்படுத்துவதால் இணைய வாழ்க்கையில் இருந்தும் நிஜ வாழ்க்கையில் இருந்தும் அவர்கள் பின்வாங்கி கொள்கின்றனர்.

# சனாதிபதி அலுவலகம்

## 2023ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2023ஆம் ஆண்டில் சனாதிபதி அலுவலக வாகனங்களின் திருத்த வேலைகள் மற்றும் அவை சார்ந்த பின்வரும் தொகுதிகளின் கீழ் வழங்குநர்களின் பதிவு மேற்கொள்ளப்படும்.

### ✦ தொகுதி இலக்கம் மற்றும் விபரம்

1. வாகன என்ஜின் திருத்த வேலைகள் உட்பட ஏனைய எந்திரவியல் வேலைகள், டீசல் பம்பிகளின் திருத்த வேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் மற்றும் பட்டறை வேலைகள்
2. வாகனங்களின் வளிச்சீராக்கிகளைப் புதுப்பித்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்
3. வாகன தகடு வேலைகள் மற்றும் வர்ணம் தீட்டுதல்
4. வானங்களின் குஷன் வேலைகள் மற்றும் அப்ஹொஸ்ட் வேலைகள்
5. வாகன சேர்விஸ்கள் மற்றும் உள்ளக சுத்திகரித்தல்
6. டயர் மற்றும் பெற்றிகளை வழங்கல்
7. கெசட் ரெகோடர்கள் ம்றறும் ரிவஸ் கெமராக்களை நிறுவுதல், புதுப்பித்தல்கள்
8. மின்னியல் தொகுதிகள், வாகன பாதுகாப்புத் தொகுதிகள் உட்பட வாகன மின் தொழில்நுட்பம்

### ✦ விதிகள் மற்றும் நிபந்தனைகள்

➢ தேவையெனின், வழங்குநர்கள் தொகுதி ஒன்றிற்காக அல்லது அதற்கு மேற்பட்ட தொகுதிகளிற்காகப் பதிவு செய்து கொள்ளலாம்.

1. தொகுதி ஒன்றிற்காக மீளளிக்கப்படாத ரூ. 1,000/- இற்கான பதிவுக் கட்டணத்தை 2022.12.19 முதல் 2023.01.04 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை சனாதிபதி அலவலக சிறாப்பரிடம் காசாகச் செலுத்துதல் வேண்டும். (காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)
2. மேலும், தேவையெனின் வழங்குநர்கள் பல தொகுதிகளிற்காகவும் பதிவு செய்து கொள்ளலாமென்பதுடன், ஒவ்வொரு தொகுதிக்குமாக ரூபா 1,000/- வீதம் மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அவற்றிற்காக தனித்தனியான பற்றுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
3. கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டுக்களைச் சமர்ப்பித்து 2022.12.19 முதல் 2023.01.04 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மாதிரி விண்ணப்பப் படிவங்களை சனாதிபதி அலுவலக பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2023.01.05 அன்று மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பிரதான கணக்காளர் (பெறுகை), சனாதிபதி அலுவலகம், காலிமுகத்திடல், கொழும்பு-01 என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.
4. விண்ணப்பங்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் **“வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2023 தொகுதி இலக்கம் .......................”** எனக் குறிப்பிடுதல் வேண்டும். (தொகுதி இலக்கம் மேற்கண்டவாறு குறிப்பிடப்படல் வேண்டும்.)
5. வழங்கல் நிறுவனமானது, சனாதிபதி அலுவலகத்திலிருந்து 15 கி.மீற்றர் இற்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
6. குறைந்த பட்சம் ஒரு மாத கால கடன் அடிப்படையில் பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு வழங்குநர்கள் உடன்படுதல் வேண்டும்.
7. விண்ணப்பமொன்று ஓருறையில் உள்ளிட்டு அனுப்பப்படல் வேண்டும்.
8. பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்களிடமிருந்து பண்டங்கள், வழங்கல்கள் மற்றும் சேவைகளிற்காக விலைமனுக்கள் கோரப்படினும் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தும் விலைமனுக்களை கோரும் உரிமை மற்றும் முன்னறிவித்தல் இன்றி பதிவுக்கான எந்தவொரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் உரிமை சனாதிபதியின் செயலாளருக்கு உரித்தாகும்.

➢ மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் இவ் அலுவலக தொலைபேசி இலக்கம் 0112354354 (3861) ஐ அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**அமைச்சின் பெறுகைக்குழு,**
**சனாதிபதி அலுவலகம்,**
**காலிமுகத்திடல்,**
**கொழும்பு-01.**
2022.12.18

# பதவி வெற்றிட அறிவித்தல்

## இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு

தேசத்தின் 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் கீழ் சுதந்திரமானதும் தன்னாட்சியுமுள்ள பல்துறை உட்கட்டமைப்பு ஒழுங்குபடுத்தல் முகவராண்மையே இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவாகும். 2009 ஆம் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டவாக்கத்துடன் இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவானது மின்சார கைத்தொழிலின் பொருளாதார, பாதுகாப்பான மற்றும் தொழில்நுட்ப ஒழுங்குபடுத்துபவராக மாற்றமடைந்துள்ளது.

இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிலுள்ள பின்வரும் பதவி நிலையை நிரப்புவதற்காக பொருத்தமான தகைமையுள்ள சுறுசுறுப்புள்ள மற்றும் பெறுபேறு நோக்கமுடைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

## முகாமைத்துவ உதவியாளர் - (01 பதவி)

**அ) தகைமைகள் மற்றும் அனுபவம்:**

- ஒரே அமர்வில் எந்தவொரு துறையிலும் க.பொ.த. (உ/த) பரீட்சையில் (சாதாரண பரீட்சை மற்றும் பொது ஆங்கில வினாத்தாள் நீங்கலானது) 03 பிரதான பாடங்களில் திறமைச் சித்திகளை பெற்றிருத்தல்.
- ஒரே அமர்வில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகியவற்றில் திறமைச் சித்திகள் அடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தி.
- நிகரான பதவியில் ஆகக் குறைந்தது மூன்று (03) வருட பட்டப்பின் தகைமைப் பட்ட அனுபவம்.

**ஆ) வயது:**

- 25 வயதிற்கு குறைவாகவிருத்தல்.

மேலேயுள்ள பதவிக்கு ஏற்புடைத்தான ஏனைய அனுகூல திட்டங்கள்:

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரியானவர் ஏனைய நியதிச்சட்ட அனுகூலங்களுடன் பரந்த மருத்துவ திட்டம், ஆதன கடன்களுக்கான வட்டியின் மீள்நிரப்பல், உயர் கல்வி மற்றும் ஆற்றல் கட்டியெழுப்பல் போன்ற விசாலமான அனுகூலங்களுக்கு உரித்தாவார்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் பொருத்தம், தகைமைகள் மற்றும் உரித்தான வேலை அனுபவத்தின் அடிப்படையில் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு நேர்முகப்பரீட்சையில் காட்சிப்படுத்தப்படும் தகைமைகள், உரித்தான அனுபவம் மற்றும் செயற்பாடு ஆகியனவற்றின் அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்படும். அனுபவம் மற்றும் தகைமைகளின் அடிப்படையில் அடிப்படைச் சம்பளமானது நிர்ணயிக்கப்படும்.

அறிமுகக் கடிதமொன்று விரிவான சுயதரவு, அண்மையிலெடுத்த நிழற்படம், தொடர்பான தகைமைகள்/அனுபவம் தொடர்பான சான்றுகள் மற்றும் வேறேதாவது விபரங்களுடன் இரு உறவினரல்லாத பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் தொடர்பு விபரங்கள் ஆகியவற்றுடன் அமைந்துள்ள விண்ணப்பங்களை 2023.01.01 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக எம்மை வந்தடையும் வகையில் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **“ Application for position of Management Assistant – PUCSL”** என தயவு செய்து அடையாளமிடப்படல் வேண்டும் அல்லது மின்னஞ்சலின் பாட வரிசையில் கொடுத்தல் வேண்டும் அல்லது மின்னஞ்சலின் விடய வரிசையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு**
**மாடி 06, இலங்கை வங்கி வர்த்தக கோபுரம்**
**இல:. 28, செயின்ற் மைக்கேல் பாதை,**
**கொழும்பு-03.**

**தொலைபேசி** : **(011)2392607/8**
**தொலைநகல்** : **(011)2392641**
**மின்னஞ்சல்** : **careers@pucsl.gov.lk**
**இணையதளம்** : **www.pucsl.gov.lk**

திகதி: 2022 டிசம்பர் 18 ஆம் திகதியன்று

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

**LITRO GAS**

**PROCUREMENT NOTICE FOR THE SUPPLY OF EMPTY LPG CYLINDERS WITHOUT VALVES FOR LITRO GAS LANKA LIMITED**
**PROCUREMENT No: LGLL/MKT/063/ICB/2022**

**INTERNATIONAL COMPETITIVE BIDDING (ICB)**

The Chairman Department Procurement Committee (DPC) on behalf of Litro Gas Lanka Limited invites sealed bids from eligible and qualified bidders for the “Supply of Empty LPG Cylinders Without Valves”.

To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and not have any conflicts of interest in the business of Litro Gas Lanka Limited or its associated companies. (further details are mentioned in the bid document).

The bidder shall have a valid permit from the Sri Lanka Standard Institute (SLSI) and a copy of the certificate should be produced when collecting the bid documents.

The Bidder shall furnish as part of its’ bid, a Bid Security in the form of a Bank Guarantee from a registered commercial bank operating in Sri Lanka. The bid security shall be valid up to 27th July 2023.

**A Pre - bid meeting will be held on 17th January 2023**. The bidders are required to register for the Pre - bid meeting by submitting their details to the following email address : Damith.Liyanage@litrogas.com.

| Lot Number | Description | Bid Security Amount in USD | Bid Security Amount in LKR | Cylinder Quantities |
|---|---|---|---|---|
| 01 | Cylinder Capacity 5 kg | 220.00 | 82,000.00 | 1,000 Nos. |
| 02 | Cylinder Capacity 12.5 kg | 3,000.00 | 1,120,000.00 | 10,000 Nos. |
| 03 | Cylinder Capacity 37.5 kg | 900.00 | 335,000.00 | 1,500 Nos. |

The bid document will be issued only to eligible prospective bidders on the payment of a non-refundable fee of **LKR 12,500/=** in the form of a pay order from a registered commercial bank in Sri Lanka on any working day (Mon-Fri) between 9.30am – 3.00pm from **21st December 2022 up to 27th January 2023 (both days included)**.

The duly completed Tender Documents should be deposited in the Tender Box at the 03rd Floor of the Litro Gas Lanka Limited Head Office, No 267, Union Place, Colombo 02, Sri Lanka on or before **3:00pm on 30th January 2023. Opening of bids will be conducted soon after the bid closing at the 4th Floor auditorium of the above premises.**

The Chairman
Department Procurement Committee
Litro Gas Lanka Limited
267, Union Place
Colombo 02
Sri Lanka
T.P. - 011 2327714
Fax - 011 2327698

# பதவி வெற்றிடம்

## அனர்த்த முகாமைத்துவ நிலையம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பின்வரும் வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு தகைமையுடைய இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பணிப்பாளர் (விழிப்புணர்வூட்டல்) – HM-1-1 - 01 பதவி

**அ. வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்பதற்கான தகைமைகள் :**

**கல்வித் தகைமை :**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகமொன்றிலிருந்து கலை அல்லது வணிகம் அல்லது விஞ்ஞானம் அல்லது ஆகிய பாடத்துறையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இளமாணிப்பட்டத்துடன் குறிப்பிட்ட துறையில் பெற்றுக்கொள்ளப்பட்ட முதுவிஞ்ஞானமாணி / முதுகலைமாணி பட்டம்

**மற்றும்**

**அனுபவம் :**
அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க சபை அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் “முகாமைத்துவ மட்டத்திலான” (MM 1-1) பதவிக்கு நிகரான பதவியொன்றில் “இ” பந்தியின் விடயப்பரப்புக்கு ஏற்ப ஆகக்குறைந்தது பதினைந்து வருடகால (15) அனுபவத்துடனான மிகவும் சிறந்த சேவையினை ஆற்றியிருத்தல்.

**ஆ. உள்ளக விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்பதற்கான தகைமைகள் :**
(1) மேற்குறிப்பிட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான கல்வித் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

(2) அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முகாமைத்துவ சேவைகள் தொகுதியின் (MM 1-1) முதலாம் தரத்தைச் சேர்ந்த பதவியில் ஐந்து (05) வருடகால திருப்திகரமான சேவைக்காலத்தை கொண்டிருத்தல்.

**இ. பதவிக்கான பணிகள் :**
1. நிலையான திட்டம் மற்றும் வழிகாட்டல் திட்டத்துக்கு ஏற்ப விழிப்புணர்வூட்டல் பிரிவின் நடவடிக்கைகளை உபாயமார்க்கமாக திட்டமிடுதல்.
2. அனர்த்த முகாமைத்துவம் மற்றும் அனர்த்த தணிப்பு தொடர்பில் பாடசாலை மாணவர்கள், அரசாங்க ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் அறிவூட்டலை மேம்படுத்துதலும் இது பற்றிய ஆர்வத்தை அதிகரித்தலும்.
3. பல்கலைக்கழக பாடவிதானத்தில் அனர்த்த அபாய தணிப்பினை உள்ளீர்ப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுதலும் இதற்காக பட்டதாரிகளுக்கு வசதிப்படுத்துதலும் விழிப்புணர்வினை அதிகரித்தலும்.
4. கல்வி அமைச்சுடன் இணைந்து பாடசாலை பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் தொடர்பில் விழிப்புணர்வூட்டுதல்.
5. பயிற்சி மற்றும் குறுங்கால பாடநெறிகள் மூலம் தொழில்சார் குழுக்கள் மத்தியில் அனர்த்த முகாமைத்துவம் மற்றும் அனர்த்த அபாய தணிப்பு பற்றிய விழிப்புணர்வினை அதிகரித்தல்.
6. அரச / தனியார் நிறுவனங்களின் உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தலும் அரச நிறுவனங்களுக்கான பயிற்சி உபகரணங்களை வழங்குவதன் மூலம் குறிப்பிட்ட நிறுவனங்களின் அனர்த்த முகாமைத்துவ கொள்திறனை அதிகரித்தலும்.
7. தொடர்ச்சியான கல்வி விடயப்பரப்பில் அனர்த்த முகாமைத்துவத்தை உள்ளீர்ப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுதல்.
8. தேசிய அனர்த்த முகாமைத்துவ சபையின் கூட்டங்களை ஒருங்கிணைத்தல்.
9. அனர்த்த முகாமைத்துவம் மற்றும் அனர்த்த தணிப்பு குறித்து கொழும்பு தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களின் பணியாட்குழுவினரை பயிற்றுவித்தல்
10. தேவை ஏற்படும் பட்சத்தில் தேசிய மற்றும் சர்வதேச மாநாடுகளில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தை பிரதிநிதித்துவம் செய்தல்.
11. விழிப்புணர்வூட்டல் பிரிவின் வருடாந்த வரவு - செலவினை தயார் செய்தல், கருத்திட்ட தயாரிப்பு, பௌதீக மற்றும் நிதி தேர்ச்சியை மேற்பார்வை செய்தல்.
12. விழிப்புணர்வூட்டல் பிரிவின் பணியாட்குழுவினரின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் இதன் வழியாக குறிப்பிட்ட உத்தேச இலக்குகளை அடைவதற்கான அலுவலக சூழலை தயார் செய்தல்.
13. மேற்குறிப்பிட்ட கடமைகளுக்கு மேலதிகமாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் காலத்துக்குக் காலம் பொறுப்பளிக்கப்படும் இப்பதவிக்கு ஏற்புடைத்தான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் பிணைந்திருத்தல்.

**ஈ. சம்பள முறை :**
பதவிக்கான சம்பளக் கொடுப்பனவானது முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 2/2016 இற்கு ஏற்ப மேற்கொள்ளப்படும்.
HM 1-1 - 2016- ரூ.81,670-15x2,270-115,720.00. வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு, வாழ்க்கைத் தொழில் கொடுப்பனவு மற்றும் காலத்துக்குக் காலம் அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**ஏனைய வசதிகள் :**
2015.05.25 ஆந் திகதிய அரச தொழில்முயற்சி திணைக்களத்தின் PED 01/2015 இலக்க சுற்றறிக்கைக்கு ஏற்ப உத்தியோகபூர்வ வாகனம் / போக்குவரத்து கொடுப்பனவுடன் எரிபொருள் கொடுப்பனவும் மற்றும் 2022.01.18 ஆந் திகதிய 02/2022 இலக்கத்திற்கு ஏற்ப தொடர்பாடல் வசதிகளை வழங்குதல்.

**உ. வயது :**
35 வயதுக்கு குறையாதவராகவும் 50 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு இங்கு குறிப்பிடப்படும் ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.

**ஊ. நியமனத்தின் தன்மை :**
நிலையான, ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கு உரித்துடையவராவார்.
வெளிவாரி விண்ணப்பதாரிகள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படுமிடத்து, மூன்று (03) வருடகால நன்னடத்தைக் காலத்துக்கு உட்பட்டதாக நியமிக்கப்படுவார்.
உள் விண்ணப்பதாரர்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டால் ஒரு வருடம் செயல்படும் காலத்திற்கு உட்படுத்தப்படுவார்.

**எ. ஏனைய தேவைகள் :**
**சகல விண்ணப்பதாரிகளும்**
(1) இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
(2) பதவிக்கான பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகளை செவ்வனே நிறைவேற்றுவதற்கும் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும் தேவையான உடல்ரீதியான மற்றும் உளரீதியான இயலுமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
(3) நன்மதிப்புக்குரியவராகக் காணப்படுதல்.

**ஏ. விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைக்க வேண்டிய விதம் :**
விண்ணப்பப்படிவங்கள் www.dmc.gov.lk இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன், இதற்கமைய தயார் செய்யப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களை 2023.01.07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம், இலக்கம் 120/2, விந்யா மாவத்தை, கொழும்பு 07 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது மேல் மூலையில் பணிப்பாளர் (விழிப்புணர்வூட்டல்) எனவும் விண்ணப்பப்படிவத்தில் வெளிவாரி விண்ணப்பதாரியா, உள்ளக விண்ணப்பதாரியா எனவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
உள்ளக விண்ணப்பதாரியாக விண்ணப்பிக்கையில் வெளிவாரி விண்ணப்பதாரியாக விண்ணப்பிப்பதற்கான இயலுமை இல்லை.
விண்ணப்பப்படிவத்துடன் விண்ணப்பதாரிக்கு உரித்துடைய சகல கல்வித் சான்றிதழ்கள், தொழில்சார் சான்றிதழ்கள், பணிச் சான்றிதழ்கள் மற்றும் பிறப்புச் சான்றிதழ் ஆகிய சான்றிதழ்களினதும் தேசிய அடையாள அட்டையினதும் பிரதிகளை கட்டாயமாக அனுப்பி வைத்தல் வேண்டும். தபாலில் காணாமற்போகும் அல்லது தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் குறித்து இந்நிலையம் பொறுப்புக்கூறாது.
ஏற்கனவே அரச பணியில் / மாகாண அரச சேவையில் அல்லது அரச துறையில் பணியாற்றுவோர் தமது விண்ணப்படிவத்தை நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு காணப்படாத மற்றும் விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**கவனத்துக்கு :**
இந்த விளம்பரம் **www.dmc.gov.lk** இணையத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் நாயகம்**
**அனர்த்த முகாமைத்துவ நிலையம்**

# படித்ததும் பகர்வதும் 123



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### மாணவரிடையே போதைப்பொருள்!

போதைப்பொருள் பாவனையால் எண்ணற்ற வாலிபர்களின் வாழ்க்கை மோசமாகி, நாசமாகி, சீரழிந்து போவதை நாளாந்தம் கண்கூடாக காண்கின்றோம். இந்த பயங்கர அழிவிலிருந்து வாலிப சமுதாயத்தை மீட்டெடுக்க பல்வேறு தரப்பினரும், பலவிதமான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற வேளையில் போதைப்பொருள் விநியோகம் மற்றுமொரு வடிவத்தில் விஸ்வரூபமெடுத்து பயமுறுத்துகிறது.

இலங்கையில் இப்போது பாடசாலை மாணவர்களிடையே போதைப்பொருள் பழக்கத்தை ஏற்படுத்துவதற்கான பல்வேறு உத்திகள், பல்வேறு வழிகளில் போதைப்பொருள் வியாபாரத்தோடு தொடர்புபட்ட பலதரப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டு வருவதை அன்றாட செய்திகள் எடுத்துக் காட்டி அச்சமளித்துக் கொண்டிருக்கின்றன.

நாட்டுக்கு நல்லது செய்யும் நல்ல இளைஞர்களாய், நாளைய நமது தலைவர்களாய் உருவாகப்போகும் மாணவர்களை பிஞ்சுப் பருவத்திலேயே கசக்கிப் பிழிவதற்கு, அவர்களது எதிர்காலத்தை பாழாக்கி அழிப்பதற்கு, அவர்களை படுபாதாளத்தில் தள்ளிவிடுவதற்கு அடிப்படையாக அமையக் கூடிய இத்தகைய கேவலமான, கீழ்த்தரமான, படுமோசமான, அதே வேளை மிகப் பயங்கரமான இச்செயற்பாட்டை முளையிலேயே கிள்ளி எறிவதற்குரிய சரியான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும்.

ஆரம்பத்திலேயே இத்தகைய பயங்கரமான, துரோகமான, ஆபத்தான செயற்பாடுகளை அழித்தொழிக்காமல் விட்டுவிட்டால் அது அதி வேகமாகப் பரவி, கட்டுப்படுத்த இயலாத ஒரு சூழலை உருவாக்கிவிடும் அபாயம் உள்ளது. எனவே இவ்விடயத்தில் எவரும் கவனயீனமாகவோ, அசட்டையாகவோ, அஜாக்கிரதையாகவோ, பாராமுகமாகவோ இருந்து விடக் கூடாது.

இவ்விடயத்தில் அரசாங்கம் முறையான நடவடிக்கைகளை எடுக்கும் அதே வேளை, பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவத்தலைவர்கள், மாணவர்கள் மட்டுமன்றி பெற்றோரும், சுற்றும் சூழ இருப்போரும் மிகுந்த எச்சரிக்கையோடும், கண்காணிப்போடும், அவதானிப்போடும் இருத்தல் அவசியம்.

எந்தவொரு மாணவரின் நடத்தையிலும் சந்தேகப்படும் விதமான வித்தியாசமான ஏதேனும் ஒரு சில அறிகுறிகளேனும் அவதானிக்கப்பட்டால் எந்தத் தாமதமுமின்றி உடனடியாக அம்மாணவரின் நடத்தை மாற்றத்துக்கான உரிய காரணத்தை கண்டறிந்து அதனை திருத்திட முயற்சித்தல் வேண்டும்.

அது போதைப்பொருளுடன் சம்பந்தப்பட்டதாக இருப்பின் மிகக் கீழ்மட்டத்திலிருந்து அதியுயர் மட்டம் வரை உரியோரின் கவனத்திற்கு அதனை கொண்டு வந்து, உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டு, வரக்கூடிய பயங்கர ஆபத்துகளிலிருந்து மாணவ சமூதாயத்தை காப்பாற்றிட வேண்டும்.

மாணவ பருவம் எதனையும் இலகுவில் ஏற்றுக்கொள்ளக் கூடிய பருவம். நல்ல திசையில் திரும்பவேண்டிய பருவம். இப்பருவத்தில் அவர்கள், போதைப்பொருள் பக்கம் சாய்ந்து விடுவார்களாயின், அதிலிருந்து அவர்களை மீட்டெடுப்பது சிம்ம சொப்பனமாகிவிடலாம்.

இத்தகைய நிலைமை ஏற்படாதிருக்க எல்லாவித செயற்பாடுகளையும் மேற்கொள்வது, “மனிதன்” என்ற வகையில் ஒவ்வொருவர் மீதுமுள்ள கட்டாயக் கடமையாகும்.

## நெஞ்சுக்கு நீதி

போதைப் பொருளினால் பேரழிவுதான் என்றும்
போதித்து மாணவர்க்கு புரியவைப்பதே நன்று
வாதங்கள் செய்திடாமல் எல்லோரும் ஒன்றாய்
சேர்ந்து ஒழித்திடுவோம் போதைகளை இன்றே

## பிரிந்தார் பெருமை

### பாடகர் நிஹால் நெல்சன்

தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் புகழ்பெற்ற, பிரபல சிங்களப் பாடகர் நிஹால் நெல்சன், கடந்த 13ம் திகதி (13.12.2022) தனது 76வது வயதில் காலமானார். பைலா வடிவிலான வேகம் கூடிய பாடல்கள் மூலமே இவர் அதிக பிரபலம் பெற்றார்.



மொரட்டுவை பிரதேச வர்த்தகர் ஜி. டி. ஹென்ட்ரிக், ஆங்கில ஆசிரியரான ஹேமா வீரவர்தன தம்பதியரின் ஒரே மகனான நிஹால் நெல்சன், பாடசாலை பருவத்திலேயே சங்கீதம் பயின்றார். 1962ஆம் ஆண்டில் தானே எழுதிய பாடலொன்றை திருமண நிகழ்வொன்றில் பாடியதன் மூலம் தனது இசைப் பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

‘இலங்கையில் அதி கூடிய இசை அல்பங்களை வெளியிட்டவர்’ என்ற சாதனை இவரையே சாருகிறது. கெசட் (Cassette), இறுவட்டு (CD) வடிவங்களில் 113 இசை அல்பங்களை நிஹால் நெல்சன் வெளியிட்டுள்ளார். 1978ல் பிரபல கேசட் வெளியீட்டாளரான விஜய ராமநாயக்கவின் ‘தரங்கா’ லேபிளில் இவர் வெளியிட்ட “குணே அய்யகே காம்பரே” என்ற இசை அல்பம் அன்று பட்டிதொட்டியெங்கும் மிகவும் பிரபலமானது. அத்துடன் இலங்கையில் முதன் முதலில் இறுவட்டு (CD) மூலம் பாடல் வெளியிட்ட பெருமையையும் இவரே கொண்டுள்ளார்.

பாடகர், பாடலாசிரியர், இசையமைப்பாளர் என மூன்று துறைகளிலும் செல்வாக்குச் செலுத்திய நிஹால் நெல்சன், ‘இலங்கையின் மேடைப் பாடகர்களில் எவராலும் தோற்கடிக்கப்படாதவர்’ என்று போற்றப்பட்டார். பல வருடங்களாக மேடை இசை நிகழ்வுகளில் இறுதிப் பாடகராக கலகலப்போடு நிகழ்ச்சியை முடித்துவைக்க இவரே அழைக்கப்பட்டு வந்தமை இவரது சிறப்புக்கு சிறந்த சான்றாகும்.

மிகவும் செல்வாக்கு மிக்க பாடகர்களில் ஒருவரான நிஹால் நெல்சனின் மறைவு, சிங்கள பைலா பாடகர் மத்தியில் ஒரு பாரிய இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது.

## வாசித்ததில் வசீகரித்தது

வாழ்க்கையை அமைப்பது எண்ணங்களே. ஆம்.. ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையை கட்டமைப்பது எண்ணங்களே. எப்படிப்பட்ட எண்ணங்களை எண்ணுகிறான் என்பதைப் பொறுத்தே அவனது வெற்றி தோல்வி அமைகிறது. நல்ல எண்ணங்களை தன்னம்பிக்கையோடு சிந்திப்பவன் வெற்றி பெறுகிறான். தன்னம்பிக்கை இல்லாத எண்ணம் தோல்வி அடைகிறது.

“ஒரு மான், குட்டிகளைப் பிரசவிப்பதற்கு காலியாக இருந்த ஒரு குகைக்கு சென்றது. குட்டிகளைப் பெற்றெடுத்த பின்பும், தனது குட்டிகளுடன் அந்த குகையிலேயே அந்த மான் வசித்து வந்தது. அந்த குகை சிங்கம் வசிக்கும் ஒரு குகையாகும். பல நாட்களாக அந்த சிங்கம் குகைக்கு வரவில்லை. வேறு காட்டிற்கு சென்றிருந்த அந்த சிங்கம் திடீரென ஒருநாள் அந்த குகைக்கு வந்தது.



பொதுவாக சிங்கத்தை கண்டால் மான்கள் பயந்து ஓடும். ஆனால் இந்த மான் தைரியம் கொண்ட மானாக திகழ்ந்தது. சிங்கத்தைக் கண்டவுடன் பதட்டம் அடையாமல் தன் குட்டிகளிடம், சிங்கம் அருகில் வந்ததும், “சிங்கத்தின் கறி வேண்டும்” என சத்தமாக கத்துமாறு கூறியது. குட்டிகளும் அவ்வாறே கத்தின. அந்த சத்தத்தை கேட்ட சிங்கம், பலசாலியான மிருகங்கள் உள்ளே இருப்பதாக நினைத்து ஓட்டமெடுத்தது. பின்னர் எவ்வித பிரச்சினையும் இன்றி அந்த மான் தனது குட்டிகளுடன் அதே குகையில் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தது” எண்ணம் போல் வாழ்வு என்பதற்கு இந்த கதை சிறந்த உதாரணம்.

சிங்கத்தைக் கண்டால் பயப்படும் சுபாவம் கொண்ட மான் இனத்தில் பிறந்த ஒரு மான், தனது தைரியமான எண்ணத்தின் துணை கொண்டு, காட்டுக்கே ராஜாவான சிங்கத்தை விரட்டியடித்தது முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாகும். தைரியமும் தன்னம்பிக்கையும் இருந்து விட்டால் வாழ்க்கையில் எதையும் சாதிக்க முடியும்.

என்னிடம் பணம் இல்லையே! என்னால் எப்படி வெற்றி பெற முடியும்? என்று புலம்புபவர்கள் ஏராளம். உண்மையில் பிரச்சினை என்பது பணத்தில் இல்லை. மனத்தில்தான் இருக்கிறது. பாஸிட்டிவான நேரிய சிந்தனைகளை மனதில் வளர்த்தெடுப்பவர்களுக்கு பணம் என்பது ஒரு பிரச்சினையே இல்லை.

## பேசும் கவிதை

### நீ நீயாய் இருந்துவிடு

தன்னிலை மறக்க
தானே வழிய தேடும்
சாபம்

உணர்வினை மறந்து
உண்மை நிலை மறந்து
கனவுக்குள் காலம்
செல்ல, உயிர்
குடிக்கும் பேய்

ஓடியாடி விளையாடி
சிரித்து மகிழும் வயதில்
ஒரு மூலையில் முடங்கி கிடக்க
எப்படி முடிகிறது இளைஞனே?
விஷத்தை அமுதாய்
விழுங்கிட எப்படி முடிகிறது?

நரைவிழுந்து
பல்விழுந்து
தடியூன்றும் முன்னே
பிஞ்சிலேயே பழுத்து
உதிர்ந்துவிட துடிப்பதேன்?

சாதனைகள் காத்துகிடக்க
சரித்திரங்கள் தன்
பக்கங்களை இளைஞனே
உனக்காய் விரித்து வைத்திருக்க
நீ ஏன்
உனக்காய் குழி வெட்டி
நீயாய் விழ ஆசைபடுகிறாய்?

இளைஞனே ஏதாவது
ஒரு போதைக்கு எப்போதும்
அடிமையாகாமல்
சுயமாய் மூளையை
சிந்திக்க விடு!

சுதந்திர பூமியில்
போதைக்கு அடிமையாகாமல்
நீ நீயாய் இருந்துவிடு.

- தேவி மகேஸ்வரன்

## நொறுக்குத் தீனி

### Menனும், Womenனும்!!!



ஆங்கிலத்தில் ஏன் ''M'' நேராகவும் "W" தலைகீழாக இருக்கிறது என்பதற்கு ஒருவரது வித்தியாசமான, வினோதமான அனுபவ விளக்கம்.

Men எனும் ஆண்கள் எப்பொழுதும் எந்த விசயத்தையும் நேராகப் பார்ப்பார்கள். ஆனால் Women எனும் பெண்கள் எப்பொழுதும் எந்த விசயத்தையும் தலைகீழாகத் தான் யோசிப்பார்கள் என்று படித்திருக்கிறேன். அதை சரியென்று அண்மையில் உணர்ந்து கொண்டேன். அன்றொரு நாள், எனது நண்பனை பார்க்க அவனது அப்பார்ட்மெண்டிற்கு சென்று, 4வது மாடிக்கு செல்ல லிஃப்ட்டில் ஏறினேன்.

அப்பொழுது குழந்தையுடன் ஒரு பெண்மணி லிஃப்ட் உள்ளே வந்தார். அவர்களிடம் 2ஆவதா இல்லை 3ஆவதா என்று கேட்டேன். உடனே அந்தப் பெண்மணி கோபத்துடன், “எனக்கு இன்னும் கல்யாணமே ஆகவில்லை இது என் அக்காவின் குழந்தை” என்று கூறியபடி முகத்தை திருப்பி கொண்டார்.

நான் மனதுக்குள் சிரித்துக் கொண்டேன். ‘2 ஆவது மாடிக்கா அல்லது 3ஆவது மாடிக்கா போகிறார்? அதற்கேற்ப லிஃப்ட் பட்டனை அழுத்தலாமே என்று எண்ணித்தான் அப்படி கேட்டேன். ஆனால், அந்த அம்மாள், என்னை திட்டிவிட்டு சென்று விட்டார்.

இப்ப சொல்லுங்க W தலைகீழாக இருப்பது சரியென கொள்ளலாம் தானே!!

## தகவல் களஞ்சியம்

### பாலியல் தேடுதல் (‘Sex’ search)




உலகில் பொருளாதாரம், கல்வி, போசாக்கு போன்ற விடயங்களின் தரப்படுத்தலில் இலங்கை எந்த இடத்தில் இருந்தாலும், ‘கூகுள் ட்ரெண்ட் டிராக்கிங்’ (Google trend tracking data) தரவுகளின்படி ‘செக்ஸ்’ என்ற வார்த்தையை இணையத்தில் தேடும் நாடுகளில் இலங்கை தற்போது முதலிடத்தில் உள்ளது.

கூகுள் போக்குகளின்படி, 2020, 2019 ஆம் ஆண்டுகளில் பாலியல் தேடலில் முதலிடத்தில் இருந்த எத்தியோப்பியாவை இலங்கை பின்தள்ளியுள்ளது. இதில் வியட்நாம் இரண்டாவது இடத்திலும், பங்களாதேஷ் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

பெரிய நாடுகளில் "செக்ஸ்" தேடலின் விகிதாசாரம் 30%மாக மட்டுமே இருக்கும்போது, எம்மைப் போன்ற சிறிய நாடுகளில் இதன் விகிதாசாரம் 75%மாக இருக்கிறது. இதன்படி பார்க்கும்போது, ஒரு சிறிய நாடு அதிக எண்ணிக்கையிலான "செக்ஸ்" தேடல் ஆர்வத்தைக் கொண்டிருப்பது வியப்புக்குரியது எனக் கூறப்படுகிறது.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், “படித்ததும் பகர்வதும்” பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207



# ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் 31

மூத்த எழுத்தாளர் சாகித்ய ரத்னா தி. ஞானசேகரன்

# நிலையான கருத்தியல் கொண்ட இலக்கியவாதி நீர்வை பொன்னையன்

ஈழத்துச் சிறுகதை வரலாறு என்ற ஆய்வு நூலை எழுதிய செங்கை ஆழியான் கலாநிதி க. குணராசா நீர்வை பொன்னையனின் சிறுகதைகள் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: “நீர்வை பொன்னையன், சிறுகதைகளில் கலாபூர்வமான வெளிப்பாட்டை மீறி அவர் வரித்துக் கொண்ட அரசியற் கருத்து புடைத்து நிற்கும். வாக்கியம் சார்ந்த கருத்துக்களே இவரது சிறுகதைகளின் கருக்களாகியுள்ளன”.

“நீர்வை பொன்னையன் வடபகுதியில் கம்யூனிஸ்ட் கட்சியுடன் தம்மை இணைத்துக்கொண்டு பல போராட்டங்களில் கலந்து கொண்டவர். இவர் இலங்கை இடதுசாரி இயக்கத்திலும் முற்போக்கு இலக்கியத்துறையிலும் இரண்டாம் தலைமுறை எழுத்தாளர் ஆவார். சீனச் சார்பினை ஆதரித்த இவர், கட்சியில் பல பிளவுகள் ஏற்பட்ட போதும் முற்போக்கு இடதுசாரி அரசியலிலிருந்து ஒருபோதும் விலகியதில்லை.”

இவர், 1930ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி யாழ்ப்பாணம் நீர்வேலி என்னும் விவசாயக் கிராமத்தில் உள்ள ஒல்லைக்குறிச்சி எனப்படும் இடத்தில் இராமலிங்கம், இலட்சுமி தம்பதிக்கு மகனாகப் பிறந்தார். நீர்வேலியிலுள்ள அத்தியார் இந்துக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைக் கற்ற இவர், பின்னர் மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா கல்லூரியில் பயின்று பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராக கிழக்கிலங்கையில் உள்ள சம்மாந்துறை முஸ்லிம் பாடசாலையில் பணியாற்றினார்.



பின்னர் இந்தியா சென்று கல்கத்தா பல்கலைக்கழகத்தில் பயின்று பி.ஏ. பட்டதாரியாகத் தாயகம் திரும்பினார். கல்கத்தாவில் இருந்த காலத்தில் அங்கு நிலவிய சுதந்திர வேட்கை மற்றும் முற்போக்குச் சூழல் இவரை மாற்றியது. மாணவ மற்றும் வாலிப இயக்கங்களில் பங்குபற்றினார். இந்திய மக்கள் கலாசார மன்றத்தின் ஹூக்லி பிரதேச அமைப்புச் செயலாளராகவும் பணியாற்றினார்.

1957இல் பட்டப்படிப்பை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய பின்னர், பல ஆண்டுகளாக வேலைதேடி அலைந்து வேலை கிடைக்காமையால் விவசாயியாகவே வாழ்ந்தார். இவர் எழுதிய முதலாவது சிறுகதையான பாசம் யாழ்ப்பாணம் ஈழநாடு இதழில் 1957இல் வெளியானது. இவரது இரண்டாவது கதையான மேடும் பள்ளமும் கலைச்செல்வியில் வெளியானது. தொடர்ந்து கவிஞர் நாகராஜன் நடத்திய தமிழன் சஞ்சிகையில் பல கதைகளை எழுதினார். 1960களில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் இணைந்து கொண்டார். இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி மேடும் பள்ளமும் 1961இல் வெளியானது. மேடும் பள்ளமும் தொகுதி பின்னர் 2005இல் மீள்பதிப்பு பெற்றது.

உதயம் என்ற இரண்டாவது தொகுப்பு 1970இல் வெளியானது. அதன்பின்னர் இவரின் பாதை சிறுகதைத் தொகுதி தமிழ் நாட்டில் வெளிவந்து முற்போக்கு இலக்கியத்தின் இலக்கணமாகத் திகழ்ந்தது. வேட்கை ஐந்தாவது சிறுகதைத் தொகுதியாக தமிழ் நாட்டில் அறிமுகமானது.

இதைத்தவிர நிமிர்வு, ஜென்மம், காலவெள்ளம், நினைவுகள் அழிவதில்லை, நீர்வை பொன்னையன் கதைகள்ஆகிய சிறுகதைத் தொகுதிகள் வெளியாகின. இவர் 100 சிறுகதைகள்வரை எழுதியுள்ளார். இவரது Devils and Demons சிறுகதை ஆங்கில மொழிபெயர்ப்பாகவும் Lengathugama சிறுகதை சிங்கள மொழிபெயர்ப்பாகவும் வெளிவந்துள்ளன.

சிறுகதைத்துறைக்கு அப்பால் நாட்டரியலிலும் பங்களிப்பச் செய்துள்ளார். பல நாட்டார் கதைகளை ஆரம்பத்தில் தமிழன் சஞ்சிகையிலும் பின்னர் தினக்குரலிலும் மொழிபெயர்த்து எழுதியுள்ளார். ஆங்கிலம் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் புலமைமிக்க இவரது மொழிபெயர்ப்புகள் வளமானதாக அமைந்தன. இக்கதைகள் தொகுக்கப்பட்டு உலகத்து நாட்டார் கதைகள், என்ற தலைப்பில் வெளிவந்தது. 2001ஆம் ஆண்டு முதற் பதிப்பும் 2004இல் இரண்டாம் பதிப்பும் வெளிவந்தன. இந்நூலில் 250 நாட்டார் கதைகள் அடங்கியுள்ளன. 2002ஆம் ஆண்டில் முற்போக்கு இலக்கிய முன்னோடிகள் என்ற தலைப்பில் ஒரு நூலை வெளிக்கொணர்ந்தார். இந்நூல் தோழர் மு. கார்த்திகேசன் ஞாபகார்த்தமாக அவரது மறைவின் 25ஆவது ஆண்டில் வெளிவந்தது. உலகம் ஏற்றுக் கொண்ட எழுத்தாளர் மார்க்ஸிம் கார்க்கியின் புகைப்படத்தை அட்டையில் தாங்கி வெளிவந்த இந்நூலில், பத்து இலக்கிய கர்த்தாக்களின் அறிமுகத்துடன் அவர்களின் படைப்பாற்றல்களின் உத்வேகத்தை நயம்பட எடுத்தியம்பி யுள்ளார். மார்க்ஸிம் கார்க்கியின் மனிதன் பிறந்தான், பிரேம் சந்த் எழுதிய கொஞ்சம் கோதுமை, லூசுன் தந்த ஒரு நிகழ்ச்சி, சரத் சந்திரர் எழுதிய மகேஷ், ஆஸ்த்ரோவஸ்கி படைத்த வீரம் விளைந்தது, தகழி தந்த தந்தையும் மகனும், அப்பாஸ் ஆக்கிய அநாமதேய அகதி, அசுரவேக எழுத்தாளர் ராகுல சாங்கிருத்யாயனின் சுமேர், முல்க்ராஜ் ஆனந்த் எழுதிய நாவிதர் சங்கம், கிருஷன் சந்தர் படைத்த முழுநிலவு ஆகிய பத்து சிறுகதைகள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு இந்நூலில் இடம்பெற்றுள்ளன.




நீர்வை பொன்னையனின் நாம் ஏன் எழுதுகின்றோம்? என்ற கட்டுரைத் தொகுதியின் முதற்பதிப்பு 2004 செப்டம்பரில் வெளிவந்தது. 1970களில் வெளிவந்த களனி என்ற இலக்கிய சஞ்சிகையிலும், 1975ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தேசிய ஒருமைப்பாட்டு மகாநாட்டு மலராகிய புதுமை இலக்கியத்திலும், விபவி கலாசார மையத்தின் செய்தி ஏட்டிலும் வெளிவந்த கலை இலக்கியக் கட்டுரைகளில் பதினைந்து இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன. இந்நூலில் இடதுசாரிச் சிந்தனைகளையும் முற்போக்கு இலக்கியக் கோட்பாடுகளையும் அவர் விரிவாக எழுதியுள்ளார்.



நினைவலைகள் என்ற இவரது சுய வரலாற்று நூலில், இலங்கையின் இடதுசாரி அரசியலின் எழுச்சியும் வீழ்ச்சியும் வெளிச்சத்துக்கு வருகிறது. இவர் இலங்கை முற்போக்கு இலக்கிய எழுத்தாளர்கள் என்ற நூலின் தொகுப்பாசிரியரு மாவார். நீர்வை பொன்னையன் பதினொரு நூல்களை எழுதியுள்ளார்.

இவர் முற்போக்கு எழுத்தாளரான சமீமுடன் இணைந்து முற்போக்கு இலக்கியப் பேரவையை உருவாக்கினார். இந்த அமைப்பின் மூலம் பல நூல்களை வெளியிட்டார். ஈழத்து முற்போக்குச் சிறுகதைகள் என்ற தலைப்பில் சுமார் 25 சிறுகதைகளைத் தேர்வுசெய்து இம்மன்றம் நூலாக்கியது. இம்மன்றம் முற்போக்கு இலக்கியத் தடத்தில் புனைகதைச் சுவடுகள் கவிதைச் சுவடுகள் முதலான இரண்டு தலைப்புகளில் ஆய்வு நூல்களை வெளியிட்டுள்ளது.

அத்தோடு மூத்த முற்போக்கு எழுத்தாளர்களின் வாழ்வையும் பணிகளையும் கௌரவிக்கும் நோக்கத்துடன் கொழும்பில் 2013இல் விழாவெடுத்தது. நீர்வை பொன்னையன் நீர்வை, ஞானி ஆகிய புனை பெயர்களில் கட்டுரைகள், சிறுகதைகள் எழுதியதோடு பிறநாட்டு இலக்கிய மொழி பெயர்ப்புகளும் செய்துள்ளார். கலைமதி, வசந்தம் ஆகிய முற்போக்குக் கலை இலக்கியச் சஞ்சிகைகள் மூலமும் தன் பணியை மேற்கொண்டார்.

தேசாபிமானி, தொழிலாளி ஆகிய அரசியல் வாரப் பத்திரிகைகளின் ஆசிரிய குழுவில் பணியாற்றி ஆக்க பூர்வமான கட்டுரைகளை எழுதியுள்ளார் .

1969ஆம் ஆண்டிலிருந்து 1983வரை அரச திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றினார்.

1996இல் இருந்து விபவி, மாற்றுக் கலாசார மையத்தில் தமிழ்ப்பிரிவின் இணைப்பாளராகச் செயற்பட்டு ஆக்க இலக்கியம் மற்றும் கலை சம்பந்தப்பட்ட விடயங்களில் தன்னாலான பங்களிப்பைச் செய்துள்ளார். இந்த அமைப்பு பல இலக்கியக் கருத்தரங்குகளையும் இலக்கியப் போட்டிகளையும் நடத்தி சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கியிருக்கிறது. விபவி வாயிலாக அவர் மேற்கொண்ட செயற்பாடுகள் இனங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் மாற்றுப் பண்பாட்டினூடாக வர்க்கமுனைப் பாட்டை முன்னெடுப் பதற்கான பணியாகவும் அமைந்தன.

முற்போக்கு எழுத்துலகில் ஆறு தசாப்தங்களைக் கடந்த நீர்வை இலங்கை முற்போக்குக் கலை, இலக்கிய மன்றத்தின் ஊடாக இலக்கிய கூட்டங்கள், நினைவுப் பேருரைகள், நூல்வெளியீடுகள் என்பவற்றை முன்னின்று நடத்தியுள்ளார்.

இலங்கை அரசின் இலக்கியத்துக்கான உயர்விருதான சாகித்தியரத்னா விருதினை 2017இல் பெற்றவர் நீர்வை பொன்னையன். 'இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உயரிய தேசிய விருதான சாஹித்ய ரத்னா விருது நீர்வை பொன்னையனுக்கு கிடைத்ததல்ல.

இது எங்களது முற்போக்கு இலக்கிய இயக்கத்துக்கும் எனது கொள்கைக்கும் கிடைத்த விருது. நான் அரசியலில் இருந்து இலக்கியத்துக்கு வந்துள்ளேன். இலக்கியத்தில் இருந்து அரசியலுக்கு வரவில்லை. எனது அரசியல் பயணம் 1947ஆம் ஆண்டின் இறுதியில் ஆரம்பமானது. இலக்கியப் பயணம் 1957இல் ஆரம்பித்தது" எனக் குறிப்பிட்டுள்ளார் நீர்வை பொன்னையன்; (25.11.2017 வீரகேசரி சங்கமம் நேர்காணல்)

இவரது பணிகளைக் கௌரவிக்கும் முகமாக கொழும்பு பல்கலைக்கழகம் 1998இலும் பேராதனைப் பல்கலைக்கழகம் 2009இலும் இலக்கிய விருதுகள் வழங்கிக் கௌரவித்தன. இவர் 26.03. 2020இல் அமரரானார்.

# குறுக்கெழுத்துப் போட்டி இல. 42

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | |
| 06 | | 07 | | | 08 |
| 09 | 10 | | 11 | 12 | 13 |
| | 14 | 15 | | 16 | |
| 17 | | 18 | | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | | 25 |

பெயர் ..............................................
வகுப்பு ..............................................
தொலைபேசி இல ..............................................
பாடசாலை பெயர் ..............................................
வதிவிட முகவரி ..............................................
..............................................
.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(1) கண்களால் பார்த்து ரசிக்கின்ற ஓவியம் போன்று, செவிகளால் கேட்டு ரசிக்கும் இனிய கலை இது.

(9) எம், நமது என்பது போல இச்சொல்லையும் ஒத்தபொருள் சொல்லாகப் பயன்படுத்தலாம். (தலைகீழான சொல்)

(11) வெண்ணிறமான அழகிய மலர் இது. அக்கால தமிழ் இலக்கியங்களில் சிறந்த அழகுக்காகவும், நறுமணத்துக்காகவும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ள மலர். பாரி மன்னன் தனது தேரை இம்மலர்க்கொடி படர்வதற்காக வழங்கினான்.

(14) பாம்புக்கு எதிரியான பிராணி இது. பாம்பைக் கண்டால் சண்டை ஆரம்பமாகி விடும். (தலைகீழான சொல்)

(19) உழுந்து, பருப்பு போன்ற தானியங்களால் தயாரிக்கப்படும் உணவுப்பண்டம். எண்ணெயில் பொரித்து எடுப்பார்கள்.

(21) நாம் பயன்படுத்துகின்ற உபகரணங்கள் பலவற்றைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்ற வன்மையான உலோகம் இது.

### மேலிருந்து கீழ்

(1) எமது பணத்தின் பெறுமதியை எடுத்துக் கொண்டால், மிகக்குறைந்த பெறுமதியுள்ளது இது. அதாவது இதன் பெறுமதியில் நூறு மடங்கு ஒரு ரூபா ஆகும்.

(3) அன்றாடம் நாம் கறி சமைக்கப் பயன்படுத்துகின்ற தாவர இலைகளை இவ்வாறுதான் கூறுவர்.

(8) மணலும் மணல் சார்ந்த இடமுமான நிலப்பகுதியைக் குறிக்கும் சொல்.

(10) மிருகங்களில் தந்திரமான புத்தியுள்ளதாகக் கூறப்படுகின்ற மிருகம்.

(12) நெல், கோதுமை, கரும்பு போன்றவை விளைவிக்கப்படும் நிலத்தை இப்பெயரில் குறிப்பிடுவது வழக்கம். (தலைகீழான சொல்)

(15) பாடலைக் குறிக்கும் சொல்

(17) கண்களுக்கு எந்நேரமும் பாதுகாப்புத் தருவது. (தலைகீழான சொல்)

(20) பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்ற இடம். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 41

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. கறுவா 06. தம்பி 09. தேகம் 14. தந்தம்
18. மாலை 21. கவி 23 தாமரை

**மேலிருந்து கீழ்**

02. கன்று 04. பிணை 07. மத்தளம்
09. தேரை 11. மாதம் 18. கலை

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 40

### பாராட்டு பெறுவோர்

**1. எம்.எம்.எம். அஜ்மில்**
தரம் 06, மா/சாஹிரா தேசிய கல்லூரி, மாத்தளை.
இல. 37, கண்டி வீதி, வறக்காமுறை, உக்குவளை

**2. எம்.எஸ். சையாப்**
தரம் 06, அல் அஸர் தேசிய பாடசாலை,
இல. D 123/4, பள்ளிபோருவ, ஹெம்மாத்தகம.

**3. கியாசுதீன் அஹமட்**
தரம் 05, அக்/ஆண்கள் வித்தியாலயம்,
132/2, முதலியார் வீதி, அக்கரைப்பற்று - 04

**4. அப்லல் அஹமத்**
தரம் 04, நாங்கல்ல மு.ம.வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

**5. எம்.எஸ். சைஹான்**
தரம் 03, பள்ளிபோருவ முஸ்லிம் வித்தியாலயம்,
இல. D 123/5, பள்ளிபோருவ, ஹெம்மாதகம.

**6. வை.ஏ.எப். ஜாஸி**
தரம் 06E, பொ/ முஸ்லிம் தேசிய பாடசாலை,
இல. 19/A, முஸ்லிம் கொளனி, கதுறுவெல.

**7. றுமைஸ் பாத்திமா எதீஸ்**
தரம் 05, கமு/சது/அமீர் அலிபுரம், வித்தியாலயம்,
இறக்காமம்.

**8. ஏ.பி.எம். அஸ்தக்**
தரம் 06, ஜாமியத்துல் பலாஹ் அ.கல்லூரி, காத்தான்குடி,
இல. 298/2B, சம்மாந்துறை.

**9. அப்துல் காதர் பாத்திமாஹானி**
தரம் 05, கமு/சது/ஒராபிபாஷா வித்தியாலயம்,
இல. 11A, இறக்காமம் - 2

குறுக்கெழுத்துப் போட்டி இல. 41
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



குறளமுதம் :

**நட்பாராய்தல்: குடிப்பிறந்து தன்கண் பழிநாணு
வானைக் கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு**

***தெளிவுரை :***
*உயர்ந்த குடியில் பிறந்து, தன்னிடத்தில் வருகின்றப் பழிக்கு நாணுகின்றவனைப் பொருள் கொடுத்தாவது நட்பு கொள்ளவேண்டும்.*

# கருத்துணர்ந்து கற்றிடுவோம்



முன்னொரு காலத்திலே ஒரு துறவி இருந்தார். அவர் பறவைகளிடம் பேசும் ஆற்றல் பெற்றிருந்தார். ஒரு நாள் அவர் ஒரு வனத்தினூடாக சென்று கொண்டிருந்த போது தூரத்தே ஒரு வேடன் பறவைகளைப் பிடிப்பதற்காக ஒரு பெரிய வலையொன்றையும், தானிய பையொன்றையும் எடுத்துக் கொண்டு பறவைகள் இருக்கும் இடங்களைத் தேடி சென்று கொண்டிருந்தான்.

அதனை அவதானித்த துறவி பறவைகளைக் காப்பாற்றும் நோக்குடன், பறவைகளை அதன் பாஷையிலேயே அழைத்தார். எல்லாப் பற வைகளும் அவர் இருந்த இடம் நோக்கி வந்து சேர்ந்தன.

அப்போது துறவி, "வேடன் வருவான்; வலை விரிப்பான்; வண்ண விதைகள் தூவுவான் அதற்கு நாங்கள் சிக்க மாட்டோம்." என்று சொல்லிக் கொடுத்தார். பறவைகளும் துறவி சொன்னதையே திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந்தன.

பறவைகளின் சத்தத்தை கேட்ட வேடன் அவ்விடம் மெதுவாக வந்து, வலையை விரித்தான். தானிய விதைகளைத் தூவினான். தானிய விதைகளைக் கண்டதும் எல்லாப் பறவைகளும் துறவி சொன்னவைகளையே சொல்லிக் கொண்டு வலையின் மேலுள்ள தானிய விதைகளை கொத்திக் கொத்தி திண்ண ஆரம்பித்தன.

ஒளிந்திருந்த வேடனும் தருணம் பார்த்து சுருக்குக் கயிற்றை இழுத்தான். அப்போது எல்லாப் பறவைகளும் அவன் வலையில் அகப்பட்டுக் கொண்டன. வேடன் வலையுடன் எல்லாப் பறவைகளையும் பிடித்துக் கொண்டு சென்றான்.

அப்போது வலைக்குள் இருந்த பறவைகள் துறவி சொன்னது போலவே "வேடன் வருவான்; வலை விரிப்பான்; வண்ண விதைகள் தூவுவான் அதற்கு நாங்கள் சிக்க மாட்டோம்" என்று சொல்லிக் கொண்டே இருந்தன.

அதைக் கேட்ட துறவி மிகுந்த கவலை கொண்டார். தான் சொன்ன விடயங்களின் கருத்தை பறவைகள் புரிந்து கொண்டிருந்தால் உயிர் தப்பி இருக்குமே என மனம் நொந்தார்.

இக்கதை மூலம், விசேடமாக மாணவர்கள் பாடங்களை மனனம் செய்தால் மட்டும் போதுமானதல்ல. அதன் ஆழமான கருத்துக்களையும் அறிந்து, புரிந்து கற்றால் தான் எதிலும் ஜெயம் பெறலாம்.

**என் மொஹமட் லாபீர்,**
**பதுளை.**

# நகரும் கற்கள்



**கலிபோர்னியாவில் ஒரு வறண்ட ஏரி ஒன்று உள்ளது. இந்த ஏரியில் கற்கள் தானாக நகரும் தன்மை கொண்டதால், இந்த வறண்ட ஏரி 'ரீஸ்ட்ரக் ப்லாயா' (Recetrack Playa) என்று அழைக்கப்படுகிறது. வறண்ட ஏரியில் அளவுக்கு அதிகமாக அடிக்கும் காற்றின் வேகம் காரணமாக அந்த இடத்தில் கற்கள் நகர்கின்றது.**

# செவ்வாய் கிரகம்



**சூரியனை சுற்றும் கோள்களிலேயே மிகவும் கவர்ந்திழுக்கக்கூடிய வகையில், சிவப்பு நிறத்தில் இருப்பது செவ்வாய் கிரகம். துருப்பிடித்த நிறத் தலான இரும்பு தாதுக்களை கொண்டிருக்கும் பல்வேறு பாறைகளும், சிவப்பு பழுப்பு நிறத்திலான பாலைவனமும் செவ்வாய் கிரகத்தின் மேற்பரப்பில் காணப்படுகின்றன. இங்கு அடிக்கடி ஏற்படும் புயல், மேற்பரப்பில் இருக்கும் சிவப்பு மாசை வளிமண்ட லத்தில் நிரம்பிவிடும். இங்கு ஈரப்பு விசை குறைவாக இருப்பதனால், வளிமண்டலத்தில் காணப்படும் இந்த மாசுத் துகள்கள் நீண்ட நாட்களுக்கு அப்படியே பரவி யிருக்கும். இதனாலேயே செவ்வாய் கோள் சிவப்பு மற்றும் ஆரஞ்சு நிறத்தில் காட்சி அளிக்கிறது.**



# குருவி

குக்கூ.... குக்கூ.... என்றே
குயிலும் பாடும் நன்றே!
குக்கூ.... குக்கூ.... என்றால்
கோடி இன்பம் உண்டோ!

குரல் வருகுது அங்கே
அந்தக் குயில் இருப்பது எங்கே?
மரத்தின் கிளையில் உண்டோ
அந்தக் குளக்கரையில் உண்டோ

சிறிய உருவம் என்றே
அது சென்று மறைவதுண்டோ?
கரிய உருவம் என்றே
தன்னைக் காட்டத் தயக்கம் கொண்டே!

தேடித் தேடிப் பார்த்தேன்
எங்கும் ஓடி ஓடிப் பார்த்தேன்
குயிலைக் காணவில்லை
அந்தக் குரலும் ஓயவில்லை!

**கல்லொளுவை பாரிஸ்,**
**மள்வானை**




# இவ்வார மழலை



ஆரவ் ஆதித்யா

ரமேஷ் /தீபிகா,
கொழும்பு

# வாரம் ஒரு பெரியார்



பன்முகம் கொண்ட ஒரு தைரிய மங்கையான சரோஜினி நாயுடு மிக சிறந்த ஒரு பேச்சாளர், கவிஞர், அரசியல்வாதி, போராளி மற்றும் ஆளுநர் என்று இவரின் சிறப்புகளை அடுக்கிக்கொண்டே போகலாம். அந்த அளவிற்கு இவரின் புகழ் பரவியுள்ளது. இவரின் புகழே இவருக்கான அடையாளம் எனலாம்.

சரோஜினி நாயுடு 1879ஆம் ஆண்டு பெப்ரவரி 13ஆம் திகதி ஆந்திர மாநிலத்தில் உள்ள “ஹைதராபாத்தில்” பிறந்தார். அவருடைய தந்தை அகோர்நாத் சடோபத்யாயா. இவர் கல்வி

## முதல் பெண் ஆளுநர் சரோஜினி நாயுடு

நிறுவனம் ஒன்றை நடத்தி வந்த மிகப்பெரிய செல்வந்தர். தாய் பரத சுந்தரி இவர் ஒரு பெண் கவிஞர். இவரது உடன்பிறந்தவர்களோடு சேர்த்து மொத்தம் 8 பேர் அவரது குடும்பத்தில் இருந்தனர். ஆனால், இவரே அந்த குடும்பத்தின் மூத்த பிள்ளை. இவர்களது குடும்பம் பெங்காலி பிராமணர் குடும்பம்.

சரோஜினி நாயுடு தனது சிறுவயது முதலே கல்வியின் மீது ஈடுபாடு கொண்டவர். திறமையாக படிக்கும் ஆற்றலினை பெற்ற இவர் தனது 12ஆம் வயதில் சென்னை பல்கலைகழகத்தில் மெட்ரிகுலேசன் பிரிவில் தேர்ச்சி பெற்றார்.

இவரின் கல்வி மற்றும் கவிதை எழுதும் திறன் நாளுக்குநாள் அதிகமாகிக்கொண்டே இருந்தது. அதுமட்டுமில்லாமல் இவர் பல மொழிகளை கற்க ஆரம்பித்தார். குறிப்பாக ஆங்கிலம், தெலுங்கு, உருது, பாரசீகம் மற்றும் பெங்காலி போன்ற பல மொழிகளை கற்று தேர்ந்தார்.

இவரின் திறனை கண்ட நிஜம் அறக்கட்டளை அவரின் மேற்படிப்புக்கான செலவினை ஏற்றது. அவர் இங்கிலாந்து சென்று, லண்டனிலுள்ள கிங்ஸ் கல்லூரியில் படித்தார். பின்னர், கேம்பிரிட்ஜிலுள்ள கிர்டன் கல்லூரியில் பயின்றார்.

அவர் இங்கிலாந்தில் தனது மேற்படிப்பினை பயின்று கொண்டிருக்கும் போது முத்யாலா கோவிந்தராஜூலு என்ற ஒரு மருத்துவரை காதலித்து அவரை தனது 19ஆவது வயதில் திருமணமும் செய்துகொண்டார்.

அவர்களது திருமணம் ஒரு சாதியிடை திருமணம் ஆகும். அந்த காலத்தில் வெவ்வேறு சமூகத்தினை சேர்ந்த இருவர் திருமணம் செய்து கொள்வது என்பது மிகக்கடினம். ஆனால், இவர்களது திருமணம் சரோஜினி நாயுடு அவர்களின் தந்தையின் முழு சம்மதத்தோடு சென்னையில் உள்ள அவரது நண்பரின் உதவியோடு அவரது இல்லத்தில் நடந்தது.

திருமண வாழ்வில் சிறந்த முறையில் இருந்த இவர்களுக்கு 4 குழந்தைகள் பிறந்தனர். அவர்களின் பெயர்கள் ஜெயசூர்யா, பத்மஜா, ரந்தீர், லீலாமணி.

சரோஜினி நாயுடு மக்களின் மீது அதீத அன்பு கொண்டிருந்தார். 1905 ஆம் ஆண்டு நடந்த வங்கபிரிவின் அடுத்து தன்னை இந்திய தேசிய இயக்கத்தில் இணைத்த அவர் தண்டியில் நடைபெற்ற உப்பு சத்தியாகிரகத்தில் பங்கேற்றார். பலர் கைதான பின்பும் தனது போராட்டத்தினை தொடர்ந்து தனது வலிமையினை காண்பித்தார்.

1925ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரசின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்பு அதே ஆண்டில் கான்பூரில் நடைபெற்ற சட்டமறுப்பு இயக்கத்தில் காந்திஅடிகளுடன் சேர்ந்து சிறை சென்றார். பிறகு 6 வருடங்கள் கழித்து 1931ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டார்.

அதன் பிறகும் அவர் சுதந்திர போராட்ட முயற்சிகளை தொடர்ந்த அவர் 1942ல் நடைபெற்ற “வெள்ளையனே வெளியேறு” போராட்டத்தில் கலந்து கொண்டு மீண்டும் சிறை சென்றார்.

1947ல் இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர் உத்திரபிரதேசத்தின் ஆளுநர் ஆனார். இதன் மூலம் இந்தியாவின் முதல் பெண் ஆளுநர் என்ற சிறப்பினையும் பெற்றார். அவரது சிறப்பான நடவடிக்கைகள் மூலம் தான் ஒரு சிறந்த தலைமை பொறுப்பு வாய்ந்த நபர் என்று அவர் தன்னை மீண்டும் மீண்டும் நிரூபித்தார்.

ஆளுநர் ஆன 2 வருடங்கள் கழித்து 1949ஆம் ஆண்டு மார்ச் 2 ஆம் திகதி அவரது அலுவலகத்தில் பணி நேரத்தின் போதே மாரடைப்பு ஏற்பட்டு தனது இன்னுயிரை துறந்தார். அவருடைய வாழ்க்கை சாதிக்க துடிக்கும் ஒவ்வொரு பெண்ணிற்கும் எடுத்துக்காட்டு என்றே கூறலாம்.



**எம்.ஆர்.எப். அமானி**
அன்-நஹ்லா பாலர் பாடசாலை, தர்கா நகர்



**எம்.என்.எம். இல்ஹாம்**
தரம் 03, அல்-அம்ரா மகா வித்தியாலயம், குருநாகல்



**ஜே.ஏ. பாத்திமா ஹில்மா**
தரம் 06C, அல்-அம்ரா மகா வித்தியாலயம், குருநாகல்

# விளையாட்டு

## 'ஒப்சேர்வர் மொபிடெல்' விருது நிகழ்ச்சி இன்று ரூபவாஹினியில்

சிறந்த பாடசாலை கிரிக்கெட் வீரர்களுக்கான 'ஒப்சேர்வர் மொபிடெல் விருது" விழா நிகழ்வு இலங்கை தேசிய தொலைக்காட்சி சேவையான ரூபவாஹினியில் இன்று ஞாயிற்றுக்கிழமை (18) இரவு 10 மணிக்கு ஒளிபரப்பப்படவுள்ளது.

44ஆவது தடவையாக லேக் ஹவுஸ் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விருது விழா கடந்த டிசம்பர் 15 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இலங்கை முன்னாள் கிரிக்கெட் வீரர் அரவிந்த டி சில்வா பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இந்த விருது விழாவில் இசை மற்றும் நடன நிகழ்ச்சிகளுடன் நாடெங்குமுள்ள பாடசாலை கிரிக்கெட் வீர, வீராங்கனைகள் மற்றும் அணிகள் தேர்வு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டது.

## 'ஒப்சேர்வர் மொபிடெல்' பாடசாலைகளில் கிரிக்கெட் விருது வழங்கும் விழா















# உலகக் கிண்ணம் யாருக்கு?

மொரோக்கோவின் அதிர்ச்சி தரும் வெற்றிகள், பிரேசிலின் காலிறுதி வெளியேற்றம், இங்கிலாந்து, ஸ்பெயின், போர்த்துக்கல், பெல்ஜியம் என்று எதிர்பார்த்த அணிகள் ஏமாற்றத்தோடு வெளியேற உலகக் கிண்ண இறுதிப் இரு கச்சிதமான அணிகளே இறுதிப் போட்டியில் சந்திக்கவுள்ளன.

28 ஆண்டுகளின் பின் கோபா அமெரிக்கா கிண்ணத்தை வென்று, 36 போட்டிகளில் தோல்வியுறாத அணியாக உலகக் கிண்ணத்திற்கு வந்த ஆர்ஜன்டீனா ஆரம்பத்திலேயே சவூதியிடம் தோற்றபோதும்

குறிப்பாக உலகின் சிறந்த கால் பந்து வீரருக்கு வழங்கப்படும் உச்ச விருதான பலொன் டிஓரை வென்ற கரிம் பென்சமா மற்றும் நட்சத்திர மத்திய கள வீரர் போல் பொக்பா மற்றும் நிகோலோ கண்டேவின் விலகல் பெரும் இழப்பாக இருந்தது.

என்றாலும் அதனை ஈடுகட்டும் அளவுக்கு பிரான்ஸ் அணியில் திறமையான வீரர்கள் இருந்ததால் அந்த இழப்புகள் பெரிதாகத் தெரியவில்லை.

ஆரம்ப சுற்றில் அவுஸ்திரேலியா மற்றும் டென்மார்க்கை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறிய நிலையில் தூனீசியாவுடனான ஆட்டத்தில் பொடுபோக்காக விளையாடி தோல்வியை சந்தித்த போதும் நொக் அவுட் போட்டிகளில் அந்த அணியின் ஆட்டம் உறுதியாகவே இருந்தது.

16 அணிகள் சுற்றில் போலந்தையும் காலிறுதியில் இங்கிலாந்தையும் வீழ்த்திய பிரான்ஸ் அரையிறுதியில் மொரோக்கோவை வென்றது.

மொரோக்கோவுடனான ஆட்டத்தில் பிரான்ஸ் இரண்டு கோல்களை பெற்றபோதும் போட்டியில் பெரும்பாலும் மொரோக்கோ ஆதிக்கம் செலுத்தி இருந்தது.

1962இல் பிரேசிலுக்குப் பின்னர் உலகக் கிண்ணத்தை தொடர்ச்சியாக வெல்ல எதிர்பார்த்திருக்கும் பிரான்ஸின் அரையிறுதி ஆட்டம் சற்று மந்

யாசத்தில் தோற்கடித்தது. இரு அணிகளும் ஒட்டுமொத்தமாக 12 போட்களில் சந்தித்திருக்கும் நிலையில் ஆர்ஜன்டீனா முன்னணியில் உள்ளது. இதில் ஆர்ஜன்டீனா 6 வெற்றிகளை பெற்றிருப்பதோடு 3 போட்டிகளில் தோற்று 3 போட்டிகளை சமநிலை செய்துள்ளது.

என்றாலும் இம்முறை உலகக்





போட்டிக்கு பிரான்ஸ் மற்றும் ஆர்ஜன்டீன அணிகள் தேர்வாகியுள்ளன.

கிட்டத்தட்ட கடந்த ஒரு மாதமாக கட்டாரின் பிரமிக்கவைக்கும் மைதானங்களில் நடந்த உலகக் கிண்ணத்தின் 64ஆவது போட்டி அதாவது யார் உலக சம்பியன் என்று தீர்மானிக்கும் ஆட்டம் இன்று (18) லுசைல் ஐகோனிக் அரங்கில் இலங்கை நேரப்படி இரவு 8.30க்கு ஆரம்பமாகவுள்ளது.

நடப்புச் சம்பியன் பிரான்ஸ் தொடர்ச்சியாக இரண்டாவது முறை உலகக் கிண்ணத்தை வெல்லும் எதிர்பார்ப்போடு களமிறங்கும் நிலையில் ஆர்ஜன்டீனா 36 ஆண்டுகளுக்குப் பின்னர் கிண்ணத்தை வெல்ல திட்டமிடுகிறது.

உலகக் கிண்ணத்தில் எத்தனைதான் அதிர்ச்சி முடிவுகள் கிடைத்தாலும், தொடரில் திறமை மிக்க அணிகளே கடைசி வரை தாக்குப்பிடித்து இறுதிப் போட்டிக்கு முன்னேற முடியும். அந்த வகையில்

அதனை சுதாகரிக்க அதிக காலம் எடுத்துக் கொள்ளவில்லை. மெக்சிகோ, போலந்தை வீழ்த்தி நொக் அவுட் சுற்றுக்கு முன்னேறிய பின், 16 அணிகள் சுற்றில் அவுஸ்திரேலியாவையும், காலிறுதியில் நெதர்லாந்தையும், அரையிறுதியில் குரோசியாவையும் வெளியேற்றியது.

லியோனல் மெஸ்ஸியின் தலைமையிலான ஆர்ஜன்டீன ஆட்டத்தில் தோய்வு தெரியவில்லை. மெஸ்ஸி தவிர, என்சோ பெர்னாண்டஸ் மற்றும் ஜூலியன் அல்வாரெஸ் போன்ற வீரர்கள் முக்கியமாக அவதானிக்கப்பட வேண்டியவர்கள்.

மறுபுறம் உலகக் கிண்ணத்தை தற்காத்துக்கொள்ளவே பிரான்ஸ் இம்முறை கட்டார் வந்தது. எனினும் வழக்கத்துக்கு மாறாக கழக மட்டப் போட்டிகளுக்கு மத்தியில் உலகக் கிண்ணம் ஆரம்பமானதால் பல முன்னணி வீரர்களை காயத்தால் இழந்த நிலையிலேயே பிரான்ஸ் உலகக் கிண்ணத்தில் ஆட வேண்டி ஏற்பட்டது.

தமாகவே இருந்தது. அது இறுதிப் போட்டியில் எப்படித் தாக்கம் செலுத்தும் என்று தெரியவில்லை.

பிரான்ஸின் பெரும் எதிர்பார்ப்பாக இருப்பது முன்கள வீரர் கைலியன் ம்பப்பே. தனது காலுக்கு பந்து கிடைத்தால் அதனை மின்னல் வேகத்தில் எதிரணி கோல் கம்பத்துக்கு கடத்திச் சென்று கோலாக மாற்றும் திறமை அவரிடம் இருக்கிறது.

அது எதிரணிக்கு எப்போதுமே ஆபத்தாகவே இருக்கும். தவிர, அன்டொயினே கிரீஸ்மன், எடுவாடோ கமவிங்கா சிறப்பாக செயற்படுகின்றனர்.

ஆர்ஜன்டீனா மற்றும் பிரான்ஸ் அணிகள் உலகக் கிண்ணத்தில் மோதுவது இது நான்காவது முறையாக உள்ளது. இதற்கு முன்னர் 1930 மற்றும் 1978இல் குழுநிலையில் வைத்து பிரான்ஸை ஆர்ஜன்டீனா வீழ்த்தியது. நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இந்த இரு அணிகளும் 16 அணிகள் சுற்றில் மோதியபோதும் ஆர்ஜன்டீனாவை பிரான்ஸ் 4–3 என்ற கோல் வித்தி

கிண்ணத்தை யாரும் புதிதாக வெல்லப்போவதில்லை. பிரான்ஸ் 1998 மற்றும் 2018 உலகக் கிண்ணத்தை வென்றிருப்பதோடு ஆர்ஜன்டீனா 1978 மற்றும் 1986இல் உலகக் கிண்ணத்தை கைப்பற்றி இருக்கிறது. அதாவது எந்த அணி வென்றாலும் அந்த அணிக்கு இது மூன்றாவது உலகக் கிண்ணமாக இருக்கும்.

### தங்கப் பாதணி யாருக்கு?

இம்முறை உலகக் கிண்ணத்தில் அதிக கோல்கள் பெற்ற வீரருக்கான தங்கப் பாதணி விருதுக்கு மெஸ்ஸி மற்றும் ம்பப்பே போட்டியிடுகின்றனர். இருவரும் அதிகபட்சமாக தலா ஐந்து கோல்களை பெற்றிருக்கும் நிலையில் இறுதிப் போட்டியில் அதிக கோல்களை பெறுபவர் அந்த விருதை வெல்வார். இருவரின் கோல்களும் சமநிலையாகும் பட்சத்தில் அதிக கோல் உதவிகளை வழங்கியவர்கள் விருதுக்கு தெரிவாவார். அந்த வகையில் மெஸ்ஸி மூன்று கோல் உதவிகளை வழங்கி முன்னிலையில் உள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 டிசம்பர் மாதம் 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2022 டிசம்பர் 18 ஞாயிற்றுக்கிழமை
பல்கலை வித்தகி
சுவஸ்திகா

# அழகு தரும் எக்ஸ்-ரே



எக்ஸ்–ரே கதிரின் ஆபத்து அதனை கண்டுபிடித்த ஆரம்ப காலத்தில் பெரிதாகத் தெரியவில்லை. அழகுக் கலை நிலையங்களில் கூட எக்ஸ்–ரே கருவி இருந்தது. 1930களில் பெண்கள் தமது முகம் மற்றும் உடலில் இருக்கும் உரோமங்களை அகற்றுவதற்கு எக்ஸ்–ரே கதிரை பயன்படுத்தி இருக்கிறார்கள். முகத்துக்குக் கூட எக்ஸ்–ரே கதிரை பயன்படுத்தும் அளவு நிலைமை மோசமாகத்தான் இருந்தது. அதாவது உடலில் இருக்கும் உரோமங்களை நிரந்தரமாக அகற்ற வருடத்துக்கு 15 தடவைகள் எக்ஸ்–ரே கதிர் சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். இப்படி சிகிச்சை பெற்ற பெரும்பாலான பெண்கள் புற்றுநோய்க்கு ஆளானதை அடுத்தே எக்ஸ்–ரேயின் அபாயம் பற்றி தெரிந்துகொண்டார்கள்.

# சிறிய திருட்டுக்கு ஆயுள் தண்டனை

மார்க் டிபிரிஸ்ட் அமெரிக்காவின் புளோரிடாவைச் சேர்ந்தவர். ஓர் ஆண்டு சிறைக்கு பதில் வாழ்நாளை சிறையில் கழிப்பவர். 1978ஆம் ஆண்டு திருட்டுக் குற்றத்திற்காக கைது செய்யப்பட்ட அவர் ஓர் ஆண்டு சிறை அனுபவித்தார். அத்தோடு அவரது சிறை வாழ்க்கை முடிந்திருக்க வேண்டும்.

ஆனால் பிணை நிபந்தனையை மீறி சட்டவிரோதமாக துப்பாக்கி வைத்திருந்ததற்காக கைது செய்யப்பட்டு நான்கு ஆண்டுகள் சிறை தண்டனைக்கு உள்ளானார். அந்தத் துப்பாக்கி கூட அண்மையில் இறந்த தனது தந்தையுடையது. எப்படியோ, சும்மா சிறை அனுபவித்துவிட்டு வந்திருக்க வேண்டும்.

13 முறை சிறையில் இருந்து தப்பிக்க முயன்றார். அதில் ஏழு தடவை தப்பிச் சென்று மீண்டும் பிடிபட்டார். இப்படி தப்பிச் செல்லும் ஒவ்வொரு தடவையும் அவரது சிறைத் தண்டனையும் அதிகரித்தது.

கடைசியாக 27 ஆண்டுகள் சிறை அனுபவித்த பின் கடந்த 2019 பெப்ரவரியில் விடுவிக்கப்பட்ட டிபிரிஸ்ட்டால் 10 நாட்களே வெளியே இருக்க முடிந்தது. மீண்டும் ஒரு தப்பை செய்ய மீண்டும் கைது செய்யப்பட்டார்.



பூகோள சஞ்சாரம்
பிர்தௌஸ்



# உண்மையிலேயே இருந்த போலி ரோமப் பேரரசர்

ஒரு கற்பனை கதாபாத்திரம் என்று இத்தனை காலமும் கூறி வந்த மூன்றாம் நூற்றாண்டின் ரோமானிய பேரரசர் ஒருவரின் கதை இப்போது தான் உண்மை என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் ஸ்பொன்சியன் என்ற பெயர் மற்றும் அந்தப் பேரரசரின் முகம் பொறித்த நாணயம் 300 ஆண்டுகளுக்கு முன் ட்ரான்சில்வேனியாவில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தப் பகுதி ரோமானிய பேரரசின் தொலைதூர புறக்காவல் நிலையமாக இருந்த இடம். ஆனால் இது போலி நாணயம், அப்படி ஒரு பேரரசர் இருக்கவே இல்லை என்று வரலாற்றாய்வாளர்கள் அடித்துக் கூறினார்கள். அந்த நாணயம் ஒப்புக்கு அருங்காட்சியகத்தின் கண்ணாடிப் பெட்டி ஒன்றில் மூடி வைக்கப்பட்டிருந்தது.

ஆனால் அந்த நாணயத்தை துல்லியமாக ஆராய்ந்திருக்கும் நவீன ஆய்வாளர்கள் அதில் கீறல்கள் விழுந்திருப்பதை கண்டுபிடித்திருக்கிறார்கள். அதாவது 1500 ஆண்டுகளுக்கு முன்னர் அந்த நாணயம் புழக்கத்தில் இருந்திருப்பதை இது நிரூபிப்பதாக இருக்கிறது.

நாணயத்தை வைத்து பேரரசர் ஒருவர் கண்டுபிக்கப்பட்டாலும் உண்மையில் அவர் யாராக இருக்கும்!

ஆய்வாளர்களின் கூற்றுப்படி அவர் ஓர் இராணுவத் தளபதி. ரோமானிய பேரரசின் தொலைதூரமான மற்றும் பாதுகாக்க கடினமான மாகாணம் ஒன்றில் அவர் தன்னிச்சையாக பேரரசராக முடிசூடிக்கொண்டிருக்கிறார். அந்தப் பகுதி டாசியா என்று அழைக்கப்படுகிறது. தற்போது அது ருமேனியாவில் அமைந்திருக்கிறது. கி.பி 260இல் அந்தப் பகுதி ரோமானிய பேரரசில் இருந்து துண்டிக்கப்பட்டிருப்பது அகழ்வாராய்ச்சிகளர்களுக்கு தெரிந்த ஒன்று. நோய்த் தொற்று, சிவில் யுத்தம் போதாக்குறைக்கு பேரரசும் பலவீனமாக இருந்தது இதற்குக் காரணமாகக் கூறப்படுகிறது.

இந்தக் குழப்பமான காலத்திலேயே ஸ்பொன்சியன் அங்கே பேரரசராக இருந்திருக்கக் கூடும்.

# லண்டன் தபால்

தொலைபேசி மின்னஞ்சல் இல்லாத காலத்தில் மக்களின் தொடர்பாடலுக்கு தபால் சேவைதான் ஒரே வழி. அப்போது தபால் சேவையில் லண்டன் நகரை விஞ்ச ஆளில்லை.

19ஆம் நூற்றாண்டின் முடிவில் லண்டன் நகரில் நாளொன்றுக்கு 12 தடவைகள் வீடு வீடாக தபால் விநியோகம் இடம்பெறும். முதலாவது தபால் விநியோகம் காலை 7.30 மணி அளவில் இடம்பெறுவதோடு கடைசி விநியோகம் இரவு 7.30க்கு இருக்கும்.

கடிதம் சில மணி நேரத்திற்கு வராவிட்டால் போதும் லண்டன் வாசிகள் தபால் அலுவலகத்தை முற்றுகையிட்டு விடுவார்கள்.



# தென் கொரியாவின் அமைதி நாள்

வருடத்தில் நவம்பர் மாதத்தின் மூன்றாவது வியாழக்கிழமை என்பது தென் கொரியாவின் அமைதி நாள். அன்றைய தினத்தில் கட்டுமான இடங்கள் வேலைகளை நிறுத்திவிடும். விமானங்கள் பறக்காது. வங்கிகள் மூடப்படும். இராணுவம் கூட தனது பயிற்சிகளை நிறுத்தும். முழு நாட்டிலுமே மயான அமைதி நிலவும்.

ஏனென்றால் அன்றுதான் தென் கொரிய மாணவர்கள் தமது வாழ்நாளில் மிக முக்கியமான பரீட்சையை எதிர்கொள்கிறாரர்கள். 12 ஆண்டுகள் கல்வி கற்ற பின் பல்கலைக்கழக நுழைவுக்காக அரை மில்லியனுக்கும் அதிகமான மாணவர்கள் சுமார் ஒன்பது மணி நேரம் அந்தப் பரீட்சைக்கு முகம்கொடுக்கிறார்கள். இது அந்த மாணவர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் முக்கிய பரீட்சை. அதற்காக மாணவர்கள் மாத்திரமல்ல முழு நாடுமே தயாராகிவிடும்.



# திகிலூட்டும் மர்மப் பேய்கள்!



உலகில் பேய்களை பின்வரும் வகைகளாகப் பிரிக்கும் ஒரு பொதுவான பேய் வகைப்பாடு உள்ளது:

பல்வேறு நாடுகளின் நாட்டுப்புறக் கதைகளில், பேயுடன் ஒரு நபரின் தொடர்புக்கு பல சான்றுகள் உள்ளன. எனவே, கிறிஸ்தவத்தில், அவர்களுடன் ஒப்பந்தங்கள் முடிக்கப்பட்டன, ஆபிரிக்க மக்களிடையே, பேய்களின் உதவியுடன், அவர்கள் பல்வேறு சடங்குகளைச் செய்தனர், மற்றும் ஸ்காண்டிநேவியர்களிடையே அவர்கள் பல்வேறு கூறுகளைக் குறிப்பிட்டனர்.

ஒரு சூனியக்காரர் மற்றும் அவரது பெயரை அறிந்திருந்தால் ஒரு பேய் ஒரு நபருடன் தொடர்பு கொள்ள முடியும் என்று நம்பப்படுகிறது. ஒரு பேயை அழைப்பது சிறப்பு சடங்குகள் பற்றிய அறிவு இல்லாமல் உயிருக்கு ஆபத்தானது. அவற்றின் இயல்பால், பெரும்பாலான பேய்கள் தீமை மற்றும் குழப்பத்திற்கு இயற்கையான போக்கைக் கொண்டுள்ளன. அவர்கள் சந்திக்கும் எதையும் அழிக்கவும், சிதைக்கவும் விரும்புகிறார்கள்.

பேய்களுக்கு பல பெயர்கள் உள்ளன. எனவே, மனிதர்களின் நரகத்தின் பேய்களின் பெயர்கள் பல்வேறு வரலாற்று மற்றும் மத ஆவணங்களில் காணப்படுகின்றன. அவற்றில் சில இதோ:

லூசிஃபர் ஒரு வீழ்ச்சியடைந்த தூதரும் ஆவார். இது "ஒளிரும்" என்றும் அழைக்கப்படுகிறது. அவருக்கு பல பெயர்கள் உள்ளன. அவர் சாத்தான், நரகத்தின் இளவரசர், பள்ளத்தின் கடவுள் மற்றும் விடியலின் மகன் என்று அழைக்கப்படுகிறார்.

கடவுளுக்கு எதிராக ஒரு கிளர்ச்சியை எழுப்பினார். மேலும் சில ஆதாரங்களின்படி, அவர் நரக சமவெளிகளையும் அனைத்து பேய்களையும் உருவாக்கினார். ஓ லூசிபர் நரகத்தின் முக்கிய நபராக இருக்கிறார் மற்றும் அங்குள்ள ஒரே ஆட்சியாளராக கருதப்படுகிறார்.

கூடுதலாக, பல்வேறு மக்களிடையே, காட்டேரிகள், இன்குபி, ஜின், டிபுக் மற்றும் பல தீய சக்திகள் பேய்களாக மதிப்பிடப்பட்டுள்ளன.

பேய் உலகம் அதன் சொந்த வரிசை முறையைக் கொண்டுள்ளது, மேலும் ஒவ்வொரு பேயும் அதனுடன் தொடர்பு கொள்ளும் வழியைக் கொண்டுள்ளது உடல் உலகம், அத்துடன் அதன் சொந்த செல்வாக்கு மண்டலம்.

முன்னதாக, சில பேய்கள் இந்த வார்த்தையின் நேரடி அர்த்தத்தில் இல்லை. பிறகு இந்த தெய்வங்கள் பேய்களிடையே இடம்பிடித்தன. அதற்கு முன், இந்த நிறுவனங்கள் வெவ்வேறு பழங்குடியினரின் தெய்வங்களாக இருந்தன. அவர்கள் வணங்கப்பட்டனர், தியாகம் செய்தனர், உதவி கேட்டனர். அவர்கள் தீமைக்கு மட்டுமல்ல, நல்ல செயல்களுக்கும் பெருமை சேர்த்தனர். அவர்களைப் பற்றி புராணங்கள் உருவாக்கப்பட்டன, அவர்கள் அவர்களிடம் பிரார்த்தனை செய்தனர். மேலும் அவர்கள் தெய்வத்திற்கு மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ்ந்தனர்.

ஆனால் பெரிய நாகரிகங்களின் வளர்ச்சியுடன், பல தெய்வீகங்கள் மறந்துவிட்டன அல்லது தீமையின் வெளிப்பாடுகளில் தரவரிசைப்படுத்தப்பட்டன. ஆரம்பத்தில் அவர்கள் அழிப்பவர்களாக இல்லை மற்றும் மக்களின் ஆன்மாக்களை அச்சுறுத்தவில்லை.

நரகத்தின் பேய்களின் பெயர்களான ஆண்களின் பெயர்களை இப்போது நீங்கள் அறிவீர்கள். ஆண் ஆவிகள் மற்றும் தெய்வங்களுக்கு கூடுதலாக, பேய்களின் உலகில் ஆவிகளும் உள்ளன, அவை பெண் ஹைப்போஸ்டேஸ்கள் என்று குறிப்பிடப்படுகின்றன. அவர்கள் ஆண் பேய்களைக் காட்டிலும் குறைவான இரக்கமற்றவர்கள் மற்றும் மிரட்டுபவர்கள். மேலும் அவர்கள் விஷயங்கள் மற்றும் நிகழ்வுகளின் மீது ஒரு குறிப்பிட்ட சக்தியைக் கொண்டுள்ளனர். பெரும்பாலும், ஆண் பேய்கள் போர் மற்றும் கொலைகளில் ஈடுபடுபவர்கள். ஆனால் பெண் பேய்களில், புத்திசாலித்தனமான போர்வீரர்கள், தளபதிகள் மற்றும் வியூகவாதிகள் உள்ளனர்.

மக்களை திகிலடையச் செய்யும் அத்தியாயங்கள், ஒருவேளை, பல்வேறு மக்களின் புராணங்களிலும் புராணங்களிலும் உள்ளன. அவர்களின் தோற்றம் நாட்டுப்புறக் கதைகளின் தோற்றத்திற்கு செல்கிறது. ஒரு விதியாக, பலவிதமான அமானுஷ்ய அசுரர்கள் தீமை, மரணம் அல்லது தண்டனைக் கருவியாக இருந்தனர். உயர் அதிகாரங்கள்... எங்கள் மதிப்பாய்வில், வெவ்வேறு கலாச்சாரங்களிலிருந்து மிகவும் திகிலூட்டும் மற்றும் பயங்கரமான நிறுவனங்கள்.



### 1. பிசாச்சி

பிஷாச்சி என்பது இந்து புராணங்களில் உள்ள மிகவும் பயமுறுத்தும் மாமிச பேய்கள். அவர்கள் இருண்ட முகங்கள், பெருத்த நரம்புகள் மற்றும் சிவந்த கண்களுடன் சித்தரிக்கப்பட்டனர். பிசாச்சி எப்போதும் மனித சதைக்காக பசியுடன் இருக்கும்.

### 2. வேட்டல்கள்

பிணங்களுக்குள் நகரும் ஆவிகள், அதன் பிறகு அவை சிதைவதை நிறுத்தி ஜோம்பிஸ் போல நகரும் திறனைப் பெறுகின்றன. இருப்பினும், வேட்டல்களும் தங்கள் சொந்த விருப்பப்படி சடலத்தை விட்டு வெளியேறலாம்.

### 3. ரோனோவ்

பேய் அறிவியலில், ரோனோவ் மார்கிஸ் மற்றும் நரகத்தின் பெரிய ஏர்ல் என்று கருதப்படுகிறார், அவர் இருபது படையணி பேய்களுக்கு கட்டளையிடுகிறார். அவர் பெரும்பாலும் கையில் ஒரு தடியை வைத்திருக்கும் ஒரு வகையான தெளிவற்ற அரக்கனாக சித்தரிக்கப்படுகிறார். இறக்கும் மக்கள் மற்றும் விலங்குகளின் ஆன்மாக்களை அவர் சேகரிக்கிறார் என்றும் நம்பப்படுகிறது.

### 4. ராக்ஷசா

இந்த பேய் ஆவிகள் இந்து புராணங்களில் இருந்து வந்தவை, ஆனால் அவை புத்த மதம் போன்ற பிற மதங்களிலும் காணப்படுகின்றன. அவர்கள் நரமாமிசங்கள் என்று அழைக்கப்படுகிறார்கள், மேலும் உயிருடன் இருக்கும்போது பாதிக்கப்பட்டவர்களை விழுங்குகிறார்கள். இவர்கள் இரத்த வெறியால் நிரம்பியிருந்தனர், அவர்கள் உருவாக்கப்பட்டபோது அவர்கள் தங்கள் படைப்பாளரான பிரம்மாவை விழுங்க முயன்றனர்.

### 5. பிரேதா

பசித்த பேய்கள்" என்றும் அழைக்கப்படும் ப்ரீட்டா ஆவிகள் சில இந்திய மதங்களில் காணப்படுகின்றன. அவர்கள் எந்த வகையிலும் திருப்திப்படுத்த முடியாத பயங்கரமான பசி மற்றும் தாகத்தால் அலைந்து திரிந்து துன்பப்படுகிறார்கள். இந்த மதங்களின்படி, தங்கள் வாழ்நாளில் பேராசை, ஊழல், பொறாமை மற்றும் பேராசை கொண்டவர்கள் பிரேதமாக மாறுகிறார்கள்.

### 6. லெமர்ஸ்

பண்டைய ரோமானிய மதத்தில், எலுமிச்சைகள் இறந்தவர்களின் தீய அமைதியற்ற ஆவிகளாக இருந்தன, அவை திகிலூட்டும் வகையில் அறியப்பட்டன தோற்றம்... அவர்கள் கிரேக்க அசுரன் லாமியாவுடன் தொடர்புடையவர்கள் என்றும் நம்பப்பட்டது, அதன் பிறகு அவர்கள் பெயரிடப்பட்டனர்.

(தொடரும்)

**பல்வேறு மக்களிடையே, காட்டேரிகள், இன்குபி, ஜின், டிபுக் மற்றும் பல தீய சக்திகள் பேய்களாக கருதப்பட்டன. பேய் உலகம் அதன் சொந்த வரிசை முறையைக் கொண்டுள்ளது, மேலும் ஒவ்வொரு பேயும் அதனுடன் தொடர்பு கொள்ளும் வழியைக் கொண்டுள்ளது.**



# எஸ்.எல்.எம். இனிப்பு மனிதர்

ஈழத்து இலக்கியப்புலத்தில் மேலெழும் பெயர் 'எஸ்.எல்.எம்' என்று எல்லோராலும் அழைக்கப்படும் எஸ்.எல்.எம்.ஹனீபா.

எழுத்தின் வசீகரத்தால் மட்டுமன்றி கதையாடும் நடிபாகத்தாலும் இனிய மனிதராய் இருப்பவர். மக்கத்துச் சால்வையைத் தவிர்த்து ஈழத்தின் கதைக் களம் குறித்தோ கிழக்கின் முஸ்லிம் பண்பாட்டுக் கதைத்தளம் குறித்தோ பேசுவது முழுமையற்றது எனும் அளவு அவதானிப்புக்குரிய இலக்கியகாரர் எஸ்.எல்.எம்.

மக்கத்துச்சால்வை, அவளும் ஓர் பாற்கடல் என்பன இவரது கதைப்பிரதிகள். நவீனம் சார்ந்த கதை சொல்லி எஸ்.எல்.எம்.

இலக்கியம் என்பது எழுத்துத் தாண்டிய செயற்பாட்டு வடிவம் என்பதால் இலக்கியம் குறித்து இளந்தலைமுறையையும் கவர்ந்து நிற்கும் கள ஆட்டக்காரர் இவர். அதற்கும் அப்பால் சமூகத்துக்குப் பயனான பல விடயங்களில் விதையூன்றியவர். வை.அஹ்மத் மு.வி.இதற்கு சான்று.

எஸ்.எல்.எம். தமிழ், முஸ்லிம் மக்களிடையேயும் இலக்கியப்புலம் சார்ந்தோரிடையேயும் நெருங்கிய இணைப்புப் பாலமாகவும் திகழ்பவர். எஸ்.எல். எம் குணாம்சம் எல்லோரையும் மகிழ்விப்பது. நகைச்சுவை உணர்வுபூர்வமாக பேசுவது. தலைமுறை இடைவெளி தாண்டி தோளில் கைபோட்டுக் கொண்டு இலக்கியம் பூராகவும் பேசித்திரிவது.

கல்விவெளியீட்டுத் திணைக்களத்தின் தமிழ்இலக்கியம் விருப்பத்துக்குரிய பாடத்தில் மக்கத்துச் சால்வை இடம்பிடித்திருந்த காலத்தில் இவரது கதை ஆளுமை எல்லோராலும் போற்றப்பட்டது. உணர்வு பூர்வமான கதைகளின் சொந்தக்காரர் அவர்.

அண்மையில் வெளிவந்த மக்கத்துச்சால்வை மண்ணும் மனமும் எஸ்.எல்.எம். பாசத்தைப் பேசுகிறது. அண்மையில் பேஜஸ் புக்ஸ் மற்றும் மக்கத்துச் சால்வை குழு இணைந்து ஏற்பாடு செய்த இலக்கியச் சந்திப்பு, இனிப்பு மனிதனின் இளகிய மனசினூடு படரும் அனுபவங்களைப் பகிர்ந்தது.

எஸ்.எல்.எம் சிறுகதைகளுக்கப்பால் நெடு நாவலாகி நிற்கிறார்.

# தாஸீன் நத்வியின் வாழ்வும் பணியும்

ஜாமிஆ நளீமியா கலாபீடத்தின் முதலாவது முதல்வர் மர்ஹூம் யூ.எம். தாஸீன் நத்வி பற்றி ஓய்வுநிலை ஆசிரியர் யூ.எம்.பஹுர்தீன் எழுதிய 'கம்மல்துறை தந்த அறிஞர் யூ.எம்.தாஸீன் வாழ்வும் பணியும்' என்ற நூலின் வெளியீட்டு நிகழ்வு நீர்கொழும்பு போருத்தொட்ட அல்-பலாஹ் முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில் இன்று (18) மாலை 3.30க்கு இடம்பெறுகிறது.




இலங்கை முஸ்லிம் புலமைத்துவ சிந்தனையாளர்களில் குறிப்பிடும்படியான சமூக மனிதன் மர்ஹூம் அஷ்ஷெய்க் தாஸீன் நத்வி, இலங்கை முஸ்லிம்களின் கல்வி மறுமலர்ச்சிக்கு வழிகாட்டியவர். அறிஞர் சித்திலெப்பை, அறிஞர் எ.எம்.எ.அஸீஸ் ஆகியோரைத் தொடர்ந்து களப்பணி செய்தவர். எகிப்து அல்-அஸ்ஹர் பல்கலையில் பயின்றவர். தமிழ், அரபு, உருது, ஆங்கிலம், பாரசிகம் ஆகிய மொழிகளில் தேர்ச்சியடைந்தவர். அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் தலைவராக, செயலாளராக பணி செய்தவர். ஜாமிஅத்தே இஸ்லாமியின் தலைவராக இருந்தவர். மறைதாசன் என்ற பெயரில் கவிதை இலக்கியம் படைத்தவர்.

இத்தகைய ஆளுமை மனிதன் பற்றிய நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு பஹுர்தீன் பவுண்டேஷன் சகலரையும் அழைக்கிறது.

## மழலை

முல்லை முஸ்ரிபா



# முயலாடு முன்றில் 01

குழந்தை உலகு அழகானது, அற்புதமானது, உணர்வு பூப்பது, அன்பொழுகும் சொற்களாலானது. குழந்தைகள் இல்லாத உலகொன்று கற்பனையிலும் கருமையானது, உணர்வற்றது, உயிரற்றது.

குழந்தைகள் வாழும் வீடு வெளிச்ச வீடு, வெள்ளை மன வீடு, அத்தகைய வீட்டில் கேட்கும் குரல் இனிமையானது, யாழினிமையானது, குழலினிமையானது, அவற்றுள் மழலைச் சொல் இனிமையானது.

முயலின் அழகுத் தோற்றம், அதன் மென்மை, வெண்மை, துள்ளல், துடித்தல், இயங்கல், முயலுதல், அது ஓடியாடும் முற்றமும் அழகானதுதான். அதுபோலவே குழந்தைகளது சிறுபாதம் மண்ணில் புதைய ஆடிமகிழும் முற்றம் முயலாடு முன்றில்தான்.

குழந்தைகள் இல்லாத வீடு இருள் வீடாகிறது. அங்கொரு மின்மினியை ஏற்றி வைத்தால் எத்தனையழகு.

குழந்தையுலகு குறித்து ஆன்மீகம் அழகிய முன்மாதிரிகளைக் கூறுகிறது. குழந்தை உளவியல், குழந்தைக் கல்வி, குழந்தை மருத்துவம், குழந்தை விளையாட்டு, குழந்தைத் திறன்கள், குழந்தையுரிமை குழந்தையிலக்கியமெனக் குழந்தையும் உயிரூட்டப்படுகிறது.

மறுபுறம் குழந்தைத்தொழில், குழந்தை வறுமை, குழந்தைத்தவிப்பு, குழந்தைத்துஷ்பிரயோகம், குழந்தைக் கடத்தல், குழந்தைப்போர், குழந்தைப்பெற்றோர், குழந்தையடிமை என குழந்தைகள் மீது கருமிருள் படிகிறது.

இத்தகைய சூழலில் இருந்து குழந்தைகளை மீட்டெடுத்து அவர்களுக்கான உலகை வர்ணமயப்படுத்துவது அனைவரதும் கடமையாகும். முயலாடு முன்றிலொன்றின் வீட்டு முற்றத்தில் படர்கிற இனிய பொழுதுகள் அழகானவை.

இலக்கியத்தின் கூறு, நாட்டாரியலின் கூறு குழந்தைகள் சார்ந்தது. தாலாட்டு எனும் செயல்வடிவப் பாடல்கள் குழந்தைகளுக்கும் தாய்மைக்குமிடையிலான அன்பைப் பரிமாறுபவை. 'ஆரோரோ....' என்பது ஆராருக்கோ ஆனதல்ல. அது குழந்தைகளுக்கானது. ஆரோரோ..... ஆரிவரோ..... ஓசைக்குள் கட்டுண்டு கிடக்கிறது குழந்தை அன்பின் அடர்வெளி. இவை வெறுமனே குழந்தைகளை நாவாட்டி உறங்க வைக்கிற பாடல்களல்ல. உயிர்ப்பூட்டுகின்ற உணர்வு, நரம்பிலூறி வழியும் மொழியின் வலிமை.

தாலாட்டுப் பாடல்கள் மொழி எல்லை கடந்தவை. எழுத்தறியா மக்களின் நாவறிந்த இசைச் சொல்லாடல்கள். சிறுவர் இலக்கியத்தின் ஓரம்சமாகவும் தாலாட்டுப் பாடல்கள் பதிவாகின்றன. தொட்டிலிலேயே குழந்தைப் பாடல்கள் தொடங்கிவிடுகின்றன. அன்னை பாடலாசிரியராகி விடுகிறாள். ''கொட்டி வைத்த முத்தே குவிந்த நவரத்தினமே கட்டிப் பசும்பொன்னே கண்மணியே கண் வளராய்' எனப்பாடல் வளர்கிறது. குழந்தைகளும் கை அசைத்து மகிழும் இத்தகைய பாடல்கள் பலவற்றை நாட்டாரியலில் காணுகிறோம்.



''நிலா நிலா ஓடி வா
நில்லாமல் ஓடி வா
மலைமேல் ஏறி வா
மல்லிகைப்பூ கொண்டு வா' குழந்தைகளின் அழகு முகத்தைப் பதிகிறது பாடல்.

''சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு சாயக்கிளியே சாய்ந்தாடு....'', ''கை வீசம்மா கை வீசு கடைக்குப் போவோம் கை வீசு....'' என முயலாடு முன்றில் குழந்தைச் செல்வங்களின் அட்டகாசங்களால் நிறைந்து மகிழ்கிறது.

ஒளவ் கவிதை

# குளிரெனும் பேய்

யன்னல் இடுக்கினூடே கசியும்
ஒரு வெள்ளைத்துளியாத் திண்மத் திரட்சியா
மெல்லுடலைப் போர்த்துகிறது கணம்
கண்களை யன்னலுக்கு வெளிச்செலுத்துகிறது காலம்
வானம் தொலைந்தது
நிலவில் இத்தனை மறு
வானம் தொலைந்தது
என் மஞ்சனாத்தியுலுறையும் வாகையிலும் பேய்
காலையையெழுப்பும்
காகத்தின் சிறகுகளின் கீழுறையும் குளிர்மை
நகர முடியா மனசைப் பொத்தி உள்ளெறிகிறேன்
புகை மண்டலமெனக் குவிகிறது
குளிரெனும் பேய்
நேற்றைய கனவில்
தாலாட்டி இசையத்த குரலில் வன்மமேறிற்று
திண்மமாயின்று நிற்கிறது மெல்லுடல் காலம்
குளிரின் பேய் குறித்து
ஆயிரம் கதைகள் திரிகின்றன
ஒரு கதையிலும் தூய்மையில்லையென்கிறது
காற்று
மரம்
செடி
கொடி
என் மூச்சு



# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி



**ஆசிரியை :** துரியோதனன் தன்னோட உயிர தொடைலதான் வச்சுண்டுருந்தானாம்.

**மாணவன் :** இதென்ன டீச்சர் பெரிய விஷயம் நம்ம கிளாஸ் ரவி அவனோட உயிர ரம்பாவோட தொடைலல்ல வச்சுருக்கான்.



**கணவன் :** எல்லாப் பொண்ணுங்களையும் கூடப் பொறந்த சகோதரியா பாக்குறேன்

**மனைவி :** உங்க பார்வையைப் பார்த்தால் அப்படித் தெரியலியே.....

**கணவன் :** உன் கூடப் பிறந்த சகோதரியா நினச்சுப் பாக்குறேன்.



**பெண் 1 :** நேற்று என் கச்சேரிக்கு வருவீங்கன்னு ரொம்ப எதிர்பார்த்தேன்...

**பெண் 2 :** வரணும்னுதான் சார் நினைச்சேன். அதுக்குள்ள வேற கஷ்டம் ஒண்ணு வந்துட்டுது.



**டாக்டர் :** நடிகருக்கும், மருத்துவருக்கும் என்ன ஒற்றுமை?

**நோயாளி :** ரெண்டு பேரும் ஏதாவது ஒரு தியேட்டர்ல யாரையாவது போட்டு அறுத்துக்கிட்டிருப்பாங்க



**அப்பா :** பேய் உலகத்துலயே காசுதாண்டா முக்கியம் காசு இல்லன்னா எதையுமே வாங்க முடியாதுடா.

**மகன் :** ஏன் கடன் வாங்கலாமே . .



**சோமு:** நேத்திக்கு...நம்ம கிரிக்கெட் வீரர்களுக்கு நடந்த பாராட்டு விழாவுல கலந்துகிட்ட நம்ம தலைவர் வாய் தவறி...புலம்பி... மானத்தை வாங்கிட்டா ருய்யா... !!

**ராமு :** என்ன பேசினாரு....

**சோமு :** நமது அணி சில விஷயங்களில் வீக் ... ஆக இருந்தாலும்... ‘ பேட்டிங்கில் ’ வலுவாக உள்ளதுன்னு சொல்லி தொலைச்சுப்புட்டாறு...!



**போலிஸ் :** டெய்லி போலிஸ் ஸ்டேஷன்ல வந்து 2 வேளையும் கையெழுத்து போட்டு போகணும் தெரியுதா?

**திருடன் :** கையெழுத்து போட்டுட்டு நான் வழக்கம்போல திருடப் போலாங்களா ஐயா?



**நீதிபதி :** ஏன் இப்படி கைதிகளை முதுகு வளைஞ்ச நிலைலே கோர்ட்டுக்கு கூட்டிட்டு வர்றீங்க இப்படியா ட்ரீட் பண்றது?

**போலிஸ் :** நாங்க மடக்கி பிடிச்சதுல இது மாதிரியாயிடுச்சு சார்.



**நண்பி 1 :** "பொண்ணு வீட்டுக்காரங்க ஏன் கல்யாணத்தை ஆனாலும் தள்ளி வச்சுகிட்டே போறாங்க?"

**நண்பி 2 :** "ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணத்த முடிக்கணும்னு பெரியவங்க சொன்னத சீரியசா எடுத்துகிட்டாங்க. அதனால இன்னும் 300 பொய் சொன்னப் பிறகு தான் கல்யாணமாம்.



**மாமி :** கல்யாணமான புதுத் தம்பதியர் என்னென்ன கத்துக்கிறாங்க?

**மருமகள் :** புருசன் சமயல் பண்ண கத்துக்கிறான்.

**மாமி :** பொண்டாட்டி சண்டை போடக் கத்துக்கிறா.



**மருமகள் :** நிலம் எங்க மாமனார் வாங்கித் தந்தது. வீடு கட்டற செலவு கணவன் ஆபீஸில் லோன் போட்டு வாங்கியது. வீட்டுல இருக்கிற பொருள் எல்லாம் மச்சான் பாரீன்ல இருந்து அனுப்பி வைச்சது .. .. எப்படி இருக்கு என் வீடு ?

**மாமி :** ம் .. .. .. உங்க வீடா ?



**வேலு :** யாரது டெய்லி ராத்திரி 2 மணிக்கு வந்து உங்கள கூட்டிட்டு போறது?

**ரமனன் :** என் பிரண்டுதான். அவனுக்கும் தூக்கத்துல நடக்கிற வியாதி. எனக்கும் அதே வியாதி. அதனால நான் தான் ஒரு கம்பெனிக்காக வந்து எழுப்பச் சொல்லியிருக்கேன்.



**நோயாளி :** "டாக்டர் மயக்க ஊசி போடாம ஆபரேஷன் செய்றீங்க. எனக்கு பயங்கரமா வலிக்குது."

**டாக்டர் :** கொஞ்சம் பொறுத்துக்குங்க. கொஞ்ச நேரத்துலதான் "எல்லாமே" முடிஞ்சுடுமே."

**ராமு :** "அந்த டாக்டர், அஞ்சல் வழியில் சட்டம் படிக்கிறார்"

**சோமு :** "எதுக்கு?"

**ராமு :** "ஆபரேசன் பண்ண வர்ற வங்களுக்கு அவரே உயில் எழுதப் போறாராம்".



**அரசியல்வாதி :** கள்ள நோட்டு அடிக்கறதே குற்றம் . . . இதுல என்ன திமிர் இருந்தா 1000 ரூபாய் நோட்டை தலைகீழா அடிப்பே . . .

**தொண்டன் :** என்ன செய்யறது எஜமான் . . . தண்ணியடிச்சிட்டு நோட்டு அடிச்சதால தவறுதலா "0001"ன்னு அடிச்சிட்டோம் . . .

# முதன் முதலாக கவிதை எழுதியதே கம்பன் கழக கவிதைப் போட்டியில்

## பல்கலை வித்தகியாகத் திகழும் சுவஸ்திகா

**கணிதத்திலும் கவிதையிலும் தனித்துவத்தைக் காட்டி தன்னகரில்லா ஓர் இடத்தை தக்க வைத்துக் கொண்டு முன்னேறி வரும் ஒரு இளம் பெண் சுவஸ்திகா ராஜ்பிரகாஷ். கவிதை எழுதுவது மட்டுமன்றி மொழிபெயர்ப்பு செய்தல், வலைத்தள கட்டுரைகள் எழுதுதல், பிராண்ட்களுக்கான வீடியோ கன்டன்ட் உருவாக்குதல் மற்றும் எழுதுதல், நடித்தல், ரிவீவ் செய்தல், பேட்டி எடுத்தல், நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குதல், நடனமாடுதல், பாடல் எழுதுதல் என பல்வேறு அம்சங்களில் தன் திறமையைக் காட்டிவருபவர் இவர். இவருடன் உரையாடியதில் கிடைத்த தகவல்களை பரிமாறிக் கொள்கிறோம்.**

◆ ***உங்களைப் பற்றிய அறிமுகம்...***

நான் சுவஸ்திகா ராஜ்பிரகாஷ். கொழும்பு விபுலானந்த தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்றேன். கொழும்பு விவேகானந்த கல்லூரியில் உயர்தரத்தில் பௌதீக விஞ்ஞானத்தில் கற்றேன். தற்போது ஒரு எழுத்தாளராகவும் பகுதி நேர கணித ஆசிரியராகவும் இருக்கிறேன். பாடசாலையில் படிக்கும் காலத்திலேயே பாடசாலைகளுக்கிடையிலான கட்டுரை, கவிதை மற்றும் சிறுகதைப் போட்டிகளில் ஆர்வத்துடன் பங்கேற்பேன். அதில் எப்படியாவது முதல் மூன்று இடத்திற்குள் என் பெயர் தெரிவாகிவிடும். அப்படித்தான் எழுத்துறை ஆரம்பமானது.



◆ ***முதல் கவிதை அனுபவம் பற்றி..***

கவிதை என்றால் என்ன? அதை எவ்வாறு எழுதுவது? போன்ற எந்தவொரு அடிப்படை அறிவுமில்லாமலே முதன் முதலாக ஒரு கவிதைப் போட்டிக்குச் சென்றேன். என்னுடைய 15 ஆவது வயதில். நான் பாடசாலை கற்கும் காலத்தில் என்னுடைய தமிழாசான் திருமதி கணேசராஜா. அவர் தான் எனை அதில் பங்கேற்க வைத்தார். நான் முதன் முதலில் பங்கேற்றது அகில இலங்கை கம்பன் கழக கவிதைப் போட்டியில் தான். அங்கே தான் என்னுடைய கவிதைக்கான பிள்ளையார் சுழி போடப்பட்டது. என்னவென்றே தெரியாமல் நானும் அப்போட்டியில் பங்கேற்று நடைபெற்ற மூன்று கட்டப் போட்டிகளிலும் தெரிவாகி அகில இலங்கை கம்பன் கழக விழாவில் இரண்டாம் பரிசை வென்றெடுத்தேன். அப்போதே கவிதை எழுதும் ஆர்வம் ஆரம்பமாகி விட்டது. அதன் பின் கவிதைப் புத்தகங்கள் படிக்க ஆரம்பித்தேன். நான் தேடிப் படித்த முதற் புத்தகம் கவியரசர் கண்ணதாசனுடைய கவிதைப் புத்தகம் தான். அதன் பின்னர் கவிதைத் தொடர்பாக எந்தப் போட்டி நடைபெற்றாலும் அதை ஒரு வாய்ப்பாக எண்ணி தவறாது பங்கேற்று பரிசில்களும் பெற்றிருக்கிறேன். பல பாடசாலைகளிடமிருந்து கவிதைக்கான விருதுகளையும் பெற்றிருக்கிறேன். இலங்கைமற்றும் இந்தியாவில் நடைபெறும் கவிதைப் போட்டிகளிலும் பங்கேற்று இருக்கிறேன். புதிய அலை கலை வட்டம், பாலுமகேந்திரா நூலகத்தின் சிறுகதைப் போட்டி, மைல் கல்லு போன்ற போட்டிகளிலும் பங்கேற்று பரிசில்களை வென்றெடுத்தேன்.







◆ ***புத்தகம் எழுதும் ஆர்வம்..***

கவிதைப் புத்தகம் எழுதவேண்டும் என்று நான் நினைக்கவில்லை. ஒரு முறை பத்திரிகையை மேலோட்டமாக பார்த்தபோது இலங்கை கலை கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு புத்தக போட்டி கண்களுக்கு தென்பட்டது. அதில் கவிதைப் புத்தகப் போட்டியும் இடம்பெற்றிருந்தது. அதில் பங்கேற்க வேண்டுமென்று பங்கேற்றேன். அப்போட்டிக்கு 'யார் நீ' என்ற தலைப்பில் 24 கவிதைகள் உள்ளடங்களாக ஒரு புத்தகத்தை எழுதி அதனை அனுப்பி வைத்தேன். அதில் நான் தெரிவாகவில்லையென்றாலும் அந்த புத்தகத்தை நானே வெளியிடவேண்டுமென்ற எண்ணத்தை எனக்குள் ஏற்படுத்திக் கொண்டேன். நான் எழுதிய அந்த 'யார் நீ' புத்தகத்தை மறுசீரமைத்து மொத்தமாக 32 கவிதைகள் உள்ளடங்களாக 'படி கட" என்ற இந்த புத்தகத்தை வெளியிட்டேன். இந்த வெற்றிக்குப் பிறகு அடுத்ததாக 'காவியத்தலைவன் கர்ணன்" என்ற புத்தகத்தை எழுதி வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறேன். மிக விரைவிலேயே அதனை எழுதி வெளியிட எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

◆ ***நீங்கள் எழுதிய 'படி கட" நூலைப் பற்றி..***

'படி கட" என்ற இந்தப் புத்தகத்தில் நான் எழுதியிருக்கும் கவிதைகள் படிப்பவர்களுக்கு ஊக்கமூட்டுவதாக இருக்கும். படிப்பவர்கள் புரிந்து கொள்ளக் கூடிய எளிய நடையிலேயே புதுக்கவிதை வடிவில் எழுதியிருக்கிறேன். எனது இந்தப் புத்தகம் வாழ்க்கையில் நாம் வெற்றியடைய ஒரு உந்து சக்தியாக இருக்கும். ஒவ்வொருவருமே தனித்தனி திறமைபெற்றவர்கள். அவர்கள் தம்முடைய கனவை அடைய பல படிகளைக் கடக்க வேண்டியிருக்கும். அந்தப் படிகளை தெரிந்து கொள்ள என் புத்தகத்தை படித்து கடந்து செல்ல வேண்டும் என்ற இரு பொருள்பட 'படி கட" என்ற தலைப்போடு எனது இந்த கன்னிப் புத்தகத்தை வெளியிட்டேன். பல தடைகளைத் தாண்டினால் தான் இலக்கை எட்ட முடியும். அதேபோல் ஒரு விடயத்தை வெற்றிகரமாக நடாத்த நாம் பல தடைகளைக் கடக்க வேண்டியிருக்கும்.

**(07ஆம் பக்கம் பார்க்க)**



கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543

(06ஆம் பக்கத் தொடர்)



என்னுடைய புத்தக வெளியிடும் அப்படித்தான். அதுவும் இது என்னுடைய கன்னிப் புத்தகம் என்பதால் எந்தவித முன் அனுபவமும் இல்லாது அதனை வெளியிடயிருந்தபோது பொருளாதார நெருக்கடி, அரங்கேற்ற ஒரு மேடை, குறித்த காலத்திற்குள் புத்தகத்தை வெளியிட வேண்டியிருந்த நிலைமை போன்ற பல சவால்களுக்கு எனக்கு முகங்கொடுக்க நேரிட்டது. இருந்தாலும் வெற்றிகரமாக என் புத்தகத்தை வெளியிட்டேன். என்னுடைய சொந்த முயற்சியால் இந்தப் புத்தகம் கருவூட்டப்பட்டாலும் பல கரங்கள் இல்லாமல் இது வெளியிடப் பட்டிருக்காது. என் குடும்பத்தார், அதிபர் மற்றும் ஆசிரியர்கள், சக ஊழியர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள், வாசகர்கள் என அனைவருமே எனக்கு பக்க பலமாக இருந்து என் புத்தகம் வெற்றியடைய உதவியுள்ளனர்.



### ◆ ஏனைய செயற்பாடுகளின் மீது கொண்டுள்ள ஆர்வம்..

கவிதை எழுதுவது மட்டுமன்றி மொழிபெயர்ப்பு செய்தல், வலைத்தள கட்டுரைகள் எழுதுதல், பிராண்ட்களுக்கான வீடியோ கன்டன்ட் உருவாக்குதல் மற்றும் எழுதுதல், நடித்தல், ரிவீவ் செய்தல், பேட்டி எடுத்தல், நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குதல், நடனமாடுதல், பாடல் எழுதுதல், கை வேலைப் பாடுகள் செய்தல், பிறந்தநாள் நிகழ்வு அலங்காரங்கள் செய்தல், சுவரோவியங்கள் வரைதல் என பல்வேறு அம்சங்களிலும் ஈடுபட்டு வருகிறேன். வேறமாறி யூடியுப் சேனலில் *Foodie With Hoodie* நிகழ்வின் ஃபுட் ரிவீவராக இருக்கிறேன். முத்துக்குமரன் இயக்கிய 'திங்க்' குறும்படத்தில் நடித்ததோடு சனாதனன் இயக்கத்தில் வெளியாகவுள்ள 'மௌனமொழி' திரைப்படத்திலும் நடிக்க இருக்கிறேன். சிவ ராத்திரியை முன்னிட்டு ஒரு பாடலை எழுதியிருப்பதோடு அதை அடுத்த ஆண்டே வெளியிடவிருக்கிறேன்.



### ◆ உங்களைப் போன்ற யுவதிகளுக்கு.....

எம்மால் முடியாததென்று எதுவுமே இல்லை. முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும் என்பதற்கு முயற்சி செய்து வெற்றிபெற்ற ஒவ்வொருவருடைய வாழ்க்கையுமே எடுத்துக் காட்டு.



அதில் நானும் ஒருவர். நம் அனைவருமே திறமையானவர்கள்.

நம்முடைய திறமைகள் வேறுபடலாம். ஆனால் பிடித்த துறையில் சாதித்து வாழ்க்கையில் வெற்றியடைய வேண்டும் என்று என்னைப் போன்று எண்ணிக் கொண்டு இருக்கும் இளநெஞ்சங்கள் பல.



நம்முடைய இலட்சியமும் கனவும் பிறருக்கு சிரிப்பாக இருக்கலாம். ஆனால் அதற்காக நாம் கவலைப்படக் கூடாது. முயற்சியை கைவிடாது கஷ்டப்பட்டு உழைத்து இறுதியில் நாம் அதை அடையும் போதுதான் நம்மை பார்த்து சிரித்தவர்கள் நம்மை பற்றி சிந்திக்க ஆரம்பிப்பார்கள்.

எத்தனை அவமானங்களோ, தோல்விகளோ எத்தனை இடர்கள் வந்தாலுமே நாம் துவண்டு போகக் கூடாது. எடுத்த காரியத்தை நிறைவேற்றும் வரை பின்வாங்கக் கூடாது.

தன்னம்பிக்கையோடு 'என்னால் முடியும்" என்று செய்து காட்ட வேண்டும். விடாமுயற்சியும், கடின உழைப்பும், தன்னம்பிக்கையும் இருந்தால் நிச்சயம் எல்லோருமே ஓர் நாள் நினைத்ததை அடையலாம். சாதனையாளரும் ஆகலாம்.

**என்னுடைய கவிதைப் புத்தகத்திலிருந்து ஒரு சில வரிகள் உங்களுக்காக...**

#### பிறரின் சொல்லடிகள்

உன்மேலும் விழும் கல்லடிகள்
சேர்த்து வைத்து செதுக்கு
உன்னை..
உன் வளர்ச்சிப்படிகள்
அவர்களுக்கு செருப்படிகள்...!

#### வாழ்க்கையைத் தேடு

வாழ்வின் அர்த்தத்தை தேடு
'ஏன் பிறந்தாய்?" எனும்
அவன் கேள்விக்கு
விடையை நீ தேடு!

#### வலி கடக்காமல் வென்றால்

உன் அதிர்ஷ்டம் என்று
ஊர் உரைக்கும்
தோல்வியிலும் நீ வென்றால்
உன் உழைப்பின் பரிசென்று
அவ்வூரே புகழுரைக்கும்!

'படி கட" கவிதைப் புத்தகத்தை செட்டியார்தெருவிலுள்ள பூபால சிங்கம் புத்தகசாலையில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

## தேவை ஒரு தினம்

ஆண்டுக் கொருபொங்கல் ஆடுமாட்டுக் குண்டிங்கே
கூண்டுக்குள் வாழ்ந்திடுங் கோழிக்காய்
வேண்டியொரு
பண்டிகைக் கொண்டாடப் பாரினில் யாருளர்?
உண்பாரே சொல்வீர் உரத்து

கொல்வதற் கென்றே குறுநெல் தினமிடுவீர்
நல்ல ருசியென்றே நாக்கொழுவீர்
பல்சிக்கா
வண்ணம் பசிக்குண்ண வாட்டி வதைப்பீரே
எண்ணிவழி காண்பீர் இதற்கு

நகமும் சதையுமென நம்மோ டிருப்பர்
அகமும் புரமும் அழுக்கு சுகமாய்
நமக்காய் உயிர்துறக்கும் நற்கோழி வர்க்கம்
தமக்கென வாழ்ந்துய்யா தாய்.

இயற்கை மரணமென்ப தின்றியே நித்தம்
செயற்கை மரணமே செய்வீர் வியக்கும்
பெருநாள் பிரியாணிப் பின்னிருக்கும் கோழித்
திருநா ளெனவுண்டோ தேடு

காதல் தினமென்றும் கண்றாவி நாளென்றும்
மோதல் தினமென்றும் முட்டாள் தினமென்றும்
கொண்டாடும் பூமியிது கோழிக்கோர் நாள்தனைக்
கண்டிருந்தால் கண்காணக் காட்டு

தினசரி மாயும் திகிலோடு வாழ்வை
மனத்தொடு வைத்தே மலங்கும் இனமாய்
சனங்கொன்று சாய்த்துண்ணும் சாப்பாட்டுக் கோழி
தினமொன்று தேவையே தான்.

மெய்யன் நடராஜ்


(Ceylon Tourist Board) ... (Colombo Hilton Hotel) ... LAW ASIA 93 ... Delegates ...





# 'கிக்'

நடிகர் சந்தானம் நடித்துள்ள 'கிக்' திரைப்படத்தின் 2வது பாடலின் டீசரை படக்குழு வெளியிட்டுள்ளது.

பிரபல கன்னட இயக்குனர் பிரசாந்த் ராஜ் இயக்கத்தில் சந்தானம் கதாநாயகனாக நடித்திருக்கும் திரைப்படம் 'கிக்'. இந்த படத்தில் தன்யா ஹோப், ராகினி திரிவேதி, கோவை சரளா உள்பட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். ஃபார்டியூன் பிலிம்ஸ் பட நிறுவனம் சார்பில் நவீன்ராஜ் தயாரிக்கும் இந்த படத்திற்கு அர்ஜுன் ஜனயா இசையமைக்கிறார். 'கிக்' படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் சமீபத்தில் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது.

இந்த படத்தின் பர்ஸ்ட்லுக் போஸ்டர் மற்றும் முதல் பாடல் சமீபத்தில் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. இந்த நிலையில் இந்த படத்தின் 2வது பாடல் குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது.

இதனை டீசர் ஒன்றை வெளியிட்டு படக்குழு அறிவித்துள்ளது. கானா பாலா எழுதியுள்ள இந்த பாடலை அந்தோணி தாசன் பாடியுள்ளார்



# மிர்சி சிவா 'சலூன்'

இயக்குனர் முத்து குமரன் இயக்கத்தில் மிர்சி சிவா நடிக்கும் திரைப்படம் 'சலூன்'. இப்படத்தின் ஃபர்ஸ்ட்லுக் போஸ்டர் வெளியாகியுள்ளது. 'சென்னை 28', 'தமிழ் படம்', 'கலகலப்பு' போன்ற படங்களின் மூலம் கவனம் பெற்றவர் மிர்சி சிவா. இவர் சமீபத்தில் நடித்த 'காசேதான் கடவுளடா' திரைப்படம் கலவையான விமர்சனங்களை பெற்றது. இதைத்தொடர்ந்து இவர் தற்போது 'கன்னிராசி', 'தர்மபிரபு' போன்ற படங்களை இயக்கிய இயக்குனர் முத்து குமரன் இயக்கத்தில் 'சலூன் எல்லா மயிரும் ஒன்னுதான்' என்ற படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தில் யோகிபாபு முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். ரேதன் சினிமாஸ் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு சாம் சி.எஸ் இசையமைக்கிறார். அழர் ஒளிப்பதிவு செய்கிறார். இந்நிலையில், இந்த படத்தின் ஃபர்ஸ்ட்லுக் போஸ்டர் வெளியாகியுள்ளது. இதனை நடிகர் யோகி பாபு தனது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார். மிர்சி சிவா வித்தியாசமான தோற்றத்தில் இருக்கும் இந்த போஸ்டர் தற்போது சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது

## சினி மஞ்சரி





# கார்த்திக் சுப்பராஜ் இயக்கும் 'ஜிகர்தண்டா 2'

கார்த்திக் சுப்பராஜ் இயக்கும் 'ஜிகர்தண்டா 2' படத்தின் டீசர் வெளியாகியுள்ளது. மதுரை, கார்த்திக் சுப்பராஜ் இயக்கத்தில் 2014ம் ஆண்டு மதுரையை களமாக கொண்டு உருவாகிய படம் ஜிகர்தண்டா. சித்தார்த் கதாநாயகனாக நடித்த இந்த படத்தில், லட்சுமி மேனன் அவருக்கு ஜோடியாக நடித்தார். சந்தோஷ் நாராயணன் இசையமைத்திருந்தார். இப்படத்தின் முக்கிய கதாபாத்திரத்தில் பாபி சிம்ஹா நடித்திருந்தார். அந்த படத்துக்காக 2014ம் ஆண்டின் தேசிய விருதை பாபி சிம்ஹா பெற்றார். பலரின் பாராட்டுக்களையும் பெற்று நல்ல வரவேற்பை பெற்ற ஜிகர்தண்டா திரைப்படத்தின் 2ம் பாகம் குறித்த அறிவிப்பை இயக்குனர் கார்த்திக் சுப்புராஜ் வெளியிட்டிருந்தார். இந்நிலையில், 'ஜிகர்தண்டா 2' படத்தின் டீசர் அண்மையில் வெளியானது. படத்தின் நடிகர்கள் குறித்து அறிவிக்கப்படாத நிலையில், டீசரில் மௌதார் கன்னுடன் சர்ப்ரைஸ் கொடுக்கிறார் எஸ்.ஜே.சூர்யா. அதைக்கடந்து சென்றால் மாஸ் என்ட்ரி கொடுக்கிறார் ராகவா லாரன்ஸ். இருவருக்குமிடையிலான மோதல் தொடரும்போது ராகவா லாரன்ஸ் கையிலெடுக்கும் ஆயுதத்தின் ஆச்சரியத்துடன் நிறைவடைகிறது டீசர்.



# அனு அகர்வாலின் நிலை

'கொஞ்சம் நிலவு கொஞ்சம் நெருப்பு, ஒன்றாக சேர்ந்தால் எந்தன் தேகம்' என்ற பாடலுக்கு நடனம் ஆடிய பெண்ணை நினைவிருக்கிறதா? இயக்குனர் மணிரத்தினத்தின் திருடா திருடா படத்தில் சந்திரலேகாவாக நடித்து ரசிகர்களை தன் பக்கம் இழுத்தவர் தான் அனு அகர்வால். இவர் கடந்த 1990ம் ஆண்டு தனது 21வது வயதில் பாலிவுட்டில் அறிமுகமானார். இவர் நடித்த முதல் படமான ஆஷிகி திரைப்படம் அவருக்கு பெரும் புகழை பெற்று தந்தது. பட வெற்றிக்கு பிறகு ரசிகர்கள் இவரை ஆஷிகி கேர்ள் என்று அழைக்க தொடங்கினார். அதன் பிறகு, பல படங்களில் கிளாமர் ரோல்களில் துணிச்சலாக நடித்து புகழின் உச்சியில் இருந்தார். ஆனால் இவர் 1994ம் ஆண்டிற்கு பிறகு திரைப்படங்களில் நடிப்பதை நிறுத்தி விட்டார்.கடந்த 2015ம் ஆண்டு அன்யூஷுவல்: மெமயர் ஆப் எ கேர்ள் ஹூ கேம் பேக் ப்ரம் தி டெட் என்ற தனது சுயசரிதை புத்தகத்தை வெளியிட்டார். தற்போது பீகாரில் வசித்து வசித்து வரும் அனு அகர்வால், அங்கு யோகா மையத்தை தொடங்கி ஆசிரியராக இருந்து வருகிறார். இவரின் புகைப்படம் தற்பொழுது இணையதளத்தில் வைரலாகி வருகிறது.

இந்த நிலையில், தனது வாழ்வில் நடந்த சம்பவங்கள் குறித்து அனு அகர்வால் டைம்ஸ் ஆப் இந்தியா செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில், கடந்த 1992ம் ஆண்டிலேயே நான் இன்னும் ஏதாவது செய்ய வேண்டும் என்று உணர ஆரம்பித்தேன். அது என்னவென்று எனக்கு தெரியவில்லை, ஆனால் நான் எப்போதும் எதையாவது விரும்பினேன். நான் விரும்பியதை செய்வதற்கு திரையுலகில் இருந்து வெளியேற வேண்டியிருந்தது. என் முடிவை பற்றி நான் சொன்னபோது யாரும் நம்பவில்லை. நான் வெளியேறும் அளவுக்கு நான் பைத்தியமாகிவிட்டேனா என்று மக்கள் ஆச்சரியப்பட்டனர்.

கடந்த 1999ம் ஆண்டு நான் ஒரு விபத்தில் சிக்கி கோமா நிலைக்குச் சென்றேன். விபத்து ஏற்படுவதற்கு முன்பு நான் ஒரு ஆசிரமத்தில் இருந்தேன், அங்கு எனக்கு ஆன்மீக பெயர் இருந்தது. விபத்துக்கு பிறகு, எனக்கு எல்லாம் மறந்து விட்டது, ஆனால் எனது ஆன்மீக பெயர் மட்டும் எனக்கு நியாபகம் இருந்தது. நான் 2001ம் ஆண்டு எனது தலையை மொட்டையடித்து சன்னியாசியாக மாறிவிட்டேன். கையில் ஒரு பையுடன் எளிமையான வாழ்க்கையை வாழத் தொடங்கினேன். எளிமையான சூழலில், மனதை பற்றியும், மனிதர்களை பற்றியும் படித்துக் கொண்டே வாழ்ந்து வந்தேன்.

விபத்திற்கு பிறகு லிப்ஸ்டிக் போடுவதை கூட மறந்துவிட்டேன். அதன் பிறகு எனது பழைய புகைப்படங்களை சமூக வலைதளங்களில் பதிவிட தொடங்கினர். எனது மேக்கப் இல்லாத படங்கள் வைரலானது. என்னை சுற்றி நிறைய நடப்பதை பார்த்து நான் அதிர்ச்சியடைந்தேன். விபத்தில் ஏற்பட்ட காயம் காரணமாக மூன்று ஆண்டுகளுக்கு மேல் உயிருடன் இருக்க முடியாது என மருத்துவர்கள் கூறியது தொடர்பாக அவர் தெரிவிக்கையில், "அவள் உயிரிழந்து விடுவாள் , அவள் இன்னும் 3 வருடங்கள் மட்டுமே உயிருடன் இருப்பார் என்றனர். ஆனால் என்னால் குணமடைய முடியும் என்பதில் உறுதியாக இருந்தேன். நான் கற்றுக்கொண்டதை பயன்படுத்தி என்னை நானே குணப்படுத்திக் கொண்டேன். பின்னர், நான் ஏழை குழந்தைகளுக்கான யோகா கற்றுக்கொடுக்க தொடங்கினேன், பின்னர் நான் பிற அமைப்புகளால் அங்கீகரிக்கப்பட்டேன்" நான் 2006ல் திரும்பி வந்து மக்களையும் பத்திரிகையாளர்களையும் சந்திக்க ஆரம்பித்தேன். நான் அவர்களை பணிவுடன் வாழ்த்துகிறேன். இவ்வாறு அவர் தெரிவித்தார்.



# உள்ளே நடப்பது வெளியே தெரிவதில்லை

– ராஷ்மிகா

தமிழ், இந்தி, தெலுங்கு மற்றும் கன்னட மொழிகளில் கவனம் செலுத்தி வரும் ராஷ்மிகா மந்தனா தற்போது தமிழில் விஜய்யுடன் 'வாரிசு' படத்தில் ஜோடியாக நடித்து வருகிறார். இதனிடையே இந்தியில், 'மிஷன் மஜ்னு', 'அனிமல்' உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார். இதனைத் தொடர்ந்து அல்லு அர்ஜுனின் 'புஷ்பா 2' படத்தில் நடிக்கவுள்ளார். இதில் 'வாரிசு' படம் பொங்கலை முன்னிட்டு வெளியாகவுள்ளது.

கன்னட திரைத்துறையில் அறிமுகமான ராஷ்மிகா, தெலுங்கில் கிடைத்த வரவேற்பைத் தொடர்ந்து தெலுங்கு மற்றும் இந்தி மொழிகளில் கவனம் செலுத்தி வந்தார். இதனால் கன்னட ரசிகர்கள் ராஷ்மிகா மீது சற்று கோபத்தில் இருந்தார்கள். பின்பு ஒரு பேட்டியில், ரிஷப் ஷெட்டி இயக்கத்தில் பெரும் வரவேற்பைப் பெற்ற 'காந்தாரா' படத்தைப் பார்த்தீர்களா என்ற கேள்விக்கு, "நான் இன்னும் பார்க்கவில்லை" எனப் பதிலளித்திருந்தார். ராஷ்மிகாவின் இந்தப் பதில் ரசிகர்களின் கோபத்தை இன்னும் அதிகரிக்கச் செய்தது.

திரைத்துறையில் ராஷ்மிகா அறிமுகமான 'கிரிக் பார்ட்டி' படத்தை இயக்கியது ரிஷப் ஷெட்டி என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் ராஷ்மிகா கன்னட திரையுலகை மறந்துவிட்டதாகவும், அவர் இனிமேல் கன்னட படங்களில் நடிக்கக்கூடாது எனவும் சமூக வலைத்தளங்களில் ரசிகர்கள் கருது தெரிவித்து வந்தனர். இந்நிலையில், தன்னை பற்றி எழுந்து வரும் விமர்சனங்கள் குறித்து ராஷ்மிகா செய்தியாளர்களிடம் விளக்கம் அளித்துள்ளார். அவர் கூறுகையில், "விமர்சனம் செய்பவர்களுக்கு அன்பை மட்டுமே என்னால் தரமுடியும். வேறு என்ன கொடுக்க முடியும் என்பது பற்றி எனக்கு தெரியவில்லை.

காந்தாரா படம் வெளியான 23 நாட்களே ஆன நிலையில் என்னிடம் படம் பார்த்து விட்டீர்களா? எனக் கேள்வி கேட்கப்பட்டது. அப்போது நான் பார்க்கவில்லை. அதனால் அப்படி கூறினேன். ஆனால், இப்போது படம் பார்த்துவிட்டேன். படக்குழுவிற்கும் அதனை சொன்னேன். உடனே அவர்களும் சொன்னதற்கு நன்றி தெரிவித்தனர். பொதுவாக வெளியுலகத்திற்கு, உள்ளே என்ன நடக்கிறது என்பது தெரியாது. எங்களின் தனிப்பட்ட வாழ்க்கையில் நடப்பதை கேமரா மூலம் வெளியிலும் காட்ட முடியாது. இதுவரை எந்தத் தயாரிப்பாளரும் நான் நடிப்பதற்கு தடை கூறவில்லை" எனச் சற்று வேதனையுடன் பேசினார்.



# இந்தியில் லவ் டுடே

லவ் டுடே படத்தை இந்தியிலும் ரீமேக் செய்ய உள்ளனர். இந்தி பதிப்பில் கதாநாயகனாக நடிக்க வருண் தவான் பெயர் அடிபடுகிறது. சிறிய பட்ஜெட்டில் தயாராகி கடந்த மாதம் திரைக்கு வந்த 'லவ் டுடே' படம் பல மடங்கு வசூல் குவித்து திரையுலகினரை ஆச்சரியப்படுத்தி உள்ளது. சுமார் ரூ.4 கோடி பட்ஜெட்டில் தயாரான இந்த படம் தியேட்டர்கள் மூலம் மட்டுமே ரூ.70 கோடிக்கு மேல் வசூலித்து இருப்பதாக தகவல். ஓ.டி.டி. உரிமை மூலமும் பெரிய தொகை வந்துள்ளது. தெலுங்கில் வெளியிட்டும் அதிக லாபம் பார்த்துள்ளனர். இந்த படத்தில் பிரதீப் ரங்கநாதன் கதாநாயகனாக நடித்து டைரக்டும் செய்து இருந்தார். நாயகியாக இவானா நடித்து இருந்தார். அடுத்து 'லவ் டுடே' படத்தை இந்தியிலும் ரீமேக் செய்ய உள்ளனர். இந்தி பதிப்பில் கதாநாயகனாக நடிக்க வருண் தவான் பெயர் அடிபடுகிறது. இந்தி பதிப்பையும் பிரதீப் ரங்கநாதனே இயக்க பேச்சுவார்த்தை நடக்கிறது. ஏற்கனவே தமிழில் வெற்றி பெற்ற பல படங்கள் இந்தியில் ரீமேக் ஆகி உள்ளன. சூர்யா நடித்த சூரரை போற்று படமும் இந்தியில் ரீமேக் ஆகி வருகிறது.



# சந்திரமுகி 2

## கங்கனா ரனாவத்

சந்திரமுகி 2 படத்தில் இந்தி முன்னணி நடிகை கங்கனா ரனாவத் இணைந்துள்ளார். இதுகுறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு இன்று வெளியாகியுள்ளது.

கடந்த 2005ம் ஆண்டு பி.வாசு இயக்கத்தில், ரஜினிகாந்த், ஜோதிகா, பிரபு, நயன்தாரா, வடிவேலு உள்ளிட்டோரின் நடிப்பில் வெளியாகி மாபெரும் வெற்றி பெற்ற படம் சந்திரமுகி. இதனை இயக்குநர் பி.வாசு இயக்கியிருந்தார். இந்தப் படத்தின் இரண்டாம் பாகமான சந்திரமுகி 2வில், ராகவா லாரன்ஸ் மற்றும் வடிவேலு முக்கிய வேடங்களில் நடித்து வருகின்றனர். இந்தப் படத்தையும் பி.வாசு இயக்கி வருகீறார். மேலும் படத்தில், ரவி மரியா, ராதிகா சரத்குமார், சுபிக்ஷா கிருஷ்ணன் உள்ளிட்டோர் இடம் பெற்றுள்ளனர். சந்திரமுகி 2 படத்தில் லட்சுமி மேனன் கதாநாயகியாக நடிக்கவிருப்பதாகக் கூறப்படுகிறது. லைகா புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் இந்தப் படத்திற்கு பாகுபலி படங்களுக்கு இசையமைத்த எம்.எம்.கீரவாணி இசையமைக்கிறார். இந்த நிலையில் இந்தியில் முன்னணி நடிகையாக இருக்கும் கங்கனா ரனாவத் சந்திரமுகி 2 படத்தில் இடம்பெற்றுள்ளதாக, தயாரிப்பு நிறுவனமான லைகா புரொடக்சன்ஸ் இன்று அறிவித்துள்ளது. தமிழில் வெளியான ஜெயம் ரவியின் தாம்தூம் படத்தின் மூலம் தமிழில் கங்கனா அறிமுகம் ஆனார். இந்நிலையில், ராகவா லாரன்ஸ் நடிப்பில் உருவாகி வரும் சந்திரமுகி 2 படத்தில் நடிகை கங்கனா ரனாவத் இணைந்துள்ளார்.

தலைவி படத்தில் ஜெயலலிதா கேரக்டரில் கங்கனா ரனாவத் நடித்திருந்தார். சந்திரமுகி 2 படத்தில் வில்லியாக கங்கனா நடிப்பார் என்று கூறப்படுகிறது.

# ஒவ்வொரு பிரதியாளனிடமும் சொல்லப்படாத கருத்து நிலைகள் நிறையவே குவிந்து கிடக்கின்றன

## கவிதைக்காக தேசிய சாஹித்ய விருது வென்ற கவிஞர் ஏ.நஸ்புள்ளாஹ்




இலங்கை தமிழ் எழுத்தாளர்களின் பட்டியலில் ஏ. நஸ்புள்ளாஹ் தவிர்க்க முடியாத ஒருவர். கிலக்கிலங்கையின் திருகோணமலை மாவட்டம் கிண்ணியாவைச் சேர்ந்தவர். நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையில் பணியாற்றி வரும் இவர், 80 களுக்கு பின் எழுதத் தொடங்கியவர்.

கவிதை, சிறுகதை, கட்டுரைகள், பாடல்கள் என இவருடைய பரிமாணம் மிகப் பரந்தது. இதுவரை துளியூண்டு புன்னகைத்து கவிதைத் தொகுதி தொடங்கி யானைக்கு நிழலை வரையவில்லை வரை 13 தொகுதிகளை வெளியீடு செய்துள்ளார். மாகாணம், மாவட்டம் என பல்வேறு பிரிவுகளில் முன்னிலைப்படுத்தப்பட்ட இவரது பல சிறுகதைகள் உலகளாவிய ரீதியில் நடத்தப்பட்ட் சர்வதேச சிறுகதைப் போட்டிகளில் பரிசுகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர் அண்மையில் தன்னுடைய 'நான் உமர் கய்யாமின் வாசகன்' கவிதை தொகுதிக்காக இலங்கை அரசின் சாஹித்ய விருதையும் பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




செந்தூரம் இதழுக்காக இவர் வழங்கிய நேர்காணலை இங்கு தருகின்றோம்.

**● உங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கைக்கும், இலக்கிய வாழ்க்கைக்கும் இடையிலான தொடர்பு எப்படிப்பட்டது?**

முதல் கேள்வியே ஒரு பிரதியாளனின் மன வலிமையை பரீட்ச்சித்து அதிகமான சிந்தனைகளை முன்வைக்கும் கேள்வியென உணர்கிறேன். எனது தனிப்பட்ட வாழ்க்கையை ஒருபோதும் இலக்கிய வாழ்க்கையிலிருந்து நான் வேறுபடுத்தி தனியே மதிப்பீட்டுப் பார்த்தது கிடையாது. ஏனெனில், எனது காற்சட்டை இலக்கியத்தில் எனது பெற்றோர் மற்றும் சகோதரிகள் எவ்வகையான ஆழமான உறவை பேணி இலக்கிய செற்பாடுகளுக்கு உத்வேகம் தந்தார்களோ, அவ்வாறான ஒரு ஆழமான உறவை எனது மனைவி பிள்ளைகளும் இன்றைய எனது எழுத்துச் சூழலுக்கு தந்து கொண்டிருக்கிறார்கள். மிகச் சுருக்கமாக சொல்வதெனில் எனது தனிப்பட்ட வாழ்க்கைக்கும் இலக்கிய வாழ்க்கைக்குமான தொடர்பு என்பது ஒரு காதலனுக்கும் காதலிக்குமான புரிதலைப் போன்றது.

**● உங்களுடைய 'நான் உமர் கய்யாமின் வாசகன்' கவிதை தொகுதி அரச சாகித்திய விருதை வென்றிருக்கின்றது. ஏனைய கவிதை வடிவங்களை விட படிமங்கள் நிறைந்த கவிதை முறைமை வித்தியாசமானதாகும். இந்த வகை கவிதை முறைமையை நீங்கள் தேர்த்தெடுத்தது பற்றி சொல்லுங்கள்?**

பொதுவாக விருதுகளைப் பொறுத்தவரையில் ஒரு அரசியல் தோற்றம் இருப்பதாக பிரதியாளர்களுக்குள் ஒரு குற்றச்சாட்டு இருந்து கொண்டே இருக்கிறது. இந்தக் குற்றச் சாட்டு நமது இலக்கியச் சூழலையும் மையப்படுத்தாமலில்லை. எனினும், எனது 'நான் உமர் கய்யாமின் வாசகன்' தொகுப்பை பொறுத்தமட்டில் நீங்கள் அடையாளப்படுத்தியது போன்று கவிதைச் சூழலுக்கு ஒரு புதிய வடிவமாகவே பார்க்கப்படுகின்றது. தனிமனித வாழ்வியல் முறைமையிலும் சரி, இலக்கிய தளத்திலும் சரி புதியவைகளை அதிகம் வரவேற்கப்படுவதும் கொண்டாடப்படுவதும் நடைமுறையில் உள்ள விடயம்தானே. நான் எனது காற்சட்டை இலக்கியத்திலிருந்து மூன்று தசாப்தத்திற்கு மேற்பட்ட சமகால சூழல் வரைக்கும் புதிய படிம முறைகளை எனது பிரதிகளில் கொண்டு வந்து வாசகனை கிளர்ச்சிப்படுத்த தவறுவதில்லை என்பது எனது கவிதைப் பிரதிகளுடன் தொடர்ச்சியாக பயணிக்கின்ற வாசகன் புரிந்து கொள்வான். எனினும், எனது அண்மைய கவிதைப் போக்குகள் பின் நவீன வடிவமாக அல்லது நவீனம் கடந்த வடிவ அணுகல் முறையை ஒத்ததாக அமைந்து விட்டதை எனது கவிதைப் பிரதிகளை வாசிக்கும் வாசகன் தானாகவே புரிந்து கொள்வான். இந்தப் படிம முறை ஏலவே இலக்கிய தளத்தில் கையாளபபட்ட போதும் ஈழத்து இலக்கிய சூழலக்கு கொண்டு வந்தவர் தோழர்கள் றியாஸ் குரானா, மிஹாத் ஆகியோர்தான். இதிலும் குறிப்பாக றியாஸ் குரானாவின் முன்னெடுப்புகள் மிக அதிகமானவை.

**● 'ஒரு படைப்பாளிக்கு வழங்கப்படும் விருது அவர்களின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையாக அமைந்து விடும்' என்ற குற்றச்சாட்டு காலங்காலமாக முன்வைக்கப்படுகின்றது. நீங்களும் ஒரு தேசிய விருதை பெற்றவர் என்ற வகையில் இக்கருத்தை எப்படி பார்க்கிறீர்கள்?**

இது ஒரு தவறான முன்வைப்பு. ஒரு படைப்பாளிக்கு வழங்கப்படும் விருது அவனது இன்னுமொரு வளர்ச்சிக்கு தடையாக இருக்கப் போவதில்லை. குறிப்பாக திரைத்துரையில் பல்வேறு வகையான விருதுகளை பலர் பெற்றுள்ளனர். குறிப்பாக, இரண்டு ஆஸ்கார் விருதுகளைப் பெற்றுக் கொண்ட ஏ.ஆர். ரஹ்மான் இப்போதும் மிகச் சிறந்த திரை இசைப் பாடல்களை தந்து கொண்டிருக்கின்றார். முதல் முறையாக இரு நோபல் பரிசு பெற்றவர் மேரி கியூரியே. இவர் இரண்டாவதாக 1911 இல் வேதியியலுக்கான நோபல் பரிசைப் பெற்றார். விருது ஒருவரது வளர்ச்சிக்கு தடையெனில் எப்படி ஒருவர் இரு முறை அல்லது அதற்கு மேல் விருதுகளைப் பெற முடியுமென ஒரு உரையாடலுக்கான அழைப்பை நான் முன் வைக்கிறேன்.

**● நீங்கள் அதிகமான கவிதை தொகுதியை வெளியிட்டுள்ளீர்கள். உங்களுடைய ஒட்டுமொத்த கவிதை தொகுதியையும் ஒரு மித்து நோக்குகின்ற போது ஒவ்வொரு தொகுதியிலுள்ள கவிதை முறைமையும் வித்தியாசமானதாக உள்ளது. அப்படி பார்க்கின்ற போது நீங்கள் வாசகர் மீது காலத்துக்கு காலம் அழுத்தங்களை பிரயோகிப்பதாகவோ, திணிப்பதாகவோ அமைந்து விடாதா?**

ஆம். இதுவரை துளியூண்டு புன்னகைத்து முதல் யானைக்கு நிழலை வரையவில்லை தொகுப்பு உட்பட 14 தொகுப்புகள் வெளிவந்துள்ளன. இதில் 'காவி நரகம்' மாத்திரம் சிறுகதைத் தொகுப்பு. மற்றையவை கவிதைகள். இலக்கியத்தைப் பொறுத்தவரை வாசிப்பு முக்கிய இடத்தைப் பெருகின்றது. ஒரு பிரதியை இன்று வாசிக்கின்ற நல்ல வாசகன் நாளை வாசிக்கின்ற போது இன்று வாசித்த படிம முறைப் பிரதியை ஒருபோதும் வாசிக்க விரும்ப மாட்டான். அவனது தேடல் அதுவாகவும் இருக்க முடியாது. இன்னுமொரு விடயம் தமிழ் எழுத்துச் சூழல் என்பது விரிந்த பெரும் பரப்பு. இப்படியான விரிந்த பரப்பிற்குள் இயங்கும் வாசகன் திருப்திகரமான வாசிப்பு அனுபவத்தை பெற வேண்டும்.

மாறாக அவனது வாசிப்பு கோட்பாடு சிதைந்துவிடக்கூடாது. ஆகவேதான் வாசகனது வெளி அற்புதங்களால் பல்வேறு பன்மையான நிலத் தோற்றங்களை காட்சிப்படுத்த வேண்டுமென நான் யோசிக்கின்றேன்.



(11ஆம் பக்கம் பார்க்க)

நேர்காணல்:
நஸார் இஜாஸ்...

(10ஆம் பக்கத் தொடர்)

அந்த யோசிப்பின் பிரதியாக தொகுப்புக்கு தொகுப்பு வித்தியாசங்களையும் காலத்திற்கு காலம் படிம முறைமைகளிலும் மாற்றங்களை நிகழ்த்தி கவிதைச் செயலை வெள;வேறு உணர்வுகளுடன் வாசகனுக்கு தர முயற்சிக்கின்றேன். இன்னும் எனது பிரதிகளுடன் தொடர்ந்து பயணிக்கும் வாசகன் இந்த படிம முறைமையை ஒரு போதும் அழுத்தமாக பார்க்க மாட்டான்.

**● உங்களுடைய 'காவி நரகம்' சிறுகதைத் தொகுதியின் உருவாக்கம் பற்றி சொல்லுங்கள்?**

ஈழத்துப் போரின் இறுதி நிலைக்கு முன்னும் பின்னும் அதன் விளைவு, அழிவு, முகாம் வாழ்வு என சகோதர சமூகம் துண்டாடப்பட்ட சூழலை அதனதன் வலியோடும், காயத்தோடும் பல கதைகளை 'காவி நரகம்' சிறுகதைத் தொகுப்பு உள்ளடக்கியிருக்கும். மேலும், பெரும்பாலான கதைகள் சர்வதேச சிறுகதைப் போட்டிகளில் பரிசுகளைப் பெற்ற கதைகள். ஓரிரு கதைகள் முஸ்லிம் தேசிய அரசியலை பேசுபவையாகும்.

**● இச்சிறுகதைத் தொகுதியின் பின்னர் நீங்கள் எந்தவொரு சிறுகதை தொகுப்பையும் கொண்டு வரவில்லையே. அதற்கு ஏதாவது குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய காரணங்கள் உண்டா?**

கவிதைகள் குறித்து நிறையவே எழுதவும் உரையாட வேண்டிய சூழலும் இருப்பதாக உணர்ந்த தன் ஒரு பகுதியே காவி நரகம் சிறுகதைத் தொகுப்பிற்கு பிறகு கதைகள் எழுதாமைக்கு காரணம். வேறு காரணங்கள் என்று ஏதும் இருப்பதாக நான் நினைக்கவில்லை.

**● கவிதை, சிறுகதைகளுக்கப்பால் நாவல் எழுதும் முயற்சியிலும் இறங்கியுள்ளதை உங்களுடைய அண்மைக்கால பதிவுகள் சொல்லுகின்றன. அது பற்றி கூற முடியுமா?**

இலக்கியத்தைப் பொறுத்தமட்டில் கருத்து நிலைகள் முக்கிய பங்கு வகின்றன. கவிதையூடாக வாசகனுக்கு கொண்டு சேர்க்க முயற்சிக்கின்ற விடயத்தை அதன் அகம், புறம் தோற்றத்தை கதைகளினூடாக விரிவாக சொல்ல முடியும் இவ்வாறே கதையூடாக சொல்ல முயற்சிக்கின்ற ஒரு விடயத்தை நாவலூடாக இன்னும் கொஞ்சம் விரிவாக வாசகனிடம் கொண்டு சேர்க்க முடியும்.

ஒரு பிரதியாளனிடம் சொல்லபடாத கருத்து நிலைகள் நிறையவே குவிந்து கிடக்கின்றன.

ஒவ்வொரு பிரதியாளனும் முற்றிலும் வேறுபட்ட சம்பவங்களையும் கருத்து நிலைகளையும் அவனது சூழலுக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்கின்றான். இது பிரதியாளனுக்கு மாத்திரமான ஒரு கருத்து நிலையல்ல தனி மனித வாழ்வியலிலும் காணப்படுகின்ற ஒரு குணம்சமாகும். கவிதையில் சொல்லப்படாத அல்லது சொல்ல முடியாத பல விடயங்களை அதன் அரசியல் தோற்றத்தை நாவலூடாக சொல்ல முடியும். குறிப்பாக நான் நாவலூடாக சொல்ல முயற்சிக்கின்ற கருத்தியல் என்பது கிண்ணியாவின் வீரத்திற்கும் அதன் வரலாற்று தன்மைக்கும் அவதானிப்பு பெறுகின்ற, இதுவரை எமது சூழல் சார்ந்த பிரதியாளர்களால் சொல்லப்படாத கதையாடலாக இருக்கும்.





**● இலங்கைச் சூழலில் முஸ்லிம்களின் இலக்கியப் பங்களிப்பை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

இந்த கேள்வியை மிக முக்கியமான ஒன்றாகப் பார்க்கின்றேன் குறிப்பாக அறிஞர் ம.மு. உவைஸ், மு.கா. சித்திலெப்பை, அண்ணல் சாலிஹ், பேராசிரியர் நுஃமான் தொடங்கி இன்றைய றியாஸ் குரானா வரை ஈழத்தின் தமிழ் இலக்கியச் சூழலுக்கு மிக முக்கிய வகிபாகத்தை செய்யத் தவறவில்லை.

இன்னும் முஸ்லிம்களைப் பொருத்தமட்டில் தமிழ் இலக்கிய சூழலுக்கு மாத்திரமல்ல, சிங்கள இலக்கியச் சூழலுக்கும், அவ்வாறே ஆங்கில இலக்கிய சூழலுக்கும் முஸ்லிம்களின் பங்களிப்புக்கள் போதுமானதாக இருந்து வருக்கின்றது. 80க்குப் பின்னர் ஈழத்து இலக்கியச் சூழலில் ஒரு தொய்வு நிலை ஏற்பட்ட போதும் சரி, முப்பது ஆண்டு கால ஈழப் போராட்ட காலங்களிலும் சரி ஈழத்து இலக்கியச் செயற்பாடுகளில் முஸ்லிம் பிரதியாளர்கள் செய்த பங்களிப்புகள் மறுத்துப் பேச முடியாத உண்மை.

**● முஸ்லிம் சமூகம் இலக்கியத்துக்கு செய்த பங்களிப்புகள் போதுமானதாக உள்ளன என்று சொல்கிறீர்கள். ஆனால், நேரடியாக சொல்வதாயின் ஒரு சிலரை தவிர ஆளுமை மிக்க பல முஸ்லிம் பெண் படைப்பாளிகள் பலர் இன்றும் நான்கு சுவற்றுக்குள் முடங்கிக் கிடங்கும் நிலைதானே காணப்படுகின்றது?**



இலக்கியப் புலத்தில் பாலின வேறுபாடு அல்லது ஆண், பெண் என இலக்கியப் பிரதிகளை பிரித்துப் பார்ப்பதில் முதலில் எனக்கு உடன்பாடு இல்லை. எனினும், 80 களுக்குப் பினனர்; ஈழத்தில் பெண்ணிலை வாதம் பேசியவர்களில் மிக முக்கியமானவர்கள் அஷ்ரபா நூர்தீன், கலை மகள் ஹிதாயா, சுல்பிகா எனத் தொடர்கின்றது. சில நேரங்களில் பெண்கள் பல வகையில் அடக்கு முறைகளை எதிர் கொள்ள வேண்டியுள்ளதை மறுக்க முடியாது. குறிப்பாக குடும்பம், சமூகம், தனி மனிதன், அரசு, சூழல் போன்ற பல வகை அரசியல் தோற்றத்தை எதிர் கொள்ள வேண்டிய சூழல் உண்மையானதுதான். எனினும், அனார், பஹீமா ஜஹான், கெகிராவ சஹானா, கெகிராவ சுலைஹா, ஜரீனா முஸ்தபா, மாத்தளை பர்வீன் போன்றவர்கள் இவ்வாறான அரசியலை பெரிதாக எதிர் கொள்ளவில்லை என நினைக்கிறேன். இருந்த போதும் பொதுவாகவே குடும்பம் என்கின்ற அடையாளத்தைப் பெற்று விட்டால் ஆண், பெண் இருவருக்குமாக சூழலின் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எவ்வாறாயினும், சம காலத்தில் நீங்கள் குறிப்பிடுவது போன்றல்லாது இளைய தலைமுறை பெண் பிரதியாளர்கள் மிக சுதந்திரமாக இலக்கியப் புலத்தில் இயங்கி வருவதை காண முடிகிறது.

**● உங்களுடைய எழுத்துக்களுக்கு முன்மாதிரியாக யாரை பார்க்கிறீர்கள்? முட்டுக்கட்டையாக யாரை பார்க்கிறீர்கள்?**

எனது எழுத்துக்களுக்கு முன்மாதிரியாக நல்ல புத்தகங்களைப் பார்க்கிறேன். காற்சட்டை இலக்கிய காலத்தில் கிண்ணியா பொது நூலகம் செல்லும் பழக்கம் எனக்கு இருந்ததுண்டு. அங்கு சிறுவர் புத்தகங்கள் உட்பட பல கவிதை, கதை, நாவல்கள் மற்றும் ஹிட்லரின் 'எனது போராட்டம்' இன்னும் பத்தி எழுத்துக்கள், பிறமொழிகளான சிங்களம், ஜப்பான், உஸ்பெகிஸ்தான், சீனா, பிரஞ்சு மொழிகளிலும் வெளி வந்து மொழிபெயர்க்கப்பட்ட புத்தகங்ளை வாசித்திருகிறேன்.

இதைப் போன்று உலக இலக்கிய மேதைகளான டால்ஸ்டாய், ஷெய்க் யூசுப் அல் கர்ளாவி, அல்லாமா இக்பால், அ.மாக்ஸ், ஷெய்க் அப்துல் ஹமீத் பிலாலி, செகால் கராக்கி, ஜோலா போன்றோரின் முக்கியமான புத்தகங்களையும் வாசித்த அனுபவம் நிறையவே உள்ளது. இதனையும் எனது எழுத்துகளுக்கு முன்மாதிரி எனச் சொல்ல முடியும். முட்டுக்கட்டை எனப் பார்க்கும் போது சில தருணங்களில் பொருளாதாரத்தை குறிப்பிட முடியும்.



## நிறம் தீட்டுங்கள்



## வழிகாட்டுங்கள்



## விடுகதைகள்

1. மண்ணுக்குள்ளே கிடப்பான் மங்களகரமானவன் அவன் யார் ?
2. கொம்பு நிறைய கம்பு அது என்ன ?
3. ஆடும் வரை ஆட்டம், ஆடிய பின் ஓட்டம் அது என்ன ?
4. கடல் நீரில் வளர்ந்து, மழை நீரில் மடிவது என்ன ?
5. எங்க அக்கா சிவப்பு, குளித்தால் கருப்பு அது என்ன ?
6. தண்ணியில்லாத காட்டிலே அலைந்து தவிக்கும் அழகி. அவள் யார்?
7. குண்டுச்சட்டியில குதிரை ஓட்டறான் அவன் யார்?.
8. பாலிலே புழு நெளியுது. அது என்ன?
9. எழுதி எழுதியே தேய்ஞ்சு போனான். அவன் யார்?
10. பச்சை பொட்டிக்குள் வெள்ளை முத்துகள் அது என்ன ?
11. இரவு வீட்டிற்கு வருவான், இரவு முழுவதும் இருப்பான் காலையில் சொல்லாமல் கொள்ளாமல் போய்விட்டிருப்பான் அவன் யார் ?
12. ஒன்று போனால் மற்றொன்றும் வாழாது அது என்ன ?
13. பூ கொட்ட கொட்ட ஒன்றையும் தனியே பொறுக்க முடியவில்லை அது என்ன ?
14. மழையில் பிறந்து வெயிலில் காயுது அது என்ன ?
15. நீண்ட உடம்புக்காரன், நெடுந்தூரப் பயணக்காரன் அவன் யார்??
16. இவன் வாலுக்கு வையகமே நடுங்கும் அவன் யார்?
17.பல் துலக்ககாதவனுக்கு உடம்பு எல்லாம் பற்கள் அவன் யார் ?
18.ஊரெல்லாமல் ஒரே விளக்கு. அதற்கு ஒரு நாள் ஓய்வு அது என்ன?
19. முத்து வீட்டுக்குள்ளே தட்டுப் பலகை அது என்ன?
20.ஊரெல்லாம் வம்பளப்பான்; ஓர் அறையில் அடங்குவான் அவன் யார்?

| | | |
|---|---|---|
| 1. மஞ்சள் | 8.பாயாசம் | 14.காளான் |
| 2.மாதுளம்பழம் | 9.பென்சில் | 15.ரயில் |
| 3.இதயம் | 10.வெண்டைக் காய் | 16.தேள் |
| 4.உப்பு | 11.நிலா | 17.சீப்பு |
| 5.அடுப்புக்கரி | 12.செருப்பு | 18.நிலா |
| 6.ஒட்டகம் | 13.மழை | 19.நாக்கு |
| 7.கரண்டி | | 20. நாக்கு |

## 05 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்





## உருவங்களின் சரியான எண்ணிக்கையை எழுதுங்கள்



நான் ரொம்ப பிஸி...

# சீனடி தற்காப்புக் கலைக்காக கலாபூஷணம் விருது பெற்ற "சரிபு அண்ணாவி"

அழகை இரசிக்கின்ற போதுதான் கலைகள் உயிர் வாழ்கின்றன அவ்வாறு வாழும் கலைக்கு உயிர் தந்தவர் சரிபு அண்ணாவி . 2019 ஆம் ஆண்டு சீனடி பற்றிய தகவல்களை பெற்றுக் கொள்ள சந்தித்த போது அது பற்றி முழுமையான விபரங்களை எம்மோடு பகிர்ந்து கொண்டார்.

இன்று அவர் உயிருடன் இல்லை என்றாலும் அவர் கற்பித்த தற்காப்பு கலை பரம்பரை பரம்பரையாக மண்ணில் ஒவ்வொருவருக்குள்ளும் இருந்து வருகிறது.

சீனடி என்பது பன்னிரண்டு கலைகளை அல்லது அடிமானங்களை கொண்ட தற்காப்பு



விளையாட்டுக் கலையாகும். இவ் விளையாட்டுக் கலை கிழக்கு மாகாணத்தில் கிண்ணியா மண்ணின் பாரம்பரிய கலைகளில் இது முக்கியமான இடத்தை வகிக்கின்றது.

சீனடி தற்காப்பு கலையைக் கற்றுக் கொடுப்பவர்களை அண்ணாவி என்று அழைப்பார்கள்.

பன்னிரண்டு கலைகளை நன்றாக அறிந்த அனுபவம் கொண்டவராகவும் வீரமிக்கவராகவும் அண்ணாவிகள் இருப்பார். இவர்களுக்கு ஊரிலும் ஊருக்கு வெளியிலும் மரியாதை மேலோங்கி இன்றும் காணப்படுகிறது.

பொது நிகழ்ச்சிகளில் விருந்தினராக அழைக்கப்பட்டு அண்ணாவிமார்களுக்குரிய கௌரவமளிக்கப்படும்.

அண்ணாவிமார்கள் யானை பிடிப்பதிலும் யானை அடக்குவதிலும் சிறந்து விளங்கினார்கள். யானை பிடிப்பவர்களை பணிக்கர் என அழைக்கப்படும்.

ஸக்கரையா பணிக்கர்,எஹியா பணிக்கர்,இஸ்மாயில் பணிக்கர் அத்துறையில் சிறந்து விளங்கியதாகக் கூறினார்.

சீனடி தற்காப்பு கலையைக் கற்றுக் கொள்வதற்கான விதிமுறைகளை சொன்னார்.

**01. சத்தியப்பிரமாணம் செய்தல்**

சீனடி தற்காப்பு கலையை பயில வருபவர்களிடம் அண்ணாவி சத்திய பிரமாணம் ஒன்றை முன்மொழிவார்.

தன்னை தாக்கிட வரும் எதிரிக்கு மாத்திரமே எனது விளையாட்டை பயன்படுத்துவேன் வேறு வீண் சண்டை மற்றும் தேவையற்ற பிரச்சனைகளுக்கு போக மாட்டேன் அந்த சத்தியவாக்கை ஆமோதித்த பிறகே அண்ணாவியார் அக்கலையை கற்றுக் கொடுப்பார்.

**2. உடல் ஆரோக்கியமாக இருத்தல் வேண்டும்.**

சக்தி மிகுந்த உடல் நிலை உடையவராக இருத்தல்.

**3. நோயற்றவராக இருத்தல் வேண்டும்**

பல்வேறு நோய்களுக்கு உள்ளானவர்கள் இந்த விளையாட்டை கற்றுக் கொள்ள முடியாது.

**4. அச்சமற்றவர்களாக இருத்தல் வேண்டும்**

எதையும் என்னால் செய்வேன் என்ற தன்னம்பிக்கை வேண்டும்

**5. விவேகமும் நுணுக்கமும் கொண்ட வராக இருத்தல் வேண்டும்.**

புத்திசுவாதீனமுற்றவர்கள் இந்த கலையைக் கற்றுக் கொள்ள முடியாது. வேகமும் நுணுக்கமும் உடையவராக இருத்தல் வேண்டும். இவ்வாறான விதிமுறைகளை கடைபிடித்து இக்கலையை கற்றுக் கொள்ள முடியும் எனக் கூறிய அண்ணாவி அவர்கள் தன்னை இவ்வாறு அறிமுகம் செய்தார்.





1941 இல் பிறந்து கிண்ணியா கட்டையாறு வீதியில் வசித்து வந்த கபிபு முகம்மது முகம்மது சரிபு எனும் பெயரைக் கொண்ட அண்ணாவி அவர்கள் ஒன்பதாவது வயதில் சீனடி தற்காப்பு கலையை கற்று 15 வயதில் சீனடி அண்ணாவியாக தேர்ச்சி பெற்றார்.

இக்கலையை தாஹுர் அண்ணாவி மற்றும் முஹம்மது லெப்பை அண்ணாவி என்பவர்களிடம் கற்றுக் கொண்டார்.

1964 இல் மர்ஹும் ஏ.எல் அப்துல் மஜித் பாராளுமன்ற உறுப்பினர் தலைமையில் நடைபெற்ற சீனடிப்போட்டியில் முதலிடம் பெற்று மேலும் 1966இல் மாவட்ட மட்ட போட்டியிலும் வெற்றி பெற்றார்.

16/ 08/ 1968 இல் இஸ்லாமிய சோஷலிஸ முன்னனியின் தேசிய மாநாடு கல்முனையில் நடைபெற்றபோது, அங்கு நடைபெற்ற சீனடிப்போட்டியில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற சரிபு அண்ணாவியாரை, அந்நிகழ்வில் கலந்து கொண்ட பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்க மற்றும் முன்னாள் அமைச்சர் மர்ஹூம் பதியுதீன் முதலானோர் பாராட்டினார்கள்.

இவரது சிறப்பான சீனடித்துறைக்காக 2009 இல் கிண்ணியா பிரதேச செயலக கலாசார அதிகார சபையால்" சீனடிச்சுடர் " என்ற பட்டத்தை வழங்கி கௌரவமளித்தது.

சீனடி தற்காப்பு கலையில் ஆளுமை மிக்க இவருக்கு இலங்கை அரசின் கலாபூஷணம் விருது 2015 இலும் பன்மைத்துவ கலாசார நிகழ்வும் முதுகலைஞர் கௌரவிப்பு 2018 இல் மட்டகளப்பு சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கை நிலையத்தில் வைத்து கௌரவமளிக்கப்பட்டது.

இவரிடம் பலர் சீனடிக்கலையை கற்று தேர்ச்சி பெற்றதோடு இந்த மண்ணில் மூத்த அண்ணாவி இவரென என்றும் நினைவு கூறுவதும் குறிப்பிடத்தக்கது. சீனடித்துறையிலே மண்ணின் பெருமையை நிலை நிறுத்திய சரிபு அண்ணாவி அவர்களின் மறுமை வாழ்வு நலம் பெற பிரார்த்திப்போம் .

நேர்காணல்:
ஏ.எம் கஸ்புள்ளா...

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com



# அழகுக்கு அழகூட்ட..

சருமப் பாதுகாப்பிற்கு எந்த மாதிரி உணவைத் தேர்ந்தெடுப்பது?

முகம் மிகவும் மிருதுவாக உள்ளது. ஆனால் கொஞ்சம் சதை தொங்கியது போலும் உள்ளது. என்றால் அதற்கு சருமப் பாதுகாப்பு மிகவும் அவசியம்.

சருமப் பாதுகாப்பிற்கு சர்க்கரை போடாமல் காலை உணவிற்குப் பிறகு ஆரஞ்சு சாறு ஒரு தம்ளர் சாப்பிடுங்கள். வைட்டமின் ஏ சருமத்திற்கு மிகவும் நல்லது. பால், கேரட், பசலைக்கீரை, பச்சைக்காய்கறிகள் உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ளுங்கள்.

நம் உடலுக்குத் தேவைப்படும் எரிசக்தியின் பாதியளவு கார்போஹைடிரேட்டிலிருந்துதான் கிடைக்கிறது. சர்க்கரைப் பொருள்களில் கார்போஹைடிரேட் இருந்தாலும் அதிக அளவில் சேர்த்துக் கொள்வதால் உடல் பெருக்க வாய்ப்புண்டு. உடற்பயிற்சி செய்தல் அவசியம்.

சருமத்தை இயற்கைத் தன்மையுடன் பாதுகாக்க நீங்கள் அதிக அளவில் இயற்கை உணவை உட்கொள்வதன் மூலம் பலனடையலாம். மூலிகை பேக் போட்டு சதைக்கு இறுக்கத்தை உண்டாக்கலாம். வாரம் இருமுறை (மூலிகை பேக் மூலம்) ஃபேஷியல் லிப்ட் செய்து கொள்ளவும்.





# சோர்வடைந்த கண்களை பொலிவாக்கும் மேக்கப்

நமது ஆளுமையை பிறரிடம் எடுத்துரைப்பது கண்கள்தான். நம்மில் எழும் கோபம், மகிழ்ச்சி, வெறுப்பு போன்ற உணர்வுகளை கண்கள் எளிதாகப் பிறருக்கு எடுத்துக்காட்டும். சோர்ந்து, ஒளி இழந்த கண்கள் முகத்தின் அழகையும், தோற்றத்தின் பொலிவையும் குறைக்கும். எனவே கண்களின் அழகை மேம்படுத்திக்காட்டும் சில மேக்கப் முறைகளைப் பற்றி தெரிந்து கொள்வோம். டின்ட் மாய்ஸ்சுரைசர் மற்றும் ஐ கிரீம் கலவை: கண்களைச் சுற்றிலும் வறட்சி இன்றி ஈரப்பதத்துடன் காட்சியளிக்க, மாய்ஸ்சுரைசரை ஐ கிரீமுடன் கலந்து பயன்படுத்த வேண்டும். கண்களைச் சுற்றியுள்ள பகுதிகள், இமை முடி, இமைகள் என அனைத்து பகுதியிலும் இந்தக் கலவையை மென்மையாகத் தேய்த்து மசாஜ் செய்ய வேண்டும். இதனால், சோர்வடைந்த கண்கள் புத்துணர்வு பெறும். லைனருக்கு மாற்றாக ஷீர் ஷேடோ: கண்களை அழகாக்க ஐ லைனர் பயன்படுத்துவார்கள். இதற்குப் பதிலாக கண் இமைகள் மேல், வெளிர் பழுப்பு நிற ஷேடோவை மெலிதாகத் தடவலாம். பொடி போல் இருக்கும் இந்த ஷேடோவைத் தடவும் போது, கண்களின் இமைகள் பிரகாசமாகப் பிரதிபலிக்கும். கண்களின் தோற்றத்தை அழகாய் எடுத்துக் காட்டுவதுடன், சிறிய கண்களையும் பெரிதாக காட்டும். இதற்கு, சில நொடிகள் மட்டும் செலவிட்டாலே போதுமானது.



# பிரசவ கால மூலநோய்க்கு தீர்வு

(கடந்த வாரத் தொடர்)

பிரண்டை எனும் எளிய மூலிகையும் மூல நோயில் நிவாரணம் தரும். பிரண்டையை நெய் விட்டு வதக்கி உணவில் அடிக்கடி சேர்த்துக்கொள்ளலாம். உணவில் நெய் சேர்த்துகொள்வது என்பதும் வாதம், பித்தம் இரண்டையும் சமனாக்கும் எளிய வழி. சித்த மருத்துவத்தில் சொல்லப்பட்டுள்ள திரிபலை எனும் மருந்து வீக்கத்தை குறைப்பதுடன் ரத்தப்போக்கினை கட்டுப்படுத்தி நோய்நிலையை குறைக்கும். இதனை மோரில் கலந்து எடுத்துக்கொண்டால் பலன் தரும். தொட்டால் சிணுங்கி என்ற தொட்டால் இலைகள் சுருங்கும் தன்மையுடைய மூலிகை இன்றைய தலைமுறையினர் பலருக்கு தெரிய வாய்ப்பில்லை. அதன் இலைகள் பல ஆண்டுகளாக சித்த மருத்துவத்தில் மூல நோய்க்காக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

பெண்கள் வாதத்தையும், பித்தத்தையும் குறைக்க அவ்வப்போது எண்ணெய் குளியல் எடுத்தலும்,பேதி மருந்துகளை எடுத்தலும் மூல நோயின் குறிகுணங்களுக்கு நிவாரணம் தரும். சித்த மருத்துவம் கூறும் எளிமை வழிமுறையாக ஆமணக்கு எண்ணெய்யை பாலில் கலந்து இரவு வேளையில் எடுத்துக்கொள்ள வாதம், பித்தம் இரண்டும் குறைந்து நோய்குறிகளை குறைக்கும்.

மூலநோயில் எரிச்சலால் அவதியுறும் பெண்கள் கற்றாழை சாறுடன், ஆமணக்கு எண்ணெய் சேர்த்து எடுத்துக்கொள்ள பித்தம் தணிந்து எரிச்சல் குறையும். இதனை 'குமரி எண்ணெய்' என்று சித்த மருத்துவம் கூறுகின்றது.

மூல நோயில் உண்டாக்கும் ரத்தப்போக்கினை கட்டுக்குள் கொண்டு வர துவர்ப்பு சுவையுள்ள பொருட்களை அதிகம் உணவில் சேர்க்கலாம்.

மூல நோயால் அவதியுறும் பெண்கள் குடலில் வாயுவையும், பித்தத்தையும் அதிகரிக்காத உணவுமுறைகளை பின்பற்றுவது அவசியம். வாழை, உருளை, பட்டாணி வகைகள் இவை குடலில் வாயுவையும், அசைவ உணவுகள், டீ,காபி போன்றவை குடலில் பித்தத்தையும் அதிகரித்து நோய்நிலையை அதிகரிக்கும்.

ஆகவே பெண்கள் அவரவர் உடல் நிலைக்கு பொருந்தும், பொருந்தாத உணவுகளை அறிந்து எடுத்துக்கொள்வது உடலுக்கு நன்மை பயக்கும். கிழங்கு வகைகளில் கருணைக்கிழங்கு மட்டும் சேர்த்துக்கொள்ளலாம். இது மூலம், ஆசன வெடிப்பு ஆகிய நோய்நிலைகளில் நற்பலன் தரும். இதனை சித்த மருத்துவம் 'மண் பரவு கிழங்குகளில் கருணை இன்றி புசியோம்' என்று குறிப்பிடுகிறது.

எண்ணெய் தோய்ந்த பொருட்களும், மசாலா மிதக்கும் பொருட்களும், அசைவ உணவுகளும் குடலில் வாதம் மற்றும் பித்தத்தைக் கூட்டி மூல நோயாளிகளின் வலியை,வேதனையை பெருக்கி மிகுந்த மன அழுத்தத்தில் ஆழ்த்தும். ஆகவே நவீன வாழ்வியலை விடுத்து, துரித உணவுவகைகளை தவிர்ப்பது மூலநோயாளிகளுக்கு நல்லது.

மூலநோய் எரிச்சலுக்கு எளிய வீட்டு வைத்திய மருந்து மோர் தான். மோரை உணவுப்பொருளாக பார்க்காமல் மருந்தாக பார்ப்பது சித்த மருத்துவம். அதனை மூல நோயின் எரிச்சலால் அவதிப்படும் பெண்கள் அதிகம் பயன்படுத்த வேண்டும்.

வாரம் இருமுறை எண்ணெய் குளியல் எடுப்பதும் நல்லது. எளிமையாக சீரகம் சேர்த்து காய்ச்சிய நல்லெண்ணெய்யை பயன்படுத்த நோய்க்காரணத்தை குறைத்து நன்மை பயக்கும். எரிச்சல் உள்ளவர்கள் அவ்வப்போது சீரகம் அல்லது சோம்பு இவற்றில் ஒன்றை கசாயமிட்டு குடிக்க குறிகுணங்கள் விரைவில் மாறும்.

நார்சத்து அதிகமுள்ள பிஞ்சு காய்கறிகளையும், பழங்களையும் சேர்த்துக்கொள்வது மலச்சிக்கலை போக்கி மூலநோய் மற்றும் ஆசனவெடிப்பு நோயாளிகளுக்கு நன்மை பயக்கும்.

உணவில் நார்ச்சத்து அதிகரிப்பதன் மூலமும், மலச்சிக்கலை போக்குவதன் மூலமும் இந்த நோய் நிலையின் குறிகுணங்களில் நல்ல முன்னேற்றம் பெற முடியும்.

# கவியரசோடு சரியாசனம் கொண்டு பாடிய வாலிபக் கவிஞன் வாலி!

சோற்றுக்கே வக்கில்லாத என்னை சோறு திங்கக்கூட நேரமில்லாமல் செய்தவர் அண்ணன் எம்.எஸ்.விஸ்வநாதனே என விழித்துக் கூறியவர் வாலி. சிவாஜி, எம்.ஜி.ஆருக்குப்பின் எஸ்.எஸ்.ராஜேந்திரன்,ஜெமினி கணேசன், நாகேஷ்,ஜெய்சங்கர்,மு.க.முத்து,ரவிச்சந்திரன் போன்றவர்களின் படங்களுக்கும்,பிறகு,கமல், ரஜினி,பாக்கியராஜ் சத்யராஜ்,விஜயகாந்த்துக்கும், பின் விஜய்,அஜித், விக்ரம்,சூர்யா



போன்ற இன்றைய தலைமுறையினருக்கும் பாட்டெழுதியுள்ளார். இந்திய தேசத்தை விட்டு வேறு நாடுகளுக்கு இக்கலைஞன் சென்றதில்லை.தமிழ் நாட்டில் ஏறக்குறைய அனைத்து இசை அமைப்பாளர்களிடமும் இவர் பணியாற்றியுள்ளார். கவியரசு கண்ணதாசன் மீது பெரும் நன்மதிப்பைக் கொண்டவர் வாலி. சிவாஜியின் "இருமலர்கள்"படத்தில் வாலி எழுதிய "மாதவிப் பொன் மயிலாள் தோகை விரித்தாள்" என்ற பாடல் வரிகளில் இருந்த கவிதையின் அழகை கண்டு வியந்த கண்ணதாசன் வாலியை ஆரத்த ழுவி பாராட்டு மழை பொழிந்தார்.கண்ணதாசன் மறைந்த போது வாலி ஆற்றிய இரங்கல் கவிதை "எழுத படிக்கத் தெரியாத எமன்,கண்ணதாசன் எனும் கவிதையை கிழித்துப்போட்டு விட்டான்" என்றிருந்தது. கண்ணதாசனுக்கு நிகரான ஓர் கவிஞர் என்றால் அது கண்டிப்பாக வாலியாகத்தான் இருக்க முடியும்."பொய்க்கால் குதிரை", சத்யா,ஹேராம்,பார்த்தாலே பரவசம், போன்ற படங்களிலும், கையளவு மனசு,

அண்ணி ஆகிய தொலைக்காட்சி நாடகங்களிலும் நடித்துள்ளார்." அம்மா", பொய்க்கால் குதிரை", அழகிய சிங்கர்",பகவத் கீதை,நிஜ கோவிந்தம்,பெண்ணின் பெருந்தக்க யாவுல, வாலிப வாலி, "அவதாரபுருஷன்" (ராமாயணம்), "பாண்டவர்

பூமி"(மகாபாரதம்), கிருஷ்ணவிஜயம், ராமானுஜ காவியம், நானும் இந்த நூற்றாண்டும், கலைஞர் காவியம், தமிழ்க்கடவுள், கிருஷ்ண பக்தன் போன்ற நூல்களையும் எழுதியுள்ளார்.

சுமார் பத்தாயிரம் பாடல்களுக்கு மேல் இவர் எழுதியுள்ளார். சிறந்த பாடலாசிரியருக்கான தமிழக அரசின் விருதுகளை நான்கு முறையும், 1972 இல் "கலைமாமணி "விருதையும், "கலைவித்தகர்" என்ற தமிழக அரசின் பாரதிதாசன் விருதினையும், முறசொலி அறக்கட்டளை விருதையும், தமிழ் தாத்தா உ.வே.சா.விருதினையும், 2007 இல் மத்திய அரசின் உயர் விருதாகிய "பத்மஸ்ரீ"யையும் பெற்றவராவார்.

வாலி எழுதி "மன்னன்" திரைப்படத்தில் இடம்பெற்ற "அம்மா என்றழைக்காத உயிரில்லையே" என்ற பாடல் திருச்சி ஐயப்பன் ஆலய கல்வெட்டில் பதித்துள்ளனர்.

இவர் மனைவி பெயர் ரமணி திலகம். இவருக்கு ஒரே மகன் பெயர் பாலாஜி. 2013.07.18 அன்று உடல் நலக்குறைவால் தனது 82 வது அகவையில் வையகத்தை விடைபெற்று வானகம் வசப்பட்டார் கவிஞர் வாலி.

"ஸ்ரீரங்கம் ஈன்ற தமிழ்ச்சுரங்கம், உன் கவியாற்றல் கண்டு வியந்தது பல அரங்கம், கவியரசோடு சரியாசனம் கொண்டது உன் கவியரங்கம், கலைஞர் தலைமையில் போற்றப்பட்டது உன் புகழ் பகிரங்கம், என்றும் வாராது நின் கீர்த்திக்கு பங்கம், பார் போற்றும் பாட்டரங்கம், வீற்றிருப்பாய் என்றும் ரசிகன் நெஞ்சம்....

கவிவேந்தன் மண்ணை விட்டு விண்ணை அடைந்தாலும் வையம் போற்ற ஆற்றிய வரிகள் வாலி அவர்களின் நிரந்தர முகவரிகளே... வாழ்க அய்யன் வாலியின் புகழ் விசும்பளவு.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ் ...
கம்பளை

அங்கம் 14

முற்போக்கு சிந்தனைகளால் தமிழினத்தை மீட்டெடுத்த பேரறிஞர் அண்ணா

# மதராச பட்டினத்திற்கு "தமிழ்நாடு" என பெயரிட்டவர் அறிஞர் அண்ணா



காங்கிரஸ் உறுப்பினர்கள் அண்ணாவின் பேச்சை கேட்டு கரவொலியுடன் வரவேற்று ஆரவாரம் செய்தனர். நேரு மீது குற்றம் சுமத்திய தலைவர்கள் வாயடைத்து போயினர். அரசியலில் இந்த நேர்மைதான் அண்ணாவை உன்னதப்படுத்தியது. அரசியல் ரீதியாக அண்ணாவை எதிர்த்தவர்கள் எல்லோரும் அவரது நேர்மையையும், எதிரிகளை மதிக்கும் பண்பாட்டையும் பாராட்டினர். அறிஞர் அண்ணா சீனப்; பிரச்சினை ஓயும் வரை திராவிட நாடு கொள்கையை கைவிடுவதாகவும் அறிவித்தார்.

என்னதான் எதிர்க்கட்சியாக இருப்பினும் ஒரு நாட்டின் இக்கட்டான நிலையில் ஆளுங்கட்சி மீது வெறுமனே குறை கூறிக்கொண்டிருப்பது நியாயம் அல்ல என்று உணர்த்தியவர் அண்ணா. அதே வேளையில் ஆளுங்கட்சியின் நியாயமற்ற செயல்பாடுகளை கண்டிப்பதில் எந்த தயக்கமும் அண்ணா காட்டியதில்லை. அதற்கு அவர் நடத்திய ஹிந்தி எதிர்ப்பு போராட்டத்தை உதாரணமாக கூறலாம். 1963 ஆம் ஆண்டு இந்திய அரசு ஹிந்தி மொழியை ஆட்சி மொழியாக்கும் மசோதாவை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்தது. ஆட்சி மொழியாக ஆங்கிலமே இருந்து வந்தது. ஆங்கிலமொழியின் இடத்தை ஹிந்தி மொழியாக்கும் முயற்சி நடந்தது.

அரசாங்கத்தின் ஆணைகள் அனைத்தும் ஹிந்தி மொழியிலேயே வெளியிடப்படும் என்ற நிலை உருவானது. ராஜ்யசபை உறுப்பினராக இருந்த அண்ணா, ஹிந்தி மொழி ஆட்சிமொழியாக கொண்டு வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ராஜ்ய சபையில் உரையாற்றினார்.

அண்ணா ஹிந்தி எதிர்ப்பு மாநாடு ஒன்றை சென்னையில் 1963ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி நடத்தினார். அந்த மாநாட்டில் அண்ணா "நவம்பர் மாதம் 17 ஆம் திகதி அரசியல் சட்டம் 17 ஆவது பிரிவை எரிக்கும் போராட்டம் நடைபெறும் " என்றும் அறிவித்தார்.

அண்ணா சொன்னது போலவே நவம்பர் மாதம் 16ஆம் திகதி அரசியல் சட்டப்பிரிவை எரிக்க காஞ்சிபுரத்திலிருந்து புறப்பட்டார். அன்றே அண்ணா பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அண்ணாவுக்கு ஆறுமாத கடுங்காவல் சிறைத்தண்டனை கிடைத்தது. அண்ணா விடுதலையாகியும் தொடர்ந்து ஹிந்தி எதிர்ப்புக்கு போராட்டம் நடத்தி வந்தும் எந்த பலனும் கிடைக்கவில்லை. 1965 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ம் திகதி முதல் இந்தியாவின் ஆட்சி மொழியாக ஹிந்தியை அறிவித்தது மத்திய அரசு.

ஜனவரி 26 ஆம் திகதி இந்தியாவின் குடியரசு தினம். ஆனால் தி.மு.கவினர் ஹிந்தி ஆட்சிமொழியாக மாறுகின்ற ஜனவரி 26 ஆம் திகதி அன்றைய நாளை துக்க தினமாக அறிவித்தது. இந்த போராட்டத்தில் அண்ணா, மு.கருணாநிதி, நெடுஞ்செழியன், அன்பழகன் உட்பட பல தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். நடைபெற்ற ஹிந்தி எதிர்ப்பு போராட்டத்தால் தமிழகமே நிலைகுலைந்தது.

அண்ணாவின் மீது ஈர்ப்பு கொண்ட இளைஞர்களும் மாணவர்களும் ஹிந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டனர். "உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு " என்று கோஷமிட்டனர். அவர்களில் சிலர் தீக்குளித்தும் இறந்தனர். மாணவர்களின் கலவரத்தை அடக்க நினைத்து பொலிஸ் துப்பாக்கிச் சூடும் நடத்தியது. இதில் சில மாணவர்கள் இறந்தனர். அதைத் தொடர்ந்து பாடசாலை, கல்லூரிகள் காலவரையின்றி மூடப்பட்டன. மாணவர்களின் கிளர்ச்சியை அடக்க இராணுவம் வரவழைக்கப்பட்டது.

தமிழகத்தில் நடைபெற்ற ஹிந்தி எதிர்ப்பு போராட்டம். ஐ.நா. சபையையும் எட்டியது. இறுதியில் அண்ணாவுக்கு வெற்றி கிட்டியது. "ஹிந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலமே நீடிக்கும். மாணவர்கள் போராட்டத்தைக் கைவிட்டு அமைதி காக்க வேண்டும்" என அப்போதைய உள்துறை அமைச்சர் குல்சாரிலால் நந்தா அறிவித்தார்.

அண்ணா ராஜ்ய சபை உறுப்பினராக பதவி வகித்த காலத்தில், 1995 ஆம் ஆண்டு ஜுலை மாதம் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். முதலாவதாக அண்ணா சிங்கப்பூருக்கு சென்றார். சிங்கப்பூரில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் அண்ணா உரையாற்றினார். அக்கூட்டத்திற்கு சிங்கப்பூர் பிரதமர் லீகுவான் யூ தலைமை வகித்து அண்ணாவை பாராட்டிப் புகழ்ந்தார். அடுத்து அண்ணா மலேசியா நாட்டிற்கு சென்று மலேசிய தமிழர்களிடையே உரையாற்றினார். அண்ணாவின் அறிவாற்றலைக் கண்ட மலேசிய தமிழர்கள் பெரிதும் வியப்படைந்தனர்.

அடுத்து தாய்லாந்து நாட்டின் தலைநகரான பேங்கொக்கிலும் அண்ணாவுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பிறகு அங்கிருந்து கம்போடியா, ஹொங்கொங் ஆகிய நாடுகளுக்கு சென்று பல்வேறு கூட்டங்களில் கலந்து கொண்ட அண்ணா இறுதியாக ஜப்பான் நாட்டிற்கும் சென்றுவிட்டு டில்லி திரும்பினார்.

அண்ணா தென்கிழக்கு நாடுகளில் விஜயம் செய்த போது மக்கள் வெள்ளம் சூழ்ந்து அவரது உரையை கேட்டு மகிழ்ந்தது என்று டெக்கான் ஹெரால்ட் உள்ளிட்ட பல பத்திரிக்கைகள் பாராட்டி எழுதின.

அண்ணாவின் ராஜ்ய சபை உறுப்பினர் பதவிக்காலம் முடிவடையும் காலம் வந்தது. அத்தோடு இந்தியாவில் அடுத்த பொதுத்தேர்தலும் வந்தது தி.மு.க பல பொதுக்கூட்டங்களையும் மாநாடுகளையும் நடத்தியது. நடக்கவிருக்கும் தேர்தலில் எப்படியும் காங்கிரசை வீழ்த்த வேண்டும் என்று அண்ணா உள்ளிட்ட தலைவர்கள் தொண்டர்களிடம் அறிவுறுத்தி வந்தனர் பல்வேறு மேடைகளிலும் முழங்கினர்.

(தொடரும்)



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்




## உலகத்தமிழர் விருது, கலாவிபூசணம் விருதிற்கு தெரிவு செய்யப்பட்ட சில கலைஞர்கள்

**விருது வழங்கும் விழா 21.01.2023**



ச.ஸ்கந்ததேவன் | இ.சத்தியலிங்கம் | ம.சேவியர் | மு.பர்ஷான் | க.அன்புமதி | அ.ஷரீ | க.சுந்தரராஜன்



இ.தில்லைராஜன் | ஜெ.நிரஜனா | சி.டெ.ஜெனிவர் | ஜோ.றெஜினோல்ட் | சி.சண்முகநாதன் | த.அனந்தகுமாரி | லோ.வேணுகாந்தன்



செ.கலைச்செல்வன் | பா.முருகானந்தம் | சி.மதிவதனன் | க.கமலமுத்து | த.காந்தராஜன் | நி.வைரவசுந்தரம் | ச.காந்தவசாமி



ரோ.பொன்னிலோபன் | வி.லோகன் | மு.செம்பலிங்கசாமி | அ.சின்னத்தம்பி | ஐ.காளியப்பன் | மு.சிவகுமாரன் | ப.சதீஸ்மோகன்



வை.கமலநாதன் | வை.கதிர்காமத்தையா | வீ.வைரவசுந்தரம் | மு.மகராஜன் | ப.றிஷோர்குமார் | ஐ.கதிர்காமமுத்தையா | மு.நிவேதன்



க.சூரியகாந்தி | க.செல்வகேசரன் | இரா.சால்சன் | நா.பி.நாகராஜ் | இரா.கந்தமூர்த்தி | க.முத்துக்குமரன் | செ.சர்வஜன்

## செந்தூர மழலைச் செல்வங்கள்



எம்.எம்.தானீ - மிசாத்மும்தாஜ்
7 ஆவது பிறந்த நாள்

## மௌன மொழி

படப்பிடிப்பு ஆரம்பம்










இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 டிசம்பர் மாதம் 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.